
# சக்தி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி




யாழ்ப்பாணம்

2002

# சக்தி



யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம்

10. 09. 2002

# சமர்ப்பணம்




முந்தைப் பழம் பொருளாம் மூத்த கணபதிக்கு
தந்த மீள் படைப்பு இம் மலராம்
கந்தம் பொலியக் கதம்பமென
இந்து மகளிர் கண்ட யாழ் சக்தி
இம் மலரைக் கொண்டருள்க
நடுத்தோட்டம் முழுதும் தொடுத்தாளும் பெருமானே
கருத்துடனே என்றும் எமைக் காரும்.

திருமதி பா.வாகீஸ்வரி அம்மா

# யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரியின்

## கல்லூரிக்கீதம்



திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெரு வரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மறுவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடும் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைத்திடும் கல்லூரி - இயல்
சிந்தை வள்ம் பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடும் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த் தொடுகு போமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை -அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின லட்சிய மனைத்தும்
நல்கிடும் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏந்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழு நன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலைமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி- உனைத்
தலைமுறையாகத் தொழு துளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தெ மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

# வரவேற்புப் பாடல்

01. வருக மாத ரசிகளே மகிழ்வோடு வருகவே
மலர்தூவி வரவேற்றோம் மகிழ்வுடனே வருகவே
பெருமையோ எமக்குதவும் பெரியோரே வருகவே
போற்றுகின்றோம் உம்பணியை புகழ் பூத்துவாழ்கவே

02. அருங்குணமும் ஆற்றலும் சேர் அரியவரே வருக
அரிய தொண்டு ஆற்றுகிறீர் அன்போடு வருக
பழைய எங்கள் மாணவர் தம் சங்கமமைத்தாலும்
தலைசிறந்த வகையினிலே நீர்வளர்க்க கண்டோம்.

03. கலையுணர்வும் கல்வியுமே கண்ணாகக் கொண்டு
கற்ற பெருவிஞ்ஞான பட்டதாரியாய் விளங்கும்
ஒலிபரப்பு கலைதனிலே உலகத்தை வென்ற
உத்தமியே சற்சொரூபி உவந்தோம் நீர் வருகவே.

04. அம்பலவாணருக்கு அருகிருக்கும் அம்மை
அரியதிரு சிவகாமி என்னும் அந்த நங்கை
செம்மைசேர் விஞ்ஞானம் சிறப்புறவே கற்ற
சிறப்பான பெரும் பதவி தாங்கும் இந்த அம்மை

05. எம்நூலை ஏற்று வெளியிடவே வந்தார்
எமக்கினிய அறிவுரைகள் இயம்பிடவே வந்ததார்
நம்தமிழர் பண்பதனை நாம் மறக்க மாட்டோம்
நாயகியே நல்லுரையை நல்கும்

06. அன்னை எங்கள் கல்லூரி அதிபதியே வருக
ஆதரித்து எமை அணைக்கும் உயர் அதிகாரிகளே வருக
இன்பமுற கல்வி நல்கும் இனிய அதிபர்களே வருக
பண்புறவே கல்விகற்ற பழைய மாணவரே வருக

07. படிக்கின்ற மாணவர் தம் பெற்றோரே வருக
பாடசாலை உயர்வை விரும்பும் நலன் விரும்பிகளே வருக
அன்பான ஆசிரியர்கள் அனைவருமே வருக
அகமகிழ்ந்து வரவேற்கின்றோம் ஆசிநல்க வாரும்.

## உங்களுடன்

எமது கல்லூரிச் சஞ்சிகையான "சக்தி" நீண்ட கால இடைவெளிக்குப் பின் மீண்டும் பொலிவுடன் வெளியிடப்பட்டுள்ள செய்தி,

இக் கல்லூரியுடன் தொடர்புடைய அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரும் விடயமாகும்.

எமது கல்லூரி அதிபர் திருமதி.ச. ஜெயராசா அவர்களின்
நெடுநாள் கனவை நனவாக்கும் வகையில் அவரது அயராத ஊக்கமும்,
தளராத முயற்சியும் காரணமாகவே
இச் சஞ்சிகை மீண்டும் ஒளி பெற்று நம் கைகளிற் தவழுகின்றது.
"சக்தி" சஞ்சிகையானது
எமது யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களின் வாழ்த்துரையுடன்
ஆசியுரைகள், ஆசிரிய , மாணவர் ஆக்கங்களான கவிதை, கட்டுரை, சிறுகதை என,
பல்துறைசார் ஆக்கங்களைத் தன்னகத்தே கொண்ட சிறப்பு மலராக
வலுப்பெற்றுத் திகழ்கின்றது.

தவிர்க்க முடியாமல் அமைந்துவிட்ட பல இடர்ப்பாடுகள்,
நாட்டின் போர்ச்சூழல், வேலைப்பழு, நிதிநெருக்கடி போன்ற இக்கட்டான சூழ்நிலைகள் காரணமாக "சக்தி" வெளியீடு தாமதமாயிற்று.
எனினும் இப் பணி விரைவில் தொடர வேண்டும் என்ற இலட்சியத்தை நிறைவேற்ற
முற்றுமுழுதாக ஊக்கமும் ஆக்கமும் அளித்த எம் கல்லூரி அதிபர் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

மற்றும் பல்வேறு வகையில் ஒத்துழைப்பு நல்கிய பிரதி அதிபர்,
உப அதிபர், இதழ் பொறுப்பாசிரியர்கள்,
காரியாலய ஆளணியினர் மற்றும் விளம்பரதாரர் அனைவருக்கும் நன்றி செலுத்த கடப்பாடுடையோம்.

மேலும் இம்மலரில் வெளிவந்துள்ள ஆக்கங்களில் குறைகள் இருப்பின் பொறுத்திடுவீர்.

நிறைகளை ஊக்குவிப்பீர் என வேண்டி "சக்தி" இடையீடின்றி ஒளிர மேலும் சக்தியை வழங்கி
கல்லூரியின் நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகர் அருள் பாலிப்பாராக.

திருமதி. கா. சிவநேசன்
(இதழாசிரியர்)

யாழ்ப்பாணம்.

# அதிபரின் ஆசியுரை

கல்லூரியின் வரலாற்றுப் பொக்கிஷமான சஞ்சிகை,

இரு தசாப்தங்களாக வெளிவராதிருந்தமை மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

நாட்டின் அசாதாரண நிலையும், பொருளாதார நெருக்கடியும், சமூகத்தின் மனக்குழப்பமும் சுமுகமாக சக்தி சஞ்சிகையை வெளியிடமுடியாதிருந்தமைக்குக் காரணங்களாக இருந்தன.

இக்கல்லூரிக்கு வந்த நாள் முதல் சஞ்சிகையை மீண்டும் வெளியிட வேண்டுமென்ற அவா என்னுள் எழுந்திருந்தது.

ஆண்டுதோறும் முயன்றும் ஏதோ காரணங்களால் முயற்சி கைகூடவில்லை. இவ்வாண்டு சக்தியானவள் வெளிவர முழு மூச்சாகப் பாடுபட்டவர்களை மனமார வாழ்த்துகின்றேன்.

கல்லூரியைச் சார்ந்தவர்கள், பழையமாணவர்கள் அனைவருக்கும் இது மனநிறைவைத் தருமென்பதில் ஐயமில்லை.

இக்கல்லூரிக்கு அதிபராகக் கடமையேற்று முதலாவது அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில், செயற்குழு உறுப்பினராக இருந்த

இன்றைய இந்து கலாசார அமைச்சின் செயலாளர் திரு. க. பரமேஸ்வரன் அவர்கள் சக்தி சஞ்சிகையை எப்படியாவது வெளிக் கொணர வேண்டும் என்று குரல் கொடுத்தார்.

அவரது வேண்டுகொள் நீண்ட காலத்தின்பின் இன்று நிறை வேறியுள்ளது.

அடுத்த ஆண்டில் மணிவிழாக் காண இருக்கும் கல்லூரியின் சஞ்சிகை இவ்வாண்டு மீண்டும் வெளிவருவது அதிஷ்டமென்றே கூறலாம்.

ஆசிரிய சமூகத்தினரும், மாணவரும் இப்பணியைச் சிரமேற்கொண்டு ஆண்டுதோறும் இதனை வெளியிட வேண்டுமென்பதே எனது அவா.

அவர்களது முயற்சி தொடர எனது நல்லாசிகள் என்றும் உரித்தாகுக.

முயற்சி திருவினையாக்கும்.

சரஸ்வதி ஜெயராசா<br>அதிபர்<br>யாழ் . இந்து மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம்

## பழைய மாணவிகள் சங்க கொழும்புக்கிளைத் தலைவரின் வாழ்த்து.

### "சக்திக்கு" என் வாழ்த்துக்கள்

" நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா" - ஔவை கேட்ட இந்த வரத்தை நானும் சிறுமியாக இருந்த பொழுது யானை முகத்தானிடம் யாசித்தேன். என் பிரார்த்தனை பவிதமாக அவன் வழிவகுத்தான். யாழ் இந்து மகளிர் கல்லூரி என்னும் கல்விக் கூட வாயிலாக ' ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்". இந்த வரியையும் எனது கல்லூரியே எனக்குப் போதித்தது. ஆம் ஆறறிவு படைத்த மனிதன் சாகும் வரை ஓதிக்கொண்டே இருக்கின்றான். இருக்க வேண்டும். அறிவின் வளர்ச்சிக்கு எல்லை இல்லை. வாழ்விற்குப் பயன்படும் நூல்களை நாம் தொடர்ந்து வாசிப்பதற்கு, எழுத்தாளர்களே உதவுகின்றார்கள்

பேனா முனையிலே வாழ்வாம்
செல்வப் பேனா வருந்திடிலோ தாழ்வாம்
பேனா மகிழ்ந்து நடம் புரிந்தால்
வாழ்வு பேரின்ப நிலை தரும் விருந்தாம்.

இந்த உண்மையை உணர்ந்து எமது ஆசிரியர்கள் 1950 களில் 'சக்தி' என்னும் களம் அமைத்து எமது எழுத்தாற்றலை ஊக்குவித்தனர். உலகையே காக்கும் 'சக்தி" பெயரால் வெளியான கல்லூரி மலர் காலத்தின் கோலத்தால் 20 ஆண்டுகள் வெளியிடப்படவில்லை.

மீண்டும் "சக்தி" எம் கைகளில் தவழப் போகிறாள். அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசாவும், யாழ் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியைகளும் மாணவிகளும் பாராட்டுக்குரியவர்களாகிறார்கள்.

மனதில் தோன்றியதை மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்ற தவிப்புத்தான் மனிதனின் அறிவு வளர்ச்சிக்கான உந்துகோல். எழுத வேண்டும் என்று ஆர்வம் கொண்டு பேனா பிடித்தவன் கை சும்மா இராது. அது இலக்கிய மலர்கள் பலவற்றைப் பூக்க வைக்கும். தூரத்து மல்லிகையின் மெல்லிய நறுமணத்தைப் பரப்பச் செய்யும். இலக்கியப் படைப்புக்களோடு நின்றுவிடாது மாணவிகள் விஞ்ஞானக் கருத்துக்களையும் தமிழில் எழுத வேண்டும்.

சிந்தனை விரிவடைய மொழி விரிவு பெறுகிறது. ஒரு மொழியின் உயிர்நிலையாக அம்மொழியின் ஒலி முறையைக் குறிப்பிடுவர். அவ்வுயிரை என்றும் இயங்க வைத்து வாழ வைக்கும் உயிர்ச்சத்துக்களென கருத்துக்களை புதிய சிந்தனைகளைக் கூறலாம். புதிய சிந்தனைத் தொடர்புகளால் ஒரு

# எங்கள் அதிபர்



திருமதி சரஸ்வதி ஜெயராஜா B.A. (Hons), Dip-in-Ed. SLPS I

மொழியில் புதிய சொற்கள் தோன்றும், மொழி புதுவாழ்வு பெறும் என்பதை இளம் எழுத்தாளர்கள் நினைவில் கொள்ள வேண்டும். 'உள்ளம் வளர்வதனால் மொழி வளரும்" என்பது உரமிடுவதால் பயிர் வளரும் என்பதற்கு ஒப்பாகும். கருத்துக்களையோ, புதிய சிந்தனைகளையோ ஏற்றுக் கொள்ளும் ஆற்றல் மொழி பேசுவோரையும் எழுதுவோரையும் சார்ந்தது.

'சக்தி"வாயிலாக இத்தகைய ஆற்றல் வெளியிடப்பட வேண்டும் என்பது கொழும்பில் இயங்கும் யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தினரின் அவாவாகும். 'சக்தி" என்ற களத்தில் பயின்ற மாணவிகளாகிய நாம் சங்கம் மூலமாக 'யாழ்நாதம்" என்ற ஆண்டு இதழை வெளியிட்டு எழுத்தாற்றலை இன்றும் வளர்க்கின்றோம். எமது கல்லூரியில் கல்வி கற்கும் இளைய தலைமுறையினரும் 'சக்தி' யால் எழுத்துலகில் பிரகாசிக்கவே செய்வார்கள்.

சற்சொரூபவதி நாதன்
தலைவர், யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கம்
(கொழும்புக்கிளை)

கொழும்பு

## யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் வழங்கிய ஆசிச் செய்தி

யாழ்ப்பாண நகரில் தலை நிமிர்ந்து விளங்கும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் ஆண்டுச் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற மகளிரின் கல்வி மேம்பாட்டிற்காக 1943 ஆம் ஆண்டில் வித்திட்டு ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி தனது 59 ஆண்டு கால வளர்ச்சியில் பல கட்டங்களைத் தாண்டி வந்துள்ளது.

இன்று தலைநிமிர்ந்து நிற்கும் கட்டடங்களும், இக் கல்லூரியில் பயின்று உயர்கல்வி பெற்று உயர்நிலை அடைந்து பல ஸ்தாபனங்களில் தலைமைத்துவத்தைப் பெற்று சேவையாற்றிக் கொண்டிருக்கும் மகளிரும் இதன் வளர்ச்சிக்கு சான்றாக உள்ளனர்.

இவர்களது வளர்ச்சி கல்லூரியின் பெருமையை மேலும் ஸ்திரப்படுத்துகின்றது.

இவர்கள் தாயகத்தில் மட்டுமன்றி உலகம் முழுவதும் கல்லூரியினது பெருமையை பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்து கலாசாரத்துடன் மகளிருக்கான கல்விப் பணியை செவ்வனே செய்து வரும் இந்து அன்னை இன்று போல் என்றும் தன் சேவையை ஆற்ற என் உளங்கனிந்த ஆசியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லாம் வல்ல இறைவன் இந் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அருள் பாலிக்கட்டும்.

திருமதி செ. மகாலிங்கம்
வலயக் கல்விப் பணிப்பாளர்.

யாழ்ப்பாணம்.

# நல்லூர் கோட்ட கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

ஆக்கம் அறிவுடமை அன்புடமை பண்புடமை
நோக்கம் முதலாகக் கொண்டமைந்த சக்தியே
காக்கும் நல்லைக் கந்தனின் கருணையினால்
நீக்க மின்றியே நிறைவுடனே நீவருவாய்

ஊக்கம் மாணவர்க்கு உவந்தளிக்கும் உள்ளொளியே
ஆக்குந் திறனை அளித்திடுவாய் ஆர்வலர்க்கு
இந்து மகளிரின் இணையற்ற இதழே
உந்தன் வளர்ச்சிக்கு எந்தன் நல்லாசிகள்

பக்தியுடன் யாமென்றும் போற்றிடுவோம் நின்பணியை
சக்தியே நல்லறிவை நல்கிடுவாய் என்றும்
நித்தமும் உந்தன் நிறைவான சேவையினால்
இத்தரையில் பரவட்டும் இனிய நல் அறிவொளியே!

மாணவியாய் மங்காத அறிவூட்டும் ஆசானாய்
நானமைந்தேன் நல்லுயர் கல்லூரி யதனில்
காலமெல்லாம் கல்விக் கலங்கரை விளக்காய்
காசினியில் மிளிர்வாயே கலையழகுச் சஞ்சிகையே!

*திருமதி ச. காங்கேயன்*
*உதவிக் கல்விப் பணிப்பாளர்*
*நல்லூர் கோட்டம்*

*யாழ்ப்பாணம்.*

## வாழ்த்துச் செய்தி

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் சஞ்சிகையான சக்தி நீண்டகாலத்தின் பின் புத்துயிர் பெற்று மீண்டும் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்குழு உறுப்பினராக இருந்த காலத்தில் இச்சஞ்சிகையை வெளியிட எவ்வளவோ முயன்றும் நாட்டுநிலை காரணமாக வெளியிடமுடியாமல் போய்விட்டது.

இப்பொழுது இச் சஞ்சிகை வெளிவருவது எங்கள் எல்லோரதும் ஆசையை நிறைவேற்றுவதாக அமைந்துள்ளது.

எங்கள் பகுதியில் சைவப்பெண்கள் கல்லூரியாக நீண்டகாலமாக விளங்கிவரும் இக்கல்லூரியின் பாரம்பரியம் அழிந்து விடாமல் மீண்டும் சக்தி சஞ்சிகை வெளிவருவதன் மூலம் மேன்மேலும் வளர்த்தெடுக்கப்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் முயற்சிக்காக கல்லூரி அமைந்த சமூகத்தைச் சேர்ந்த ஒருவன் என்ற வகையிலும் முன்னைய செயலாளர் என்ற வகையிலும் எனது பாராட்டுக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சிறுவயதில் இருந்தே நான் பார்த்த, உறவினர்கள் கற்று வளர்ச்சியடைந்த இக்கல்லூரியின் சஞ்சிகை மீண்டும் தோன்றி வளர்வது எனக்கு ஆத்மதிருப்தியை அளிக்கின்றது.

கல்லூரி பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து செழிப்படைய வேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன். இம்மலர் வெளியீடானது இடையில் நின்று விடாமல் தொடர்ந்து ஆண்டு தோறும் வெளிவர வேண்டும் என எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திரு. க. பரமேஸ்வரன்
செயலாளர்,
இந்து கலாசார அமைச்சு.

கொழும்பு.

# பழைய மாணவிகள் சங்கம், நியூசவுத்வேல்ஸ் கிளை – சிட்னி வாழ்த்துச் செய்தி

*யாழ் இந்து மகளிர் கல்லூரியின் சஞ்சிகையான*

*"சக்தி" மீண்டும் வெளிவருவதை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.*

*நாற்பதுகளின் பிற்பகுதியிலிருந்து எண்பதுகள் வரை ஆண்டு தோறும் வெளிவந்த 'சக்தி"*

*கல்லூரியின் பெருமையினையும் வரலாற்றினையும் பாதுகாக்கும் சாதனமாகவும்.*

*கல்லூரி மாணவிகளின் அறிவு வளர்ச்சியினையும் கலையார் வத்தினையும்*

*வெளிக்கொணரும் களமாகவும் அமைந்தது.*

*இன்று எமது கல்லூரி 60 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் வேளையில்,*

*"சக்தி" யும் புத்துயிர் பெறுவது புலம்பெயர்ந்து வாழும் பழைய மாணவிகளாகிய எமக்கெல்லாம்,*

*பெரும் மகிழ்வினைத் தருகின்றது.*

*'சக்தி' சஞ்சிகை வெளியீடு சிறப்பாக அமைய*

*யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் அவுஸ்திரேலியா(சிட்னி)கிளையின் சார்பில்*

*எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

***திருமதி கலையரசி சின்னையா B.A (Hons), M.A.***
***தலைவர்,யாழ் இந்து மகளிர் கல்லூரி***
***பழைய மாணவிகள் சங்கம்,சிட்னி, அவுஸ்திரேலியா.***

***05. 08. 2002***

## பழைய மாணவிகள் சங்கம் – கனடாக் கிளை
## ஆசிச் செய்தி

நாங்கள் கற்ற கல்லூரியை
புலம் பெயர்ந்த நிலையிலும்,
நினைத்து வரும் எங்களுக்கு கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் அக்கறை உண்டு.
நீண்டகால இடைவெளியின் பின்னர் எமது கல்லூரியின் 'சக்தி'
சஞ்சிகை வெளிவருவதை அறிந்து
கனடா பழைய மாணவிகள் சங்க அங்கத்தவர்களாகிய நாம்
பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.
பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியிலும்
கல்லூரி பொலிவுடன் திகழ்வதை நேரில் கண்ட எமது அங்கத்தவர்கள் கூறும் போது
பேருவகை அடைந்தோம்.
கல்லூரி தொடர்ந்து வளர வேண்டும்.
இச் சஞ்சிகையானது எதுவித தடையுமின்றி
தொடர்ந்து வெளிவர வேண்டும் என்று
எமது ஆசிகளைத் தெரிவிப்பதோடு
எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்க வேண்டுகின்றோம்..

**பழைய மாணவிகள் சங்கம்**
**கனடாக் கிளை**
**ரொரன்ரோ**

**கனடா.**

# பழைய மாணவிகள் சங்கம் – இலண்டன் கிளை
# வாழ்த்துச் செய்தி

நாம் கற்ற கல்லூரியின் வளர்ச்சி கண்டு
பெருமை அடைகின்றோம்.
இலண்டனில் இருந்தாலும்
இந்து மகளிர் கல்லூரியையும்
இந்துப் பாரம்பரியத்தையும் என்றும் மறந்ததில்லை.
இக்கட்டான சூழ்நிலையிலும்
தொடர்ந்து கல்விப் பணி ஆற்றி வரும்
எமது கல்லூரியின் செயற்பாடுகளை
அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.
20 ஆண்டுகளுக்கு மேலாக
வெளிவராதிருந்த கல்லூரியின் சஞ்சிகையான 'சக்தி'
மீண்டும் வெளிவருவதையிட்டு மட்டற்ற மகிச்சியடைகின்றோம்.
இதை முன்னின்று செயற்படுத்தி உழைத்த மலர்க் குழுவினரை
மனமாரப் பாராட்டுகின்றோம்.
இவர்களது முயற்சி இத்துடன் நின்றுவிடாது
தொடர்ந்தும் இம்மலர் வெளிவருவதற்கு
உறுதுணையாக இருக்க வேண்டும் என்றுவேண்டி
உளம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி S. ஜெயக்குமார்
தலைவர் – பழைய மாணவிகள் சங்கம்
வெம்பிளி

இலண்டன்

## பிரதி அதிபரின் ஆசியுரை

எமது கல்லூரி மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆற்றல்களை வருடாவருடம் சக்தியாக ஒளிர்வித்துக் கொண்டு வந்த சஞ்சிகை,

நாட்டின் போர்ச்சூழல்,

பொருளாதார நெருக்கடி இவற்றால் வலுவிழந்து ஒளிர முடியாத நிலையில் உறங்கிக் கிடந்தது.

நீண்டகால இடைவெளியின் பின்

மீண்டும் வலுவூட்டப்பட்டு ஒளிர்வதையிட்டுப் பேருவகையடைகின்றேன்.

அதை ஒளிர்விக்க பெரிதும் ஊக்கமும் உற்சாகமும் ஊட்டிய புதிய மலர்க்குழுவை செயற்படுத்திய அதிபரின் முயற்சியைப் பாராட்டுகின்றேன்.

புதிய மலர்க்குழுவின் பணி தொடர்ந்து சிறக்கவும்

இம்மலர் என்றும் சக்தி நிறைந்தவளாக ஒளிரவும்

எல்லாம் வல்ல நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகர் அருள் வேண்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி. வே. பேரின்பநாதன்
பிரதி அதிபர். யாழ். இந்து மகளிர் கல்லூரி.

யாழ்ப்பாணம்.

## எங்கள் பிரதி அதிபர்



திருமதி வேதநாயகி பேரின்பநாதன் B.Sc., Dip-in-Ed. SLPS I

# எங்கள் உப அதிபர்



திருமதி மீனலோஜினி செல்லையா SLPS II

## உப அதிபரின் ஆசியுரை

யாழ்மாவட்டத்தில் முன்னணியில் திகழும் கல்லூரிகளுள் ஒன்றான
இந்து மகளிர் கல்லூரியின் சஞ்சிகையான
சக்தி வெளியீட்டுக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இச்சஞ்சிகை மாணவரின் அறிவு,
திறன், மனப்பாங்கை வளர்த்து
அவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் சாதனமாகவும் திகழ்ந்து வந்தது.
இச்சஞ்சிகை
இக் கல்லூரியின் உயிரோட்டத்தினை கட்டியங்கூறி நிற்கின்றது.

அதிபரின் முயற்சியினால் மீண்டும் ஒளிவீசி பிரகாசிக்கும் சக்தி தொடர்ந்தும் வருடந்தோறும் வெளிவரவேண்டும்.
நாளைய தலைவராக விளங்கப் போகும் இன்றைய மாணவர்களின் ஆக்கங்களைக்
கொண்டுவரும் 'சக்தி' மலரானது
கல்வி உலகிற்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.
மாணவர்களின் கட்டுரை, கவிதை ஆக்கங்கள் போன்றவை
வளர்ச்சியடைய
இச் சஞ்சிகை வழிவகுக்கின்றது.
மாணவ சமுதாயத்தின் வளர்ச்சிக்கேற்றவகையில்
தனது உள்ளடக்கத்தை தயாரித்து
பார் எல்லாம் இச் சஞ்சிகை தனது புகழ் பரப்பி
விளங்கிட எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

யாழ்ப்பாணம்.

திருமதி. பீ.செல்லையா
உப அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி

# பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் ஆசிச் செய்தி

யாழ் இந்து மகளிர் கல்லூரியின்
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பாக
'சக்தி' சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு கல்லூரியின் செயற்பாடுகள்
நல்லபடியாக அமைவதற்கு
பெற்றோரினது ஒத்துழைப்பும் பங்களிப்பும்
அத்தியாவசியமானதாகும்.

அந்த வகையில் இக் கல்லூரியின் பெற்றோர் சார்பாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
தன்னாலான ஒத்துழைப்பை வழங்கிவருகின்றது.
கல்லூரியின் பௌதீகத்தேவை,
கற்றல் செயற்பாடுகளுக்கான ஆதரவு,
இணைப்பாடவிதானச் செயற்பாடு ஆகிய துறைகளில்
ஊக்கமளித்து வருவதுடன்

எம்மாலான உதவிகளையும் மன விருப்பத்தோடு செய்து வருகின்றோம். கல்லூரியின் வரலாற்றை எடுத்துக் காட்டும் ஆவணமான சஞ்சிகை சூழ்நிலை காரணமாக இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக வெளிவராது இருந்து இன்று எங்கள் நிர்வாக காலத்தில் வெளிவருவதையிட்டுச் செயற்குழு உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சி அடைகின்றனர். இச் சஞ்சிகையானது ஆண்டு தோறும் தொடர்ந்து வெளிவர வேண்டும்.

அதற்கு கல்லூரியின் சமூகத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.
கல்லூரியின் வளர்ச்சி
சஞ்சிகை வாயிலாக வெளிக்கொணரப்பட வேண்டும்.
எனவே தொடர்ந்து சக்தி சஞ்சிகையானது
வெளிவரவேண்டுமென

எனது மனம் நிறைந்த ஆசியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

**யாழ். இந்து மகளிர் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

க. பாலச்சந்திரன்
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## கல்லூரியின் பழைய மாணவி, முன்னாள் ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகம் அவர்களின் ஆசிச் செய்தி

*பல ஆண்டுகளாக*
*அமைதி பேணிய சக்தி*
*அமைதி கலைந்து*
*எம்மை உயிர்ப்பிக்க உளம் கொண்டுள்ளாள்.*
*எனவே நமது கரங்களில் தவழும் அவளை,*
*நாம் வரவேற்று*
*நுகர்ந்து மகிழ்வடைவோம்.*
*இவள் பரப்பும் நற்படைப்புக்களை*
*ரசனையுடன் நுகர்ந்து பலருக்கும் பரப்புவோமாக.*
*இப்படைப்பு மேலும் பல படைப்புக்களை உருவாக்க வழிசமைக்கட்டும்.*
*அதற்கான உத்வேகத்தை*
*அனைவரும் பெறவேண்டும் என*
*நடுத்தோட்ட இராஜவரோதயப் பெருமானை*
*உளமார வேண்டுகின்றேன்.*

**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**புஷ்பா செல்வநாயகம்.**

'சக்தி'

சக்தியுடன் வருடம் தோறும்
மலர வாழ்த்துகின்றோம்.

கௌரி குணநாயகம்

"சக்தி சிறப்புடன் வெளிவர உளமார வாழ்த்துகிறோம்"

எம்மிடம் சகலவிதமான கண்கவர் பாதணி வகைகளைப் பெற்றுகொள்ள நாடுங்கள்



BATA பாட்டா

யாழ் ரேட் சென்ரர்



BATA ஏஜென்சி
இல.11, நவீன சந்தை(வெளிப்புறம்), யாழ்ப்பாணம்.

# அதிபர் அறிக்கை

1943 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரி பல அதிபர்களின் கீழ் படிப்படியாக வளர்ச்சியடைந்து பொன் விழாவையும் கொண்டாடியது.

1993 அம் ஆண்டு பொன்விழா நடைபெற்ற பொழுது கல்லூரியின் அதிபராக திருமதி திவ்வியசிரோண்மணி நாகராஜா விளங்கினார். அவரது காலம் அரசியல் நெருக்கடிகளும் அனர்த்தங்களும் நிறைந்த ஒரு காலமாகும். அந்த இக்கட்டான சூழ்நிலையில் பல இன்னல்களின் மத்தியில் கல்லூரியைக் கட்டிக்காத்த பெருமை அவரையே சாரும். 1993 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அவர் இளைப்பாறியதைத் தொடர்ந்து இக்கல்லூாயின் அதிபராகப் பொறுப்பேற்றேன். இக்காலமும் அரசியல் நெருக்கடிகள் நிறைந்த காலமாகும். எனினும் கல்லூரியின் பாடவிதான, இணைப் பாடவிதான செயற்பாடுகள் தொடர்ச்சியாக திருப்திகரமாக நடைபெற்று வந்தன. நாட்டில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக 1995ஒக்டோபர் 30 ஆம் திகதி ஏற்பட்ட இடப்பெயர்வுடன் நாமும் கல்லூரியைவிட்டு வெளியேறினோம்.

சாவகச்சேரியில் இடம்பெயர்ந்து இருந்த போதும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தொடர்ந்து கல்விப் பணியை ஆற்றி வந்தோம். இக்காலத்தில் உறுதுணையாக பிரதி அதிபர் திருமதி ம.பரமநாதனும், தங்கியிருந்த ஆசிரியர் களும் கைகொடுத்தனர். மீண்டும் 1996 ஏப்ரலில் திரும்பி வந்த பொழுது கல்லூரி உடைக்கப்பட்டு பெறுமதி மிக்க பொருள்கள் எல்லாம் களவாடப் பட்டு ஆவணங்கள் எல்லாம் தொலைந்தும் சிதறுண்டும் இருந்ததைக் கண்டு மனவேதனை அடைந்தேன். இரண்டு நாட்கள் அலுவலகத்தைச் சுத்தம் செய்ய முனைந்தோம். செயற்பாட்டில் இறங்கிய பொழுது இராணுவத்தினர் கல்லூரியில் முகாமிட்டனர். இரண்டு வாரங்களின் பின் மீண்டும் அவர்களிடம் இருந்து கல்லூரியைப் பொறுப்பேற்று படிப்படியாக மாணவர்களையும் ஆசிரியர்களையும் வரவழைத்து கற்பித்தற் செயற்பாட்டை ஆரம்பித்தோம். இடம்பெயர்ந்த பொழுது 75 ஆசிரியர்களும் 2156 மாணவர்களும் இருந்தனர். திரும்பி வந்த பொழுது இத்தொகை அரைப்பங்கிலும் குறைவாக இருந்தது. இன்று 1922 மாணவர்களும் 65 ஆசிரியர்களும் கல்லூரியில் இருக்கிறார்கள். படிப்படியாக கற்றல் செயற்பாடு வளர்ச்சியடைந்து வருகின்றது.

1993 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கல்லூரியின் பாடவிதான, இணைப் பாட விதான செயற்பாடுகளில் திருப்பதிகரமாக முன்னேற்றமடைந்து வருவது மகிழ்ச்சி தரும் விடயமாகும். கோட்ட, வலய , மாவட்ட, மாகாண மட்டத்தில் நடாத்தப்படும் போட்டிகளில் மாணவர் பங்கு பற்றி கல்லூரிக்கு பெருமை சேர்த்து வருகின்றனர். க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்று பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற்றுச்சென்ற மாணவர் களின் தொகையும் படிப்படியாக உயர்ந்தது. மருத்துவத்துறை, பொறியியல்துறை, விஞ்ஞானத் துறைகளுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப் பட்டனர். ஆண்டு தோறும் பரிசளிப்பு விழாவை நடாத்தி மாணவர்களின் திறமையை மேலும் வளர்ப்பதற்கு அவர்களைக் கௌரவித்து உற்சாகம் ஊட்டி வருகின்றோம். உயர்தரவகுப்பு மாணவர்களுக்கும் 8 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கும் படிப்படியாக தகவல் தொழில் நுட்பக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகின்றது. இன்ரநெற், ஈமெயில் வசதிகளும் கல்லூரிக்குச் செய்யப்பட்டுள்ளன. இன்ரநெற் வசதியை கொழும்பு பழைய மாணவர் சங்கத்தினர் செய்து தந்துள்ளனர். பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு முறைசாராக் கல்வியின் கீழ்சிகையலங்காரம், அலங்காரப் பொருட்கள்

தயாரித்தல், கணினிக் கற்கை நெறிகள் நடைபெற்று வருகின்றன. 2000ஆம் ஆண்டு க.பொ.த.(சா.த) பரீட்சையில் பத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்ற மாணவி செல்வி காயத்திரி சிற்சபேசலிங்கத்திற்கு வடக்கு, கிழக்கு பழையமாணவர் சங்கச் சம்மேளனம் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்தது. அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட ஓவியப் போட்டிகளில் செல்வி சாருபா சரவணபவன் வெற்றியீட்டி ஜனாதிபதி விருதினைப் பெற்றுக் கொண்டார். விளையாட்டுத்துறையில் செல்வி.ம. அர்ச்சனா மாகாண மட்டத்தில் வெற்றியீட்டி தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். இவர்களின் செயற்பாடுகளைப் பாராட்டுவதுடன் மேலும் வெற்றிகள் பெறவேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இக்கால கட்டத்தில் கல்லூரியின் பௌதிகவளம் தொடர்பான செயற்பாடுகளிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. 1995ஆம் ஆண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் ஆறுமுகம் மண்டபத்தின் தளம் முற்றாகத் திருத்தி அமைக்கப்பட்டது. அத்துடன் ஒரு தொகுதி மாணவர் தளபாடங்களும் செய்யப் பட்டன. 1996ஆம் ஆண்டு இடப்பெயர்வின் போது களவாடப்பட்ட சைக்கிள் தரிப்பிட கூரை திருத்தி அமைக்கப்பட்டது. G.T.Z நிறுவனத்தினர் புதிதாக இரண்டு தொகுதி மலசல கூடங்களை அமைத்துத்தந்துள்ளனர். அத்துடன் மனையியல் கூடம், ஆசிரியர் தங்கும் அறை, வகுப்பறை ஆகியவற்றையும் திருத்தித்தந்துள்ளனர். பிரதான மண்டபத்திற்கு ஒரு தொகுதிக் கதிரைகளையும் வகுப்பறைக்கு ஒருதொகுதி கதிரை, மேசை களையும் ஆசிரியர்களுக்கான மேசை, கதிரை களையும் செய்து தந்துள்ளனர். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

கல்வித் திணைக்களத்தின் உதவியுடன் கல்லூரியின் விசாலாட்சி மண்டபம் திருத்தி அமைக்கப்பட்டு வர்ணம்தீட்டப்பட்டது. 2000 ஆம் ஆண்டு புதிதாக பொது விஞ்ஞானகூடம் அமைக்கப்பட்டு அதற்கு தளபாடங்களும் செய் யப்பட்டன. சைக்கிள் தரிப்பிடநிலம் புதிதாகப் போடப்பட்டது. மாண்புமிகு பிரதமர் அவர்களா லும் கல்வித்திணைக்களத்தினாலும் கொழும்பு, அவுஸ்திரேலியா பழைய மாணவர்களினாலும் கணினிகள் வழங்கப்பட்டன. 2001ஆம் ஆண்டு கணினி அறையும் நூல்நிலையமும் அமைக்கப் பட்டு அவற்றிற்குரிய தளபாடங்களும் கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டன. நான் நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட நிதி உதவியு டன் விஞ்ஞானகூடங்கள்,வகுப்பறைகள் ஆகியன திருத்தப்பட்டு கதவுகள் போட்டு மூடப்பட்டன. வகுப்பறைகளுக்கு அலுமாரிகளும் தளபாடங் களும் செய்யப்பட்டன. அத்தடன் அலுவலக மேல் மாடியும் திருத்தியமைக்கப்பட்டு கட்டிடத்திற்கு வர்ணம் தீட்டப்பட்டது. இப்பொழுது ஒலி, ஒளிக் காட்சி அறை தயாரிக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கல்லூரியின் பௌதிக வளத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு உதவி புரிந்த அனைத்துச் சமூகத்திற்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையினர் எனது காலத்தில் கல்லூரிக்குப் பல வழிகளிலும் உதவி யுள்ளனர். பிரதி செய்யும் இயந்திரம், தட்டச்சுப் பொறிகள், கணினி, Over head Projector, தொலைநகல் இயந்திரம்(fax) ஒலிபெருக்கி வசதி நூலகத்திற்குப் புத்தகங்கள் போன்றவற்றைத் தந்துதவியுள்ளனர். 1999 ஆம் ஆண்டு கல்லூரி மாணவிகளை கொழும்பிற்கு அழைத்து ஒரு கலை நிகழ்சியையும் இராமகிஷ்ண மண்டபத்தில் நடாத்தி கண்டி வரை அழைத்துச் சென்று கௌரவித்தனர். 2002 ஆம் ஆண்டு மாணவிகள் கல்விச் சுற்றுலா சென்ற பொழுது தங்குமிட வசதியும் உணவும் அளித்து உதவினர். இவர் களது அன்பும் ஆதரவும் என்றும் நிலைக்க வேண்டும். அவர்களுக்கு நன்றி கூற என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

அவுஸ்திரேலியாக் கிளையினர் கல்லூ ரிக்கு இரு கணினிகளை வாங்கித்தந்ததுடன் தொடர்ந்தும் உதவி செய்வதில் ஆர்வமாக உள்ளனர். அவர்களது ஆதரவிற்கும் அன்பிற்கும் நான் என்றும் நன்றிகூறக் கடமைப்பட்டள்ளேன். கனடாக் கிளையினர் கொழும்புக்கிளை ஊடாக பிரதி செய்யும் இயந்திரம் ஒன்றை வாங்கித்தருவதற்கு முயற்சித்துக் கொண்டு இருக்கின்றார்கள். அவர்களின் ஆதரவிற்கு நன்றி கூறுவதுடன் தொடர்ந்தும் கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை காட்ட வேண்டும் என்று வேண்டுகின்றேன்.

கல்லூரி வளாகத்திலுள்ள விநாயகர் ஆலயம் 1999 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. கல்லூரி ஆசிரியர்களும் கொழும்பு, கனடா, அவுஸ்திரே

லியா பழைய மாணவர் சங்கத்தினரும் வழங்கிய நிதி உதவியுடனேயே இத் திருப்பணி வேலைகள் நடைபெற்றன. வருடந் தோறும் ஆலயத்தில் சங்காபிஷேகமும் ஏனைய சமய நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. கல்லூரி ஆசிரியர்கள் நல்லூர் சட்டநாதர் ஆலய திருவிழா ஒன்றையும் வருடந்தோறும் நடாத்தி வருகின்றனர்.

இக்காலகட்டத்தில் கல்லூரியின் பழைய மாணவியும் நீண்ட கால ஆசிரியையும் பிரதி அதிபருமாக கடமையாற்றிய செல்வி யோகேஸ்வரி கந்தையா தனது 60 ஆவது வயதைப் பூர்த்தி செய்து ஓய்வு பெற்றுள்ளார். வேறு பல ஆசிரியர்கள் ஓய்வு பெற்றும் இடமாற்றம் பெற்றும் சென்றுள்ளனர். அவர்கள் அனைவரும் கல்லூரிக்கு ஆற்றிய சேவைக்கு எனது நன்றிகள். பலர் புதிதாக வந்தும் இணைந்துள்ளனர். இவர்கள் அனைவரது ஒத்துழைப்பும் செயற்பாடுகளும் கல்லூரி நல்ல முறையில் வளர்ச்சியடைந்து செல்வதற்கு பக்கபலமாக அமைந்துள்ளன. அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். பல ஆசிரியர்கள் தமது உயர்கல்வியைக் கற்று பட்டங்களையும் பெற்றுள்ளனர். அதிபர் என்ற வகையில் நானும் 1994ஆம் ஆண்டு ஆசிரிய சங்கங்களின் தொழிற்சங்க மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பாங்கொக் சென்று அதில் கலந்து கொண்டேன். 1999 ஜனவரியில் புதுடில்லியில் நடைபெற்ற அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சியில் கலந்து கொண்டேன்.

இன்றைய அமைதிச் சூழ்நிலையில் பல்வேறுபட்ட நிறுவனங்களின் ஆதரவுடன் கல்லூரியை வளர்த்துச் செல்வதில் எந்த வித கஷ்டமும் இருக்காது என்று நம்புகின்றேன். நீண்ட காலமாக வெளிவராதிருந்த கல்லூரியின் சக்தி சஞ்சிகை இன்று வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். 2002 ஆம் ஆண்டு பரிசளிப்பு விழாவாகிய இன்றைய தினம் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்க கொழும்புக்கிளைத் தலைவி செல்வி .சற்சொரூபவதி நாதன் அவர்கள் பிரதம விருந்தினராக வருகைதந்து சிறப்பிக்கின்றார். அவர்களுடன் கழக உறுப்பினர்களும் வருகைதந்து இன்றைய பரிசளிப்பு விழாவினைச் சிறப்பிப்பதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

பல வகையிலும் ஒத்துழைப்பு வழங்கும் கொழும்புக்கிளையின் செயலாளர் திருமதி. சிவகாமி அம்பலவாணர் அவர்கள் இன்று வருகை தந்திருந்தது எனக்கு பெருமையையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றது. எமது சஞ்சிகையை அவர் வெளியிட்டு வைப்பதையிட்டுப் பெருமைப்படுகின்றேன். கல்லூரிச் சமூகத்தினரின் ஆதரவுடன் தொடர்ந்து கல்லூரி வளர்ச்சிப்பாதையில் செல்ல வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்..

திருமதி. ச. ஜெயராசா,
அதிபர்,
யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக"

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

"உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அணைத்தே புலவர் தொழில்"

– வள்ளுவர் வாக்கு

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# ஒரு வரலாற்று நோக்கு

நிலமகள் நெற்றிக் திலகம் என்று ஏத்த
நிலைத்திடும் கல்லூரி உனைத்
தலைமுறையாகத் தொழுதுளம் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ?

எங்கள் கல்லூரி வாழ்த்தில் காணும் பொன்னானவரிகள் தாம் இவை.

யாழ் நகரில் வாழ்ந்த பெரியோர் பலரின் மனதில் உதயமான நல்லகனவு, இன்று நனவாகவுள்ளது. எங்கள் கல்லூரி சைவத்தமிழ்ப் பெண் சிறுமிகளின் நலம் பேணும் கல்லூரியாக, அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்த ஒரு பெண் சமுதாயத்தை உருவாக்கும் சிறந்த பணியைச் செவ்வனவே செய்து இலட்சியத்தை நிறைவேற்றி வருகின்றது. இன்று கம்பிரமாகக் காட்சி தரும் எங்கள் கல்லூரி அன்னையை, நன்றி உணர்வுடன் இருகரம் கூப்பித் தொழுது, கல்லூரி படிப்படியாக உயர்ந்த வரலாற்றைத் தருவதில் கல்லூரியுடன் சேர்ந்து வளர்ந்த பழைய மாணவிகளாகிய நாம், பெருமிதமும் பெரும கிழ்வும் அடைகின்றோம்.

## கல்லூரி வரலாற்றுப் பின்னணி

சைவத்தமிழ் உலகிற்குக் கலங்கரை விளக்காகத் துலங்கிய நாவலர் பெருமானின் காலத்திற்குப் பின்பு நலிவுறத் தொடங்கிய எங்கள் சமயமும் மொழியும், மீண்டும் புத்துயிர் பெற்று விளங்க, 1888 ஆம் ஆண்டில், சைவபரிபாலன சபை ஸ்தாபிக்கப்பட்டது. யாழ் இந்துக் கல்லூரியை நிர்வகிக்கும் பொறுப்பும் இச்சபையிடம் கையளிக்கப்பட்டது. கல்லூரியை நிர்வகிக்க ஓர் நிர்வாக சபையை சைவபரிபாலன சபை நியமித்தது. இந்த நிர்வாக சபைக்கு 1902 ஆம் ஆண்டு இலங்கை அரசினால், உத்தி யோகபூர்வமாக, யாழ் இந்துக்கல்லூரி அதிகார சபை என அங்கீகாரம் வழங்கப்பெற்றது. யாழ் இந்துக் கல்லூரி அதிகார சபையினர் 13 இந்துக் கல்லூரிகளையும் பாடசாலைகளையும் நிறுவி நிர்வகித்து வந்தனர்.

இந்தச் சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கிய யாழ் இந்துக் கல்லூரியின் கண்ணியம் மிக்க அதிபர்கள் வரிசையில் ஏ. குமாரசுவாமி அவர்களின் பரந்த மனப்பான்மை காரணமாக, பாரதியின் கனவை நனவாக்கும் நல்லெண்ணத் துடன் 'ஏட்டு அறிவினில் ஆணுக்குப் பெண் இளைப்பில்லை" என்பதை நிலை நிறுத்த 1935 ஆம் ஆண்டு வரையில் யாழ் இந்துவில் பெண் சிறுமிகளும் கற்று வல்லவர்களாக உயர வாய்ப்பு அளிக்கப்பட்டது.

காலகதியில் அதிபர் ஏ. குமாரசுவாமி அவர்களும், அன்று வண்ணார்பண்ணையில் வாழ்ந்த பிரபல்யம் மிக்க அறிஞர் பெருமக்களும் பெண்களுக்குத் தனியாக ஒரு கல்லூரி நிறுவவேண்டியதன் அவசியத்தை உணர்ந் தார்கள்.

## எங்கள் கல்லூரி ஸ்தாபகர்

நீராவியடியில் வாழ்ந்த உயர்குடித் தோன்றலாகிய சட்டத்தரணி ஆர் சிவகுருநாதர் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் விசாலாட்சி அம்மா என்னும் அம்மையாரும் இராமநாதன் கல்லூரிக்கு நிகராக யாழ் நகரில் இந்து சமய கலாசார பாரம்பரியங்களை அடிப்படையாகக் கொண்ட மகளிர் கல்லூரி ஒன்றை நிறுவவேண்டும் என்று, அன்புள்ளம் கொண்டு, தயாள மனப்பாங்குடன் அரசடி வீதியில் தமக்கே உரித்தாக இருந்த(24 பரப்பு) நிலப்பரப்பைக் கல்லூரிக்கென அன்பளிப்புச் செய்தார். அவரே எங்கள் கல்லூரி ஸ்தாபகர் என்னும் பெருமையும் பெற்றார். அவரது கணவரும் அவரது நெருங்கிய உறவினர்திருமதி. வள்ளியம்மை சிவகுருநாதன் அவர்களும், 16

நிலப்பரப்புக்காணியை நன்கொடையாகத் தந்து உதவினர். அதிகாரசபையினரும் அம்மையாரின் உயரிய எண்ணம் வெற்றி பெற உறுதுணையாக இருந்தனர்.

## கல்லூரியின் தோற்றம்

1943 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ஆம் நாள், அதிகார சபை நிறுவிய மகளிருக்கான ஒரேயொரு கல்லூரி தான் யாழ் இந்து மகளிர் கல்லூரி.

யாழ் இந்துக்கல்லூரியில் இருந்து பிரிந்த ஒரு கிளையாக, இந்துக் கல்லூரியினதும் , அத்துடன் இணைந்த ஏனைய பாடசாலைகளினதும் அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ், யாழ் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்திற்குக் கிழக்கே வசித்த பரோபகார சிந்தையுடைய பெரியார் திரு. சிவகுருநாதர் பொன்னுச்சாமி அவர்களின் பொன்னாலயம் என்னும் அழகிய இல்லத்தில் இந்து மகளிர் கல்லூரி முதன் முதலாக இயங்கத் தொடங்கியது.

## கல்லூரியின் முதல் அதிபர்

அந்நாளில், யாழ். இந்துவின் அதிபராக இருந்த துணிவும் ஆற்றலும் மிக்க திரு.ஏ. குமாரசுவாமி அவர்களே. இக்கல்லூரியினதும் முதல் அதிபராகக் கடமை புரிந்து நிற்க, செல்வி காயத்திரி பொன்னுத்துரை அவர்கள்(திருமதி காயத்திரி கணேசன்) தற்காலிக அதிபராக, கல்லூரியின் முன்னேற்றத்தில் கருத்துடைய வராகச் செயற்பட்ட பொழுதே, சிறிதளவில் ஒரு விடுதியையும் ஆரம்பித்து வைத்தார். 8 ஆசிரியர் களையும் 110 மாணவிகளையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கல்லூரியில் நான்கு தொடக்கம் எட்டாம் வகுப்புவரையிலான வகுப்புக்களே இருந்தன. கல்லூரியின் ஆரம்ப நிலையிலேயே, அதிபர் விளையாட்டுத்துறைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவிரும்பி, வலைப்பந்து, பூப்பந்து போன்ற விளையாட்டுக்களில் தானும் பங்குபற்றி மாணவரையும் விளையாட உற்சாகப்படுத்தினார். அதே நேரம் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் வளர்ச்சிக்கும் வித்திடப்பட்டது. கல்லூரி ஆரம்பமான காலத்திலேயே, இசையிலும் நடனத்திலும் ஆற்றல் மிக்க மாணவிகள் முன்னணியில் நிற்கும் ஏனைய கல்லூரி மாணவிகள் போன்று யாழ் நகர மண்டப அரங்கில் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிப் புகழ் தேடத்தொடங்கினர்.

கல்லூரியின், மாணவர் தொகை கூடியதன் காரணமாக கல்லூரி 1944 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் நாள் யாழ். இந்துவின் விளையாட்டு மைதானத்திற்கு மாற்றப்பட்டது. அவ்வேளையில் இக்கல்லூரி அதிபராக செல்வி. முத்து அச்சையா அவர்கள் கடமையாற்றினார். வகுப்புக்கள், சிரேஷ்ட தராதரப்பத்திர வகுப்பு வரை அதிகரித்தன: கல்லூரி, இடநெருக்கடியால் அவதிப்பட நேர்ந்தது.

## நிரந்தரமான இடத்தில்

கல்லூரி ஸ்தாபகர் எனப் போற்றப்படும் திருமதி விசாலாட்சி அம்மா சிவகுருநாதர் அவர்கள், நன்கொடையாகத் தந்துதவிய அரசடி வீதியில் உள்ள விசாலமான நிலப்பரப்பில், நிரந்தரமான இடத்தில் நாம் உரிமையுடனும் உவகையுடனும் அடியெடுத்துவைத்தோம். 1945 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் நாள் கல்லூரியின் சரித்திரத்தில், மறக்கமுடியாத ஒரு நன்னாள் ஆகும். எங்கள் கல்லூரி முகாமை யாளரான சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்களால், மங்களகரமாகக் கல்லூரி விஞ்ஞான கூடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட வைபவத்தையும் கல்லூரித் திறப்பு விழாவையும், அதிகாரசபையினர், கல்லூரி அதிபர், ஆசிரி யைகள், மாணவிகள் அனைவரும் அமைதியாக ஆனால் ஆனந்தமாகக் கொண்டாடினோம்.

அவ்வேளையில், வகுப்பறைகள் யாவும் கிடுகுகளால் வேயப்பட்டனவாகவும், தரை வெண்மணற் பரப்பாகவுமே இருந்த பொழுதி லும், கல்லூரி வளர்ச்சியடையும் என்னும் மன உறுதியுடன் அதிபர்களும் ஆசிரியர்களும் செயற்பட்டதன் காரணத்தால், மாணவரும் கருத்தூன்றிக் கற்கத் தொடங்கினர்.

## கல்லூரி விநாயகர் ஆலயம்

காப்புக் கடவுளாகிய விநாயகருக்குக் கட்டப்பட்ட இராஜவரோதய விநாயகர் ஆலயமும் கல்லூரி வளாகத்தில் ஆரம்பத்திலேயே இருந்தது ஒரு வரப்பிரசாதமே.

'நலமிலன் நண்ணார்க்கு நண்ணியர்க்கு நல்லன்" என்னும் உண்மை இன்று நாம் உணரத் தக்கதாக உள்ளது. இந்தக் கல்லூரி தோன்றிய 60 ஆண்டுகளுக்கிடையில் எத்துணைத்துரித வளர்ச்சியை அடைந்துள்ளது.

## கல்லூரி முகாமைத்துவ சபையினரின் பணி

கல்லூரி உயர்வதற்கு ஒழுங்கான வகுப்பறைகளைக் கொண்ட கட்டடங்களும் இன்றியமையாதன என்று உணர்ந்த முகாமைத்துவ சபையினர் நிதி சேர்ப்பதற்கு அயராது, சலியாது உழைத்ததன் பயனாக ஆரம்பத்தில் வகுப்புக்கள் இருந்த நிலைமை விரைவில்மாறி, அழகிய கட்டடங்களாகக் காட்சி தந்தன. கல்லூரி உயரத் தங்கள் தன்னலங் கருதாத நற்சேவை நல்கிய, அதிகார சபையினருள் கல்லூரியோடு நீண்டநாள் நெருங்கிய தொடர்புடையவர்களாக சேர்.டபிள்யூ. துரைசுவாமி (சபாநாயகர் சட்டசபை) திரு. ஆர். ஆர் நல்லையா அவர்கள் (J.P.,U.M.,O.B.E) முடிக்குரிய நியாயதுரந்தரன் திரு.ரி. முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள், (வழக்கறிஞர்) M.B.E.இராசவாசல் முதலியார் திரு.வி. பொன்னம்பலம் அவர்கள்(J.P.M.B.E) திரு.அ. அருளம்பலம்(J.P) (வழக்கறிஞர்) திரு.சி. அருளம்பலம் (வழக்கறிஞர், பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர்) . திரு.ஏ. தனபால சிங்கம் (வழக்கறிஞர்) ஆகியோரை நன்றியுடன் இங்கு நினைவு கூர்கிறோம்.

## எங்கள் கல்லூரியின் வளர்ச்சிப் பாதையிலே அதிபர்களின் பணி

எங்கள் கல்லூரிக்குக் கடந்த காலங் களில் அளப்பரிய சேவையை ஆற்றிய அதிபர் பெருமக்களை நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

1945 ஆம் ஆண்டு திருமதி.ஜென்மராணி சிற்றம்பலமும். 1946ஆம் ஆண்டு தொடக்கம் 1948 வரை அமெரிக்கப் பெண்மணி திருமதி கிளேறா மொட்வாணியும் அதிபர்களாக கடமையாற்றிய காலங்களில் கல்லூரி பிரபல்யம் அடையத் தொடங்கியது. புதிய மாணவிகள் எங்கள் கல்லூரியை , நாடிவந்தனர். ஆங்கில பாடத்தை விசேடமாகக் கற்பதிலும், ஆங்கில மொழியைப் பேசுவதிலும் மாணவிகள் அதிகம் ஆர்வம் காட்டத் தொடங்கினர். 1947 ஆம் ஆண்டு பழைய மாணவிகள் சங்கம் உருவாக்கப்பட்டது. இன்று சங்கம் முழுமையான வளர்ச்சி பெற்றுப் பலம் வாய்ந்ததொரு அமைப்பாகக் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கிவருகின்றது. 14.06.1947 தொடக்கம் கல்லூரியின் விடுதியும் ஒழுங்காக நிர்வகிக்கப்பட்டதன் காரணமாக விடுதி மாணவர் தொகை நூற்றுக்கு மேலானது. எனவே அக்காலம், கல்லூரி வளர்ச்சியின் முதற்படி எனலாம்.

அடுத்ததாக, நிர்வாகத் திறனும் துணிவும் மிக்க திருமதி சறோஜினி ராவ் அதிபரானார். பல்கலைக்கழகப் புதுமுக வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன், சகலதுறை களிலும் கவனம் செலுத்தப்பட்டது. மனையியல், கைப்பணி ஆகிய பாடங்களும் போதிக்கப் பட்டன. இவரது நிர்வாகத்தின் கீழ் கல்லூரி, அதிசயிக்கத்தக்க முன்னேற்றங்கண்டு, இரண் டாந்தரப் பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டது. மாணவர்தொகையும் 1100 ஆக அதிகரித்தது. மாணவரின் முழுமையான தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் நூலகமும் சிறப்பாக அமைந்தது. நிர்வாகத்திறன் மிக்க அதிபர் திருமதி ராவ் அவர்கள் கல்லூரி வளர்ச்சிக்குச் சிறந்த அடித்தளத்தை அமைத்து எதிர்காலத்தில் கல்லூரி அதிபர்களாக கடமையாற்றுபவர் களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கினார். மாணவிகளுடைய உள்ளங்களில், கல்லூரியி டத்து ஒரு தனிமதிப்பையும் அன்பையும் நிலவச் செய்வதற்கு, எங்கள் கல்லூரியின் மகுட வாசகமாக 'இங்கு நான் கற்கின்றேன், எனவே எனது கல்லூரி என்றும் அழகுடையதாக விளங்கவேண்டும்' என அமைத்துத்தந்தார்.

## 1954 கல்லூரிக் களியாட்ட விழா

கல்லூரியில் ஒழுங்கையும் கட்டுப்பாட் டையும் கடைப்பிடித்த அதிபர் திருமதி. சறோஜினி ராவ் அவர்கள் தளராத மனஉறுதியுடையவர். 1954 ஆம் ஆண்டு, அவர்களின் காலத்திலேயே அதிகாரசபை அங்கத்தவர்கள் பல பிரமுகர்கள், கல்லூரி நலன் விரும்பிகள் ஆகியோரின் உதவியுடன் கல்லூரிக் கட்டடங்களுக்கான நிதியைத் திரட்டிக் கோலாக லமாக ஒரு மாதகாலம் ஒரு களியாட்ட விழாவை நிகழ்த்திய வேளை, கல்லூரி அழகுமிக்க இந்திரலோகமோ என்று வியக்கத்தக்கதாகக் காட்சி தந்தது. அந்த நேரத்திலே ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பையும் நடாத்தி வெற்றிகண்டார். எல்லோருடைய ஒன்றிணைந்த முயற்சியின் பலனாக கல்லூரிக்கு உயர்ந்த சுற்றுமதிலும் கட்டப்பட்டது.

முதலாந்தரப் பாடசாலையாக.

1954 தொடக்கம் 1975 வரை திருமதி விமலா ஆறுமுகம் அவர்கள் அதிபராகி அயராது பணிபுரிந்தார். க.பொ.த. உயர்தர, பல்கலைக்கழகக் கலைப்பிரிவுக்கு கூடுதலான மாணவிகள் தெரிவு செய்யப்பட்டனர். கால கதியில் மருத்துவத்துறைக்கும் ஒரு சில மாணவிகள் தெரிவானார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. விளையாட்டுத்துறையிலும். அகில இலங்கை மெய்வல்லுநர் போட்டியில் முதலாவது இடத்தை எங்கள் மாணவிகள் பெற்றுக் கல்லூரிக்குப் புகழ் தேடித் தந்தனர்.

1962 ஆம் ஆண்டிலே, இவரது காலத்திலேயே எங்கள் கல்லூரியும் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது. அது கல்லூரியின் வரலாற்றிலே ஒரு திருப்புமுனை எனலாம். பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு.சி. அருளம்பலம் அவர்கள், பாராளுமன்ற அங்கத்தவர்க ளுக்கான நிதி ஒதுக்கீட்டில் இருந்து எங்கள் கல்லூரிக்கு முக்கிய தேவையாக இருந்த பிரார்த்தனை மண்டபத்தைக் கட்டி முடிப்பதற்கான தொகையைப் பெற்றுத்தந்தார். பழைய மாணவிகளுள் ஒருவராகிய திருமதி கார்த்திகா கணேசன் அவர்களின் நடனக்கலை நிகழ்ச்சி மூலமாக பழைய மாணவிகள் திரட்டிய நிதியும் மண்டபத்தைப் பூர்த்தி செய்வதற்குஒரு பங்காக பயன்பட்டது.கல்லூரியின் மாணவிகளே பங்கு பற்றிய 'நள தமயந்தி', 'கற்புக்கனல்' என்னும் தரமான நாடகங்களும் யாழ். நகரமண்டபத்தில் மேடையேற்றப்பட்டு நிதி திரட்டப்பட்டது. இன்று கல்லூரிப் பிரார்த்தனை மண்டபம் அழகுடனும், பொலிவுடனும் காட்சி தருகின்றது. மற்றும் மாடிக்கட்டிடங்கள் தோன்றுவதற்கு நிதி ஒதுக்கீட்டில் இருந்து கல்வித்திணைக்களம் பெற்றுத்தந்த கணிசமான தொகை கிடைத்ததே காரணமாயிற்று. அதிபர் அவர்களின் 21 ஆண்டுகள் சேவையின் பொழுது கல்லூரி முதலாந்தரப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது என்பது மகிழ்ச்சிக்குரியது.

## முன்னணியில் நிற்கும் கல்லூரிகளில் ஒன்றாக.

1976 - 1986 யூன் மாதம் வரை ஆளுமைத் திறன் மிக்கவரான செல்வி. பத்மதாவதி இராமநாதன் அவர்கள் அதிபரானார். எங்கள் கல்லூரி முன்னணியில் நிற்க ஊக்கமுடனும் தியாக சிந்தையுடனும், தன்னலங்கருதாத சேவைபுரிந்த பெருமைக்கும் பாராட்டுக்கும் உரியவராவார்.

க.பொ.த உயர்தர கலை , விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மாத்திரம் அன்றி மருத்துவத்துறைப் பகுதிக்கும் பல்கலைக் கழகத்திற்கும் அனுமதிபெற்ற மாணவர் தொகை அதிகரித்தது. 1977 தொடக்கம் 1980 வரை தொடர்ச்சியாக மாவட்டரீதியான ஆங்கில, தமிழ்ப் போட்டிகளிலும், விஞ்ஞான வினாவிடைப் போட்டிகளிலும் 1ஆம் இடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கங்களை தங்களுக்கே உரிமையாக்கிக் கொண்டனர். 'புதிய ஆக்கம்" என்னும் நவீன நடனப்போட்டிகளிலும் 1ஆம் இடத்தைப் பெற்றுக் புகழ் ஈட்டியதும் இவரது காலத்திலேயே என்பது குறிப்பிடத்தக்கது. விளையாட்டுத் துறையிலும், மாவட்டப்பெண்கள் கல்லூரிகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில், பரிதிவட்டம் எறிதலில் 1 ஆம் இடத்தைப் பெற்றதுடன். பூப்பந்து ஆட்டத்தில் குழு வெற்றிவீராங்கனைகளாக வாகை சூடினர். கல்லூரியின் புகழ் அகில இலங்கை முழுவதும் பரவக்காரணகர்த்தாவாக விளங்கியவர் அதிபர் இராமநாதன் அவர்களே. தற்பொழுது உள்ள காரியாலயம், விஞ்ஞான கூடங்கள் அனைத்தும் இவரது காலத்தில் உருவாகியவையே. 27.03.1986 இல் கல்லூரி விநாயகர் ஆலயமும் புனருத்தாரணஞ். செய்யப்பட்டுக் கும்பாபிஷேகமும் சிறப்புற நிறைவேறியமை மறக்க முடியாததொன்றாகும்.

## இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

1978 ஆம் ஆண்டுடன் பாலர் வகுப்புத் தொடக்கம் 5ஆம் ஆண்டு வரையிலான வகுப்புக்களைக் கொண்ட பகுதி இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை என்னும் பெயரில், தனியாகப் பிரிந்துள்ளது.

## பொன்விழாக்கால அதிபர்

1986 யூன் மாதத்திலிருந்து, செல்வி. ப.இராமநாதன் அவர்கள் ஆற்றிய பணியைத் தொடர்ந்து, செயலாற்ற கல்லூரி அதிபராகப் பதவியேற்ற அதிபர் திருமதி.திவ்விய சிரோன்மணி நாகராஜா அவர்களும் கல்லூரி உயர்நிலை அடைவதற்குப் பலவழிகளிலும் தனது பங்களிப்பை வழங்கித் திறமையாகச் செயற்பட்டு வந்தார். போர்க்காலச் சூழ்நிலையால் சொல்லொணாக் கஷ்டங்களை எதிர்

நோக்க வேண்டியிருந்த வேளையிலும், துணிவுடன் செயற்பட்டு வெற்றிகண்டுள்ளார்.

நிர்வாகப்பணியில், அதிபருக்கு ஒத்துழைப்பு நல்குவதற்குத் தகுதிவாய்ந்த பிரதி அதிபர், உப அதிபர்கள், பகுதித்தலைவர்களான 7 ஆசிரியர்கள் ஆகியோரிடம் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. கற்பிக்கும் ஆசிரியர் தொகை 70 ஆகவும் கற்கும் மாணவர் தொகை 2100 ஆகவும் அன்று இருந்தமை குறிப் பிடத்தக்கது.

ஆண்டுதோறும் யாழ். சைவ பரிபாலன சபை நடாத்திவரும் சமயபாடத் தேர்விலும் பண்ணிசைப் போட்டிகளிலும் அதிகமான மாணவிகள் பங்குபற்றி விசேட பரிசுகளைப் பெற்றும் இந்துசமய கலாசார பாரம்பரியங் களைக் காத்தும் புகழ் ஈட்டியுள்ளனர்.

அக்காலத்தில் கொத்தணி மட்டத்தில் தமிழ்த்தினப் போட்டிகளில் எங்கள் கல்லூரி மாணவிகள் 1 ஆம், 2 ஆம் இடங்களைப் பெற்று வெற்றிவாகை சூடி முன்னணியில் நிற்கின்றமை பெருமைக்குரியதாகும். இவரது காலத்தில் சகல பிரிவுகளிலும் விசேடமான பரீட்சைப் பெறு பேறுகள் கிடைக்கப்பெற்று வருடாவருடம் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வந்ததும் இவரது நிர்வாகத்திறனுக்குச் சான்று பகருகின்றது. மேலும் விளையாட்டுத்துறையில் வலைப் பந்தாட்டம், பூப்பந்தாட்டம் என்பனவற்றில் வெற்றிபெற்று பெருமை தேடிக் கொடுத்தனர். வெளிக்கள நிகழ்வுகளில் முன்னேறிச் செல்வதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவை அனைத் திற்கும் சிகரம் வைத்தாற் போன்று கல்லூரிக்குப் பெருமையுடன் பொன்விழாக் கண்டார் அவர்.

இவரைத் தொடர்ந்து 1993 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இன்றைய அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா அவர்கள் பொறுப்பேற்றுக் கல்லாரியை சிறந்த முறையில் வழிநடாத்தி வருகின்றார்.

இவரது காலமும் அரசியல் குழப்பம் நிறைந்த காலமாகும். பலவித தாக்கத்திலிருந்து கல்லூரியையும் மாணவிகளையும் கட்டிக்காப் பதில் பெருமளவு சிரமம் இருந்தது. அதன் உச் சக்கட்டமாக 1995ஆம் ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி இடம்பெற்ற இடம்பெயர்வு அமைந்தது. இடம்பெயர்வின்போது பல சிரமங்களின் மத்தியில் எமது கல்லூரியை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் மாலை நேரப்பாடசாலையாக இயங்க வைத்து மாணவர்களின் கல்வி வளர்ச்சியடைய முயற்சி செய்தார். மீண்டும் 1996ஏப்ரலில் திரும்பி வந்த பொழுது ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் தொகை குறைந்தது. கல்லூரி பல விதத்திலும் அழிந்து ஆவணங்கள் தொலைந்து பொலிவிழந்து காணப்பட்டது. படிப்படியாகப் பலதரப்பட்ட வர்களின் உதவியுடன் கல்லூரி திருத்தி அமைக்கப்பட்டு நூல்நிலையம், பொது விஞ்ஞான கூடம், கணினி அறை ஆகியவை அமைக்கப்பட்டு மாணவர்களின் கல்வி அறிவு வளர்க்கப்படுகின்றது. மாணவர்கள் சகல துறைகளிலும் ஏனைய பாடசாலைகளுடன் போட்டி போட்டு முன்னேறுவதற்கு இவையே சான்றாகும். மாவட்ட , மாகாண, தேசிய மட்டப் போட்டிகளில் மாணவர்கள் பெற்று வரும் வெற்றிகள் சான்று பகர்கின்றன. அத்துடன் கணிசமான மாணவர்கள் ஆண்டுதோறும் பல்கலைக்கழகத்திற்குச் செல்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று கற்பிக்கும் ஆசிரியர் தொகை 65 ஆகவும் கற்கும் மாணவர் தொகை 1922 ஆகவும் உள்ளது. இவரின் முயற்சியின் பயனாகக் கல்லூரி, வரலாற்றில் முதற்தட வையாகக் கல்லூரியின் 100 மாணவர்கள் தென்பகுதிக்குக் கல்விச் சுற்றுலாவில் அழைத் துச் சென்ற பெருமை இவரையே சாரும்.

அடுத்த ஆண்டில் கல்லூரி தனது மணிவிழா காண இருக்கின்றது. பல துறைகளில் கல்லூரி பெருமையுடன் வளர சகலரும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்விதமாக 60வது ஆண்டை நெருங்கிக் கொண்டிருக்கும் எமது கல்லூரியானது யாழ்ப்பாணத்தில் இந்துப்பாரம்பரியத்தைப் பேணும் சிறந்த கல்லூரியாக விளங்குகின்றது. இது தொடர்ந்தும் தனது குறிக்கோளை நிறைவேற்றி சிறந்ததொரு பெண்கள் கல்லூரியாக மிளிர வேண்டும்.

திருமதி ஞானேஸ்வரி சொக்கலிங்கம்
பழைய மாணவர் சங்கம்,
லண்டன் கிளை.

யாழ் இந்து மகளிர் கல்லூரியின்
"சக்தி" மலரை வாழ்க வாழ்கவென
வாழ்த்துகிறோம்.

# நல்லி சில்க்ஸ்



சிறுவர் தொடக்கம்
பெரியவர் வரை
கவர்ந்திழுக்கும்
பலவர்ண அமைப்பு
டிசைன்களில் ரெடிமேட் ஆடை
அணிகளை



அணிந்து மகிழ நாடுங்கள்

# நல்லி சில்க்ஸ்

(விசாலமான காட்சிக் கூடம்)

*121/1, மின்சார நிலைய வீதி,* — *யாழ்ப்பாணம்.*

"சக்தி" ஆண்டுதோறும் சிறப்புற மலர வாழ்த்துகிறோம்.

**நவீன நங்கையர்க்கு நவீன கால**

**டிசைன்களில் காண நாட்டம்**



# சிறீ மீனாட்சி நகையகம்

இல: 187, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்

*நாம் அதி நவீன டிசைன்களில்*
*அழகாக 22கரட் தங்கத்தில் வடிவமைத்து தங்க*
*ஆபரணங்களைச் செய்வதற்கு சிறந்த பெயர் பெற்ற*
*ஸ்தாபனம்*

# SREE MEENAAKCHI

# GOLD HOUSE

NO: 187, KASTHURIAR ROAD,
JAFFNA

# தமிழ் மன்றம்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி க. விமலநாதன், திருமதி ச. சிவகுமார், திருமதி இ. இராஜமனோகரன் (பொறுப்பாசிரியர்), திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), செல்வி மு. தனப்பிரியா, திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி கா. சிவநேசன், திருமதி ம. திருநாவுக்கரசு, திருமதி ப. சுந்தரலிங்கம், திருமதி சி. றோய்நேசராஜா.

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி யோ. புகழினி, செல்வி சி. சுபாகினி, செல்வி ச. அபிராமி, திருமதி கௌ. சிவகுமார், திருமதி ஆ. செங்கதிர்ச்செல்வன், செல்வி க. பிரபாலினி, திருமதி சு. பரமலிங்கம், திருமதி கௌ. சுபாஸ்கரன், திருமதி இ. சந்திரலிங்கம், செல்வி பி. வட்சலா, செல்வி ஸ்ரீ. ராஜகுமாரி, செல்வி க. ராஜிகா, செல்வி க. அனுஷா.

# ஆங்கில மன்றம்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி கு. தர்மகுணசிங்கம், திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி ஞா. வீரகத்திப்பிள்ளை, திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), செல்வி வே. வினித்திரா (தலைவர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி இ. குணரட்ணம்.

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி சி. காயத்திரி, செல்வி யோ. புகழினி, செல்வி க. மதுராம்பிகை, செல்வி க. நிஷாந்தி, செல்வி ம. துஷாரா, செல்வி ச. அபிராமி, செல்வி ச. துளசிகாயினி, செல்வி கு. கார்த்திகா, செல்வி கு. சுபா.

# சங்கீத மன்றம்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி ச. சிவகுமார், திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), செல்வி ஸ்ரீ. தாரணி, திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி ம. திருநாவுக்கரசு,

*1ம் வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செ. ஸ்ரீரேகா, ம. கிஜானி, த. துசிதா, ச. கணேஸ்வரி, வ. மனோதர்சினி, ச. சாருகேசி, இ. லிபியந்தி, சு. அபர்ணா, ச. ரம்யா, பொ. அர்ச்சனா, தி. சுகன்யா

*2ம் வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* ச. ஹம்சத்வனி, சி. யசோதா, ர. ஆவணி, தே. சரண்யா, பா. ஜெகாம்பிகா, சி. சகிலா, செ. பவித்திரா.

# இந்து மாமன்றம்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி ச. சிவகுமார், திருமதி க. பூலோகசிங்கம், திருமதி க. சிவநேசன், திருமதி ம. சீவரட்ணம், திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி பா. சிவபாதசேகரம், செல்வி கு. கார்த்திகா (தலைவர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி ம. திருநாவுக்கரசு, திருமதி ச. சிவநாதன் (பொறுப்பாசிரியர்), திருமதி இ. சந்திரலிங்கம்.

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி பா. அஜந்தரூபி, செல்வி ஸ்ரீ. ஸ்ரீபிரபாலினி, செல்வி வ. நந்தினி, செல்வி சி. சிவநயனி, செல்வி பி. சதாஜினி, செல்வி வே. வினித்திரா, செல்வி பு. நிரோஜனி, செல்வி சி. காயத்திரி.

## முத்தமிழ்

கலை களனைத்தும் பெற்ற முத்தமிழே
கலையில் வந்தாய் நீயும் மூன்றாய்
நுண்கலையில் உன்னை வைத்தது யாரோ?
வேந்தர் வளர்த்த முத்தமிழே நீயும் வாழி.

மன்னருன்னை அரவணைக்க மண்ணிலே
எத்தனை சாதனை நீ சமைத்தாய் – நாம்
இங்கே உள்ளவரை அத்தனையும்
அழிந்திடுமோ முத்தமிழே நீ வாழி

உரையோடும் பாட்டோடும் இலக்கணமாய்
நின்ற தமிழ் ஒன்று பாட்டொடு இசையும்
தாளமுமாய் பின்னிய தமிழ் இன்னொன்று
உரையும் பாட்டும் அபிநயமும் கொண்ட தமிழ் ஒன்று

படிப்படியாய் நீ வளர்ந்தாய் பாரினிலே
பாமர மக்கள் உன்னை அறிந்திட
முக்கோணமாய் நீ திகழ்ந்தாய் – ஆதியும்
இல்லை அந்தமும் இல்லை, உனக்கிங்கே

சினிமாவே உன்னை அரவணைக்கும்
தற்காலத் தாய்க் காலத்தின் கோலத்திற்கு
நெகிழ்ந்திட நெகிழும் நீங்கள் அவள் குழந்தைகள்
நவீனம் என்னை வளர்க்கின்றது முத்தமிழே வாழி நீ.

**பொ. சுகந்தினி**
**12 கலைப்பிரிவு**

## எரியும் இன்பத் தமிழ்த் தீயே

அம்மா தமிழே
வணக்கம் அம்மா
எரியும் இன்பத் தமிழ்த் தீயே
வணக்கம்.

செந்தமிழே
எனது சிறுவாயால் உன்னைப் பாட
எவ்வளவு தகுதி எனக்குண்டோ!

நானறியேன்
இடமுள்ளவரை பாடுகின்றேன்
பைந்தமிழே

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து
முன் தோன்றிய மூத்த தமிழே
உன் சொல்லின் அழகில் சொக்காதாருண்டோ!
கற்பாறையும் கரையாதோ உனைக் கேட்டு
சிப்பிக்குள் முத்திருந்து சிலிர்ப்பது போல்
என் கவிக்குள் நீயிருந்து சிலிர்க்கின்றாய்

இயலாகி.......................... இசையாகி..........................
நாடகமாகி..............................எழுந்த
எங்கள் முத்தமிழே
விந்தையான இவ்வுலகில்
வாழ்கின்ற மொழிகளிலே
வெற்றி பெற்றதோ உன்னழகு
எத்தனை மகிழ்வுனக்கு!

பசுந்தமிழே நற்றமிழே
தமிழரின் தாய் மொழியே
பண்ணாக உன்னைப் பாவலர் வளர்க்கையிலே
எம் இதயங்களுக்கும் ஒலிக்கின்றனவே
கேட்கின்றனவா உனக்கு!
கண்ணாக நீயிருந்து
கலைக்கோலம் புரிவதனை
காணாமல் இருக்குமோ
உன் பேரெழிலை எம் கண்கள்
தித்திக்கும் தெவிட்டாத தீந்தமிழ்த் தாயே
உன்னைப் பாட இடமுண்டு
ஆனால் என் இதயத்தில் அல்ல
என்னைப் போன்ற ஜீவன்களின் இதயத்தில்
வடித்திடுவார்கள் உன் சிறப்புக்களை
பைந்தமிழில், தமிழ்த்தாயே
காத்திரு பொறுமையோடு
வாழ்க தமிழ் மொழி
வளர்க தமிழ் மொழி

*மா. சர்மினி*
***13, கலைப்பிரிவு (2002)***

## கல்விசாரா ஆளணியினர்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி. வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்)


*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* திரு. செ. கதிர்காமலிங்கம் திரு. சி. ஜெயரட்ணம், திரு. சு. வீரையா, திருமதி சு. குணசீலன், செல்வி செ. விக்னேஸ்வரி, செல்வி க. தர்சினி, செல்வி த. விமலாவதி, திரு. க. பாலச்சந்திரன் திரு. ஆ. நேசகுமார்

## "சக்தி" மலர்க்குழு




திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி கா. சிவநேசன், திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), செல்வி ப. சிவசித்ரா, திருமதி ச. சிவநாதன், திருமதி க. விமலநாதன்

## மேலத்தேச வாத்தியக் குழு




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி இ. குணரட்ணம் (பயிற்றுநர்), திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி ஞா. வீரகத்திப்பிள்ளை (பொறுப்பாசிரியர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), செல்வி கு. கார்த்திகா, திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி ந. சிவசுப்பிரமணியம், செல்வி ந. சாரதா

*1ம் வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி க. சித்ரா, செல்வி இ. ஜனனி, செல்வி ம. அர்ச்சனா, செல்வி உ. நிருஜா, செல்வி செ. தர்மினி, செல்வி சங்கீதா, செல்வி ஸ்ரீ. மதுரந்தினி

*2ம் வரிசையில் நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி சி. நிருத்தாஞ்சலி, செல்வி த. தர்சினி, செல்வி சி. சிந்துஜா, செல்வி ர. பிறாமினி, செல்வி ச. அபிராமி, செல்வி ம. துஷாரா, செல்வி சி. சிவசங்கரி, செல்வி ச. துளசிகாயினி, செல்வி சு. சுமணா, செல்வி இ. கார்த்திகா, செல்வி பா. கார்த்திகா, செல்வி க. மதுராம்பிகை

## சேன்ஜோன்ஸ் அம்புலன்ஸ்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி ரோ. பாலஸ்கந்தன் (பொறுப்பாசிரியர்) திருமதி மீ. செல்லையா (உப அதிபர்) செ. ஜெயபிரியா, திருமதி ச. ஜெயராஜா (அதிபர்) ம. நாகநந்தினி (உப தலைவர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்) செல்வி பி. சொக்கலிங்கம் (துணைப் பொறுப்பாசிரியர்)

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி த. தயாளினி, ஜெ. ஜெனிற்றா, வி. கார்த்திகா, வி. நிருபா, ஜெ. டில்சாந்தி, இ. ஜெனனி, ந. மனோஜா, ஜெ. மாலினி, ச. சிவதீபா, சு. சுபாஜினி, வி, பூர்ணிமா, து. தபேந்தினி.

*சமூகமளிக்காதோர்:* செல்வி சி. சிவதர்சினி (செயலாளர்) செல்வி அ. கலைவாணி (தலைவர்)

## வாழி தமிழ் வாழி தமிழ்

இன்பத் தமிழே நீதான் எனது – தாய்மொழி
நீதான் எனக்கு வாய்மொழி
மெய்விழியும் நீதான் தமிழே – உயிர்த்
தாயொளியும் நீதானே.

கன்னித் தமிழே நீதான் எனது – உயிர்மொழி
நீதான் எனக்கு உயிர்வழி
செயல் துளியும் நீதான் தமிழே – மென்
இசையொளியும் நீதானே.

சிந்து தமிழே இந்துமாகடலினில் – பயமின்றி
பாடியாடியதும் நீதானே
மனமொழியும் நீதான் தமிழே – என்
இணைமொழியும் நீதானே.

பைந்தமிழே தரணி போற்றிடும் – இலக்கியங்களில்
பரணி உமிழ்ந்ததும் நீதானே
பொன்மொழியும் நீதான் தமிழே – நாவலர்
போற்றிடும் நன்மொழியும் நீதானே

தீந்தமிழே பருகும் அமுதம்போல் – நீதிபலவற்றை
சொரிந்து வழங்கியதும் நீதானே
தித்திக்கும் மொழியும் நீதான் தமிழே – பாண்டியனைத்
திகட்ட வைத்ததும் நீதானே.

வந்தனங்கள் ஆயிரம் நான் கூறிடுவேன் – உனக்கு
சந்தனத்தால் காவியம் செய்திடுவேன்
வாழிதமிழ் வாழிதமிழ் நீவாழி – பல்லாண்டு
சோழமன்னவன் காலத்து செந்தமிழே – நீவாழி

கு. கார்த்திகா
கணிதம். 2003.

"உடுப்பது தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"

– வள்ளுவர் வாக்கு

# சிறந்த மாணவர்களே இலட்சிய மனிதர்கள்

இன்றைய மாணவர்களே நாளைய சமூகத்தின் தலைவர்களாகவும் சமுதாயத்தின் ஆணிவேராகவும் திகழ்பவர்கள். அவர்களுடைய தூய்மையான வாழ்வும் தெளிவான சிந்தனையும் நாளைய சமுதாயத்தின் மலர்ச்சிக்குப் பசளையாக அமைவன. மாணவப் பருவத்தில் பெறும் அறிவும், பண்பாடும், பழக்க வழக்கங்களும் அவர்கள் வாழ்வின் இறுதிவரை வழிநடாத்தும் கருவிகளாக அமைகின்றன. "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்ற முதுமொழி நமக்கு இந்த உண்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

பாடசாலையில் மாணவன் பெறும் கல்வி வெறும் ஏட்டுக்கல்வியாக இருந்தால் மட்டும் போதாது. அவனுடைய அறிவு வளர்வதுடன் மனப்பண்பும் வளர்கின்ற கல்வியாகப் பாடசாலைக் கல்வி அமையவேண்டும். "கல்வி, பயிற்சி அனைத்தினதும் முடிவு ஒரு மனிதனை உருவாக்குவதே" என வீரத்துறவி விவேகானந்தர் கூறியுள்ளார். "நல்ல குணாதிசயங்களை உருவாக்குவதே தான் கல்வியின் நோக்கம்" என்பது மகாத்மா காந்தியின் கருத்தாகும். தான் வாழும் சமூகத்துடன் ஒரு மாணவன் சேர்ந்து வாழக்கூடிய பண்பை உருவாக்குவதே கல்வியின் குறிக்கோள் எனத் தற்கால அறிஞர்கள் கருதுகின்றனர்.

வாழ்க்கை வசதிகளும் ஒழுங்கும் பண்பாடும் இல்லாத சேரிப்புறத்தில் பிறந்து வளர்ந்த பிள்ளையானாலும் அவனுக்கு ஒழுங்கான கல்வி கிடைக்குமானால், சீராகவும் சிறப்பாகவும் வளர்ந்து தனக்கும் சமூகத்திற்கும் பயன்படுவான். நாட்டப்பட்ட விதை முளைத்து செழித்து வளர்வதற்குப் போதிய நீரும் பசளையும் கிடைக்க வேண்டும். அப்போதுதான் பயிர் முளைத்து வளர்ந்து பூத்துக்காய்த்துப் பலன்தரும். மாணவனும் இவ்வாறே வளர்த்தெடுக்கப்பட வேண்டியவன்.

பாடசாலையில் மாணவன் பெற்ற கல்வியும், அறிவும், அனுபவமும் வாழ்நாள் முழுவதும் அவனுக்குத் துணையாக அமைகின்றன. வீட்டுச் சூழலில் இருந்து விடுபட்டு பாடசாலைக்கு வரும் மாண்வனை ஆசிரியர் வரவேற்று ஆதரித்து சமூகத்தில் சேர்த்து வைக்கின்றார். இதனால் மாணவனின் உளமுதிர்வுக்கும் வளர்ச்சிக்கும் ஏற்ப அறிவை வளர்க்கும் தளமாகப் பாடசாலை அமைகிறது. மாணவனை உருவாக்கும் சிற்பியாக ஆசிரியர் அமைகிறார். மாணவனின் உணர்வையும் நல்லாற்றலையும் அறிந்து ஆசிரியரின் வழிகாட்டலை ஒழுங்காகப் பின்பற்றும் மாணவன் சமூகத்தில் முதன்மை பெறுகிறான். தான் வாழும் சமூகத்துக்குத் தலைமை தாங்குவான். இவனை ஏனையோர் . பின்தொடர்வார்கள். தனது இலட்சியங்களை சமுதாயத்தில் பிரதிபலிக்கச் செய்கிறான். பாடசாலையின் நன்மாணவன் மக்களால் நேசிக்கப்பட்டுப் பின்பற்றப்படுகின்றபோது அவன் இலட்சிய மனிதனாகி விடுகின்றான். நல்ல மாணவன் நல்ல மனிதனாக வாழமுடிகிறது. சிறந்த மாணவன் இலட்சிய மனிதனாக உருவாகி விடுகின்றான். பாடசாலையே இவ்ன் வாழ்க்கைக்குக் களமாக அமைகின்றது.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

ந. சுஜிதா
தரம் 10 ஏ

# அன்னையே அன்பின் ஊற்று

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என அருள் மொழி கூறிய மூதாட்டி அன்னையின் அன்பை ஆழமாகவும், அழகாகவும் வெளிப்படுத்தியுள்ளார். பத்துமாதம் பக்குவமாய் பாரினிலே தவமிருந்து நம்மை ஈன்றெடுத்து, பாராட்டிச் சீராட்டி வளர்த்து எடுத்த அன்பு எத்தகையது. உலகிற் பிறக்கும் எந்தப்பிள்ளையும் மூன்று வயதாகும் வரை அன்னையின் அன்பைத் தவிர வேறு எதையும் புரிந்துகொள்ள மாட்டாது. தனது அன்பினாலேயே தாலாட்டி வளர்க்கும் தாயை சதாநினைவு கூருகின்ற பிள்ளை அந்த அன்னையின் அன்பின் ஊற்றில் வளர்கின்றது. எந்தப் பிள்ளையும் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலேதான்.

தொட்டிலிலும் தூளியிலும் தூங்குகின்ற பிள்ளையை அன்போடு தட்டியெழுப்பி தன்னகத்தே சுரந்திடும் பாலினைப் பருகிடச் செய்திடும் அந்த அன்னையின் அன்பினையே

மாணிக்கவாசகர் "பால் நினைந்தூட்டும் தாய்" எனத் திருவாசகத்திலே கூறியுள்ளார். "முள்ளை முள்ளாலேயே எடுக்க வேண்டும் என்பார்கள். குறும்புகள் செய்யும் பிள்ளையை அன்பினாற் செல்லமாக அணைத்து பல நீதிக்கதைகளைப் பக்குவமாக எடுத்துரைத்து நல்வழிப்படுத்தும் தாயன்பிற்கு நிகர் ஏது? தாயன்பு பெரியதொன்று, அதில் தன்னலம் இல்லையென்று வாயாரப் புகழும் உலகம் அன்னையை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துள்ளது. பிறந்திட்ட குழந்தை 'அம்மா' எனத் தன்னை பெற்றிட்ட தாயை அழைக்கின்றது. அன்று முதல் இவ்வுலகில் இருக்கும் வரை தாயை மறப்பதில்லை. அன்பைக்கொட்டித் தன்னை வளர்த்திடும் தாய்க்கு இதயத்திற் கோயில் கட்டி வணங்குகின்றான். இதனால் தான் என்னவோ 'தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை" என்று கூறுகின்றார்கள். பிள்ளையானது செய்துவிட்ட தவறுக்காக தந்தை தண்டிக்க முற்படும்போது இடையிற் புகுந்திடும் தாய் தவறு செய்த குழந்தையையும் தண்டிக்க முற்படும் தந்தையையும் அன்பினால் சமாதானப்படுத்துகின்றாள். இதனால் தந்தைக்கும் குழந்தைக்கும் இடையில் மேலும் பாசப்பிணைப்பு அதிகரிக்கின்றது. இந்த இடத்திலே அன்னையின் அன்பு மேலும் ஒருபடி உயர்கின்றது.

இந்த இருபத்தொராம் நூற்றாண்டில் கணினிகள் வந்துவிட்ட போதிலும் அன்று முதல் இன்று வரை என்றும் மாறாதிருப்பது தாயன்பு ஒன்றுதான். ஒரு பிள்ளையைப் பெற்று அன்று முதல் தானிருக்கும் வரையிலும் அந்தப் பிள்ளைமீது பாசம் வைத்திருப்பாள் தாய். அப்படியான அன்னை மீது உலக வாழ்க்கையில் இணைத்துவிட்ட சிலர் சில சந்தர்ப்பங்களில் தாயன்பை வெறுப்பதுண்டு. அப்படியிருந்தும் தாயானவள் அவர்களை வெறுப்பதில்லை. ஒரு சில பொற்காசுகளுக்காகத் தாயின் தலையை வெட்டிச் செல்லும் இரக்கமற்ற இளைஞன், பாதையில் தடக்கிவிழ ஏற்படுகின்ற வலியினைப் பார்த்து "மகனே வலிக்கின்றதா"? என அத் தாயின் தலை கேட்கின்றது. இது ஒரு புராணக்கதை. பாசத்தோடு வளர்த்து விட்ட பிள்ளை தன் பாசத்தை மறந்து தன் உயிரை கொன்ற போதும், தன்னுயிரீந்து பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் அந்த அன்னையே அன்பின் ஊற்று.

"அம்மா என்றழைக்காத உயிரில்லையே
அம்மாவை வணங்காது உயர்வில்லையே
நேரில் நின்று பேசும் தெய்வம்
பெற்ற தாயன்றி வேறன்பு ஏது"?

ஸ்ரீஸ்கந்தராஜா அருணா
தரம்10 ஏ (2002)

# அன்பின் உறைவிடம்

கருவில் நான் உருவான
நாள் முதல்
கண்ணின் மணி போல்
காத்து வளர்த்த அன்னையே
கருவறையில் நான் காலால்
எட்டி உதைக்கும் போது – பட்ட
கஷ்டமெல்லாம் மறந்து
சிரித்தவள் அன்னையே

உயிருக்குள் உயிர்
வளர்த்து – ஓர் உயிரைச்
சுமக்கும் பூக்கூடையாகி
மரணத்தோடு உரையாடி
விட்டு என் முகவரியை
உலகிற்கு காட்டியவள்
அன்னையே.

பூ மகள் என்னைத்
தாங்கும் போது
பூவாய் உன்முகம்
மலர்ந்திட
புது உலகம் – என்னை
அழைவைத்த போது
பூப்போன்ற என் மேனியை
வாஞ்சையுடன் வருடினாயே

அன்பின் ஊற்றான அன்னையே
பாலூட்டும் போது புகட்டுகிறாள் மௌனமொழி
தாலாட்டும்போது தமிழ் மொழி விதைக்கிறாள்
தடுக்கில் நான் தடுக்கி விழாமல்
தாங்கி என்னை அரவணைத்து
அவனியில் காலடி வைத்திட
வழி செய்தவள் அன்னையே.

தாயின் கனிவான
பாசத்தைத் தரிசித்துப் பார்
புனிதத்தின் உண்மை புரியும்
பாசம் எனும் வாசம் தேவையா?
தாய் எனும் சுவாசத்தில்
உன் சுவாசத்தை எழுதி
அது தானாக வரும்

அன்னையே
உன் உயிரின்
ஒரு துளியால்
எம்மை உருவாக்கிய
உன்னைப் போற்ற
அன்னை எனும் பாலில்
அன்பு எனும் தேன்
கலந்து – தாயே
உன்னைப் போற்றுவோம்.

***இ. கீர்த்திகா***
***2004 வர்த்தகம்.***

*"உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்*
*கடையரே கல்லா தவர்."*

*- வள்ளுவர் வாக்கு*

# வலைப்பந்தாட்டம் - 19 வயதுப் பிரிவினர்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி நா. சாரதாதேவி, திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி ந. சிவசுப்பிரமணியம், செல்வி யோ. யசிந்தா, திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி இ. குணரட்ணம்.

*முன் இருப்பவர்கள்:* செல்வி றீ. வனஜா, செல்வி க. ஜெனனி

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி யோ. சஞ்சிதிபா, செல்வி ம. அர்ச்சனா, செல்வி உ. நிருஜா, செல்வி ச. அபிராமி, செல்வி பா. தர்சிகா, செல்வி சு. சுமணா, செல்வி ர. பிராமினி, செல்வி வி. சாரதா




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி பாலச்சந்திரன் (லெப்ரினன்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி த. ச. யோகிஸ்வரன், திருமதி ல. லிங்கேஸ்வரன் (லெப்ரினன்)

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* ச. கம்சா, ந. சுஜித்தா, க. திவ்வியா, இ. சுவேதிகா, ம. சோபனா, ப. சிவபாஸ்கரி, செ. தர்மினி, இ. துஷ்யந்தி, பா. வர்மிலா, க. சாருகேசி, செ. பிரிந்தாவனி, த. டெனிற்றா, பிரதீபா.

## வலைப்பந்தாட்டம் - 15 வயதுப் பிரிவினர்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி நா. சாரதாதேவி, திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி ந. சிவசுப்பிரமணியம், செல்வி த. கீர்த்திகா, திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி இ. குணரட்ணம்

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி க. பவித்திரா, செல்வி ஸ்ரீ. அகிலா, செல்வி செ. லக்சனா, செல்வி ஜெ. சைந்தவி

*நிலத்தில் இருப்பவர்கள்:* செல்வி பா. ஜெகாம்பிகா, செல்வி செ. கம்சினி

## வலைப்பந்தாட்டம் - 17 வயதுப் பிரிவினர்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி நா. சாரதாதேவி (பயிற்றுநர்), திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி ந. சிவசுப்பிரமணியம் (பொறுப்பாசிரியர்), செல்வி நா. மதுரா (தலைவர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி இ. குணரட்ணம் (ஆர்வலர்), செல்வி சி. லோகவதனி, செல்வி ச. கௌசிகா

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி அ. மதுரா, செல்வி இ. நித்தியா, செல்வி யோ. சஞ்சிதீபா, செல்வி ப. கோமதி, செல்வி ஸ்ரீ. நிஷாந்தி, செல்வி த. தர்சினி.

# மகளிர் தலைமைத்துவம்

இன்று 21ம் நூற்றாண்டிலே காலடி எடுத்து பலவெற்றிகளையும் சாதனைகளையும் புரிந்துள்ளனர். புரிந்து வருகின்றனர். அடுப்பங் கரையிலிருந்த பெண்கள் இன்றைக்கு அண்ட வெளி வரைக்கும் விரிந்து சென்றுள்ளனர் என்றால் அதனை மறுப்பதற்கில்லை.

அன்றைய காலத்திலே பெண்கள் அடக்குமுறையால் ஆளப்பட்டனர். பிறந்தது முதல் சாகும் வரை இவர்கள் பல சித்திரவதைகளையும் துன்பங்களையும் சுமந்த படியே வாழ்ந்தார்கள். பிறக்கின்றபிள்ளை பெண் பிள்ளையாக இருந்தால் அப்பிள்ளைக்கு கள்ளிப்பால் கொடுத்தும் நெல் மணிகளை அமுக்கியும் பிள்ளைகளின் மரணத்திற்கு வழிவகுக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட கொடுமைகளையும் தாண்டி வளர்கின்ற பிள்ளைகள் பள்ளிப்பருவத்தில் பள்ளி செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. வீட்டுக்குள் பூட்டி வைத்தனர். பருவமடைந்த பெண்களை உடனடியாகவே மணமகன் பார்த்து திருமணம் செய்து வைத்தார்கள். தவறி அம் மருமகன் இறந்தால் அப்பெண் உடன்கட்டை ஏறி உடலை மாய்த்துக் கொள்ளவேண்டியது தான். இப்படிப்பட்ட பலதுன்பங்களை அநுபவித்து வந்தனர்.

அக் காலத்திலேயே உறங்கிக் கிடந்த பெண்களை எழுப்புவதற்காக எழுந்தான் பாரதி. "பெண் குலத்தை ஆண்குலம் அடக்கி ஆண்டதம்மா அந்த ஆத்திரத்தில் பாரதியின் மீசை துடித்ததம்மா" இது வைரமுத்துவின் வைரமான அடிகள்.

பாரதி உறங்கிக் கொண்டிருந்த பெண் களை எழுப்பினார். ஆம், அன்று அந்த பாரதியி னாலேயே இன்று உயர்ந்த தலைமைத்து வத்துடன் விளங்குகின்றார்கள்.

இன்று பெண்கள் சாதிக்கமுடியாதது எதுவுமில்லை. இன்று பல்வேறு துறைகளிலும் அதாவது அரசியல் துறை, விஞ்ஞானத்துறை, விளையாட்டுத் துறை, மருத்துவத்துறை, விண்வெளி ஆராய்ச்சி போன்ற அனைத்து துறைகளிலும் பெண்கள் உரிய தலைமைத் துவத்துடன் செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக இன்றைய அரசியல் துறையை உற்றுநோக்குவோம். எமது நாட்டில் கூட பிரதமராக விளங்கியவர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்க இவரும் ஒரு பெண்ணே. உலகின் முதற் பெண் பிரதமர் இவராவார். இதைவிட இந்திய நாட்டிலே எல்லோருக்கும் பிரியமான அரசியல் வாதியாக் திகழ்ந்தவர் இந்திராகாந்தி. 1971ம் ஆண்டு இந்திய - பாகிஸ்தானுக்கிடையேயான யுத்தத்தில் வெற்றிகண்டார். இதைவிட பங்களாதேஷ் எனும் நாட்டை உருவாக்கிய பெருமை இவரையே சார்ந்தது.

இதைவிட இங்கிலாந்தின் இரும்புப் பெண் ணாக விளங்கியவர் மாக்கிரட்தட்சர் ஆவார். பர்மாவிலே சர்வாதிகார ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அவ்வாட்சிக்கு எதிராக செயற்பட்ட பெண் ஆங் காங் சூஜி என்பவராகும்.

இதைவிட பிலிப்பைன்ஸ் நாட்டின் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பெண் ஜனாதிபதி குரோசின் அக்கினோ என்பவராவர். இங்கிலாந்தின் இராணியாக விளங்கியவர் எலிசபெத்மகாராணி ஆவார். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் பல நாடுகள் குடியேற்றவாத் நாடாக விளங்கின.

அவ்வாறான நாடுகளின் நிர்வாகத்தினைக் கொண்டு நடத்தியபெருமைக்குரியவர் எலிசபெத் மகாராணி ஆவார். உலகத்திலேயே மிகவும் நேசிக்கப்பட்ட பெண்களிலே ஒருத்தியாக இவர் கருதப்படுகிறார். வயதான காலத்தில் கூட வாலிப உள்ளங்களை சுண்டி இழுக்கும் சக்தி அவரிடம் இருந்தது. அவருடைய காலத்திலே ஐரோப்பிய வல்லரசுகளை இங்கிலாந்து வெற்றி கொண்டது. இங்கிலாந்தில் ஒரு தசாப்தமாக வாழ்ந்து இங்கிலாந்தின் பெருமைகளை உயர்த்திய சரித்திரப் புகழ் எலிசபெத் மகாராணிக்கு என்றென்றும் உண்டு. முதலாவது முஸ்லீம் பெண் பிரதமராக பாகிஸ்தானின் பெனாஸிர் பூட்டோ விளங்கினார்.

இதைவிட உள்நாட்டினைப் பொறுத்த வரையில் இந்தியாவின் தமிழ் நாட்டின் முதல்வராக பதவி வகிப்பவர் ஜெயலலிதா என்ற பெண்ணாவர். பெண்கள் சாதித்த அரசியல் தலைமைத்துவங்கள் இவையாகும். சுருங்கக் கூறின் ஒரு குடும்பவாழ்க்கையின் பாதுகாப் பாளராக விளங்கும் பெண்கள் இன்று ஒரு நாட்டைப் பாதுகாக்கும் பொறுப்புடன் விரிந்து சென்றுள்ளார்கள்.

விஞ்ஞானத் துறையைப் பொறுத்த வரையில் அதிலும் பல சாதனைகள் நிகழ்த்தி வருகின்றனர் பெண்கள். அடுப்பங்கரையில் சமையல் செய்த பெண்கள் இன்று அண்ட வெளியில் ஆராய்ச்சி செய்கின்றார்கள் என்றால் அவர்களின் சாதனை புகழப்பட வேண்டியது.

மருத்துவத்துறையிலும் கூட பெண்கள் உயர்தலைமைத்துவத்துடன் விளங்குகிறார்கள். வைத்தியசேவை புனிதமான சேவையென அவற்றை உயர்த்திய பெருமை செல்வி புளோரன்ஸ் நைற்றிங் கேலுக்கு உரியது.

விளையாட்டுத்துறையை பொறுத்தவரை அவ்விளையாட்டுக்களை பார்க்கக்கூட அனுமதிக்கப்படாதவர்கள் இன்று அவற்றிலே ஈடுபட்டு பல பதக்கங்களை தட்டிச்செல் கின்றனர். ஆண்களுக்கு நிகர் பெண்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுகின்றனர். ஆண்கள் விளையாடும் அனைத்தும் பெண்களாலும் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு விளையாட் டுக்களில் ஈடுபட்டு சிறந்த விளையாட்டு வீராங்க னையாக தலைமைத்துவம் வகிக்கின்றார்கள்.

இவ்வாறு பலதுறைகளிலும் மகளிரின் தலைமைத்துவம் விரிந்து காணப்படுகின்றது. வளர்ந்து வரும் இப்பெண் சமுதாயம் இன்னும் பல வளர்ச்சிப் பாதையினை கடக்க முயலவேண்டும். மகளிரின் தலைமைத்துவம் இன்னும் விரிவடைய வேண்டும். பெண்கள் அனைவரும் ஒன்று திரண்டு தலைமைத்துவம் ஏற்று உலகத்தினை புதுயுகம் ஆக்குவோம்.

துஷ்யந்தி இரகுநாதன்
தரம் 10ஏ 2002

# பெண்கள் அறிந்தால் சமூகமே அறியும்

அன்றைய காலத்திற்கும் இன்றைய இன்ரநெற் யுகத்திற்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. பண்டைய நாளிலே சமூகம் பெரும் மதிப்பைக் கொடுத்துப் பெண்ணினத்தை சீர்தூக்கி வைத்திருந்தது. ஔவையார், காக்கை பாடினியார், நற்செள்ளையார், ஆதிமந்தியார், போன்ற பெண்கள் கல்வி, அறிவு ஒழுக்கங்களிற் சிறந்து விளங்கினர். இதனை இலக்கியச் சான்றுகள் நன்கு உணர்த்துவது நாம் அறிந்ததே. ஆனால் அன்றைய நிலை மருவி பெண் புத்தி பின் புத்தி என்று கீழ்த்தள்ளப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி "அடுப்படிப் பூனைக்கு வெளிநடப்பு எதற்கு" எனவும் "கிணற்றுத் தவளை" எனவும் புனை பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டனர். இப்படி அழைக்கப்படுவது பெண் இனத்தைக் கீழ்த்தரப்படுத்துவதன் நல்ல வெளிப்பாடு ஆகும். இது ஏன்? இப்படியான நிலை வரக் காரணம் என்ன? எல்லாவற்றுக்கும் ஒட்டு மொத்த விடை ஆண் ஆதிக்கமும் ஒருசிலரின் தவறான நடைமுறைகளுமே என்றால் அதில் என்ன தவறு இருக்கப்போகிறது? இவ்வாறு பெண்களைக் குறை கூறுவது சரியா? இது எந்த வகையில் பொருந்தும் என்பதையும் சரிபார்ப்பது நல்லது. அப்போது தான் பெண்கள் நெற்கதிர் போல நிமிரமுடியும்.

மேற்குறிப்பிட்ட கருத்துப்படி இத்தலை ப்பின் பொருத்தப்பாடு பற்றி இரண்டு விதமான முடிவுக்கு வாசகர்கள் விரைந்து வரலாம்.

1. பெண்கள் எல்லா விடயங்களிலும் வெட்ட வெளிச்சம் போடுவார்கள் என எண்ணலாம். (இதை எண்ணு வது ஆண்களாக இருக்கும்)

2. இயன்றவரை சமூகத்தின் அடித்தளம் வரை புகும் வல்லமை பெண்களுக்கு உண்டுஎன எண்ணலாம். (இது பெண் களாலும் அவர் சார்ந்தோராலும் எண்ணக்கூடியது.

இந்த இரு முடிவுகளிலும் இரண்டாவது கருத்தினை எடுத்து நோக்குவதே சாலப் பொருந்தும். ஏனெனில் பெண்களிற்கு சார்பான கருத்தாகவும் உற்சாகம் தரும் கருத்தாகவும் இது இருக்கும் என்பதில் ஐயமில்லை.

உலகில் இரண்டு ஜாதி உண்டெனப்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். ஒன்று ஆண் ஜாதி மற்றையது பெண்ஜாதி, ஆண்ஜாதி உழைக்கும் இயந்திரம் சமூகத்தில் ஓர் குடும்பத்தினை முன்னேற்றுவது அந்த இயந்திரத்தையே சாரும். ஆனால் பெண்ஜாதி அன்பை இறைக்கும் இயந்திரம். குடும்பத்தை அதன் மூலம் சமூகத்தை பண்புடைய நிலையமாக்குவது பெண் இனத்தின் பெருஞ் சுமை. இந்த வகையில் "பெண் அறிந்தால் சமூகமே அறியும்" எனக் கூறுவதில் ஐயத்திற்கிட மில்லை. இந்த நவயுகத்திலே

"பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடாத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆண்களுக்கிங்கே பெண்
இளப்பில்லை காணென்று கும்மியடி"

என்று பாரதி போற்றிப் புகழும் "பெண்கள் அறிந்தால் சமூகமே அறியும்"

கிராமங்களே நாட்டின் உயிர்நாடி உணவு, உடை, உறையுள் ஆகிய அத்தியாவசிய மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்பவை. அதனால் தேவைப்பொருளை ஆக் கித்தரும் கிராம முன்னேற்றம் மிக அவசிய மாகும். கிராமமக்கள் இயல்பாகவே எளிமையை விரும்புவார்கள். கடின உழைப்பாளிகள் பழமை யில் பெருவிருப்பு கொண்டவர்கள். மூட நம்பிக்கை பல உடையவர்கள். இத்தகைய வர்களை சீர்திருத்தச் சட்டங்களும் பலாத்கா ரமும் பயப்படாத அன்பும், பொறுமையும், தியாக மனப்பான்மையுமே மிக அவசியமாகும். இந்த மூன்று குணங்களும் கொண்டு உறைபவர்கள் பெண்களேயாவர். எனவே பெண்களே கிராமத்தை முன்னேற்றும் சேவையைக் கொண்டிருப்பது நல்லது. அவர்களால் அறம் பல வளர்க்கப்படுகின்றது. இந்த உண்மையினை கவிமணி அவர்கள் கூட

"மங்கையராய்ப் பிறப்பதற்கே - நல்ல
மாதவஞ் செய்திட வேண்டுமம்மா
பங்கயக் கைந்நலம் பார்த்தல்லவோ - இந்தப்
பாரிலறங்கள் வளருமம்மா"

என்று பாடியுள்ளார்.

இத்தகைய பேரியல்பு படைத்த பெண்கள் கிராமங்களிலே கல்வி வளர்ச்சி, பொருளாதார உயர்ச்சி, சுகாதார மேம்பாடு என்ற முத்துறைகளில் அருந்தொண்டாற்றலாம். கிராமச் சீர்கேடுகள் அனைத்திற்கும் கல்வி அறிவின்மையே மூலகாரணமாக விளங்கு கின்றது. அக்கல்வியறிவு இன்மையைத் திருவள் ளுவர்

"கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்று கூறுகின்றார்.

இக்கருத்து கற்றவர்க்கு மட்டும் விளங்கும். மற்றவர்க்கு விளங்குவது கடினம். அப்படி விளங்கினாலும் தக்க கல்வி வசதி பெறமுடியாது. பெறுவதற்கு வழியுமில்லை. அப்படி அறிவுபெற வைப்பதற்கு நாடுகள் ரீதியாக கிராமந்தோறும் கல்விக் கழகங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆனால் அவற்றால் அந்த நிலையை மாற்றமுடியாது. அதற்கு அன்பு, அறம், பொறுமை வேண்டும். கோவணதாரிகளை பட்டதாரியாக்கும் அடிப்படைப் பொறுப்பு பெண்ணிடமே வழங்கப்படுகிறது. இதற்கு உதாரணமாக பாலர் பாடசாலை ஆசிரியர்கள், அனாதை இல்ல ஆசிரியர்கள், தாதிகள் போன்றோரைக் கூறலாம். ஆண்களால் பகுத்தறிவை ஏற்படுத்த முடியுமாயின் அவர்களிடம் பொறுப்பை ஒப்படைக்கலாம். ஆனால் முடியாது. ஏனெனில் ஆணிடம் அன்பு இல்லை. பெண்ணிடம் அன்பு உண்டு. இதுவே உண்மை.

பெண்கள் அறிந்தால் சமூகமே அறியும் என்பதற்கு இன்னுமோர் உதாரணம் கூறலாம். பொதுவாக நகரங்களிலும் பார்க்க கிராமங் களிலே தெள்ளிய நீரும், தென்றல் காற்றும், மருத வெளியும் தேங்கிக் கிடக்கின்றன. ஆயினும் அடிப்படை வசதிகளை பேணிப்பாது காக்கத் தவறியமையால் அடிக்கடி சமூகம் தள்ளாடுகிறது. அறியாமையின் உச்சக்கட் டத்தில் நோய்களிற்கு காரணத்தை இறைவனே கூறவேண்டும் என எண்ணிக்கொள்கின்றனர். ஆனால் இவர்கள் இப்படி நோக்கும் பொழுது தண்டிக்காது தன்மையுடன் எடுத்துக் கூறுவது நல்லது. அந்த வழிமுறை ஆண்களைச் சார்ந்து நிற்கக் கூடிய விடயமல்ல. பெண்களைச் சார்ந்து நிற்கக் கூடிய விடயம். அதனாலே தான் ஊர் ஊராகச் சென்று அச்சீர்கேட்டை நிவர்த்தி செய்யப் பெண் உத்தியோகஸ்தர் நியமிக்கப் படுகின்றனர். இது காலம் சொல்லும் உண்மை. இது தவிர வேறு ஏன் பொய் உரைக்க வேண்டி உள்ளது.

இன்று உலகின் கைத்தொழில்கள் எல்லா நாடுகளின் பொருளாதாரத்தையும் நிர்ணயிக்கின்றன. அக்கைத்தொழிலின் ஆரம்ப வளர்ச்சி ஒரு பெண்ணாலேயே நிச்சயம் ஆரம்பிக்கப் பட்டிருக்கும். கயிறுதிரித்தல், கோழி வளர்த்தல், தும்புத் தொழில்கள் என்றும் அனைத்தும் பெண்களாலேயே முதலில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்று வளர்ச்சி அடைந்து உள்ளன. பெண்ணறிந்தால் சமூகமே அறியும் என்பதற்கு இதைவிட மேலான எடுத்துக்காட்டு என்ன?

இன்று பல்துறைகளிலும் பெண்கள் கால்

பதித்துள்ளனர். ஆர்ப்பாட்டமில்லாது சாதாரண மாக நோக்கப்பட்ட விண்வெளிப்பயணங்கள் அண்மையில் "கல்பனாராய்" உடைய விண் வெளிப் பயணத்தால் உற்று நோக்கப்படுகிறது. இக்காலத்தின் செய்தி உண்மைக்கு உதார ணங்கள். இதை விடுத்து பெண் புத்தி பின்புத்தி, கிணற்றுத் தவளைகள் எனக்கூறுவது இனியும் ஏற்றுக் கொள்ளப்படமுடியாதது. உண்மைக்கு இறுக்கமான கறுப்புத்திரை கட்டி தொங்க விடுவது அடக்குமுறையின் ஆரம்பப்படி இது தகர்க்கப்பட வேண்டும்.

பெண் அறிந்தால் சமூகமே அறியும் என்ற உண்மை ஓங்க வேண்டும்.

தாட்ஜினி நவரத்தினம்
தரம் 11ஈ

# சிறுவர்களே எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள்

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது" என்றார் ஔவையார். அரிய மானிடப் பிறவியை எடுத்த மனிதன் இன்று விஞ்ஞானப் பாதையிலே வீறுநடை போட்டுக் கொண்டி ருக்கிறான். இவ்வாறாக சிறந்த அறிவு மிக்கதான சமுதாயத்தைப் படைப்பதிலே பெரும் பங்கினை வகிப்பவர்கள் சிறுவர்களே. இன்றைய சிறுவர்களே நாளைய சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் தலைசிறந்த மனிதர்கள்.

சிறுவர்கள் சமுதாயத்தின் ஆணிவேர் போன்றவர்கள். சிறுவர்களது மனங்களில் சூதுவாதிற்கோ, கள்ளங் கபடத்திற்கோ துளியே னும் இடமில்லை. இத்தகைய மனங்களிலே தான் நல்லெண்ணங்களும், நற்செயல்களும் தோன்றி எதிர்கால சமுதாயத்தினை திறம்பட நடாத்த வழிவகுக்கின்றன. சிறுவர்களது உள்ளம் "வெண் பஞ்சினைப் போல" மிகத் தூய்மையானதாகக் காணப்படுவதால் அவர்கள் எண்ணங்களே எதிர்காலத்தினை திறம்படச் செதுக்க உறுதுணையாகின்றன.

"இழுக்கல் உடையுளி ஊன்றுகோ லற்றே
ஒழுக்க முடையார் வாய்ச்சொல்"

என்பது வள்ளுவன் வாக்கு. ஒழுக்கமுடைய ஆன்றோரின் வார்த்தைகள் ஊன்றுகோல் போல வாழ்க்கைக்குப் பயன் படுகின்றன. சிறுவர்களும் ஆன்றோர்களின் வார்த்தைகளைச் சிரமேற்கொண்டு ஒழுக முற்படுகின்றனர்.

எனவே இச் சிறுவர்களால் செதுக்கப் படும் எதிர்காலத்திலே சிறந்தொரு சமுதாயத் தினை நாம் கண்டு இன்புறலாம்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணிற் பிறக்கையிலே அது நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்கிறது பாடலடி. இதிலிருந்து ஒரு பிள்ளையின் முன்னேற்றத்தில் பெற்றோர் களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமானது என்பது தெளிவாகிறது. சிறுவர்கள் பெரியவர் களின் வழியொட்டி நடக்க முற்படுவதனால் பெரியோர்கள் தாம் கடமை, நேர்மை தவறாது ஒழுக வேண்டும். பெரியவர்கள் தாம் தவறு செய்து கொண்டு சிறுவர்கள் செய்யும் தவறுகளைத் திருத்த முற்படும்வேளை பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. ஒரு பயிரை நாட்ட அதற்கு நீரூற்றிப் பசளையிட்டு நன்கு பராமரித்தால் தான் அதன் பலனைப் பெற முடியும். அதுபோலவே பெரியவர்கள் அன்பை யும், அறிவையும் ஊட்டி சிறுவர்களை வளர் த்தால் தான் அவர்களால் செதுக்கப்படும் எதிர்காலமெனும் சிற்பம் சிறப்பாக அமையும்.

இன்றைய சூழ்நிலையிலே சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வது கண்கூடு. பாடசாலை சென்று கல்வி கற்க வேண்டிய வயதிலே பெற்றோர்களால் சிறுவர் கள் வேலைக்கு அனுப்பப்படுகின்றார்கள். சிறுவர்களைக் கொண்டு கடுமையாக வேலை வாங்குகின்றனர். இதனால் சிறுவர்கள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பாரிய பாதிப்பிற் குள்ளாகின்றனர். இந்நிலையில் அவர்களால் உருவாக்கப்படும் சமுதாயம் சிறப்பாக அமையும் என்பது சந்தேகமாகும்.

சிறுவர்களின் உள்ளத்தில் கூறும் விடயங்கள் யாவும் "பசுமரத்தாணி போல" மிக ஆழமாகப் பதிந்துவிடுகின்றன. எனவே சிறுவர்களுக்கு வழங்கப்படும் கல்வியானது அறிவுபூர்வமானதாக அமைந்திருக்க வேண்டும். "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்று சொல்வார்கள். எனவே சிறந்த முறையில் சிறு வயதிலே சிறப்பான முறையில் கல்வி கற்பிக்கப்படுமெனின் அவர்களால் எதிர்

காலத்திலே சீரிய சமுதாயத்தினை வடித்தெடுக்க முடியும்.

சிறுவர்கள் தோற்றத்தால் சிறியவர்களேயன்றி உள்ளத்தால் சிறியவர்களல்ல. எனவே தான் மகாகவி பாரதி

'ஓடிவிளையாடு பாப்பா நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா.....'

என்று பாடி சிறுவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைவதற்கு வழிகாட்டியுள்ளார்.

சிறுவர்களுக்கு கல்வி புகட்டுவதில் பெற்றோர்களின் அக்கறையின்மை காரணமாக எத்தனையோ சிறுவர்களின் எதிர்காலம் "குடத்துள் விளக்குப்போல" முடக்கப்படுகின்றது. இன்றைய காலகட்டப் பகுதிகளிலே சிறுவர்கள் பெருமளவில் போரில் ஈடுபடுத்தப்படுவதனை நாம் காணமுடிகிறது. இந்நிலை மாறி சிறுவர் உரிமைகள் பேணப்பட்டால் தான் சிறுவர்களால் எதிர்காலத்தைப் பெறுமதி வாய்ந்ததொரு சிற்பமாகச் செதுக்கமுடியும்.

சிறுவர்களால் சாதிக்க முடியாதது எதுவுமேயில்லை என்பதற்கு பாக்கு நீரிணையைக் கடந்த பதின்மூன்றுவயதுச் சிறுவனும் எட்டு வயதிலேயே பட்டதாரியாகிய அமெரிக்கச் சிறுமியும் சிறந்த எடுத்துக் காட்டுக்கள். சிறுவர்கள் மனதிலே வஞ்சகம், பொறாமை போன்ற தீய எண்ணங்கள் சிறிதளவும் காணப்படுவதில்லை. இதனால் இவர்களால் உருவாக்கப்படும் எதிர்காலம் அமைதி நிறைந்ததாக "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்னும் அடிப்படையில் சாதி,இன,நிற,மொழி வேறுபாடுகளைக் கடந்ததாக அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

சிறுவர்களால் உருவாக்கப்படும் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டுமானால் சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுவது தடை செய்யப்படவேண்டும். சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். சிறுவர்களுக்கு கட்டாயக்கல்வி வழங்கப்பட வேண்டும். சிறுவர்கள் உளரீதியாகப் பாதிக்கப்படா வண்ணம் அவர்களைப் பேணவேண்டும். "சிறு துளி பெரு வெள்ளம்" என்று சொல்வார்கள் . ஒரு சிறுவனை நாம் இழக்க நேரிடின் சமூகத்தின் ஆணிவேரே இழந்தமாதிரியே இருக்கும்.

இன்று சிறுவர்களுக்கு வழங்கப்படும் அறிவுபூர்வமான விடயங்கள் அவர்களது எதிர் காலத்திற்கு வழிகாட்டியாக அமையும். நல்லறிவுடன் வளர்க்கப்படும் சிறுவர்கள் எதிர்கால சமூகத்தில் வைத்தியராக, பொறியியலாளராக, விஞ்ஞானியாக, ஆசிரியராக எனப் பல்துறை மேதைகளாகப் பிரகாசிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இன்று உலகளாவிய ரீதியில் நம் நாட்டுச் சிறுவர்கள் அகதிகள் என்ற அந்தஸ்திலே தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதனால் சிறுவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளதெனினும் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் நம் மனங்களிலே சிறுவர்களின் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை ஊட்டியுள்ளன.

ஒரு சிலையை நேர்த்தியாகவும், அழகாகவும் செதுக்க வேண்டுமாயின் சிற்பி திறமையும் தன்னம்பிக்கையும் கொண்டவனாக இருப்பதுடன் அவனிடம் கூடவே சிறந்த உளியும் காணப்பட வேண்டும். இதே போலவே எதிர்காலம் சிறப்பானதாக அமைய வேண்டுமாயின் சிற்பியைப் போல் சிறுவர்களும் தன்னம்பிக்கையும் திறமையும் உடையவர்களாக இருப்பதுடன் உளிபோன்ற பெரியோரின் அறிவுரைகளும் உறுதுணையாக இருக்கவேண்டும். அவ்வாறாயின் சிறுவர்களே எதிர்காலத்தினை உருவாக்கும் சிறந்த சிற்பிகள் என்பது தெட்டத் தெளிவாகும்.

தர்பனா ஸ்ரீமகாதேவன்
2002 கலை

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாத்துணையுங் கல்லாத வாறு"

- வள்ளுவர் வாக்கு

# முதியோரே தேசிய சொத்தாவர்

நவீன விஞ்ஞானத்தின் வளர்ச்சி இன்று சுகாதார மருத்துவத் துறையை அதி உன்னத நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது எனின் மிகையாகாது. இதனால் சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 20 -30 வயது வரை ஆயுட்காலம் இருந்த நிலை மாற்றமடைந்து இன்று 70 - 100 வயதுவரை ஆயுட்காலம் அதிகரித்துச் சென் றுள்ளது. இதனால் இன்று சமூகம் முகம் கொடுக்கும் பாரிய பிரச்சினைகளில் ஒன்றாக முதியோர் கருதப்படுகின்றனர். இன்றைய முதியோர் நேற்றைய சமூகத்தின் பல்வேறு மாற்றங்களுக்கு வித்திட்டவர்கள் என்பதை நாம் மறந்து விடலாகாது. "படித்துத் தெரிவதும் பட்டுத் தெளிவதும் பயிற்சி வழி அனுபவத்தொழில்" இதுவே அதன் நம்பகத் தன்மையினை ஏற்படுத்தி விடுவதை உணர் கின்றோம். அனுபவ ஆசான்களின் கூற்று எமக்கு ஆறுதல் கொடுக்கும் சிகிச்சையாக உள்ளது. அதனால் தான் கூட்டுக் குடும்ப வாழ்வியலில் முதுமை அனுபவம் மிகவும் மதிக்கப்பட்டது. இதனால் முதியோரே ஒரு நாட்டின் தேசிய சொத்தாவார். எனவே இவர் களைப் புறக்கணிக்காது பேணிப்பாதுகாக்க வேண்டியது சமூகத்திலுள்ள ஒவ்வொருவரினதும் தலையாய கடமை எனில் மிகையாகாது.

இன்று உலகில் முதியோர்கள் முக்கிய இடம் வகிக்கிறார்கள். ஒருவரின் வாழ்க்கைச் சக்கரத்தில் குழந்தைப்பருவம், விடலைப் பருவம், வாலிபப்பருவம், முதுமைப் பருவம் என மாறிமாறி சுழல் சக்கரமாக அமைகிறது. இதில் முதுமைப்பருவம் இறுதிப் பருவமாகும். 160 கோடி மக்களுடன் அடிஎடுத்து வைத்த இந்நூற்றாண்டு 600கோடி மக்களுடன் விடை பெற்று 21ம் நூற்றாண்டில் நுழைந்துள்ளது. விருத்தி அடைந்த, அடைந்துவரும் நாடுகளில் கூட சுகாதார மருத்துவ விருத்தி பல மாற்றங் களை ஏற்படுத்தி உள்ளது. இதனால் சமூகத் தில் முதியோர் தொகை அதிகரித்துள்ளது. வயோதிபர் அல்லது முதியோர் என்பதற்கு பல் வேறு வரைவிலக்கணங்கள் கூறப்பட்டபோதும் 1982ம் ஆண்டின் World Assembly on Aging இன் படி 60வயதுக்கு மேற்பட்டோரே முதியோர் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை ஒக்ரோபர் 01ம் திகதியை சர்வதேச முதியோர் தினமாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. இதன் நோக்கம் - சுதந்திரம், கவனம், சுய பூர்த்தி, மகத்துவம் போன்றவற்றை முதியோரிடம் பேணுதலாகும். இலங்கையில் முதியோர் தொடர்பான பாதுகாப்புச் சட்டம் "இல.09 2000 மேமாதம் 4ம்திகதி தொடக் கம் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இச் சட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பு சமூக சேவை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது. இன்று கணிசமான அளவு அதிகரித் துள்ள முதியோர் தொகை 2025ல் 15 வீதமாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

முதியோர் எனும்போது வயதால் முதிர்ச்சியடைந்தவர்கள் மற்றும் உடல், உளரீதி யாக தளர்ச்சியுற்றவர்களைக் குறிப்பிடலாம். பெரும்பாலான வளர்ச்சியடைந்து வரும் நாடு களில் கிராமப் பகுதி மக்கள் தமக்குப் பேரப் பிள்ளைகள் பிறந்ததும் தாம் இளைப்பாறும் பருவத்தை அடைந்து விட்டதாகக் கருதுகின் றனர். வறிய குடும்பங்களில் முதியோர் இளைப் பாறுதல் என்பது அவர்களால் எவ்வித தொழில் களும் செய்ய முடியாது அல்லது உடல்ரீதி யாக தளர்வு ஏற்படுகின்றபோது முதுமை அடைந்ததாக கருதுகின்றனர். இந்தியா போன்ற நாடுகளில் வறுமை இளைப்பாற அனுமதிப்பது இல்லை. இள்ளப்பாறும் வயதை இறைவனிடம் ஒப்படைத்துள்ளதாக கருதுகின்றனர்.

இன்று முதியோராய் உள்ளவர்கள் தற்போதைய சிறுவர்களின் கலங்கரை விளக்கமாக திகழ்ந்தவர்கள். சிறுவர்களை ஒரு றோஜாச் செடியில் உள்ள மொட்டுக்கு ஒப்பிட்டால் முதியோரை அச்செடியில் பூத்துக் குலுங்கும் றோஜாப்பூக்களுக்கு ஒப்பிடலாம். றோஜாவைப் போலவே இவர்களது உணர் வுகளும் மிருதுவானவையும் அற்புதமானவை யுமாகும். இவர்களின் விருப்பு வெறுப்புக்கள் சிந்தனைகள் அனைத்தும் அனுபவமும், நுணுக்கமும் வாய்ந்தவையாகும். ஒரு பண்பா டான சமூகத்தில் கண்ணெனப் போற்றப்பட வேண்டியவர்கள் முதியோராவார்.

பொருளாதார ரீதியில் செயல் திறன் அற்றதும் நலிவுற்றதுமான பிரிவினருக்கு சமூகம் பாதுகாப்பினை வழங்குவது தேசிய பொறுப்பாகும் என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய பொருளா

தார சமூக ரீதியில் அதிகம் அல்லது எளிதில் பாதிக்கப்படுபவர்கள் தொழில்புரியும் வயதைக் கடந்த முதியோர், தமது வருமானத்தினால் தமக்கே ஆதரவு வழங்கமுடியாத மிக வறியவர்கள், அநாதைகள், ஊனமுற்றோர்கள் போன்றவர்களாவார். இவர்களுள் கண்ணெனப் போற்றப்பட வேண்டியவர்கள் முதியோர்களே. இவர்களுக்காகவே ஒவ்வொரு தேசிய அரசும் முதியோரை தமது தேசிய சொத்தென மதித்து அவர்களுக்கு ஓய்வூதியம், சமூகநல சேவைகள் எனப் பல்வேறு வசதிகளையும் தமது சொந்தச் செலவில் இலவசமாக வழங்கி வருகின்றது.

முதியோர்கள்,குழந்தையாக, சிறுவனாக, இளைஞனாக, உறுதிமிக்க உழைப்பாளனாக இருந்து முதியோராகின்றனர். அவர்கள் தாம் சார்ந்த குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் தம் ஆற்றலுக்கேற்ப பங்களிப்புச் செய்தவர்கள். இத்தகைய முதியோர்களைப் பாதுகாக்க வேண்டியது குடும்பம், சமூகம் ஆகியவற்றின் கடமை. எனினும் மாறிவரும் சமூக, பொருளாதார நிலைகளினால் முதியோர் பராமரிப்பு உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டு அவர்கள் சமூகத்திற்கு சுமையாக கருதப்படுகின்ற நிலை உருவாகி வருகிறது. இன்றைய முதியோர் சமூகத்திற்கு செய்த பங்களிப்பை இவர்கள் மறந்து விடுகிறார்கள். பல நாடுகளில் முதியோர்களை பிள்ளைகள் கண்டிப்பாக பராமரிக்க வேண்டும் எனச் சட்டங்கள் இயற்றப்பட்ட போதிலும் இது ஓரளவே நிறைவேற்றபடுகிறது.

நாம் முதியோரை தேசிய சொத்தென கூறக்காரணம் தற்போது முதியோனாய் உள்ள ஒருவனே முன்னைய உழைப்பாளன். தனது வாழ்க்கையை நாட்டுக்காகவும் சமூகத்திற்காகவும் தன்னைப்பற்றி பொருட்படுத்தாது வியர்வை சிந்தி உழைத்தவன். தனது நாட்டின் ஒவ்வொரு விடயத்திலும் அக்கறை எடுத்தவன். இந்த நாட்டிற்காக இளம் சிறார்களையும் உழைப்பாளர்களையும் தந்ததுடன் தனக்குப் பதிலாக விட்டுச் செல்பவன். ஆகவே அம்முதியவர்களே ஒவ்வொரு நாட்டினதும் சமூகத்தினதும் தேசிய சொத்தாவர்.

வயோதிபர்கள் தமது வயோதிப காலத்தை மகிழ்ச்சியாகக்களிக்கும் வகையில் முதியோர் இல்லங்களை நடத்திச் செல்வதன் மூலம் வயோதிபர்களை தேசிய சொத்தாக அரசும் தனியாரும் கருதுகின்றனர். இலங்கையில் 158 முதியோர் பராமரிப்பு நிலையங்கள் உள்ளன. இதில் 3 மட்டுமே அரசு நடத்துகிறது. வயோதிப சமூகப்பாதுகாப்புத் திட்டத்தின் இறுதிக் குறிக்கோளாக் காணப்படுவது வயோதிப காலத்தை மரியாதையுடன் களிப்பதாகும். உண்மையில் "முதுமை என்பது ஒரு சாபமல்ல அது வாழ்வில் பரிபூரணத்துவம் அடைவதற்கான வரம்" என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். முதுமைப் பருவம் வந்துவிட்டால் மனிதர்கள் குழந்தைகளாகி விடுகின்றனர். இவர்களை குழந்தைகளைப் போல் கவனிக்க வேண்டும். இல்லையென்றால் குழந்தைகள் போல் குழப்படி செய்வார்கள். இதைத்தான் "இளமைத்துடிப்பு முதுமையறியாது" என்பார்கள். இக்காலத்தில் முதுமை என்ற எண்ணமே வராது.

குடும்பத்தில் முதியவர்கள் மற்றவருடன் கதைக்க ஆவலாக இருப்பார்கள். கதைக்கும் போது அவர்கள் தமது எண்ணங்கள் அனுபவங்கள், அபிலாசைகள், எச்சரிக்கைகள் முதலியவற்றை விபரமாக எடுத்துக் கூறுவர். எனவே முதியோரைக் கௌரவிப்பது என்பது குடும்ப அலகில் இருந்து சமூகம், பிரதேசம், தேசியம், பல்தேசியம், பிராந்தியம் என்ற பல்வேறு மட்டங்களுக்கும் முன்னெடுத்துச் செல்வதன் மூலம் முதியோரே எமது சொத்தென உறுதிப்படுத்தலாம். முதுமைப் பருவத்தில் முதியோர்கள் அமைதியாகவும் பிறருக்கு குறிப்பாக பிள்ளைகளுக்கு கஷ்டம் கொடுக்காமல் வாழ விரும்புகின்றனர்.

அனைவரும் ஒரு நாள் முதுமைப் பருவத்தை அடைந்தே தீரவேண்டும் என்பதால் நாம் ஒவ்வொருவரும் எமது வருங்காலத்தை எண்ணி இன்றைய முதியோர்களை கவனித்தல் நல்லது. "தாத்தாவிற்குத் தந்தை உணவளித்த ஓட்டைச் சட்டியை மகன் தன் தந்தைக்காக எடுத்து வைத்துக் கொண்ட" கதையை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். இதன் மூலம் நாமும் எதிர்காலத்தில் முதுமையடையப் போகிறவர்கள் என்பதையும் உணர வேண்டும். இன்றைய குழந்தைகள் நாம் முதியோரை எப்படி நடத்துகிறோம் என்று கூர்ந்து கவனிக்கிறார்கள். நாம் முதியவரை நடத்தும்விதம், பேசும் வார்த்தைகள் என்பன குழந்தைகளின் மனதில் பதிந்துவிடும். பின் நாம் முதியோரானதும் அவர்கள் அதையே எமக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் நாம் மறந்து விடலாகாது. "எம் முன்னோரைக் காட்டிலும் நான் அதிக தொலைவு பார்க்க

காரணம் அவர்களின் தோள்மீது நான் ஏறி நின்று பார்த்ததேயாகும்" என்றார் ஒரு அறிஞர்.

இதனால் நாம் முதியோரை எமது குடும்ப சொத்து மாத்திரமல்ல அவர்கள் எமது தேசிய சொத்தென உணர்ந்து பாதுகாக்க வேண்டும். பாட்டன் பாட்டியினர் தமது மூன்றாவது சந்ததியினராகிய பேரப்பிள்ளைகளின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் சிற்பிகளாவர். எனவே அவர்களை நாம் தனிமைப் படுத்தல் கூடாது. "தனிமையே முதுமையின் முதல் எதிரி" என்றார் ஒரு அமெரிக்க அறிஞர். "முதியவர்களின் நெற்றியிலே சுருக்கம் விழுவதை எம்மால் தடுக்க முடியாது. ஆனால் அவர்களின் நெஞ்சங்களில் சுருக்கம் ஏற்படுவதை நாம் தடுக்கலாம்" முதியோருக்கு அளிக்கப்படும் கௌரவம் கடவுளுக்குச் செய்யப்படும் மரியாதையாக கருதப் படவேண்டும். முதுமை வாழ்வின் இரண்டாம் பிள்ளைப்பராயம். அன்பிற்காக ஏங்கும் பருவம். எனவே நாம் அவர்களை ஏங்கவிடாது எமது குடும்ப சொத்தென மதித்து பேணுவோமானால் அவர்கள் குடும்ப சொத்து மாத்திரமல்ல "தேசியசொத்து"என்ற நிலை உருவாகும்.

ஜெயப்பிரபா . ஜெகதீஸ்வரன்
12ஏ - கலை

# சமாதானத்திற்காய் ...............

மனதினில் அமைதி இன்றி
இறைவனில் பக்தி இன்றி
உணவினில் நாட்ட மின்றி
உறவுக்காய் ஏங்கினோம்.

தூக்கமும் சீராய் இன்றி
இன்பங்கள் சிறிதும் இன்றி
துன்பங்கள் தீர்க்க மின்றி
மகிழ்வுக்காய் ஏங்கினோம்.

கையிலே பணமும் இன்றி
'Air mail' இன் வரவும் இன்றி
சொந்த வயலும் இன்றி
சொத்துக்காய் ஏங்கினோம்.
அன்னையும் கூட இன்றி
ஆசை மகன் அன்பு இன்றி
சொத்தென எதுவும் இன்றி
சமாதானத்திற்காய் ஏங்கினோம்

பிறந்ததில் பயனுமின்றி
வாழ்க்கையில் பிடிப்புமின்றி
நிரந்தர தீர்வும் இன்றி
விடிவுக்காய் ஏங்கினோம்

இறைவனே வேண்டும் வேண்டும்
சிறப்புடனே பேச்சு வார்த்தை
சாதகமாய் நடத்த வேண்டும்
நிரந்தர சமாதானம் வேண்டும்
நித்தமும் நாம் மகிழவேண்டும்
புரிந்துணர்வு உடன்படிக்கையில்
சமாதானம் மலரவேண்டும்.

க. சரிதா
தரம் 11ஏ

# அறிவொளி தருவன நூல்களே

"கண்ணுடையர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்ற வள்ளுவர் வாய்மொழிப்பொருளை உலகம் ஒப்புக்கொள்ளும் நிலை மலர்ந்து விட்டது. அவ்வாய்மொழி ஊனக்கண்ணிலும் ஞானக்கண்ணே சிறந்தது என்ற கருத்தினை தெளிவுறக் காட்டுகிறது. ஊனக் கண்ணின் காட்சிக்கு ஒரெல்லையுண்டு. அவ்வெல்லைக்கு அப்பாற்பட்ட எதனையும் அது காணல் அரிது அன்றியும் அது நோயாலும் மூப்பாலும் கூர்மை குன்றிக் காட்சிப் பண்பையிழத்தல் கூடும்.

ஆயின் அறிவுக்கண்ணோ எதனாலுந் தடைப்படாது கண்காணாத் தேசங்களில் நிகழ்வனவற்றையும் எதிர்காலத்தில் நிகழ்வன வற்றையும் காணும் ஆற்றல் பெற்றது. அது நோயாலோ மூப்பாலோ ஒளியிழப்பதில்லை. அதனாலேயே கல்விகற்று அறிவுபடைத்தோர் கண்ணுடையர் எனச்சிறப்பிக்கப்படுகின்றனர்.

கல்லார் முகத்திரண்டு புண்ணுடையர் என இழிக் கப்படுகின்றனர்.இக் குறளொன்றே அறிவுவளர்ச் சிக்கு உபயோகப்படுங் கல்வியின் சிறப்பையும் பயனையும் எடுத்துக்காட்டப் போதியதாகும். இத்தகைய கல்வியைப் பெற்றுப்பயன் கொள்வதற்கு இன்றுள்ள உலகிற் பற்பல சாத னங்கள் காணப்படுகின்றன. எனினும் கல்வி யென்னுந்தீபம் உலகில் ஏற்றப்பட்ட அன்று தொட்டு இன்றுவரை அதனை அணையவிடாது நெய்யிட்டு ஒளி காலச்செய்த பெருமை நூல்க ளுக்கே உண்டு. எனவே கல்வியைப் பரப்புவ தற்கமைந்த கருவியாக மட்டுமல்ல திறனுக்கும் தாயாக விளங்குவது நூலாகும். அன்றியும் வானொலி, பேசும் படக்காட்சி போன்றன ஓரளவு வாழ்க்கை வசதி படைத்தவர்களாலேயே பயன்படுத்தப்படுவன. அவை கல்வித் துறைகள் அனைத்தையும் அறிவிக்கக் கூடியனவல்ல. கரையிலாக் கல்வியின் ஒவ்வொரு சிறுபகுதி யையே அறிவிக்கக் கூடியன.

எனவே கல்விப் பெருஞ் செல்வத்தை உலகுக்கு வரையாது வழங்கும் வள்ளற்றன்மை நூல்களுக்கன்றிப் பிறிதொன்றிற்கும் இல்லை. நூல்களால் மக்கள் காலங்காலமாக அளப்பரிய நற்பயன்கள் பெற்றுவந்தமையே அப்பிணைப் புக்குக் காரணமாகும். அந்த நற்பயன்களை மனிதனாலே தேடற்பாலனவாய் பெரும் பொருள் கள் என ஆன்றோர் கூறுவர். அவை அறம், பொருள், இன்பம்,வீடு என நால் வகைப்படும். அவற்றையே புருடார்த்தங்கள் எனவும் அழைப் பர். தனிமனித வாழ்வுக்கும் சமூக வாழ்வுக்கு மாகத் தீயனநீக்கி நல்லனகொள்ளும் அறங்கள் பலவும் மனித உள்ளத்திலே வளர்த்தல் வேண்டும்.

அவ்வுணர்வே உலக நல்வாழ்வு முறை கொள்ளும் இடம், அறவுணர்வு மிக்கவன் அற வழி நடந்து தீவினைவிட்டு பொருளீட்ட விளை வான். அவ்வித பொருளை நுகர்தலே மேலான இன்பம் . இன்பத்தின் நிலைமையையுணர்ந்து உலகப்பற்றை நீக்கி தவம்செய்து விடுதலை யடைய முயலுதலே வீடு எனப்படும். இத்த கைய நெறிமுறை நல்வாழ்வினைப் பெருக்கும் பொருளாகக் கண்டுணர்தற்கேற்ப வாழ்க்கைச் சட்டகம் என கருதப்படும். நாற்பொருள்களில் ஒவ்வொன்றினையும் விரிவாகவும் மனங்கொள் ளத் தக்கவகையிலும் பற்பல முறைகளினால் நூல்கள் அறிவுறுத்துகின்றன.

அறம்.பொருள்,இன்பம், வீடு நூற்பயனே என்ற சூத்திரம் நூல்களில் பயன்களை கூறுவ திலிருந்து இவ்வுண்மை புலனாகும். மனிதனின் பூரண வாழ்வுக்கு வழிகாட்டியாக அமைவதே நூல்களின் முதற்பயனும் பெரும் பயனுமாம். ஓய்வு நேரத்தில் இன்பமாகவும் பயனுடைய முறையிலும் கழிப்பதற்கு நூல்களே சிறந்தன. பொழுது போக்கிற்காக நூல்களை வாசித்தால் நாளடைவில் வாசிக்கும் பழக்கமும் கற்கும் ஆர்வமும் பிறக்கின்றது. இப்பழக்கவழக்கமும் ஆர்வமும் முதிர்ச்சி அடையும்போது பொழுது போக்கிற்குரிய நூல்களையன்றி அறிவு பயக்கத்தக்க நூல்களைப் படிக்கும் பண்பும் பிறக்கின்றது.

மனித வாழ்வுக்கு இன்றியமையாத கல்வி யென்ற செழுஞ்சுடரை உலகின் மூலை முடுக் கெல்லாம் பரவச் செய்யும் ஒப்பற்ற கருவிகளாக நூல்கள் மதிக்கப்படுகின்றன. இன்றுள்ள நிலையில் நூல்கள் ஆருயிர் போன்று மிக அருமையாகப் போற்றிப் பயன்கொள்ளப்பட வேண்டியனவாம்.

"கண்டதும் கற்கப் பண்டிதனாவான்" என்ற மூத்தோர் வாக்கிற்கிணங்க மக்கள் காலம் காலமாக அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்வதற்கு சிறந்தது நூல்களே. நாம் எமது கதைகள், கட்டுரைகள், கவிதைகள், சஞ்சிகை கள் போன்ற சிறந்த நூல்களை வாசித்து எமது அறிவினை விருத்தி செய்வதற்கு சிறந்தது நூலாகும். "அறிவுடையாரை அனைவரும் விரும் புவர்" என்ற முதுமொழியை கருத்திற்கொண்டு மாணவர்களாகிய நாம் தேடி ஆராய்ந்து கற்பதற்குச் சிறந்தது நூல்கள் ஆகும். எல்லா நூல்களையும் பணம் கொடுத்து வாங்க முடியா விட்டாலும் இரவல் வாங்கியும் நூல் நிலையங் களில் அங்கத்துவம் பெறுவதன் மூலமும் நூல்களைப் பெற முயற்சிசெய்து வாசித்தால் வாசிப்புப் பழக்கமும் ஏற்படும் சிறந்த அறிவையும் பெறுவதுமாகும்.

'கற்க கசடறக் கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய நல்ல நூல்களைக் கற்று எதிர் காலத்தில் வாழ்வின் முன்னேற்றத்திற்கும் அறிவாக்கத்திற்கும் மட்டுமன்றி நல்லொழுக் கமும் நற்பண்புடையவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் ஒழுக வேண்டும் .அறிவொளி தருவன நூல்களே ஆகும்.

இ. கிருபாலினி
வர்த்தகப்பிரிவு 2003

## வேண்டாம் எம (ன)க்கு

ஏய் ....................................மனிதா
மரத்த மனித மனங்களின்
கொலை வெறியின் கோர ஒலிகளின் உச்சஸ்தாயி உனக்கு
கேட்கவில்லையா? ஏன் .........இன்னும்
கல்லறைகளில் சபலமின்றி
கண்ணயர்ந்து மீளாத்துயிலில் ஆழ்ந்துள்ளோரின்
குறட்டை ஒலிகளின் ஒலி அலைகள் உன்
செவிப்பறைக்கு இன்னமும் எட்டவில்லையா?
கேட்டும் கேட்காதது போன்றதொரு
ஊமை நாடகத்தின் முன்னணி நடிகனாகி விட்டதால்
மௌனமொழி பகர்கின்றாயா?

ஆறறிவு கொண்டவனாம் மனிதன்
இது அன்றிலிருந்து மனிதனுக்கு இடப்பட்டுவரும் புனைபெயர்
எனத்தான் எண்ணத்தோன்றுதே ஒழிய
ஏனோ...................
அவனை
அர்த்தமுள்ள அவதாரபுருஷனாய் எண்ணத் தோன்றவில்லை.

மிருக உணர்வுகொண்ட
மனிதன் என்ற ஒப்பனையால்
மிக அழகாய் மிளிரும்
வேடதாரியே.............
உன் மனங்களிலே நீ
வன்முறையாகச் சிறைப்படுத்திக் கொண்ட
உள்ளத்து உணர்வுகளான
பேசாக் கைதிகளுக்கு
விடுதலை அளித்துவிடு

உலகை உசுப்பிவிட்டு
ஊழல் பல புரிந்து
ஊஞ்சலாடி உலாவிய மனிதனே.............
இனியாவது நீ
ஊனமற்ற உண்மையான முழுமனிதனாய்
உலாவிட உறுதிஎடுத்துவிடு
வேண்டாம் இனி உனக்கு
மரத்த கனத்த வடுநெஞ்சம்
விடைகொடுத்தனுப்பி வழியனுப்பி விட்டு – இனி
வீறுநடையோடு ஓர் புதுயுக மனிதனாய்
வேடம் போடும் வேடதாரிகளும் எமக்கு வேண்டாம்
வேடதாரிகள் வேகமாக வளர்ந்து வரும்
இப்பாவ உலகமும் எமக்கு வேண்டாம் – ஆம்
இப்பாவ உலகமும் எமக்கு வேண்டாம்.

ராதிகா முருகையா
2004 கலைப்பிரிவு

## வணிக மன்றம்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி ஸ்ரீ. அருள்வேல், திருமதி சி. ஞானசுப்பிரமணியம் (பொறுப்பாசிரியர்), திருமதி த. ச. யோகீஸ்வரன், திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), செல்வி பா. சுபாநிதி (தலைவர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி கௌ. சிவகுமார்.

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி மே. வினோதா, செல்வி உ. நிருஜா, செல்வி யோ. யசிந்தா, செல்வி க. நந்தினி, செல்வி சி. சிந்துஜா, செல்வி ம. துஷாரா, செல்வி ம. சுமேதா, செல்வி சி. தக்ஷாயினி, செல்வி பு. சுபாகினி, செல்வி த. ரசிக்கா, செல்வி க. வரநிதி.


## புவியியல் மன்றம்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), செல்வி ப. சிவசித்ரா (பொறுப்பாசிரியர்), செல்வி பா. சஞ்சுதா, திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்)

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி மு. சிவதர்சினி, செல்வி ஜெ. ஜெயப்பிரபா, செல்வி செ. தர்மினி, செல்வி இ. கார்த்திகா, செல்வி ஞா. மீரா, செல்வி க. சரிதா, செல்வி அ. ரஜிதா, செல்வி சி. தமயந்தி.

# விவசாய மன்றம்





*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி த. தேவராஜா (பொறுப்பாசிரியர்), திருமதி மீ. செல்லையா (உப அதிபர்). செ. ஐஸ்வரியா (தலைவர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்).

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி த. ரஜிதா (உப செயலாளர்), பொ. அர்ச்சனா (பொருளாளர்), சி. நிருத்தாஞ்சலி (உப தலைவர்), வி. பூர்ணிமா (உப பொருளாளர்), தா. காமகோடிகா (பத்திராதிபர்).

*சமூகமளிக்காதவர்:* நா. மனோஜா (செயலாளர்)

# சமூகக் கல்வி மன்றம்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி பி. கனகசபை, செல்வி ப. சிவசித்ரா, திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), செல்வி க. சரிதா (தலைவர்), திருமதி ந. இராகவன் (பொறுப்பாசிரியர்), திருமதி ப. சுந்தரலிங்கம், திருமதி க. பூலோகசிங்கம், திருமதி நா. விஜயகாந்தன், திருமதி சௌ. சுபாஸ்கரன்.

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி யோ. மதுரா, செல்வி செ. தர்மினி, செல்வி க. நதியா, செல்வி ம. நிலக்ஷி, செல்வி து. காரணி, செல்வி சி. லோகவதனி, செல்வி சே. மிதிலா

# விஞ்ஞானத் தமிழ் படைப்போம்

முன்பு கல்வி என்ற சொல் எழுத்துக் கல்வியைத்தான் குறித்தது. இது ஒரு அணிகலனாக வாழ்க்கையின் பண்பாட்டு வளர்ச்சிக்கு பயன்படும் பொருளாக இருந்ததேயன்றி மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கு பயன்படவில்லை. அவனது உடை, உணவு, உறையுள் ஆகியன தேடும் முயற்சியில் உடலுழைப்புத்தான் தேவைப்பட்டதே தவிர கல்வி தேவைப்படவில்லை.

மனித நாகரிகம் வேளாண்மையோடு தொடங்கியது. அச்சமுதாயத்தில் நிலமும் நீரும் முக்கியமாய் இருந்தன. நதிக்கரைகள் பல பண்பாடுகளின் தொட்டிலாக விளங்கின. 18ம் நூற்றாண்டில் நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப் பட்டதை அடுத்து "தொழில் நாகரிகம்" தொடங்கியது. பல புதிய பொறிகள் மேலும் உருவாகின. இப்பண்பாட்டில் நிலம், நீரோடு கனிவளம், நீர்மின்விசை, எண்ணைவளம் ஒருநாட்டின் பொருளாதார வளர்ச்சியில், ஒரு நாட்டின் செல்வங்களின் தொகுதியில் இடம்பெற்றன.

இத்தொழில் யுகத்தைத் தாண்டி இன்று மனிதன் "கல்வி யுகத்தில்" உள்ளான். வேளாண்மைக்கும் உடல் உழைப்பிற்கும் கல்வி தேவைப் படுகிறது. எல்லோரும் நிழலில் இருந்து சம்பாதிக்க முடியுமா? என்ற கேள்வியும் முடியாது என்ற பதிலும் இருந்தன. முடியும் என்ற நிலைக்கு மிகப் பக்கத்தில் முன்னேறிய நாடுகள் வந்துவிட்டன.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை மிகுதியாகப் பாதிக்கும் காரணிகள் நான்கு. மக்கள்தொகை, இயற்கை வளம், பொருளாதார அரசியல் அமைப்பு, கண்டுபிடிப்புக்கள். முன்பு கண்டுபிடிப்புகள் ஒரு சமுதாயத்தின் அடிப்படை வாழ்க்கை முறைகளை வேகமாக மாற்றியதில்லை. ஆனால் இன்று மற்ற மூன்று உறுப்புக்களையும் விட கண்டுபிடிப்புக்கள் தான் மனித சமுதாயத்தின் மாற்றங்கட்குக் காரணமாயுள்ளன. பல சமூக முன்னேற்றங்களுக்குக் கூட அறிவியல், பொறியியல், கண்டுபிடிப்புக்கள் காரணமாயுள்ளன. சான்றாக, மேல்நாடுகளில் பெண்கள் சமத்துவம் பெற அவர்களது பொருளாதார விடுதலைதான் முதன்மையான காரணம். இதற்குப் பெண்கள் விடுதலைப் போராட்டங்களை விட அதிகமாக உதவியவை தட்டச்சும், தொலைபேசியுமே. பெண்களின் பொருளாதார விடுதலைக்கு இவை பெருந்துணையாக இருந்தன. இதுவே இப்போது எம் நாட்டிலும் நிகழ்வதை கண்ணூடாகக் காண்கின்றோம். மனித சமுதாயம் இந்த நிலைக்கு வளர்ந்துள்ளது என்பது மட்டுமல்ல அதன் நாளைய வளர்ச்சி இதனிலும் வேகமாக இருக்கும் என்பது உறுதி.

ஆரம்பத்தில் உயர்தர வகுப்புக்களில் பிரகடனப்படுத்தப்பட்ட சுயபாஷைத் திட்டம் பின்பு பல்கலைக்கழகங்களிலும் புகுத்தப் பட்டது. அன்றுதொட்டு பல மாணவர்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளனர். உயர்தரத்தில் தமிழ்மொழிக்கல்வி பெற்றவர் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலக்கல்வி பயிலவேண்டிய அவலநிலையில் மொழிக் கஷ்டத்திற்கு உள்ளானார்கள். தமிழ் மொழியில் நூல்கள் இல்லை. ஆங்கில நூல்கள் பெருமளவில் கிடைக்கும். ஆயினும் வாசித்து விளங்க முடியாத நிலை. இம் மொழிக்கஷ்டம் அவர்களின் விஞ்ஞான அறிவு விருத்திக்கு தடைக்கல்லாய் அமைந்துவிட்டது. இப்பிரச்சினை சிறிதுசிறிதாக வளர்ந்து இப்போது முழு உருவத்தை அடைந்துவிட்டது. நாட்டிலே தொழிற்பிரச்சினை. வெளிநாடு என்றாலோ மொழிப்பிரச்சினை.

தமிழில் விஞ்ஞானத்துறை நூல்கள் படைத்தல் என்பதை எடுத்தவுடனேயே தமிழ் பயிற்றுமொழி பற்றிய வாதப்பிரதிவாதங்களில் இறங்கிவிடுவர். நமது குறிக்கோள் இந்தக் கருத்துக்களுக்கு அப்பாற்பட்டது. சமுதாயத்திற்கு ஒரு மொழியின் பயன் முழுமையானதாக இருக்கவேண்டுமாயின் அது சமுதாய வளர்ச்சிக்கும் வாழ்விற்கும் தேவையான அத்தனை செய்திகளையும் தன்னுள் அடக்கியாக வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அது குறையுடைய மொழிதான். உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இல்லமும் படைப்பதற்காக மனித சமுதாயம் அண்மைக்காலத்தில் பல கருவிகளை கலைகளை படைத்துள்ளது. அவை தமிழில் இல்லை. அவை இல்லாது இன்றைய சமுதாயம் வாழவும் வளரவும் இயலாது. எனவே நீதி, சமயம், இலக்கியம், பண்பாடு ஆகிய துறைகளில் மட்டுமே சிறந்த வளத்துடன் பொலிவுறும் தமிழ் இதுபோலப் பன்மடங்கு பெருகியுள்ள மற்றத் துறைகளுக்கான சொற்களும், நூல்களும் படைக்கப்பட வேண்டும்.

தமிழ் மிகவும் பழைமையான மொழி. மறுக்கமுடியாதது. இச்சிறப்பு மற்றைய குறை பாடுகளுக்கு ஈடுசெய்யக்கூடியதல்ல. இன்றைய கல்வித்துறைகள் பெரும்பாலும் கணிதம்,வரைபு என்பவற்றின் அடிப்படையில் அமைந்தவை. எனவே எமக்கு வர்ணனைகள் நிறைந்த சொற் கோவைகளை விட எண்ணற்ற குறியீட்டு எழுத் துக்கள் தேவை. தமிழில் பற்றுக்கொண்டோர் அதில் எந்த மாற்றத்தையும் செய்ய எதிர்ப்பர். தமிழ் மனிதன் படைத்த, வளர்த்த மொழி மாற்றமும் வளர்ச்சியும் தேவையில்லாதது என எதுவுமில்லை. பாதுகாப்பு வேறு, படைப்பு வேறு, மொழியின் வளர்ச்சி, வரலாறு ஆகிய பாடங்கள் எமக்குத் தேவையில்லாதன. நமது கற்பனை மயக்கத்திலிருந்து உலகை உற்று நோக்கவேண்டும். நம்மைப்போன்றே பின்தங்கி விட்ட சமுதாயங்கள் இன்று என்ன செய்கின்றன, எப்படி வளர்கின்றன என அவர்கள் பெற்ற அறிவிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். அரை நூற்றாண்டின் முன் தம் மொழி வரிவடிவத்தை மாற்றினார்கள் ஜேர்மனியர். இன்று தொழில்நுட்பத்துறையிலும், விஞ்ஞானத் திலும் முன்னேறி விட்டார்கள். உலகின் பல துறைகள் வளரவளர அவற்றில் நுண்மை ஆழ மாகிறது. பரப்பு விரிகிறது. இதற்கு விதிவிலக்கு மொழி. மொழி வளரவளர எளிமை பெறுகின்றது. அவ்வாறே தமிழ்மொழியில் எங்கெங்கு எளிமையைப் புகுத்தமுடியுமோ அங்கங்கு எளிமையைப் புகுத்தி "விஞ்ஞானத் தமிழ்" படைக்க வேண்டும்.

தகவல் தொழில்நுட்பம் விருத்தியடைந் துள்ள இன்றைய கணினி யுகத்தில் எங்கும் எதிலும் கணினியென்ற நிலை உருவாகியுள்ளது. எனவே கணினியின் செயற்பாடுகளை மேற் கொள்வதற்கு ஏற்ப தமிழ்மொழி எளிமையாக் கப்பட்டு விஞ்ஞானமயமாக்கப்பட வேண்டும். அண்மையில் இந்தியாவில் கணினி "கீ" போட் டுக்குரிய தமிழ் அமைப்பு உருவாக்கப்பட் டுள்ளது ஒரு சாதனையாகும். இவ்வாறு விஞ்ஞா னத்தின் பல சிறப்புக்களைப் படைத்து தமிழ் செழிப்படைய வேண்டியது அத்தியவசியமான தொன்று.

எஸ். அருட்சுதா
தரம் 10ஏ

# விண்வெளி ஆய்வுகள்

நவீன உலகத்தில் விண்வெளி ஆய்வுகள் மனித முன்னேற்றப் பாதையில் பரிணாம வளர்ச்சி வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளே விண் வெளி ஆய்விற்கு பெரிதும் துணைபுரிகின்றன எனலாம். காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட விண்வெளி விஞ்ஞானிகளால் மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகளும், விஞ்ஞானத் தொழில்நுட்ப வளர்ச்சியும், தொடர்பாடல் விருத்தியும், விண்வெளி ஆய்வுகள் பலமடையக் காரணம் என்றால் அது மிகையாகாது.

ஆதிகாலத்தில் வேட்டையாடித்திரிந்த மனிதன் படிப்படியாக முன்னேறிவரும்கால் ஆகாயத்தை அண்ணார்ந்து பார்த்தது முதல் ஆரம்பமாகியது விண்வெளி ஆய்வுகள் என லாம். இவ்வாறாக தற்கால வானியலின் தந்தை எனப்போற்றப்படும் நிக்கலஸ் கொப்பனிக்கஸ் சூரியன் பற்றியும் அதனைச் சுற்றியுள்ள கோள்கள் பற்றியும் உலகம் அறியும்படி செய் தார். இவரின் கருத்துப்படி புவியானது பிரபஞ் சத்தின் மையமெனவும் அது தட்டைவடிவானது எனவும் ஆரம்பகாலத்தில் நிலவிய கருத்தை மறுத்து புவிகோள வடிவமானது எனக் கூறினார்.

இவ் விஞ்ஞானிக்கு அடுத்தபடியாக ஜேர்மனியைச் சேர்ந்த யொஷன்ஸ் கெப்லர் விண்வெளியில் உள்ள கோள்கள் சூரியனை நீள் வட்டமாகச் சுற்றி வருகின்றன என்று கண்டு பிடித்தார். அடுத்து தொலைக்காட்சியைக் கண்டு பிடித்த விஞ்ஞானியான கலிலியோ கலிலி சந்திர னில் உள்ள குழிகள் மலைகள் ஆகியனவற்றை யும், சூரியனில் உள்ள கறைத்தடம் பற்றியும், வியாழனின் உபகோள்கள் பற்றியும் ஆய்வதற்கு வழிவகுத்தார்.

மேற்கூறப்பட்ட விஞ்ஞானிகள் ஐரோப்பா வின் மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்தார்கள். ஆனால் தற்போதைய விஞ்ஞானிகள் தொழில் நுட்பத்துடன் கூடிய விண்கலன்கள்,செய்மதிகள், ரொக்கட்டுகள் போன்றவற்றால் பரந்துநிற்கும் வானவெளியில் உள்ள அனைத்தையும் ஆய்வு செய்கின்றனர். மனிதன் சென்று ஆய்வுகளை மேற்கொள்ள முடியாத இடங்களுக்கு இயந்திர மனிதனான "றோபோ"வை அனுப்பியும் இன்னும் இன்னும் எத்தனையோ கலங்களை ஏவியும் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்.

இந்த வகையிலே உலகின் வல்லரசு நாடுகளான ஐக்கிய அமெரிக்காவும், ரஷ்யாவும்

இன்னும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் சிலவும் பெருந்தொகைப் படையாகக் காணப்படும் ஓசோன் படையை துளையாக்குவதால் அத்து ளையினூடாக வரும் ஊதா நிறக்கதிர்கள் பூமியை அடைந்து பல தீய விளைவுகளை ஏற்படுத்துமென அறிவிக்கப்பட்டுள்ளமை மற்று மொரு நன்மையாகக் கொள்ளலாம். இதனால் ஏற்படும் தோல் புற்றுநோய்கள் மற்றும் பல நோய்களை வருமுன் காப்போம் என்பதற் கிணங்க ஆராய்ச்சிகளின் மூலம் பெறப்படும் உண்மைகளை ஏற்று அதன்படி ஒழுகுவோமா னால் பூமியையும் அதில் வாழும் மக்கட்சமுத் திரத்தையும் பல்லாண்டு காலம் நோய்நொடி யின்றி வாழவைக்கலாம்.

எந்தவொரு காரியத்திலும் நாம் முழுநன் மையையோ அல்லது முழுத்தீமையையோ அடைவதில்லை. நன்மையும் தீமையும் அடங் கியதாகவே ஒரு செயற்பாடு அமையும். இந்த வகையில் விண்வெளி ஆய்வுகளின் தீமைகளாக சிலவற்றைக் குறிப்பிடலாம். முதலில் சூழல் மாசடைதலை எடுத்துக் கொள்ளலாம். கலங்கள் அமைத்த ரொக்கட் ஏவுதல் என்பனவற்றால் பூமியில் கழிவுப்பொருள்கள் மிகையாக வெளி யேற்றப்படுகிறது. இது மட்டுமன்றி விண்வெளி ஆய்விற்கென கோடிகோடியாக பணத்தைச் செலவழிக்கிறார்கள். இதனால் எதிர்பார்க்கும் அளவிற்கு நன்மை ஏற்படும் என அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியாது. எனவே இப் பணத்தை பூமியில் ஒருவேளை உணவிற்காக வாடும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கலாம்.

இவ்வாறான விண்வெளி ஆய்வுகள் மனித வாழ்வின் முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்வதுடன் மனிதனைப் பலவாறு சிந்திக்கவும் தூண்டுகின்றன.

தற்கால விண்வெளி ஆய்வுகள் பல வியத்தகு உண்மைகளை வெளிக்கொண்டு வந்துள்ளது. இந்த வகையில் புவியில் விழும் விண்கற்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் பூமியுடன் மோதி வருகின்ற குறுங்கோள்கள், உடுக்கள் மற்றும் வால்வெள்ளிகள் என்பவற்றை குறிப்பாக எடுத்து நோக்கலாம்.

வானில் எரிந்து விழுகின்ற விண்கற்களே ஆகாயக் கற்கள் எனப்படுகின்றன. வானவெளி யிலே காணப்படுகின்ற பலவகையான விட்டங் களைக் கொண்ட விண்கற்கள் வளிமண்ட லத்திற்குப் புகும்போது உராய்வினால் எரிகின் றன. இதனால் பெரும்பாலும் இவ் விண்கற்கள் பூமியை வந்தடைவதற்கு முன்னரே எரிந்து அழிந்து விடுகின்றன. ஆனாலும் சில சமயங் களில் சிறியதும் பெரியதுமான சில விண்கற்கள் உலகின் பல பாகங்களிலும் வீழ்ந்து தாக்கங் களை ஏற்படுத்தியுள்ளன. இவ்வாறாக அமெரிக் காவில் அரிசேனாப் பாலைவனத்தில் வீழ்ந்த விண்கல்லானது 1330 மீற்றர் விட்டமானதாயும் இருநூறு மீற்றர் ஆழமானதாயும் கிண்ணக் குழியை உருவாக்கியுள்ளது. இதுமட்டுமன்றி அமெரிக்க அரும்பொருட் காட்சியகத்தில் வைக் கப்பட்டுள்ள ஒரு விண்கல்லானது பியறி என்ப வரால் கிறீன்லாந்துத்தீவில் இருந்து கண்டெ டுக்கப்பட்டது. பூமியின் கவசமாகக் காணப்படும் வளிமண்டலம் ஆனது ஆகாயக் கற்கள் பூமியை நோக்கி பிரவேசிக்கும் போது அவற்றிலே உராய்வினை ஏற்படுத்தி அழித்து விடுகின்றது.

ஆனால் வளிமண்டலங்கள் இல்லாது துணைக்கோள்களுடன் மேற்பரப்புகளை நேரடி யாகவே தாக்குகின்றன விண்கற்கள். உதாரண மாக பூமியின் துணைக்கோளான சந்திரனிலே நமக்குத் தெரியும் பாகத்திலே முப்பதாயிரம் கிண்ணக்குழிகளை ஒத்த இறக்கங்கள் காணப் படுகின்றன. இக் கிண்ணக் குழிகளை ஆதார மாகக் கொண்டு 1948ம் ஆண்டில் அறிஞர் பால்ட்லின் என்பவர் பின்வருமாறு கருத்தைக் கூறுகிறார். ஒரு விண்கல் சந்திரத்தரையில் மோதும் போது அப்பகுதி ஆவியாக மாற்ற மடைந்து அதன் தாக்கும் திறனுக்கேற்ப அதனுள் அடங்கிநிற்கும் ஆற்றல் அது தடுத்து நிறுத்தும் வெப்ப ஆற்றலாக மாற்றப்பட்டு, தாக்கும் ஆகாயக்கல்லின் விட்டத்தைவிட மிகப்பெரிய விட்டத்தைக் கொண்ட குழிகளை ஏற்படுத்துமென தெரிவிக்கின்றார். பூமியைத் தாக்கும் மிகப்பெரிய விண்கல்லானது 1908ல் சைபீரியாவின் தங்குஸ்தா என்ற இடத்தில் பெருமழிவை ஏற்படுத்தியுள்ளது. இதன் தாக்கத்தால் ஏற்பட்ட புவிநடுக்க அலைகள் மூவாயிரம் கிலோமீற்றர்களுக்கு அப்பாலும் பதிவாகியுள்ளதெனில் அதன் அழிவை அளவிட முடியாதெனலாம்.

அடுத்தபடியாக வானவெளியிலே இடையிடையே தோன்றி மறைகின்ற வால் வெள்ளியை எடுத்து நோக்கலாம். வால்வெள் ளியானது (Comet) தலையையும் வாலையும் கொண்ட நீண்டதோர் ஒளிப்பிழம்பாகும். ஆனால் இது உடுவல்ல. ஒளிராத வான்

பொருளாகும். இவ்வால் வெள்ளிகள் சிலசம யங்களில் தமக்குக் குறுக்கீடாக எதிர்ப்படும் கோள்களுடன் மோதிக்கொள்கின்றன. இந்த வகையில் 1994ம் ஆண்டு யூலை 17ம் திகதி முதல் 22ம் திகதி வரை வியாழனுடன் ஷீமேக்கர் லெவி என்னும் வால்வெள்ளி மோதியது.

ஷீமேக்கர் லெவி என்ற வால்வெள்ளி வியாழனுடன் மோதி பாரியவிளைவுகளை ஏற்படுத்தும் என விஞ்ஞானிகள் எதிர்பார்த்தனர். இவ் வால்வெள்ளியானது 18 ஆண்டுகளுக்கு முன் வியாழனின் வளிமண்டலத்துக்கு வெளியே ஏறத்தாழ 50மில்லியன் கிலோமீற்றர் தூரத்தில் சுற்றியது. பின்னர் வியாழனின் ஈர்ப்பினால் கவரப்பட்ட ஷீமேக்கர் லெவி நிறையீர்ப்பு விசையினால் இரண்டு துண்டுகளாகப் பிளவுண்டது. பிளந்த இத்துண்டுகள் வினாடிக்கு 60கிலோ மீற்றர் வேகத்தில் ஆறு நாட்களாக மோதியது. இம் மோதலின் அனர்த்தங்களாக வியாழனிலே இறக்கங்கள் தோன்றின. துகள்கள், தூசுகள் விண்வெளியில் பரவின.

தற்போது விண்வெளியியலாளர்களால் வியப்பூட்டும் செய்தி வெளியிடப்பட்டது. அதாவது 2028ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24ம் திகதி புவிக்கோளத்துடன் ஒரு வால்வெள்ளியானது மோதலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக்குறுங்கோளிற்கு 1997 எக்ஸ் எப் எனப் பெயரிட்டுள்ளனர். அதாவது 1997 டிசம்பர் மாதம் அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் விஞ்ஞானியான ஜிம்ஸ்காா்ட்டி தொலைநோக்கி மூலம் விண்வெளியை அவதானித்த போது இக்குறுங்கோளைக் கண்டுபிடித்தார். 1.6கிலோ மீற்றர் விட்டம் கொண்ட இக்குறுங் கோள் பற்றி ட்ரையன் மார்ங்டன் என்பவர் பின்வருமாறு கூறுகிறார். இதன் பாதை பூமிக்கும் சந்திரனுக்கும் இடைப்பட்டதாகவும், பூமியின் ஈர்ப்பு விசைக்கு உட்பட்டதாகவும் காணப் படுவதால் மோதும் சாத்தியக் கூறுகள் பெருமளவு காணப்படுவதாகக் கருத்துத் தெரிவிக்கிறார். 384,400கிலோமீற்றர் தூரத்தில் பூமியில் இருந்து சந்திரன் காணப்படுகிறது. 1997 எக்ஸ் எப் ஆனது புவியின் மேற்பரப்பில் இருந்து 42,000 கிலோமீற்றர்களை நெருங்கும்போது சாதாரண வெறுங்கண்களாலேயே காணலாம்.

பூமியுடன் மோதவருகின்ற 1997 எக்ஸ் எப் எனும் குறுங்கோளானது புவியைநோக்கி எங்கிருந்து வருகின்றது எனப்பார்க்கலாம். முதலில் 1801ல் பியாஸி என்ற விஞ்ஞானி செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடையே செரேஸ் என்னும் ஒரு சிறுகோளைக் கண்டுபிடித்தார். அதன்பின்னர் சிரேஸ், பல்லாஸ், ஜீனோ, வெஸ்டா, வெறன்கே, அடோனிஸ், வெறர்மிஸ், ஈராய் போன்றபல குறுங்கோள்கள் செவ்வாய்க்கும், வியாழனுக்குமிடையில் கண்டுபிடிக்கப் பட்டது. இவ்வாறாகக் காணப்படும் கோள்களிலிருந்து விலகி பூமியை நோக்கி கொண்டிருப் பதே 1997 எக்ஸ் எப்.

இக் குறுங்கோளானது பூமியுடன் மோதினால் பூமிமீது நூற்றுக்கணக்கான அணுகுண்டு வெடித்தமைக்கு சமனாகும். இதுமட்டுமன்றி பூமி நடுக்கமும் பாரிய கடலலைப் பெருக்கமும் ஏற்படும். விண்ணில் வீசப்படும் தூசுக்கள், துகள்களால் வாயு மண்டலம் நிரப்பப்பட்டு சூரியக் கதிர்கள் பூமியின் மேற்பரப்புக்கு வருவது தடுக்கப்படும். இதன் காரணமாக கடுங்குளிரும் இதனால் அமில மழையும் பொழிந்து பாரிய உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தும். இவ்வாறான பாரிய அழிவுகள் மனிதகுலம் தோன்றாத டைனோசர்கள் காலத்தில் ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால் இவ்வாறான அழிவுகளைக் காட்டிப் பயமுறுத்தும் அதேவேளை அப்படி எதுவும் அழிவுகள் ஏற்படமாட்டாது பயப்பட வேண்டிய அவசியமில்லையென சில விஞ்ஞானிகள் மனதிற்கு இங்கிதம் அளிக்கின்றனர். அதாவது புவியின் சுற்றுப்புறத்துக்கு பிரவேசிக்கவிடாது ஒரு இலட்சம் கிலோமீற்றருக்கு அப்பாலேயே நூறு மெஹா தொன் சக்தியுள்ள ஏவுகணையினை ஏவி அதன் பாதையிலே மாற்றத்தை ஏற்படுத்தலாமென கூறுகின்றனர். எவ்வாறாயினும் இயற்கையின் செயன்முறைகளை முற்றாக மாற்றிவிட மானிடனால் முடிவதில்லை என்பது பொதுவான அபிப்பிராயம்.

எஸ். சுதாநிதி

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

- வள்ளுவர் வாக்கு.

# சங்கீதத்தின் பெருமை

சங்கீதமென்பது செவிக்கு இன்பத்தைத் தரும் த்வனிகளைப் பற்றிய கலையாகும். அது சிறந்த கலைகளில் ஒன்று. சிறந்த கலைகளாகிய லலித கலைகளில் அது மிக்க மென்மையான கலையாகும். மனிதர்கள், மிருகங்கள், பண்டிதர்கள், பாமரர்கள், விருத்தர்கள், பாலர்கள் முதலியோர்க்கு இன்பத்தைத் தரக்கூடியது. சங்கீதம் பயில்வதனால் அன்பு, அடக்கம், பக்தி, நட்பு, மனத்திருப்தி, சாந்தி முதலிய நற்குணங்கள் விருத்தியாகின்றன. இன்னும் அறிவு, புத்திக் கூர்மை, கற்பனாசக்தி, ஞாபகசக்தி, நல்லொழுக்கம் முதலியவைகளும் சங்கீதம் பயில்வதனால் ஒருவனுக்கு விருத்தியாகின்றன. பலதேசத்து மக்களை ஒருங்கு சேர்க்கும் சக்தி சங்கீதத்துக்கு உள்ளது.

இம்மைச் செல்வங்களினால் உண்டாகாத ஒரு மனத்திருப்தியும் பேரின்பமும் சங்கீதத்தில் ஒருவருக்கு உண்டாகும். அகம்பாவம் என்னும் துர்க்குணத்தை ஒழிக்கக்கூடிய சக்தி சங்கீதத்துக்கு உண்டு. சங்கீதம் பயில்வதால் ஒருவருக்கு அழகான வசீகர முகவெட்டும் கவர்ச்சிகரமான தோற்றமும் பிரகாசமும் உண்டாகும். ரசம் அல்லது உணர்ச்சியை உண்டாக்குவதே சங்கீதத்தின் பெருமையாகும். ரசம் இரண்டு வகைப்படும்.

1) கானரஸம்
2) நவரஸம்

சுத்த இசையினால் உண்டாகுவது கானரசமாகும். சங்கீத சாகித்ய சேர்க்கையினால் ஏற்படுவது நவரஸமாகும். ஸப்த ஸ்வரங்கள் எல்லா சங்கீதத்திற்கும் பொதுவானது.

சங்கீதத்திற்கு காந்தர்வவேதம் என்று பெயர். காந்தர்வவேதம் நான்கு உபதேசங்களில் ஒன்று. கடவுள் வழிபாடு செய்வதற்கும் கடவுளை அறிவதற்கும் சங்கீதம் ஒரு முக்கிய சாதனமாகும். கடவுளை அறிவதற்கும் அவரை அடைவதற்கும் பல மார்க்கங்கள் இருப்பினும் சங்கீத மார்க்கம் மிக்க இனிமையானதும் சுலபமானதுமான மார்க்கமாகும். லலித கலைகளில் முதன்மையானது சங்கீதம். இது ஓர் உன்னதமான கலை. இதை ஒரு தனிமொழி எனலாம். சாதாரண வார்த்தைகளினால் வெளியிட முடியாத அதிநுட்பமான கருத்துக்களையும் இசையின் மூலம் வெளியிடமுடியும். இதற்கு உதாரணமாக ஸ்ரீ. தியாகராஜ சுவாமிகள் செய்தருளிய கிருதிகளில் பிரகாசிக்கும் ஸாகித்திய பாவ சங்கீதங்களைக் கூறலாம். சங்கீதம் ஒரு தெய்வீகமான கலை. சிவபெருமான் கையில் உடுக்கும், கண்ணபிரான் கையில் குழலும், சரஸ்வதி கையில் வீணையும் இருப்பதில் ஓர் ஆழ்ந்த கருத்து உள்ளது. அதாவது சங்கீதமும் சாஹித்தியமும் சரஸ்வதி தேவியாரின் இரு ஸ்தானங்களாகும். சங்கீதம் கேட்டவுடனேயே இன்பத்தைத் தருகிறது. ஆனால் ஸாஹித்தியமோ இதைக்குறித்து ஆலாபனை செய்தபின்னரே இன்பம் ஏற்படுகின்றது. சங்கீதத்திற்கும் சாகியத்திற்கும் உள்ள நுட்ப வித்தியாசத்தை இந்த சுலோகம் தெளிவாக விளக்குகிறது. க்ருதி ஸ்மிருத்யாகி ஸாஹித்யநானாசாஸ்த விகோபிச சங்கீதம் யேனஜானந்திக் விபதாஸ்தேமருகஸ் மிருதா// ஒருவன் சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும், சாஹித்தியத்திலும் அடைந்திருந்த போதிலும் அவன் சங்கீதம் கல்லாதவனாயிருந்தால் இரண்டு கால்களுள்ள மிருகமாக கருதப்படுவான்.

மனிதனுக்கு ஈசன் அருளியுள்ள குரல் பேசுவதற்கு மட்டுமல்ல பாடுவதற்குக் கூட என்பதை உணர வேண்டும். பாடுவதனால் தான் ஒருவன் தன் குரலின் முழுப்பயனையும் அடைய முடியும். கைவிரல்களும் இசைக் கருவிகளை பயில்வதற்காகவே வித்தியாசமான நீளங்களுடன் அமைந்திருக்கின்றன. மனித தேகத்தின் அமைப்பிலும் இசை சம்பந்தமான பல தத்துவங்களையும் காணலாம். உதாரணமாக மனிதன்

(1) குரல் காற்று வாத்தியத்தின் அமைப்பையும்
(2) காது தோல்கருவியின் அமைப்பையும்
(3) உள்காது தந்தி வாத்தியத்தின் அமைப்பையும் உணர்த்துகிறது.

உத்தமமான சங்கீதத்தையும் நாம் அடிக்கடி கேட்கவேண்டும். அப்பொழுதுதான் உட்காதிலுள்ள துல்லியமான நரம்புகளுக்கு உணர்ச்சி உண்டாகி அதன்மூலம் தெய்வீக உணர்ச்சி நமக்கு ஏற்படும். சங்கீதமானது மனிதன் தனது அறிவினாலும் யுக்தியினாலும் புத்திக்கூர்மையினாலும் வளர்த்த கலையாகும் இக்கரணத்தைப்பற்றி சங்கீதக் கலைக்கு ஒரு தனிப்பெருமையுள்ளது.

இன்னும் சங்கீதமானது புராதன காலத்திலிருந்து நமக்கு வந்துள்ள விலையற்ற நிதிகளில் ஒன்றாகும். மனிதனுடைய துர்க்குணங் களைப் போக்கி நற்குணங்களைப் பெருக்க லாம். பாட்டின் அர்த்தம் தெரியாதவர்கள் கூட அப்பாட்டின் இசையைக் கேட்டு மகிழுவார்கள். ஸங்கீத வித்துவான்களுக்கு எத்தேசங்களிலும் நன்மதிப்பும் நல்வரவும் உண்டு எனின் மிகையாகாது.

த.சசிலா
2003 வர்த்தகப் பிரிவு.

# வயோதிபப் பிரச்சினையை நாம் எவ்வாறு எதிர்கொள்ளமுடியும்.

பொருளாதார ரீதியில் செயற்திறன் அற்றதும் நலிவுற்றதுமான பிரிவினரிற்கு சமூகப் பாதுகாப்பினை வழங்குவது சமூகத்தின் பொறுப் பாகும். சமூகரீதியிலும் பொருளாதார ரீதியிலும் தொழில் புரியும் வயதைத்தாண்டிய முதியோர், தமது சொந்த வருமானத்தினால் தமக்கே ஆதரவினை வழங்கமுடியாத நிலையிலுள்ள வறிய மக்கள், அநாதைகள், ஊனமுற்றோர் தொடர்பாக இலங்கை அரசாங்கம் பல நெருக் கடிகளை எதிர்நோக்குகின்றது. எனினும் வயோ திபப் பிரச்சினையே அதிகளவில் காணப்படு கின்றது. இவ்வாறு காணப்படுகின்ற வயோதிபப் பிரச்சினையை நாம் பல்வேறு வகையில் எதிர் கொள்ள முடியும்.

தலைக்குரிய வருமானம் இன்னமும் குறைவாகவே உள்ள வேளையில் நாட்டின் குடித்தொகை முதிர்ச்சியடையும் போது உழைப்புக்கு உயர்ந்த வருவாய் ஈட்டலை உறுதிப்படுத்தும் வகையில் அதிகரித்த உற்பத்தித் திறனுடன் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினை எய்துவதற்காகத் தேசிய முன்னு ரிமைகள் நிறுவப்படவேண்டிய தேவை காணப்படுகின்றது.

பொருளாதார உறுதிப்பாட்டை கொண் டுள்ள நடவடிக்கைகளில் வறிய மற்றும் ஊன முற்ற ஆட்களில் அதிகரித்த பங்கேற்பானது குறிப்பாக சுயதொழில் முயற்சிகளில் அவர் களின் பங்கேற்பானது வருமானத்தின் சிறந்த பகிர்ந்தளிப்பினை உறுதி செய்வதுடன் ஓய்வூ திய மற்றும் சேமநிதிய திட்டங்களுக்கு வெளியே கிராமிய பிரதேசங்களில் வாழும் பெரும்பாலா னோருக்கு பெருமளவிலான சமூகப்பாது காப்பினை வழங்கக்கூடியதாக இருக்கும். சுய தொழில் நடவடிக்கைகளின் அனுகூலம் என்ன வெனில் பொதுவான ஓய்வுபெறும் வயதினைத் தாண்டிய வயோதிபர்களும் இன்னும் சில ஆண்டுகளுக்கு வருவாய் உருவாக்க நடவடிக் கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள கூடியதாக உள்ளமையாகும்.

வயோதிபர்களின் நீண்டகால கவனிப்புக் காக தனியார்துறை தொழில் முயற்சிகளினால் நடைமுறைப்படுத்தும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டங்களைப் பிரபல்யப்படுத்துவதன் மூலம் அதிகரிக்கப்பட வேண்டியதேவை காணப் படுகின்றது. விரைந்த வயோதிப நிலையை எய்துவதிலிருந்து உருவாகும் பொருளாதா ரத்தின் பல்வேறுபட்ட துறைகளின் பாதகமான தாக்கங்களிற்குத் தீர்வுகாணும் நோக்கில் அனைத்தையும் உள்ளடக்கிய தேசிய வயோதிபர் கொள்கையொன்றின் அபிவிருத் தியும் இன்னுமொரு தேவையாகத் தோன்று கின்றது. தேசிய வயோதிபக்கொள்கை ஒன்றினை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தகவல்களையும் தரவுகளையும் சேகரிப்பதற்காக ஆராய்ச்சி நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்படல் வேண்டும்.

இந்தப் பிரச்சினையினைத் தணிப்பதற்கு இன்னுமொரு வழி, என்னவெனில் அவர்கள் உழைக்கும் காலத்தில் வயோதிபக் காப்புறுதித் திட்டங்கள் போன்ற நீண்டகால சேமிப்புத் திட்டங்களில் சேர்ந்து கொள்ளுவதாகும்.

அரச வரவு செலவுத்திட்டத்தின் சுமையி னைக் குறைக்கும் வகையில் அரசாங்கத்தின் ஓய்வூதியக் கொள்கை சீரமைக்கப்படல் வேண் டும். இது பெருமளவு உதவி தேவைப்படு வோரின் பக்கம் தனது கவனத்தை செலுத்துவ தற்கு அரசாங்கத்திற்கு இயலச் செய்யும். இது பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் வடிவில் கொண்டுவரப்படல் வேண்டும். ஆளொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட திட்டங்களுக்கு பங்களிப் புச் செய்யும் பல்வகை சமூகப்பாதுகாப்புத் திட்டங்களில் சேரும்படி மக்களை ஊக்குவிப்பது பயன்தரக்கூடிய ஒன்றாகும்.

வயோதிபர் தமது வயோதிபக் காலத்தினை மகிழ்ச்சியாகக் கழிக்கும் வகையில் முதியோர் இல்லங்களை நடாத்திச்

செல்வதன் மூலம் சமூகப் பாதுகாப்பில் அதிகரித்த பங்கினை வகிக்குமாறு தனியார் துறையினரும் அரசசார்பற்ற நிறுவனங்களும் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

வயோதிப சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் இறுதிக் குறிக்கோளாகக் காணப்படவேண்டியது என்னவெனில் மரியாதையுடன் தமது வயோதிப காலத்தினை அனுபவிப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்ற வேளையில் ஏனையோரில் அண்டியிருப்பதை ஆகக் குறைந்ததாக்குவதாகும்.

தாட்சாயினி சின்னத்தம்பி
2003 வர்த்தகப்பிரிவு

# விஞ்ஞானமே அணுகுண்டு விஷம்

அப்பிள் பழமொன்று
மரம் விட்டு மண்மீது விழுந்தது
நீயூட்டன் அறிவின் மூளையிலே
ஓர் அதிசயம் நிகழ்ந்தது
புவியீர்ப்பு விசையில்
புதிய பிரசவத்தால்
உலகமே மகிழ்ந்தது

வானத்து சூரியனை
எடிசன்
வாசலுக்கு கொண்டு வர
உறக்கமின்றி உழைத்தான்
இழைகளினால் வெளிச்சம் ஊட்ட
இரவு பகல் பார்க்காமல்
இறுதிவரை முயன்று களைத்தான்
முடிவினிலே ..............................
பூமி உருண்டையின்
புதிய சந்ததிக்கு
நள்ளிரவை பகலாக இழைத்தான்

யாழ்ப்பாணத்திற்கும் யப்பானுக்கும்
இடையிலே நிகழ்கிறதே
ஒலித்தொடர்பு
அது—
கிரகம்பல் கண்டறிந்த
தொலைத்தொடர்பு

குரங்கிலிருந்து
மனிதப்பரிணாமம் உருவெடுத்த அதிசயத்தை
டார்வின் முன்வைத்தான்
அடுத்து வந்த அறிஞர்களின்

ஆராய்ச்சி நெற்றியிலே
திலகமென பொன்வைத்தான்
பூமிக்கு விளக்கேற்றி
பூரித்த நிலாவிலே
ஆம்ஸ்ரோங் வைத்தது கால்
பின்னர் பிறந்து வந்த
விஞ்ஞான மேதைகள்
உருவாக்கி வைத்ததோ
ஒவ்வொரு கோளை

நியூட்டன் , எடிசன்
ஆம்ஸ்ரோங் என்றெல்லாம்
எத்தனை பேர்
அறிவுவிளக்கேற்றினர்
அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா
அறிவிலிகள்
அணுகுண்டு செய்து
இவர்களை ஏன்
தூற்றினர்

*உ.நிருஜா*
*13 வர்த்தகப் பிரிவு.*

# சித்திரக் கலையின் வளர்ச்சி

தரணியில் தலைசிறந்த கலைகளில் ஒன்றாக சித்திரக்கலை சிலிர்த்துப் பிரகாசிக் கின்றது. மனிதனின் பண்பாடு, வாழ்க்கை முறை உணர்ச்சிகள், இரசனை அனுபவங்கள் ஆகிய வற்றின் வெளிப்பாடாகவும் உட்கூறாகவும் அமை வதே சித்திரமாகும். சித்திரமானது அகில உலக நாட்டவர்களுக்கும் அனைத்து இன மதத்தவர்க ளுக்கும் பொதுவான ஒற்றுமையினை நிலை நாட்டுகின்றது. தேசிய உணர்வு, சமுதாயச் சீர்கேடுகள், சமாதானம், இயற்கை அழகு, ஆத்மீகம், அன்றாடவாழ்க்கை, அனுபவங்கள், வீட்டுச்சூழல் சாந்தி, ஒவ்வொரு மனிதனது உணர்ச்சிகள் இனமத கலாசாரங்களின் பண்பாட்டு அம்சங்கள் பலவற்றை சித்திரங்கள் மூலம் காட்டவும் அறியவும் முடிகின்றது. சிறந்த கலையாக்கம் ரசிகர்களின் ரசனை அனுபவமட் டத்தினை உயர்த்துவதையே நோக்கமாகக் கொண்டது. உன்னத கலைப்படைப்புக்களை பார்த்து பரீட்சயப்படுத்திக் கொள்வதாலும் அவற்றைப் பரிசீலிப்பதாலும் இதுவரை காணாத அர்த்தங்களைக் கண்டுகொள்ள முடியும். கண்காட்சிகளும் போட்டிகளும் ஓவிய உலகிற்கு ஒரு ஆரோக்கியமான எதிர்காலத்தைக் காட்டி நிற்கின்றன.

இலங்கையில் ஆதி மனிதன் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் வெளிப் படுத்தும் ஓர் மொழியாக சித்திரங்களை வரைந்து காண்பித்தான். ஆதிகால ஓவியங் களை சிறப்பாக தந்திரமலைக்குகையில் காணமுடிகிறது. அனுராதபுர காலம், பொலநறு வைக்காலம், கண்டிக்காலம், தற்காலம் (கொழும்பு) என சித்திரக்கலை வளர்ச்சிக் காலங்களை வகுத்துள்ளனர். அனுராதபுர காலத்தில் மௌரிய குப்தர், ஆந்திர, பல்லவ கலைப்பாணிகள் பரவிக்காணப்பட்டன. இவ் ஓவியங்களை 'சித்தள்பவ்வ", கரகம்பகல, சிகிரியா, வெஸ்ஸகிரி, கோணக்கொல்லை

ஹெட்டியாகலை, ஹித்தகலை, மிகிந்தலை, றுவன்வெலிசாய, மகியங்கனை போன்ற இடங்களில் இன்றும் பார்க்க முடிகிறது. இங்கு சிறப்பாக சிகிரியா ஓவியங்கள் உலகப் பிரசித்திபெற்று இன்றும் அழியா ஓவியங்களாக நிலைபெறுகின்றன.

பொலநறுவைக்கால ஓவியங் களில் சோழரின் கலைப்பாணி செல்வாக்குப் பெற்றது. இவற்றை திவங்க ஆலயம், கல்வி காரை, திம்புலாகல, இலங்காதிலக, சிற்பக்கூடம் போன்ற இடங்களில் காணக்கூடியதாக உள்ளது. கண்டிக்கால ஓவியங்களை தெகல்தெறுவா, தம்புள்ள, ரிதிவிகாரை, முல்லகிரிவிகாரை போன்ற இடங்களில் காணமுடிகிறது. தம்புள்ள விகாரை கூரைசித்திரத்திற்கு பிரசித்தி பெற்ற இக்கால ஓவியங்களில் சியாம் நாட்டுச் சித்திரங்களின் பிரதிபலிப்புகள் காணப்படுகிறது. இவ்வாறு வளர்ச்சியடைந்து வந்த சித்திரக்கலை தற்காலத்தில் மேலும் சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

தற்காலம் அதாவது கொழும்பு நகர்காலத்தில் சித்திரக்கலை வீறுநடையுடன் உச்சக்கட்டத்தின் எல்லையில் வளர்ந்து வருகிறது. நவீனபாணி ஓவியங்களை பெரும் பாலும் காணக்கூடியதாக உள்ளது. இக்கால ஓவியங்களை களனி விகாரை, புதிய மண்டபம் , கோதமிவிகாரை , பாராளுமன்ற உபசாரசபை போன்ற பல இடங்களில் காணமுடிகின்றது. இக்கால ஓவியங்கள் முப்பரிமாணத் தன்மையும் கொண்டவை. கோதமி விகாரை ஓவியங்களில் தடித்தசேவைகளும் கடுமையான நிறங்களும் கொண்டு புதியபாணியில் வரைந்த ஜோர்ஜ் கீதினையே சாரும். இலங்கையின் சிறந்த ஓவியர்களான ஜே.பி.ஏ. பெரேரா , ஜோர்ஜ்கீத், அமரசேகர முதலியார், எஸ்.டீ.பி. மஞ்சுஸ்ரீ, சோளியஸ் மென்டிஸ், டபிள்யூ.ஜே. ஜீபீலின், M.சார்லிஸ், டேவிட் பெயின்டர், ஸ்டான்சி, சபய சிக்கா, எக்ஸ் .ஏ. கருணாரத்தின , ரிச்சாட்க ப்ரியால், ஐவன் பீரிஸ், சேனநாயக்க போன்றோர் இக்கலையை வளர்த்துள்ளதுடன் இக்கலைக்கு வித்திட்டுமுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் சித்திரக்கலையானது பெரும் சிறப்புற்று மக்கள் மனதில் நிலைத்து நிற்கின்றது. இவற்றை நல்லூர், வெங்கடேஸ்வரர் ஆலயம் போன்ற இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ ஆலயம், பல்கலைக்கழகம், பாடசாலைகள் போன்ற பல இடங்களில் நாம் கண்கூடாக காணக் கூடியதாக உள்ளது. இக்கால ஓவியர் களாக கனகசபாபதி , மார்க், செ. சிவப்பிர காசம், எஸ். தங்கராஜா, எஸ். ஆர்.கனகசபை, அ. இராசையா, இ. ரத்தினம், ரமணி, மணியம் போன்றோர் சித்திரக்கலையினை வளர்த்துவரு கின்றனர். அத்துடன் ஓவியக்களங்களும் அமைத்து வளர்க்கின்றனர்.

பாடசாலைகளில் சித்திரக்கலையானது ஓர் பாடமாக செயல்படுத்தப்பட்டு வருவதுடன் க.பொ.த உயர்தரத்தில் ஒரு பாடமாகவும் அதன் பலனின் தொடர்ச்சியாக பல்கலைக்கழகங் களிலும் தொடர்கின்றது. இவை ஓவியர்களை உருவாக்குவதுடன் சித்திரக்கலையின் வளர்ச்சி யாகவும் உழைக்கின்றது. நிறுவனங்கள், கல்வித்திணைக்களங்கள், வங்கிகள், கழகங்கள் என்பன ஓவியப் போட்டிகள் கண்காட்சிகளை நடாத்தி பரிசில்களை வழங்கி ஓவியர்களை ஊக்குவிக்கின்றன. இவ்வாறு அன்றும் இன்றும் என்றும் அழியா ஓவியங்களாக சித்திரக்கலை வளர்ச்சி வளர்ந்துகொண்டு செல்கின்றது.

சித்திரக்கலையானது கருத்து வெளிப் பாட்டு இரேகைச்சித்திரம், பொருட்கூட்டம், அலங்காரம், அச்சுப்பதிப்பு, ஓட்டுசித்திரம், நவீன ஓவியம் என வகைப்படுத்தப்பட்டன .

இவ்வாறு சித்திரக்கலையானது மனிதன் தோன்றிய காலம்முதல் வளர்ச்சிபெற்று பின் அனுராதபுரக்காலம், பொலநறுவைக்காலம், கண்டிக்காலம், தற்காலம் என வளர்ச்சி பெற்று வந்து பாடசாலைகளூடாக மாணவர்களின் ஆற்ற லையும் ஊக்குவித்து எதிர்காலத்தில் சித்திரக் கலை சிறப்புக் கலையாக மிளிர அச்சாணிச் சக்கரங்களாக சுழன்று கொண்டிருக்கின்றது. சித்திரக்கலை அன்றும் இன்றும் என்றும் அழியா சுவர்களாக வளர்ந்து கொண்டு செல்லும்.

சாருபா சரவணபவன்

"ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையும் மேமாப் புடைத்து"

- வள்ளுவர் வாக்கு

# வாழ்க்கைத்திறன் கல்வியினால் நாம் அடையும் நன்மைகள்

வாழ்க்கைத்திறன் கல்வியினால் நாம் பல நன்மைகளை அடைகின்றோம். எமது வாழ்வில் திறமையாக வாழ வாழ்க்கைத்திறன் எமக்கு கைகொடுத்து உதவுகின்றது. எமது வாழ்வில் எமக்குத் தேவையான பொருட்களையும் நாமே செய்து கொள்ளவும் வாழ்க்கைத்திறன்கல்வி உதவுகிறது. வாழ்க்கைத்திறன் கல்வி கற்பதனால் எமது கைப்பணி துரிதமாக வளர்வதோடு மனஉறுதியும் உண்டாகின்றது. வாழ்க்கைத்திறன் கல்வியால் ஆண்கள் செய்யும் வேலையை பெண்களும் பெண்கள் செய்யும் வேலையை ஆண்களும் செய்யக் கற்றுக்கொள்கின்றோம். உதாரணமாக சைக்கிள் ரியூப் ஒட்டுவது ஆண்களுடைய வேலை. அதனைப் பெண்கள் செய்கின்றனர். பெண்கள் செய்கின்ற தையல் வேலையை ஆண்கள் செய்கின்றனர்.

இன்னும் கருவிகளை கையாளவும் அவற்றை பேணிப் பாதுகாக்கவும் கற்றுக் கொள்கின்றோம். அத்துடன் தாவரத்தை விருத்தி செய்யவும், பப்பாசி பறிதடி, தேயிலை வடி, முதலுதவிப்பெட்டி போன்ற பயனுள்ள பொருட்களை செய்யலாம். இதனால் எம்மால் உற்பத்தி செய்ய முடியும் என்ற மன நம்பிக்கையும் மனச் சந்தோசமும் உண்டாகின்றது. வீட்டை அலங்கரிப்பதற்கு சுவர் அலங்காரம், சாடி, உறி, வெளிச்சக்கூடு போன்ற அலங்கரிப்புப் பொருட்களை செய்து வீட்டை அலங்கரிப்பதனால் வீட்டில் பெற்றோரின் பாராட்டும் உற்சாகமும் அளிக்கப்படுகிறது. இதனால் எமக்கு மனச்சந்தோசமும் திடமான உறுதியான மனத்தையும் பெற்றுக்கொள்கின்றோம். இந்த வாழ்க்கைத்திறன் கல்வியால் படிக்கும் போது உழைக்கும் திறனைப் பெறுவதோடு எம்மை வேலை உலகிற்கு அழைத்து செல்கின்றது.

நூற்கல்வி கற்க ஆர்வம் இல்லாதவர்கள் தமது திறமையை புலப்படுத்தக்கூடிய முறையில் பயனுள்ள செயற்பாடுகளை கொண்டுள்ளது இந்தக் கல்வி .முதலுதவி செய்வதனால் சேவை மனப்பாங்கு வளர்கின்றது. நேரங்கிடைக்கும் நேரங்களில் பயனுள்ள பொருட்களை செய்து விற்பதனால் எமது பொருளாதாரத்தை விருத்தி செய்யலாம்.

இவ்வாறு செய்வதனால் நாம் பாராட்டையும் நன்மதிப்பையும் பெறுகின்றோம். எமது சொந்தக்காலில் நிற்க முதற்படியாக அமையும் வாழ்க்கைத் திறனைக் கற்று எமது வாழ்வை வளமாக்குவோம்.

'வாழ்க்கைத்திறன் கல்வியை கற்றுக்கொள்
வளமாய் வாழ வழி காட்டுமென நம்பிக்கொள்.'

க. துசாயினி

# இலங்கையில் கைத்தொழில் மயமாக்கல் உபாயங்கள்

## அறிமுகம்:-

வளர்ச்சி அடைந்துவரும் விவசாய நாடான இலங்கை கைத்தொழிலில் விருத்தியடைய வேண்டியது அவசியமானதாகும். கைத்தொழிலை விருத்தியடையச் செய்வதற்கு காலத்திற்கு காலம் பல்வேறு கைத்தொழில் கொள்கைகளையும் உபாயங்களையும் பின்பற்றி வருகிறது. இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து மாறிமாறிஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் பலகைத்தொழில் கொள்கையைப் பின்பற்றின. குறிப்பாக இறக்குமதி பதிலீட்டுக்கொள்கை தனியார் கைத்தொழிலுக்கான ஊக்குவிப்புக்கள் வர்த்தக தாராள மயமாக்கல் கொள்கை ஏற்றுமதி சார்ந்த பயிர்ச்செய்கைக் கொள்கை என பல்வேறு உபாயங்களையும் பின்பற்றி உள்ளன. 2002ஆம் ஆண்டிற்கு முன் பதவியில் இருந்த அரசாங்கங்கள் கைத்தொழிலை விருத்தியடையச் செய்வதற்கு கைத்தொழில் மயமாக்கல் கொள்கையை பின்பற்றி உள்ளது.

## இலங்கையில் கைத்தொழில் மயமாக்கல் உபாயம்

இலங்கைக்கான புதிய கைத்தொழில் மயமாக்கல் உபாயம் ஒன்றினை வெளியிட்டதன் மூலம் 1995 இல் அரசாங்கம் அதன் கைத்தொழில் மயமாக்கல் கொள்கையை

அறிவித்துள்ளது. அரசின் கொள்கை அறிக்கை கைத்தொழில் கொள்கையின் அடிப்படைக் குறிக்கோளினை மிகக்குறைந்த ஒழுங்கு விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள். பொருளாதார மற்றும் நிதியியல் ஊக்குவிப்புக்கள், பாகுபாடற்ற தெளிவான கொள்கை உணர்வு என்பவற்றின் ஊடாக கைத்தொழில் வளர்ச்சியைக் கொண்டு நடாத்துவதற்கான பொருளாதார சூழ்நிலையைத் தொடர்ந்தும் வழங்குகின்ற வேளையில் நாட்டிற்கு இறுதியில் நன்மை பயக்கும் பல புதிய கைத்தொழில்களை பேணி வளர்ப்பதற்கான கொள்கைத்தொகுதியினையும் பின்பற்றும் எனக் குறிப்பிடுகின்றது.

இதன்படி கைத்தொழில் கொள்கையின் பொதுவான குறிக்கோள்களாவன

* கைத்தொழில் அடிப்படையை விரிவாக்குதல், பன்முகப்படுத்தல் மற்றும் தரம் உயர்த்தல்
*. பௌதீக மற்றும் மனிதவலு மூலங்களின் வினைத்திறன் மிக்க முகாமைத்துவம்
* கிராமிய, நகரத்துறை ஆகிய இரண்டிலும் தொழில் நிலையையும் வருமானத்தையும் உருவாக்கல்
*. ஏற்றுமதியை சார்ந்து இருத்தல்
* பிரதேச வாரியான கைத்தொழின் மயமாக்கல்

## ஒப்புதல் அளிக்கப்பட்ட செயற்திட்டங்களில் முன்னேற்றம்.

| வகை | எண் | முதலீடு | உள்ளார்ந்த தொழிலின்மை |
|---|---|---|---|
| 1. புதிய செயற்திட்டங்கள் | 91 | 7.876 M | 6.193 |
| 2. ஏற்கனவே உள்ள செயற்திட்டம் | 249 | 18.623M | 14.748 |
| மொத்தம் | 340 | 26.519M | 20.941 |

## ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களுக்கான புதிய ஊக்குவிப்புக்கள்

உள்ளூர் ஒத்துழைப்புடனோ அல்லது இல்லாமலோ வெளிநாட்டு முதலீட்டாளரை ஊக்குவிக்கும் பொருட்டு அரசாங்கம் ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை நிறுவியதுடன் அவ்வலயங்களில் உள்ள முதலீட்டாளர்களிற்கு கவர்ச்சிகரமான வரி ஊக்குவிப்புக்களையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குகிறது.

* வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலகுவாக நுழைவதற்கு வசதியளிக்கும் பொருட்டு ஓரே இடத்திலேயே சகல வசதிகளையும் உருவாக்குவதற்காக கொழும்பு பெரும் பாக பொருளாதார ஆணைக்குழுவும் வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவும் ஒன்றிணைக்கப்பட்டன.
* மாவட்ட மட்டத்தில் கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கையை இணைக்கும் பொருட்டு மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன.
*. வரையறுக்கப்பட்ட வலயங்கள் அல்லது பிரதேசங்களில் இருந்து முழுநாட்களிலும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகள் இரண்டினையும் மேம்படுத்துதல் மற்றும் வசதியளித்தல்களுக்கான நடவடிக்கைகளையும் வழங்கக்கூடிய அதிகரித்த பொறுப்புக்களுடன் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு 1992 நவம்பரில் முதலீட்டுச் சபையை தரமுயர்த்தியது.

## ஏற்றுமதி பதனிடும் வலையங்களின் புதிய ஊக்குவிப்புக்கள்.

ஏற்றுமதி வருவாயின் விரிவாக்கம், வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் என்பன ஏற்றுமதி பதனிடும் வலயங்கள் இலங்கையில் நிறுவுவதற்கான பிரதான காரணமாயிருந்தது. ஏற்றுமதி பதனிடும் வலயங்களால் உத்தரவு பெற்ற நிறுவனங்கள் சட்டத்தின் பிரகாரம் ஆகக் குறைந்தது 90 % மான தமது உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும்படி கேட்டுக்கொண்டதன் பேரில் மிகக் கூடுதலான ஏற்றுமதி வருவாய் பெறப்பட்டது.

கொக்கல ஏற்றுமதி பதனிடும் வலயம் காலித் துறைமுகத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. இது நெடுஞ்சாலை, புகைவண்டிச்சேவை மற்றும் உள்ளூர் விமான சேவைகள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது.

1996 டிசம்பர் இறுதியில் ஏற்றுமதி பதனிடல் வலயத்தில் 148 நிறுவனங்களின்

பெறப்பட்ட மொத்த முதலீடுகள் ரூபா 13.448 மில்லியனாக விளங்கின. இந்தக் தொழில் முயற்சிகள் 86182 தொழில் வாய்ப்புக்களை வழங்கியுள்ளன.

முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட கைத்தொழிலில் புதிய தொழில் முயற்சிகள்(2000,2001)

| வகை | | 2000 | 2001 |
|---|---|---|---|
| 01. | கட்டுநாயக்கா ஏற்றுமதி பதனிடும் வலயம் | 98 | 87 |
| 02. | பியகம ஏற்றுமதி பதனிடும் வலயம் | 63 | 60 |
| 03. | கொக்கலை ஏற்றுமதி பதனிடும் வலயம் | 10 | 10 |
| 04. | கண்டி கைத்தொழில் பூங்கா | 04 | 04 |
| 05. | மிரிகம ஏற்றுமதி பதனிடும் வலயம் | 08 | 09 |
| 06. | மல்வத்த ஏற்றுமதி பதனிடும் வலயம் | 04 | 04 |
| 07. | சீதாவாக்க கைத்தொழில் பூங்கா | 09 | 11 |
| 08. | வத்துப்பிட்டிய ஏற்றுமதி பதனிடும் வலயம் | 07 | 09 |
| 09. | மரிஜ்ஜவெல ஏற்றுமதி பதனிடும் வலயம் | 01 | 01 |
| 10. | மாவத்தகம ஏற்றுமதி பதனிடும் வலயம் | - | 02 |
| 11. | பொல்காவெல ஏற்றுமதி பதனிடும் வலயம் | - | 02 |
| 12. | கொரண ஏற்றுமதி பதனிடல் வலயம் | - | 03 |
| 13. | தகவல் தொழில் நுட்ப்ப் பூங்கா | 03 | 04 |
| 14. | எற்றமதி பதனிடல் வலயங்களிற்கு வெளியே | 1001 | 999 |
| | மொத்தம் | 1208 | 1205 |

## 2001ம் ஆண்டு கைத்தொழில் துறைக்கான ஊக்குவிப்புக்கள்

1. 1996ல் அறிமுகப்படுத்தப்பட்ட இறை ஊக்குவிப்புத்திட்டம் 2001ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மேலும் 2 ஆண்டு காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

2. 2001ம் ஆண்டு இறுதியில் 111 தொழில் முயற்சிகள் மீளமைத்தல்/ நவீனமயப் படுத்தல் முன்மொழிவுகளை சமர்ப்பிப் பதுடன் இவற்றில் 34 தொழில் முயற்சிகள் மீளமைத்தல் நவீனமயப்படுத்தல், முன்மொழிவுகளை நவீனமயப்படுத்து வதற்கு தேவையான நிதியியல் வசதிக ளுக்கான இசைவினை பெற்றுள்ளது.

3. ஆடைக்கைத்தொழிலில் ஒரேமாதிரியான வசதிகளை வழங்கும் விகிதத்தில் 2001 வரவு செலவுத்திட்டம் முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச்சபை அல்லாத அமைப் புக்களிடையே ஒழுங்குபடுத்தல் மற்றும் இனக்குவிப்புக்களிற்கு முன்மொழிந்தது.

இவ்வாறு மேலும் பல புதிய திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது. அவைகளாவன அவிசாவளையில் அமைந்துள்ள சீதாவாக்கை கைத்தொழில் பூங்கா 71 தொழிற்சாலை தொகுதிகளுக்கு யப்பான், இந்தியா, கொங்கொங், நெதர் லாந்து, பிரான்ஸ், ஆகிய நாடுகளிலிருந்து கணிசமான முதலீடுகளை கவர்ந்துள்ளது. இங்கு அமைந்துள்ள செயற்திட்டங்கள் மருத்துவக் கையுறைகள், மென் விளை யாட்டுப் பொருள்கள் பெறுமதி கூடிய ஆடைகள் உருக்கு உற்பத்திகள் பின்னப் பட்ட சீத்தைகள், பல்லிணைப்புப் பொருள் கள், மர உற்பத்திகள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றது.

2000ம் ஆண்டின் இறுதியில் உள்ளார்ந்த வாய்ப்பு வளங்களைக் கொண்ட முதலீட்டா ளர்கள் தமது கைத்தொழில் பிரிவுகளை ஏற்படுத்த ஏதுவாக தங்கொட்டுவ, மாகாந்துள, துறாணி, குறுவிட்ட, நாலந்த எல்லாவள, தம்பதெனியா, கரந்தெனியா, உடுகாவ, மனுவாங்கொட, கோமாகம, சொல் லியத்த, மடவளை , உல்பத், பட்டஅத்த, பதுளை, லக்சபானா, நவகாம்புர, கொலன் னாவ, மற்றும் றத்மலான கைத்தொழில் பேட்டைகளில் ஏறத்தாழ 186 காணித்துண்டுகள் ஒதுக்கப் பட்டுள்ளன. கெப்பட்டிப்பொல, எம்பிலிப்பிட்டி,

மொனராகல மற்றும் பமுனுகம ஆகிய இடங்களில் பொருளாதார நிலை நிகழ்ச்சித் திட்டங்களுக்குரிய சாத்தியங் களுக்கான ஆரம்ப ஆய்வுகளை மேற்கொள் வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா மட்டக்களப்பு திருகோ ணமலை அம்பாறை மற்றும் பொலன்னறுவை போன்ற கடினமான பிரதேசங்களிலும் தொழிற்சாலைகள் நிறுவ நடவடிக்கைகள எடுக்கப்பட்டுள்ளன.

25தகைமை பெற்ற செயற்றிட்டங்கள் தென்மாகாணத்திலும் எஞ்சியவை கொழும்பு கம்பஹா தவிர்ந்த மற்றைய மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. இவற்றின் முதலீடு 2,927 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஹொறண, பொல்கொல்காவல, மாவத் தகம மற்றும் வதுப்பிட்டிவல ஆகிய இடங்களில் சிறு ஏற்றுமதி பதனிடல் வலயங்களையும் மிரிஜ்ஜவில்ல மற்றும் கன்வெல்லவிலும் கைத்தொழில் பேட்டைகளை முதலீட்டுச் சபை ஏற்படுத்தியுள்ளது. இதில் ஹொறண ஏற்றுமதி பதனிடும் வலயம் 70 ஏக்கர் நிலப்பரப்பையும் மாவத்தகம 20ஏக்கர் நிலப்பரப்பையும் பல உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட மைந்துள்ளது.

கொக்கல ஏற்றுமதி பதனிடும் வலயத் தில் 2000ம் ஆண்டு 72புதிய முதலீட்டுச் செயற் றிட்டங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பாதுகாப்புப் பொருள்களை தயாரிக்கின்ற தொழில் முயற்சிகளை ஒதுக்குவதற்கு கைத்தொழில் பூங்காக்களை ஒதுக்குவதற்காக கன்வெலவில சாலாவ கைத்தொழில் பேட்டையில் 50 ஏக்கர் நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்கான உட்கட்டமைப்பு வேலைகள் 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எஸ் சிந்துஜா
2003 வர்த்தகப்பிரிவு.

# IN THE SCHOOL

If you can keep silent when all your friends
are making noise and the teacher is blaming you
If you can concentrate and study while all others
are yelling, dancing and singing
that too make allowance for that and continue

If you can ride your bicycle on road in a singlefile
while your friends are riding abreast and holding the traffic
or being shouted at but don't give way to shouting
or being knocked down on the road but don't knock others down
and yet you don't look a bad student nor talk too naughty

If you can concentrate and not add to the noise
If you can teach and not make noise your excuse
If you can meet praise and punishment
with smiling face and equal grace
If you can bear to conduct your lesson
while the noise from the neighbouring class drowns or lessens
or watch your efforts of teaching being made a disgrace
but force your heart and brain and muscle
to control it and continue after stopping the tustle
yours will be this school and every one in it
and what is more you'll be a good student my dear Child.

"This is our School, this School is Ours
Let us all discipline our selves"

Nilukshi Mahathevan,
Year 11 A.

# HEALTH IS WEALTH

A healthy soul resides in a healthy mind and a healthy mind resides in a healthy body. A sickly man however wealthy he may be cannot enjoy life . He cannot eat delicious food, he can not roam about and admire lovely places. A healthy person leading an active life, is more vigilant, sharp minded, intelligent, happy and success ful. Good health imparts happiness.

Man's basic needs are food, clothing and shelter. The primary request of the body is a healthy and balanced diet. Man also needs comfortable clothing and a healthy ventilated shelter . To be healthy good habits are also necessary.

"'Early to bed and early to rice "

Keeps a man fit throughout the day. Sports and daily exercises are also very important as these give proper shape and physique to the body. Meditation and Yoga exercises help a man to control his senses.

In the morden world of machines and commerce, Urbanization and pollution, tension and the push, man is loosing touch with the nature . He is living an artificial life with serious ailments, sickness, weak and diseases. To preserve good health which really is precious and should like is an enlivenment care of his food, clothing and living conditions.

*S. Niruththaanjali*
*11B*

# THE OLYMPIC GAMES

The world's most popular international sports festival is the Olympic games. The first Olympic games were held in Olympiya in Greece. The Olympic festival had a peace ful influence on a nation of states which were constantly at war with one another. The festival was an expression of the Greek's idea that ' A mans body should be just as fit and healthy as his mind'

The Olympic games lasted many centuries but after the Romans conquered Greece it was abolished for nearly 1500 years. The games were however revived and the first mordern Olympic was held in Greece, in 1896. It was be lived that unity could be brought together .

Today the olympic is one of the greatest events that brings the world together . The games are held in different cities every four years and aim to promote world peace . The olympic flag has five interlaced rings in different colours Red, Blue, Green, Black and yellow on a white back ground . The International Olympic committee I.O.C is responsible for the organization of the Olympic games . The Olympic games carry and important message to the world.

"Not to win but to take part"

*Kalavathy Thurairajah*
*10A*

# THOMAS ALVA EDISON

Thomas Alva Edison , the great American inventor, was born in 1847 . He began life as a poor boy. He earned a living as a newsboy on railway trains. But in his off - time he played with chemicals. He educated. himself. He got work in a telegraph office. In time he become a clever telegraph engineer. He saw how the telegraph could be improved, His improvements were accepted. His inventive genius was recognized. But he had a hard struggle . When he was twenty - two he owned forty thousand dollars by an invention , He rose to be Superintendent of a New York Telegraph company. At last he was able to start his own workshops at Menlo park. There most of his best known inventions were made. He invented the phonography, which led to the gramophone. Our moving pictures are due to him. He greatly improved electric light. His inventions are almost countless.

*M.Nishanthi*
*Grade:10A*

# STUDENT INDISCIPLINE

It is an accepted fact that there is growing indiscipline in our educational institutions. It worries all Kinds of people. It tells upon our educational system.

The causes for indiscipline are be many. The obscenity exhibited in the commercial film has . corroded our younger generation . The classes in school and colleges are overcrowded. The teacher is not able to exercise much influence on them personal contact between the teacher and the student is decreasing. with the changing trends in the society. teachers have lost their respect. moreover the education that they receive does not engage them fully. The evaluation methods are not appealing. The intrusion of politicians and the involvement of students in political actives affect the general smooth run of the institution.

The remedial measures are as follows. They should be given job oriented education. They should be engaged in schools and colleges all the time. They should have a faith in the education and be taught in such a way as to meet the challenges of their future. Students should be well informed about the conditions and resources of our nation. Qualities like a sense of responsibility, devotion to work. respect for all religions should be inculcated to the students. The examination system should be revamped in order to mark them concentrate on their academic subject. Such changes would help to divert students to academic lines.

***M.Thusharah***
***A/L2003 Com'A'***

# THE FUTURE OF SCIENTIFIC ADVANCEMENT

The evolutionary process has determined human beings as dominant species among all living things . There are gigantic leaps in the process of evolution observed throughout the history of mankind which are yet to be explained Biologists, Anthropologists , Archeologists and Sociologists are still puzzled and equally amazed by the unknown factors which triggered the subtle processes systematic thinking which is essential for the complicated mental activities needed for the socio -cultural aspects of evolutions, no one was able to say for certain when this was actually started.

Earlier scientists believed that the rational approach to life began only from cro-magnons the immediate predecessors of Homo - sapiens . But now archeologists being to unearth evidences which shows that even Homo - sapiens - neanderth alensis processed the faculty of rational logical thinking to a certain extent.

Though the biological aspects of evolution seems to be over after the dawning of Homo - sapiens the social and cultural evolutions left to immeasurable height . But nothing could be compared with enormous changes that followed after the industrial revolution in Europe in 16th century. The consequences of these events have led to tremendous advance ment in the fields of science and technology thus paved way to an entirely new way of social life.

This trend continued up to the 20th century and now the question booming largely overhead is whether the same trend is going to continue fro ever or the process of advancement is going to be stagnated due to various limiting factors stirred endless argue ments and all over the world.

The people who argue that this trend is going to continue states that various problems which are faced by the mankind now and which are going to worsen in the future such as limited living space, resources and over population will push further in to new advance ments .

But the people who argue that the advancement would be slowed down and stalled for ever in the near future put forward several reasons to reenforce their theory . They argue that the biological evolution of human being especially the brain has reached its maximum thus this is going to be limiting unless a new species evalue from humans . They further argue that on various scientific decipline the knowledge gained so of a reached a point of saturation and present approach to scientific thinking would not be able to progress any further until new way of thinking and approach approach are found which still evades man. But this argue ment seems to be more philosophical and very pessimistic.

This little article is just to throw some light on the impending future and to stir your thinking, But only time can tell what is in store for future and which . school of though in going to be proved to be correct.

***S.Gayathiri***
***2003 A/L,Bio***

# மலரும் நினைவுகளில் மலர்ந்த கவி

படித்து முடித்த பள்ளியதன்
பழைய நினைவுகளில்
வடிக்க நினைக்கும் கவியது
ஈரைந்து வயதின் இறுதி படியிலே
இட்டு வைத்த முதலடி முதல்
இன்று பதிந்த இறுதி வடிவரை
பசுமையான நினைவுகளில்
புதிய நினைக்கும் கவியிது
சின்னஞ் சிறு வயதினிலே
சின்னவர் நாம் ஒன்றாய்
நெஞ்சமதோ வெள்ளையாய்
நீண்டு பரந்திருக்கும்
கள்ளமற்ற சிரிப்புடன்
கல்வி பயின்ற கதையதை
காதோரம் பாடும் கவி
கொஞ்சம் வளர்ந்தவுடன்
குறும்புகள் பல புரிந்து
ஒரு நிமிடம் சண்டையிட்டு
மறு நிமிடம் கதைபேசி
விளையாட்டாய் கோள் மூட்ட
வினையாய் அது முடிய
வகுப்பறையை கறிக்கடையாக்கும்
வசந்த காலத்தில் கவி
வீட்டு கணக்கதனை
போட்டு வர மறந்து
முட்டி வலிக்கும் வரை
முழந்தாள் தனில் நின்றும்
முள்ளாய் உறுத்தாத
பொற் காலத்தின் கவி
வென்றால் போற்றிடவும்
தோற்றால் மனம் தேற்றிடவும்
பாசமிக்க நட்புடனே
பழகி களிந்திருந்த
நட்புலகின் கவியது
படிப்புடன் பண்பினையும்
பாசத்துட னெமக்கூட்டி
ஆக்கமான திசைதனிலே
ஊக்கமுடன் தட்டி தந்த
ஆசான்கள் பலருடனே
கொஞ்சி குலவியிருந்த
புன்னகை தேச கவியிது
மொத்தமாய் செப்பிடினோ
கல்லூரி தாய் மடியில்
உருண்டு உடல் புரட்டி
தத்தி தவழ்ந்தே
தனீர் நடை பயின்ற
குழந்தையின் கவியயிது.

*இ.பிரதீபா*
*2001 கணித பிரிவு.*

# எமது பாடசாலை

தீந்தமிழர் வாழுகின்ற
வலிகாமப்பகுதியில்
இந்து மகளிராய் மனம் வீசும் – எங்கள்
இந்து மகளிரே
நந்தவனமாய் நிற்கும் எங்கள்
மகளிர் அன்னையே
உனக்கோர் அர்ப்பணம்
மூன்று நாலு வருடங்களாய் – எம்மை
அரவணைக்க மகளிர் அன்னையே
உன்கோர் அர்ப்பணம்
மூன்று நாலு வருடங்களாய் – எம்மை
அரவணத்த மகளிர் அன்னையே
சின்னதாராவாய்.....................
சிட்டுக்குருவியாய்.....................
சிறகடித்து திரிந்தோம் உம் சிந்தனையில்.............
ஓ இந்து மகளிர் அன்னையே
கரையில்லா கல்விதனை
கல்வியுடன் எல்லாக்கலைகளையும்
கற்பித்தாய்
வல்லவராய் நாம் வாழ்ந்திடவே
வாழ்த்து பல கூறினாளேயே
ஓ இந்து மகளீர் அன்னையே
யாழ்ப்பாணத்தில் சரித்திரம் படைக்கும் –எங்கள்
சரித்திர நாயகியே..................
சுற்றி வரகட்டிடங்கள்
சூழவுள்ள சோலை நடுவே
பள்ளி சிறுவர் நாம்
துள்ளி விளையாட மைதானம்
கொத்து கொத்தாய்
பூத்து குலுங்கும் நெல்லிக்கனி
வல்லமையுடன் வானாள
வளர்ந்து நிற்கும்மலைவேம்பு
வந்தாரை வாசலிலே வரவேற்கும்
பூமரங்கள்.....................................

# லியோ கழகம்



*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி சி. நல்லதம்பி (ஆலோசகர்), திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), செல்வி உ. நிருஜா (தலைவர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்).

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி சோ. வனஜா (செயற்குழு உறுப்பினர்), செல்வி ந. வேணுகா (பொருளாளர்), செல்வி இ. துர்க்கா (செயற்குழு உறுப்பினர்), செல்வி செ. மிருனாளினி (செயற்குழு உறுப்பினர்), செல்வி ம. நிலக்ஷி (உப செயலாளர்), செல்வி ந. யயந்தி, செல்வி ச. ரஜிதா, செல்வி சி. நிருத்தாஞ்சலி (செயலாளர்), செல்வி க. துஷாஜினி (உப தலைவர்).


# INTERACT CLUB



*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி அ. நி. பழனிமலைநாதன் (பொறுப்பாசிரியர்), திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), செல்வி வே. வினித்திரா (தலைவர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்)

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி ஜெ. ஜனனி, செல்வி க. மதுராம்பிகை, செல்வி ச. துளசிகாயினி (இயக்குநர்), செல்வி பா. மீனலோஜினி (உப தலைவர்), செல்வி க. நிஷாந்தி (இயக்குநர்), செல்வி ம. துஷாரா (செயலாளர்), செல்வி சி. சிந்துஜா (இயககுனர்), செல்வி பு. சுபாசினி (Sargent-at-Arms), செல்வி சி. தக்ஷாயினி (பொருளாளர்), செல்வி சி. காயத்திரி (பத்திராதிபர்).

# கணித விஞ்ஞான மன்றம்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி ரோ. பாலஸ்கந்தன் (விஞ்ஞான பாட இணைப்பாளர்), செல்வி பா. கோமதி (பொறுப்பாசிரியர்), திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), செல்வி ஸ்ரீ. துஷாஜினி (கனிஷ்ட மாணவ மன்ற தலைவர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), செல்வி கு. கார்த்திகா (உயர்தர மாணவ மன்றத் தலைவர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி ச. நரேந்திரன் (பாட இணைப்பாளர்), திருமதி அ. தி. பழனி மலைநாதன் (கணித மன்றப் பொறுப்பாசிரியர்), திருமதி நே. விக்னேஸ்வரன் (கனிஷ்ட மாணவ மன்றப் பொறுப்பாசிரியர்)

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி ச. ரஜிதா, செ. சோபிகா, க. சரிதா (பொருளாளர்), அ. அபர்ணா (செயலாளர்), ச. துளசிகாயினி (இதழாசிரியர்), வே. வினுத்திரா (செயலாளர்), ச. சாருமதி (பொருளாளர்), சு. தனுஷா, தே. சண்முகப்பிரியா, வி. வினோஜா, சி. காயத்திரி.

# உயர்தர மாணவர் மன்றம்



*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி சி. நல்லதம்பி (ஆலோசகர்). திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), செல்வி உ. நிருஜா (தலைவர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்)

*நிற்பவர்கள் இடமிருந்து வலமாக:* செல்வி வி. நந்தினி (உப தலைவர்), செல்வி இ. சஞ்சிகா (செயலாளர்), செல்வி பா. சஞ்சுதா (உப பொருளாளர்), செல்வி க. மதுராம்பிகை (பொருளாளர்), செல்வி யோ. யசிந்தா (உறுப்பினர்), செல்வி சி. தயாளினி (உறுப்பினர்), செல்வி ச. அபிராமி (உப செயலாளர்), செல்வி கி. தனப்பிரியா (உறுப்பினர்), செல்வி இ. செந்தமிழ்ச்செல்வி (உறுப்பினர்).

ஓ இந்து மகளீர் அன்னையே
இயற்கை அழகுடன் நீமிளிர்கிறாய்
மருத்துவர்கள் மானிடவியளாளர்
கணக்கியலாளர்கள் நல்லாசான்கள்
உற்பவித்தாய் உன்மகவாய்
ஓ இந்து மகளீர் அன்னையே
யாழ்ப்பாண மண்ணில் – நீ
தேசியமாய் மணம் வீச..................
எத்தனை எத்தனை
தியாகங்கள் ............................
தியாகத்தின் மத்தியில் – நீ
உருவெடுத்து வளர்த்தவன்
புதைந்து விட்ட உன்புகழ்கள்
அறிவுலகு இருக்கும் வரை
அழியாதம்மா......................................
ஓ இந்த மகளிர் அன்னையே
என்றும் உன் இலட்சிய பாதையில்
வீறுநடை போடுவாயாக..................

*இ. பிரதீபா*
*10பி*

## துள்ளித்திரிந்ததொரு காலம்

அந்த நாள் ஞாபகங்கள்
நெஞ்சில் வந்து மோதுகையில்
அலைகடலில் துரும்பாக
அலைக்கழிந்து போவோம் நான்
பள்ளிப் பருவமதில்
பாங்குடனே தலைவாரி
சின்னஞ் சிறுசுகள் நாம்
துள்ளித் திரிந்த அந்தப்
பள்ளிப் பருவ காலம்
என் கண்ணில் வந்தநாளில்
தினமும் திண்டாடுவேன்
பள்ளி வளாகத்தில் – எம்
பிஞ்சுக் கால் பதித்து
துள்ளித் குதித்தபடி – தினமும்
பாடி ஆடிடுவோம்
மூத்தோரை மதித்திடுவோம்
முதியோர் சொற் கேட்போம்
பாட்டி சொன்ன கதைகளெல்லாம்
இப்போ பழைய கதை ஆகியது
பள்ளி விட்டு வருகையிலே
பங்கயத்தின் வளவிற்குள்ளே
கள்ள மாங்காய் பிடுங்கி
கடித்து சுவைத்தவும்
காய்ச்சலினால் நான்கு நாட்கள்
படுக்கையில் கிடந்ததும்
இனி எந்தன் வாழ்வினிலே
வந்திடுமோ சொல் இறைவா?
வாழ்க்கை யெனும் சக்கரத்தில்
கவலையொன்றும் இல்லையென்ற
களிப்புடனே வாழ்ந்ததுதான் –அக்காலம்
குறும்புகள் பல கூறி
குலவியது அக்காலம்
ஆச்சிக்குத் தெரியாமல்
மழையினிலே நனைந்து விட்டு
அடிவாங்கிக் கதறியதும்
பாட்டுத் தாளமும்
பாங்குடனே நாம் கற்று
துள்ளித் திரிந்த அந்த
பள்ளிப் பருவகாலம்
காலத்தின் கோலமோ – அன்றி
நாம் செய்த பாவமோ
வரிச் சுவடு முகத்தில் விழ – இப்போ
முதியோர் பட்டம் தாங்கி நின்றோம்
அலை கடலில் ஓரத்தில்
அமைதி காத்த துரும்பதனை
அலைகின்ற அலை வந்து
அடித்து எடுத்தது போல்
நிலையற்ற எம் வாழ்வில்
கன்ம அலையின் விளையாட்டால்
வாழ்க்கை எனும் பெருங்கடலுள்
வந்து அமுந்துகின்றோம்.
பிறவிக்கடல் தனிலே
வினைகள் இரண்டினாலும்
அல்லாடித் தள்ளாடி
ஓய்விற்கு வந்து விட்டோம் – இனி
எக்காலம் சுதந்திர வாழ்வு?

* * *

*இ. பிரதீபா*
*11 பி*

# பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்வோம்

அள்ளக் குறையாத அறிவுச் சுரங்கள்
கள்ளம் தனைப் போக்கும் கருணைத் திருத்தலங்கள்
உள்ளம் தனை வளர்க்கும் உயர்ந்த திருக்கோயில்
பள்ளித் தலமென்றால் பாரோர் மறுப்பாரோ
சின்ன மலர்க்குழந்தை சிங்காரப் பாட்டிசைத்து
மின்னும் விழிகளிலே ஆவலுமே கொப்பளிக்க
அன்னம் என நடந்து ஆனாப் படிப்பதற்குச்
செல்லுகின்ற காட்சியில் தெய்வம் குடிகொள்ளும்
கல்விப்பயிர் வளரும் கடமை உணர்வுமிகும்
சொல்விப்பனம் பெருகும் சோர்வு அகன்றோடும்
மெல்லப் பயிர் வளர்ந்து மேன்மைப் பயன்தருதல்
என்ன வளர்ந்து பல ஏற்றங்கள் நாம்பெறுவோம்
கண்ணியத்தைக் கற்றிடலாம் கட்டுப்பாடுற்றிடலாம்
எண்ணும் எழுத்தும் கற்று ஏற்றம் அடைத்திடலாம்
மண்ணுலகில் யாவருமே மதிப்பாய்ப் புகழ்ந்திருக்க
விண்ணளவு புகழ் பெறலாம் பள்ளிப்படிப்பதனால்
நண்பர்கள் கூட்டத்தில் நல்லுணர்வு பெற்றிடலாம்
அண்டி அவர்களுடன் கூடிக் களித்திடலாம்
எண்ணத்தில் நம்பிக்கை வித்துக்களை ஊன்றிடலாம்
என்றதனால் கல்லூரி எங்களுக்குக் கலைக்கோயில்
உடலை வளர்ப்பதற்கு விளையாட்டும் ஆடுகின்றோம்
திடமாய் உளம் நெகிழப்பாட்டுக்களும் பாடுகின்றோம்
கடல்போல் பரந்த எங்கள் கல்லூரிக் கோயிலன்றோ
ஆடலும் பாடமாகும் அரங்கியலும் பாடமாகும்
பாடலும் பாடமாகும் பயிற்சியும் பாடமாகும்
தேடலும் பாடமாகும் சிறந்ததோர் வாழ்க்கை தன்னை
நாடலும் பாடமாகும் யாவையும் படிக்கின்றோம் நாம்
உளவளம் பெருக நல்ல உபதேசம் கிட்டும் இங்கே
இளமையிற் கல்வி என்றும் பள்ளியில் நாங்கள் இன்று
நாளைய தலைவராக நாம் வளர்கின்றோம் இங்கே
மூளையில் வளர்ச்சிக்காக முழுமையாய் உழைக்கின்றோம் நாம்
காலையில் தொடங்கி மாலை முடிந்திடு மட்டும் என்றும்
நாளும் நாம் வாழ்தல் எங்கள் பள்ளித் தலத்திலன்றோ
அன்னையாய் அன்பு தந்து அழகினை ஊட்டும் நல்ல
தந்தையாய் பண்புதந்து செழிப்பினை நல்கும்
ஆசானாய் அறிவு தந்து ஆற்றலை வளர்க்கும் உண்மை
மனிதராய் எம்மை ஆக்கி உலகின் முன் ஏற்றிவைக்கும்.
நல்லவை எவை என்றோர்ந்து நாடிடச் செய்யும் இங்கு
அல்லவை அறந்த நீக்கி அகன்றிடச் செய்யும்
சொல், செயல், எண்ணம் மூன்றும் சுத்தமாகமிளிரச் செய்யும்

வல்லமை பெற்றுவையம் நடத்திட வளரச் செய்யும்
பண்பிலே உரம் பெற்றோங்க வலிமையை வளரச் செய்ய
எண்ணி நம் விளையாட்டுக்கு மைதானம் உண்டு அங்கே
பூரண மனிதனாகிப் பொலிந்திட வேண்டுமென்றால்
சீருடன் நிறைய நூல்கள் சிந்தித்துப் படித்தல் ஆகும்
காரணம் உணர்ந்து நல்ல நூலகம் பள்ளிதோறும்
சீருடன் அமைத்தார் என்றால் கலைமகள் கோயிலன்றோ
அறிவியல் ஆய்வு செய்ய ஆய்வு கூடம் பலவும் உண்டு
செறிவுடன் விஞ்ஞானத்தை விளக்கி நாம் படித்தல் வேண்டும்
பொறிமுறை செயற்பாடெல்லாம் புரிதலும் சமையல், தையல்
அறிவெனும் மனை விஞ்ஞானம் அறிதலும் கூடும் இங்கே
எங்களின் வாழ்வை ஏற்றம் மிக்கதாய்ச் செய்யும் எங்கள்
தங்கமாய் நல்ல பள்ளித் தலங்கள் தோறும் கோயில்
செய்வோம் தெய்வச் சிறப்புடன் போற்றிநின்று
எங்குமே புகழ் விளங்கச் செய்குவம் உறுதியன்றோ.

*சாமினி பத்மநாதன்*
*13 கலை*

# எம் கல்லூரி அன்னை

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து மூன்றினிலே
அன்னை விசாலாட்சி அம்மையின் அருங்கொடையில்
அருங்கலையும் இன்றமிழும் இந்துமதப் புகழும்
அகிலமெங்கும் பரப்பிடவே பரிணமித்தாய் அன்னை நீ
ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்று மூன்றினிலே
அருமையாய்ப் பொன்விழா கண்டே மகிழ்வுற்றாய்
அதிபருடன் அசிரியர் அனைத்து மாணவரும்
எடுத்திடுவர் வைரவிழா ஈராயிரத்து மூன்றினிலே .

மங்கையர் மாண்புதனை மன்பதை அறிந்திடவே
பொங்குயர் அறிவுச் சுடர்தனைப் பரப்பிடவே
நங்கையர் தம் வாழ்வின் இலட்சிய மனைத்தையும்
நல்கிடுவாய் கல்லூரி அன்னையே வணக்கம் அம்மா
அங்கையில் மலர் கொண்டு அநுதினமும் போற்றிடுவோம்.
அன்பும் ஆசாரமும் அறிவும் ஆற்றலும் பெற்றவராய்.
இந்து மகளிர் புகழ் இவ்வையகத்தில் நிலைத்திடவே
இராஜவரோதய விநாயகர் நமக்கருள் புரிந்திடுவார்.

செம்மையாய் வாழ்ந்திடவே சிறந்த கல்வி கற்று
செப்பரிய சாதனைகள் உன் மக்கள் பெற்றிடுவர்.
பார் போற்ற வாழ்ந்திடும் நின் பழைய மாணவரும்
பாங்குடனே உனை நினைத்துப் பல உதவி செய்திடுவார்.
தலைமுறையாய்த் துதி செய்து போற்றிடுவா நின்புகழை

தடைகள் பல வந்திடினும் தடுத்திடுவார் நம்விநாயகர்
தாள் பணிவோம். அவரைக் கல்லூரி அன்னைக்காய்
தும்பிக்கையன் அவன் காத்திடுவான் அனைவரையும்

'நாம் இங்கு கல்வி கற்பது செம்மையாய் வாழ்வதற்குகே' என்ற
நம் கல்லூரி மகுடவாசகம் நிறைவேறிடவும்
வீரராய் நின் மக்கள் வியப்புற வாழ்ந்திடவும்
விஞ்ஞான அறிவுடனே வித்தைகள் பல கற்றிடவும்
கணினிக் கல்வியுடன் கலைச்சிறப்புப் பெற்றிடவும்
காவிய நாயகியாய் நீ பொலிவுற்றுத் திகழ்ந்திடவும்
கல்லூரி விநாயகன் தாள் பணிந்திடுவோம்.
கல்லூரி அன்னையே நின் புகழ் வளரட்டும்!!!

*தனுஷா – சிவநேசன்*
*(பழைய மாணவி)*

# என் கல்லூரிக்கெழுதும் கவிதை இது.

எழுத்துக்கள் தெரியாமல்
சிறியவளாய் நான் வந்த........................
கலைப் பூங்கா......................................
இன்று நான் எழுந்து நிற்கவும்
எழுத்துக்களால்
நிமிர்ந்து செல்லவும்
எழுதுகோல் கொடுத்து – என்
அன்னை மடி
இயற்கையின் தாலாட்டில்
உறங்கிப் போகும்
மாலைப் பொழுதிலும்
அந்தி மாலை நேரம்
என் கல்லூரி அழகை
அள்ளிப் பருகுவோம்.................
துள்ளித் திரிகின்ற காலம்
வெள்ளை நிலாக்களாய்
வான வீதியெங்கும்
வட்டமிட்டுத்திரிந்த காலம்
சொல்லி விடமுடியாத
சுகமான காலம்
அன்புப் புகட்டலுக்கு
அன்னை போல....................
பண்போடு தமிழன்பைக் கலந்து
ஊட்டிய என்
கலைக் கல்லூரி
மேகங்கள் தூவும் வாசனைத்
திரவத்தில்.........................................
முத்துக் துளியில்
முகம் கழுவும்
தோட்டத்தில் மலர்களில் கூட
புதுமையான அபிநயங்கள்
கற்றுத் தந்தவை.........................
ஏராளம் ஏராளம்
கல்வி மட்டுமல்ல............................
பிரிந்து போனதோ
சில வருடங்கள் தான்
புகுந்த வீட்டில் நின்று
புகலிடம் புகழும்
தமிழ்ப் பெண்போல
என்னை................
பல்கலை பயில அனுப்பிய
பெற்ற அன்னையே
மறக்க முடியுமா
சுற்றிப் பார்த்த சுகம்
காணும் வளாகம்
மனம் நெகிழும்
மைதானம் .................. எல்லாம்
என் அன்னையின்
அங்கங்கள்
தவழ்ந்து புரண்டு
நெகிழ்ந்து எழுந்து புரண்டு
ஓடிக்கொண்டிருக்கின்றோம்

கடவுள் கொடுத்த கால்கள்
நடை பயிற்றிய அன்னை
விலக்க முடியாத உறவு
விசித்திரமானது
நட்புக்காக
ஆசானுக்காக
நற்பண்புகளுக்காக
உளம் உவந்த
பள்ளிக் காலங்கள்
பசுமையானவை
மீண்டும் வராது இனிமைக்காலம்
மீட்டிப் பார்க்கும்
மெல்லிய ஸ்வரங்கள்
பாடை கட்டிப் போகையிலும்
அன்னை மடி தானங்கு
நினைவோடிருக்கும்
கற்ற கல்வி
பெற்ற நட்பு
எல்லாம் இனி வந்து
என் கல்லூரிக்கு எழுதும்
கவிதை இது இதனை
ஆற்று மணல் கொண்டு
போகாது..........
வேற்று மொழி யெதுவும் சாடாது
தமிழ் மொழி
என்றியம்பும் என் தாய்
என் கல்லூரி அன்னை வாழ்க!

*சிவாணி சிறிஸ்கந்தராஜா*
*(பழைய மாணவி)*

# உள்ளத்தில் உயர்ந்த நல்ல உலகை அமைப்போம்

வெள்ளத்தனைய துயர் வென்றார் வள்ளுவனார்
கள்ளம் தனைவிலக்கிக் கருணை மனம் வளர்த்து
மெள்ளப்புது உலகை மேதினியில் நாமமைப்போம்
துன்பம் இனியில்லை சுமைகள் இனியில்லை
அன்பே இனி எங்கும் அதனால் அருள்நிலையும்
இன்பம் இனிவளரும் எழில் எங்கும் பூத்திருக்கும்
என்றும் எமதுள்ளம் இனிமையையே சிந்திக்கும்
முந்திப் பிறந்திருந்த மூத்த குடித் தமிழ்வேந்தர்
அந்தோ தமக்குள் அமர் செய்து தாம்மடிந்தார்
வந்தபிறர் நமக்கு அவர் வாழ்வளிக்க எண்ணுவரோ
எந்தலைமேல் தாம் மிளகாய் அரைப்பாரோ கூறிடுவீர்?
ஆண்டாண்டு காலம் அல்லல் பல அடைந்தோம்
அடிமைத்தளை கொண்டோம் அறிவை இழந்தோம் நாம்
வேண்டாத பேதம் நமக்குள்ளே நாம் வளர்த்தோம்
மாண்டோமோ அல்லாது மறுமலர்ச்சி பெற்றோமா?
போட்டி பொறாமைக்கும் பொய், களவு, சூதுகளும்
காட்டிக் கொடுப்புக்களும் கழுத்தறுப்பு வேலைகளும்
மூட்டிக்கொடுப்பதுவும் முகம்சுழிக்கப் பொருதினங்கள்
சாதிபல சொல்லிச் சமயம் பிரிவு சொல்லி
ஆதிமுதல் இன்றுவரை ஆயிரமாம் நாம் பிரிந்தோம்
யாது செய்தோம் நற்செயல்கள் சிந்தித்துப்பாருமையா

மூக்கெனக்குப் போனாலும் போகட்டும் முன்னாலே
ஆக்கமுடன் வாழுகிக்ற அடுத்தவனின் காரியத்தை
முக்கறையனாய் நின்று முழுவியளம் காட்டி அவன்
போக்கறுக்க வேண்டுமென்ற எண்ணமுள்ளோர் நாங்களையா?
சாக்கடையில் வாழுகின்ற சகதிப் புழுக்களைப் போல்
வாழ்க்கையின் வேண்டா வரலாறு புதுக்கிடுவோம்
பாழ்மனத்தை மாற்றி பாரினையே மாற்றிடுவோம்
வாழ்வில் விருப்புள்ளோர் வாருங்கள் வாருங்கள்
எண்ணம், செயல், வார்த்தை மூன்றிலுமே சத்தியத்தை
எண்ணி வளர்த்திடுவோம் இனி உறுதிகொண்டிடுவோம்
கண்ணியமும் கடமையும் கட்டுப்பாடென்றென்றும்
திண்மையுடன் நாம் வளர்ப்போம் செயல்வீரர் ஆகிடலாம்
மானிடத்தை நேசிப்போம் மனிதகுலம் காத்திடுவோம்
ஊனுடம்பு வளர்ப்பதுடன் உள்ளத்தை நாம் வளர்ப்போம்
மானமுடன் வாழ்வதற்கு மனங்கொள்வோம் மக்களெல்லாம்
வானவராய் வாழ்ந்திடலாம் மனமுண்டேல் இடமுண்டாம்
நான் என்பதின்றொழித்தேன் நாம் என்றினி நினைப்போம்
என்னுடைய தென்பதில்லை எமதென்றே இனி எண்ணம்
ஏன் எதற்கு எப்படியென்றாராய்ந்து அறிவுயர்ந்து
வான்புகழ் வாழ்வதற்கு வழிசமைக்க வாருங்கள்
ஒன்றே மனிதகுலம் ஒரு கடவுட் பண்பாடு
நன்றே வளர்க்கின்றோம் நாமெல்லாம் மனிதர்கள்
அன்றிருந்த பிரிவினைகள் அழித்தே புதுவாழ்க்கை
இன்றே அமைத்தோம் நாம் இனி என்ன தடைநமக்கு?
மிருகக் குணம் போக்கி மனிதக் குணம் வளர்த்து
திருமிக்க தெய்வக் குணம் நாடி நடைபோட்டு
பெருமை திறந்தோங்க புகழ்தான் செழித்தோங்க
பகை வென்றோம் இனி என்றும் அன்பே நமது மொழி
முகைவிரித்த நன்மலராய் முகம்மலர உறவாடி
சகமெல்லாம் ஒன்றாகி வீறுநடை போட்டிடுவோம்
சிகரத்தை நாமமைப்போம் சிரோடு வாழ்ந்திடலாம்
இன்பமே எங்கும் இனிமை சிறந்தோங்க
அன்பும் அறமும் தழைக்கும் அதனாலே
இன்றும் இனியும் எதிர்கால வாழ்க்கையிலும்
என்றும் நாம் புதிய உலகமைப்போம்.

*சாமினி*
*(பழைய மாணவி)*

# தன்னிகரில்லாத் தமிழ்மொழி

ஈராயிரம் ஆண்டுகள் முன்னே
இம் மண்ணில் உதித்து எம் தமிழ்
சீராகச் சங்கத் தொட்டிலில்
சிறப்போடு வளர்ந்த செந்தமிழ்
போராடி வென்ற தேசமெல்லாம்
புகழோடு அரசாண்ட பைந்தமிழ்
வேரோடு இன்று வெளிநாட்டிலும்
வீரமுரசம் செய்யும் வெற்றித்தமிழ்

இன்னு மொரு நூற்றாண்டு தனிலே
இணையற்ற பல சாதனைகளிலே
தன்னிகரில்லா மொழிகளிலே எம்
தமிழ் மொழி ஒன்றாய் தடம் பதிக்கும்
ஆற்றிய மண்ணில் அரியாசனத்திலும்
சரியாகவே அமர்ந்திருக்கும்
வேற்று நாட்டு அரசியல் கலாச் சாரத்திலும்
கலந்து தமிழர் தம் ஆட்சியை நடத்தும்

காத்திரமான பல்துறை தனிலும்
கணினித் தமிழும் கரைபுரளும்
சாத்திரம் பார்த்திடும் தமிழர் மரபு
சரித்திரம் படைப்பதில் முன்னிருக்கும்
சூத்திரம் படைப்பதில் முன்னிருக்கும்
சூத்திரப்படியே இலக்கண இலக்கியத் தமிழ்
சுவை குன்றாமல் நிலைத்திருக்கும்
தோத்திரம் செய்தே துதித்திடுவோம் எம்
தன்னிகரில்லாத் தமிழ் மாத்திரம் எங்கும் நிலைத்திருக்கும்.

*தவராசசிங்கம் திவ்யா*

*"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."*

*"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"*

– வள்ளுவர் வாக்கு

# A VIEW A STUDENT

Students who belong to a School would come from different walks of life. Their mentality their talents, the financial position of their family and their status in the society should be varied. But there is a unity in all among them they will be the future generation of the society and if they wish or not, they will gain an improvement from the starting point to the destination you can't say, that is it his or her destiny.

Here, who is the motivator? who will culture and cultivate them into a perfect intellect ? who will give them a framework of their personality? Yes. In their. Almamater ................ there is (can't you understand yet?) the motivator who is a living form of God .............. the Teacher.

You many praise a teacher by the words uch as a ladder, a burning candle or a boat or ome thing like that. But, to me, a Teacher is a oddess of greatness . Anyhow teacher's fluence make an everlasting effects in the udents and destroy their defects.

Students in teenage have their opinions f their own, about the matters which are more mplest and most difficult, But they believe hat think is the correct view, They keep their eciality by holding their opiniontightly . ndeed. It is not a matter for surprise Because their age is some sort of that.

But they must alter even some of their opinions or decisions before they suggest or fulfil that. Here the emotional student make a fatal mistake, It not easy to change his view and especially if he or she is commanded by others to change his or her point of view and especially if he or she is commanded by others to change his or her point of view, they never admit that. what a pity?

Here is the main role for a teacher. If they take the corner seats of their students heart, they can easily achieve their goal of straightening the activities and mentality of perverted students. In the mischievous or obedient heart of a student a teacher can make a great pull of attraction only by his or her greatness.............. that is understanding, showing ignorance to their simple faults, making friendly conversation and treating them as a goddess's children when that treatment is needed.

So the goddess of greatness ........... the teacher will act surely not as an employee of a school but as a moving temple in the college. There is a pitiful plight to teachers that the students often fail to understand their teacher's greatness. In some cases, the teachers misunderstanding makes a student more frustrative.

The students of a college have many responsibilities. They have their main duty - studying and being active in extra curricular activities, If there is an equal and opposite strong forces act in a student's mind is involved in a tag - o- war, Here the student expects eagerly a soothing hand, but not from his or her family but his or her collegues who are mobile gods or Goddesses.

The urgent need of a student is I have mentioned, if it is properly distinguished by the proper persons in the appropriate view the out put of the college will be added as the most flavour to the curry of society.

***S. Pirathiphana.***

***Time and tide***
***Wait for no man***

*- English proverb*

***Sorrows and silence are***
***strong, and patient***
***endurance is godlike.***

*- Longfellow.*

# ஆழ்வார் பாசுரங்களில் திருமால் அவதாரங்கள்

## முன்னுரை

திருமால் வழிபாடு இந்தியாவில் தொன்றுதொட்டு நிலவி வருகின்றது. தமிழ் நாட்டில் திருமால் வழிபாடும், திருமாலின் அவதாரப் பெருமையும் பண்டைக் காலந் தொட்டு இன்றுவரை மக்களால் உணரப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. காடும் காடுசார்ந்த முல்லை நிலக்கடவுளாக திருமால் விளங்கியமை தொல்காப்பியத்தில் "மாயோன் மேய காடுறை உலகமும்" என வருதலாலறிய முடிகின்றது. உயிர்கள் உய்தி பெறும் பொருட்டுக் காலந்தோறும் திருமால் அவதாரம் எடுக்கிறார் என்பது வைணவத்தின் அடிப்படைக் கோட்பாகும். திருமாலின் அவதாரங்கள் பற்றிய தொன்மங்கள் இதிகாசம், புராணம் மற்றும் பரிபாடல், சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள போதிலும், தமிழில் ஆழ்வார்களின் பாசுரங்களே திருமாலின் அவதாரங்கள் பற்றி விளக்கமாக அறிய உதவும் தொன்மைச்சான்றாதாரங்களாக விளங்குகின்றன. வைணவத் தில் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், குலசேகராழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் என ஆழ்வார்கள் பன்னிருவர் என்பது மரபாகும். இப்பன்னிரு ஆழ்வார்கள் அருளிச்செய்த தமிழ்ப் பாசுரங்களையே திவ்வியப் பிரப்பந்தம் எனச்சிறப்பாக வழங்கி வருகின்றனர். இவை சுமார் நாலாயிரம் பாசுரங்களைக் கொண்டிருத்தலின் "நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்" எனவும் வழங்கப்படும். இவ்வாய்வுக் கட்டுரையானது ஆழ்வார்களின் பாசுரங்களாகிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் காணப்படும் திருமாலின் அவதாரங்கள் மற்றும் அவதாரதத்துவம், அவதாரக்கோயில்கள் ஆகியவற்றை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது.

## ஆழ்வார்கள் என்ற பெயர்க்காரணம்

திருமாலின் அவதாரங்களிலும் திருமேனியழகிலும் உள்ளத்தைப் பறிகொடுத்து அவற்றில் ஆழ்ந்து திளைத்து அனுபவித்து மகிழ்ந்தவர்களையே வைணவ சமயத்தில் ஆழ்வார்கள் என அழைப்பர். இவர்கள் திருமாலின் திருக்குணங்களில் ஆழங்கால்பட்டுத் தம்மை மறந்த நிலையில் இருந்தமையால் ஆழ்வார்கள் என்று திருப்பெயரைப் பெற்று திகழ்ந்தனர். ஆழ்வார்கள் பரம்பொருளை ஆழ்ந்து அறியும் பெருஞானத்தை அருளால் அறிபவராவர். இவர்கள் திருமாலின் திருமேனி அழகில் அழுந்திய காரணத்தால் ஆழ்வார்கள் எனப்பெயர் பெற்றனரெனலாம்.

பன்னிரு ஆழ்வார்களும் பரபக்தி, பரஞானம், பரமபக்தி என்பவற்றை அனுபவித்து மகிழ்ந்த அவதாரபுருஷர்களாவர். பரபக்தி என்பது இறைவனுடைய தொடர்பில் இன்பமும், பிரிவில் துன்பமும் அடையும் நிலையாகும். பரஞானம் எனப்படுவது இறைவனைத் தெளிவாக நேரே கண்டு அனுபவித்து அறியும் நிலையாகும். பரமபக்தி எனப்படுவது இறைவனை நினைப்பளவிற்பிரிய நேர்ந்தாலும் தாங்க முடியாமல் உயிர் துறக்கும் எல்லையற்ற பேரின்பப் பெருநிலையாகும். இந்த உயரிய நிலைகளில் ஆழங்கால்பட்டதன் காரணமாகவே ஆழ்வார்கள் என்று பெயர் பெற்றனர்.

## அவதாரம் என்பதன் பொருள்

திருமால் தனது முழு ஆற்றலோடு பல்வேறு வடிவில் உலகில் தோன்றுவதைக் குறித்து நிற்பதே அவதாரம் ஆகும். அவதாரம் என்பதற்கு மேலிருந்து கீழிறங்குதல் என்பது பொருளாகும். காத்தற் கடவுளாகிய திருமால் உயிர்கள் உய்வதன் பொருட்டுக் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறியை உணர்த்தும் வகையில் தானே நடந்து காட்டும் பொருட்டுப் பல்வகை வடிவங்களில் விளங்குவதே அவதாரம் எனப்படும்.

## அவதாரம் எடுப்பதன் நோக்கம்

உலகம் மென்மேலும் உயர்ந்து முழுநலம் அடையவேண்டும் என்னும் பெரு நோக்கம் அவதாரக் கொள்கையில் அமைந்திருக்கிறது. நல்லவர்களை காப்பாற்றுதல், கெட்டவர்களை அழித்தல், தர்மத்தை நிலைநிறுத்துதல் என்ற மூன்று முக்கிய நோக்கங்களுக்காவே திருமால் அவதாரம் எடுப்பதாகப் பகவத்கீதை குறிப்பிடுகின்றது. திருமால் அவதாரம் எடுப்பதன் நோக்கம் உலகுயிர்களின் துன்பத்தை நீக்கும் பொருட்டே என்பது பரிபாடலில்

"எவ்வயின் உலகத்தும் தோன்றி

ஆவ்வயின் மன்பது மறுக்கத் துன்பம்
களைவோன்
என வருவதால் அறியப்படுகின்றது.

அவதாரங்களின் உண்மை நோக்கத்தை இந்திரா பார்த்தசாரதி," தீமைகளை அழிப்பதற்காகக் கடவுள் அவதாரம் எடுக்கிறான். ஆனால் தன்னுடைய பக்தர்களின் அன்பை வெளிப்படுத்தவும், அவர்களின் பக்திச் சுவையின் மிக்க இனிமையைத் தான் அனுபவிக்க வேண்டிக் காத்திருக்கும் தன்னுடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்ளவும் தன்னுடைய இனிமையை அவர்கள் சுவைக்குமாறு செய்வதுமே அவதாரங்களின் உண்மை நோக்கமாக அமைகின்றது. மனிதவடிவில் இறைவன் அவதரிப்ப தன் உயிர்மூச்சு இதுவே' என்று கூறுவது குறிப்பிடத்தக்கது.

**அவதாரங்களின் எண்ணிக்கை**

வைணவ சமயம் சார்ந்த இலக்கியங்கள் திருமாலின் அவதாரங்களின் தொகை பற்றி ஒவ்வொரு பட்டியல்களைத் தருகின்றன. பாகவத புராணத்தில் அவதாரங்களின் எண்ணிக்கையைக் குறித்துநான்கு பட்டியல்கள் உள்ளன. இப்புராணத்தில் திருமாலின் 22 அவதாரங்கள் இடம்பெற்றுள்ளது. பிறிதொரு பட்டியலில் திருமாலின் அவதாரங்களாக பதினொன்று கூறப்பட்டுள்ளன. கருட புராணத்தில் மச்சம், திருவிக்கிரமன், வாமனன், நரசிம்மம், இராமன், வராகம், நாராயணன், கபிலன், தத்தன், ஹயக்ரீவன், மகரத்வஜன், நாரதன், கூர்மம், தன்வந்தரி, சேஷன், யக்ஞன், வியாசன், புத்தன், கல்கி என்ற திருமாலின் பத்தொன்பது அவதாரங்கள் இடம்பெற்றுள்ளன. இவை மூர்த்திகள் என்று கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு திருமாலின் அவதாரங்கள் பலவாக இருப்பினும் வைணவத்தில் பத்து அவதாரங்கள் சிறப்பாகக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றை "தசாவதாரம்" என வழங்குவர். மத்ஸ்யாவதாரம் (மீன்), கூர்மாவதாரம்(ஆமை), வராஹாவதாரம் (பன்றி), நரசிம்மவதாரம் (மனிதசிங்கம்), வாமனவதாரம் (குள்ளன்), திரிவிக்கிரம அவதாரம், பரசுராமவதாரம், இராமவதாரம், கிருஷ்ணவதாரம், புத்தரவதாரம், கல்கியவதாரம் (கற்கியவதாரம்) என்ற பத்தும் "தசாவதாரங்கள்" என்று கூறப்படும். இப்பத்து அவதாரங்களும் உயிர்களின் பரிணாமக் கோட்பாட்டினைப் புலப்படுத்துகின்றன என்பர். மீன், ஆமை, பன்றி என்னும் அவதாரங்கள் மனித இயற்கையிலும் தாழ்ந்த விலங்குத்தன்மை நிலையைக் குறிப்பிடப்படுகின்றதென்றும், நரசிம்மவதாரம் விலங்குலகு மனிதவுலகுக்கு மாறுவதைக் காண்பிக்கிறதென்றும், பரசுராமவதாரம் மனிதனது முதல் நிலை, கொடிய விலங்குத் தன்மையான பழிவாங்கும் நாகரிகமற்றநிலை என்பதை அறிவிக்கிறதென்றும், இராமவதாரம் தூய நற்குணம் நிரம்பிய மக்கட்பண்பை தெரிவிக்கிறதென்றும், கிருஷ்ணவதாரம் இச்சையொன்றும் கொள்ளாமல் உலகிலுள்ள தீயசக்தியுடன் போராடி வெற்றிபெறுவதைக் குறிக்கிறதென்றும், புத்தரவதாரம் எல்லா உயிர்களிடத்தும் இரக்கம் காட்டவேண்டுமென்பதைப் புலப்படுத்துகின்றதென்றும், கல்கியவதாரம் தீமையையும் ஒழுங்கின்மையையும் வெட்டி வீழ்த்துவதை வாளோடு தோன்றுமென்றும் அறிஞர் விளக்குவர்.

மேற்காணும் பத்து அவதாரங்களுள் புத்தரவதாரத்திற்குப் பதிலாக பலராம அவதாரத்தை திருமாலின் அவதாரமாவே கருதுவதும் உண்டு. தன்னுடைய ஆசையை நிறைவேற்றிக்கொள்வதும் தன்னுடைய இனிமையை அவர்கள் சுவைக்குமாறு செய்வதுமே அவதாரங்களின் உண்மை நோக்கம்.

**திருமாலின் ஐவகைத் திருமேனிகள்**

திருமாலின் அவதாரங்கள் பற்றி அறிந்து கொள்வதற்குப் பின்புலமாக திருமாலின் ஐவகை திருமேனிகள் பற்றிக் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. திருமாலின் திருமேனியை திவ்விய மங்கள விக்கிரகம் என்று சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. வைணவத்தில் திருமாலின் திருமேனிகள் பரத்துவம்,வியூகம்,விபவம்,அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என்ற ஐந்து நிலைகளில் நோக்கப்படும்.

**பரத்துவம்**

பரமபதத்தில் அனந்தன், கருடன், விஷ்வக்சேனர் முதலிய நித்திய சூரிகளும், இந்த உலகத்தளையினின்று விடுபட்ட முக்தரும் அனுபவித்தற்குரியதாய் இருக்கும் திருமாலின் இருப்பு நிலை பரத்துவம் எனப்படும்.

**வியூகம்**

திருமால் வியூக வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருந்தன் என்ற பெயர்களுடன் இருக்கும் நிலை வியூகம்

யாழ். இந்து மகளிர்

"சக்தி" என்றும் நலமுடன் வாழ
வாழ்க வாழ்கவென
வாழ்த்துவோர்

# சிங்கம் வர்த்தக நிலையம்

- பாடசாலை உபகரணங்கள்
- மாணவ மாணவிகளுக்கு கவர்ச்சியான பைகள்,
- காரியாலய உபகரணங்கள்,
- காகிதாதிகள்

உட்பட அச்சுக்கூட உபகரணங்களுக்குத் தேவையான மை வகைகள்,
(உள்ளூர், வெளியூர் தயாரிப்புக்கள்) பல வர்ணக் காகிதாதிகள்
அனைத்திற்கும் நாடவேண்டிய ஒரே இடம்

# SINGAM INDUSTRIES

நியாய விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

## சிங்கம் வர்த்தக நிலையம்

290, ஆஸ்பத்திரி வீதி, - யாழ்ப்பாணம்

யாழ் நகரின் பிரபல பாடசாலையான
யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவர்களின்
"சக்தி" மலர்
சிறக்க வாழ்த்துகின்றோம்.

வர்ணங்கள் பல! டிசைன்கள் பல!

இளைஞர் மங்கையரை கவர்ந்திழுப்பது அதுவே!

# ELAVARASI
## TEXTILE

**57, NEW MARKET, JAFFNA.**

உங்கள் திருமணம்
மற்றும் முகூர்த்தப்பட்டுப்
புடைவைகள்
உங்கள்
எண்ணம்போல்
தெரிவு செய்யக்கூடிய
சிறந்த இடம்





# இளவரசி ரெக்ஸ்ரைல்

57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம்




*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திரு. சு. ஸ்ரீபதிசர்மா, திருமதி வே. பேரின்பநாதன் (உப தலைவர்), திருமதி ச. ஜெயராஜா (தலைவர்), திருமதி ம. சீவரட்ணம் (பொருளாளர்), திரு. க. பாலச்சந்திரன் (செயலாளர்).

*நிற்பவர்கள் 1ம் வரிசை இடமிருந்து வலம்:* திருமதி இ. சிவானந்தன், திருமதி ச. சரவணவபன், திருமதி S. சண்முகானந்தன், திருமதி ந. இராகவன், செல்வி ப. சிவசித்ரா, திருமதி அ. மேகநாதன், திருமதி இ. குணரட்ணம், திரு. பீ. அருள்ராசன்.

*நிற்பவர்கள் 2ம் வரிசை இடமிருந்து வலம்:* திரு. இரா. செல்வவடிவேல், திரு. ம. சிவலிங்கம், திரு. S. கணேசமூர்த்தி, திரு. மு. சமாம்பிள்ளை, திரு. அ. சீவாமிர்தம், திரு. த. கேதாரநாதன்.

*சமூகமளிக்காதோர்:* திரு. சி. லக்ஷ்மிகாந்தன், திரு. S. செல்வரட்ணம்.

# பகுதித் தலைவர்கள்



திருமதி ம. சிவரட்ணம், திருமதி இ. குணரட்ணம், திருமதி க. பூலோகசிங்கம், திருமதி ஞா. வீரகத்திப்பிள்ளை, திருமதி மீ. செல்லையா (உப அதிபர்) திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி த. ச. யோகீஸ்வரன், திருமதி கா. சிவநேசன், திருமதி ச. நரேந்திரன்

# மாணவ முதல்வர்கள்



*இருப்பவர்கள் இடமிருந்து வலமாக:* திருமதி ம. சிவரட்ணம், திருமதி இ. குணரட்ணம், திருமதி க. பூலோகசிங்கம், திருமதி ஞா. விரகத்திப்பிள்ளை, திருமதி மீ. செல்லையா, (உப அதிபர்) செல்வி சி. காயத்திரி (சிரேஷ்ட மாணவ முதல்வர்), திருமதி ச. ஜெயராஜா (அதிபர்), திருமதி க. சிவநேசன், திருமதி. ச. நரேந்திரன்

*1ம் வரிசையில் நிற்பவர்கள்:* செல்வி கு. கார்த்திகா, செல்வி பு. சுபாகினி, செல்வி தே. சண்முகப்பிரியா, செல்வி. உ. நிருஜா, (விளையாட்டுத்துறை தலைவி), செல்வி ம. அர்ச்சுனா, செல்வி ச. துளசிகாயினி, செல்வி சி. சிந்துஜா, செல்வி க. நிஷாந்தி, செல்வி வே. வினித்திரா (உப சிரேஷ்ட மாணவ முதல்வர்), செல்வி ம. துஷாரா, செல்வி ச. சாருமதி, செல்வி ச. அபிராமி (உப விளையாட்டுத்துறைத் தலைவி), செல்வி இ. கார்த்திகா, செல்வி சி. தனப்பிரியா, செல்வி ந. றோஜினி, செல்வி கு. சுபா, செல்வி பு. நிறோஜினி, செல்வி சி. தகஷாயினி

*1ம் வரிசையில் நிற்பவர்கள்:* செல்வி பூ. கோபிகா, செல்வி செ. மயூரதி, செல்வி சு. சுமங்கலி, செல்வி கு. மிதிலா, செல்வி பா. ஜெகாம்பிகா, செல்வி இ. ஜனனி, செல்வி மு. நிஷாந்தி, செல்வி பொ. அர்ச்சனா, செல்வி சி. தசாயினி, செல்வி க. நர்மதா, செல்வி க. வசந்தி, செல்வி ஜெ. கல்யாணி, செல்வி ஸ்ரீ. சுயித்தா, செல்வி ச. அபிராமி, செல்வி க. உமாப்பிரியா, செல்வி ச. யசிந்தாலோஜினி, செல்வி மு. சிவதர்சினி, செல்வி பா. சஞ்சுதா

எனப்படும். இவர்கள் திருப்பாற் கடலில் எழுந்தருளியிருப்பதாகக் வைணவர்கள் கருது கின்றனர். இந்நிலையை திருமழிசையாழ்வார் தன் பாசுரத்தில் குறிப்பிடுகின்றார்.

### விபவம்

திருமாலின் அவதாரங்களைப் பற்றிக் கூறுவது விபவம் எனப்படும். வைணவத்தில் அவதாரங்கள பலவாகக் கூறப்படும். வைண வத்தின் அவதாரங்கள் "ஆவேச அவதாரம்", "முக்கிய அவதாரம்" என்று இருவகையாகப் பகுத்துப் பேசப்படும். ஆவேச அவதாரத்தைக் "கௌணாவதாரம்" என்றும், முக்கிய அவதா ரத்தை "சாட்சாத் அவதாரம்" என்றும் வழங்கு வர். ஆவேச அவதாரத்தில் கபிலர், ததாத்ரே யர், பரசுராமர் போன்ற அவதாரங்கள் அடங் கும். முக்கிய அவதாரத்தில் இராமர், கிருஷ் ணர், வாமன திருவிக்கிரமர் முதலான மனித அவதாரங்களும், மச்சம், கூர்மம், வராகம் போன்ற திரியக் அவதாரங்களும், குப்ஜாமரம் (குட்டை மாமரம்) முதலான தாவர வடிவங் களும் அடங்கும். இந்த இரண்டுவகை அவதா ரங்களும் திருமாலின் இச்சையாகவே ஏற்பட்ட வையாகும்.

### அந்தர்யாமித்துவம்

திருமால் அழகே வடிவெடுத்தாற் போன்ற மங்களகரமான திருமேனியுடன் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப் பெற்றவ ராய்ப் பெரிய பிராட்டியாரோடு கட்டை விரலள வாய் (அங்குஷடப் பிரமாணமாய்) உள்ளத்துள் எழுந்தருளியிருக்கும் இருப்பே இந்நிலை யாகும். இது விக்கிரம வியாப்தியாகும்.

### அர்ச்சாவதாரம்

அன்பர்கள் எதைத் தமக்குத் திருமேனியாகக் கொள்ளுகின்றனரோ அத னையே இறைவன் தனக்கு வடிவமாகவும், அவருகந்து வைத்த பெயரையே தனக்குப் பெயராகவும் கொண்டுள்ள நிலையாகும். இந் நிலையில் இறைவன் இன்ன இடத்தில் இன்ன காலத்தில் இன்னாரிடத்தில் தோன்றி சந்நிதி பண்ணவேண்டும் என்கின்ற நியமமில்லாதபடி விரும்பிய எந்த இடத்தில் எக்காலத்திலும் எழுந்தருளியிருக்கும் நிலையாகும் எல்லா ஆழ்வார்களும் அர்ச்சாவதாரத்தில்தான் அதிக மாக ஈடுபட்டதாகக் குறிப்பிடுவர். ஆழ்வார் களின் பாசுரங்கள் யாவும் அர்ச்சாவதாரத்தைப் பற்றியனவே எனலாம்.

### ஆழ்வார் பாசுரங்களில் அவதாரங்கள்

ஆழ்வார்களின் பாசுரங்களில் இடம்பெறும் அவதாரங்கள் பற்றியும், திருமாலின் அவதாரக் கோயில்கள் காணப்படும் இடங்கள் பற்றியும் ஈண்டு நோக்குவோம்.

திருமாலின் அவதாரங்களான மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், திரிவிக் கிரமன், பரசுராமன், தசரதராமன், பலராமன், கண்ணன், கல்கி என்பவற்றைப் பெரியாழ்வார்,

"தேவுடைய மீனமாய் ஆமையாய் ஏனமாய் அரியாய்க் குறளாய்
மூவுருவினி ராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய் முடிப்பான்"

என்று குறிப்பிடுகின்றார். திருமங்கையாழ் வாரும் இந்த அவதாரங்களை

"மீனோடு ஆமை கேழல் அரி குறளாய் முன்னும் இராமனாய்த்
தானாய்ப் பின்னும் இராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியும் ஆனான் தன்னை"

என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. இவ்வவதா ரங்கள் பற்றித் தனித்தனி நோக்குவோம்.

### மச்சாவதாரம்

ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் மச்சாவ தாரத்தின் பெருமையை நன்கு புலப்படுத்தியுள் ளார்.பண்டைக்காலத்தில் நான்முகன் திருமறை களை ஓதிக் கொண்டிருந்தபோது அயக்கிரீவன் என்ற அசுரன் அவற்றைத் திருடிக் கொண்டு போய்க் கடலின் அடியில் ஒளித்து கொண்டான். திருமால் மச்சாவதாரமெடுத்து மறைகளை மீட்டருளினார் என்பது புராணக்குறிப்பாகும். திருமங்கையாழ்வார் மச்சாவதாரத்தினை,

"மலைகளை மீது கொண்டு வருமீனை மாலை
மறவாது இறைஞ்சு என் மனனே"

என்றும்

"மூந்நீரை முன்னாள் கடைந்தானை மூழ்த்தநாள்
அந்நீலை மீனாய் அமைந்த பெருமானைத்
தென்னாலி மேய திருமாலை எம்மானை
நன்னீர் வயல்சூழ் நறையூரில் கண்டேனே"

என்றும் பாடியருளியுள்ளார்.

மச்சம் மீன் எவ்வாறு நீர்நிலைகளிலுள்ள அழுக்குகளைப் போக்கித் தூய்மையாக்கு கிறதோ, அவ்வாறே மச்சாவதாரப் பெருமாளும் உலகுயிர்களின் மாசுகளை நீக்கி மேம்படுத்து கிறார் என்பது இவ்வவதாரம் சுட்டும் தத்துவ மாகும்.

### கூர்மாவதாரம்

ஆழ்வார்கள், கூர்ம அவதாரத்தில் ஈடுபாடு கொண்டு விளங்கியதை அவர்களது பாசுரங்கள் புலப்படுத்துகின்றன. திருமங்கை யாழ்வார் கூர்மாவதாரத்தை "ஆமையாகி" என்று சுட்டுவதுடன், அந்த அவதாரம் தோன்றி யதற்கான காரணத்தையும்,

"செருமிகு வாளெயிற்ற அரவொன்று சுற்றித்
திசைமண்ணும் விண்ணு உடனே
வெருவர வெள்ளை வெள்ளம் முழுவதும் குழம்ப
இமையோர்கள் நின்றுகடைய
பருவரை யொன்று நின்று முதுகில்
பரந்து சுழலக் கிடந்து துயிலும்
அருவரை யன்ன தன்மை யடலா
ஆமையான திருமால் நமக்கு ஓரரணே"

என விளக்குவர்.

மக்கள், ஆமையைப் போன்று பாதுகாப் பாக புறத்தீங்குகள் தம்மைப் பற்றாமலிருக்க ஐம்புலனடக்கம் கொள்ள வேண்டுமென்பது இவ்வவதாரம் சுட்டும் தத்துவமாகும். எதை யும் தாங்கும் இறையாற்றலை இந்த அவதாரம் வெளிப்படுத்துகின்றது.

மச்சாவதாரம் போன்றே கூர்மாவதார மும் தலைப்பகுதி ஆணின் முகத்தைக் கொண் டிருக்கும் அமைப்பினை உடையது. இவ்வ வதாரத்தில் திருமாலுக்கு நான்கு திருக் கைகள் இருக்கும். கீழ்ப்பகுதி ஆமை வடிவத் தைக் கொண்டிருக்கும் அமைப்பினை உடை யது.

### வராக அவதாரம்

திருமால் பன்றியுருவில் வராக அவதார மெடுத்து நெய்தல் நிலத்தின் பெருமையை உணர்த்தியுள்ளான். இவ்வவதாரத்தின் தோற றம் பற்றிய புராணப் பின்னணியைச் சிறிது குறிப்பிடுவது அவசியமாகின்றது. இரணிய கசிபு என்பவனின் உடன் பிறந்தவனாகிய இரணியாட்சன் ஒரு கொடிய அசுரனாவான். இவன் பூமியைக் கவர்ந்து கொண்டு கடலுட் சென்று விடவே தேவர் முனிவர் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க திருமால் பூமியை மீட்கவேண்டிய பொறுப்பினை மேற்கொள் கின்றார். இதன் காரணமாகவே திருமால் வராக அவதாரமெடுத்து கடலுட்புகுந்து இரணியாட் சனை வென்று பூமியைத் தம்கோட்டினால் எடுத்துவந்து அதற்குரிய இடத்தில் நிறுவினார் என்பது புராண வரலாறாகும்.
பொய்கையாழ்வார் வராக அவதாரத்தின் சிறப்பினை,

"பொருகோட்டோர் ஏனமாய்ப் புக்கிடந்த அன்று
ஒருகோட்டின் மேல்கிடந்தன்றே—விரிதோட்ட
சேவடியை நீட்டித் திசைநடுங்க விண் துளங்க
மாவடியின் நீயளந்தமண்"

என்று குறிப்பிடுவர்.

பெரியாழ்வார் வராக அவதாரத்தை,

"............ ...............கேழ லொன்றாகிக்
கேட்டு மண்கொண்ட கொள்கைமி னானே
குஞ்சரம் வீழக் கொம்பொசித்தானே"

என விளக்குகின்றார்.

திருமங்கையாழ்வார், வராக அவதாரத்தை,

"கிடந்த நம்பி குடந்தை மேவிக் கேழலாய் உலகை
இடந்த நம்பி எங்கள் நம்பி"

என்றும்

"ஆதிமுன் ஏன மாகி அரணாய மூர்த்தி
அது நம்மை யாளு மரசே"

என்றும் குறிப்பிடுவர்.

வராக அவதாரத்தைப் பூதத்தாழ்வார், ஆண்டாள், குலசேகராழ்வார் என்போர் ஓர் இடத்திலும், பேயாழ்வார் 2 இடங்களிலும், பொய்கையாழ்வார் 4 இடங்களிலும், பெரியாழ் வார் மற்றும் திருமழிசையாழ்வார் 5 இடங்க ளிலும், நம்மாழ்வார் 21 இடங்களிலும் திருமங் கையாழ்வார் 26 இடங்களிலும் பரவிப் பணிந் துள்ளனர். திருமங்கையாழ்வார் தான் இவ்வ வதாரத்தைப் பெருமளவில் தமது திருப்பா சுரங்களில் போற்றி உள்ளார் எனலாம்.

### நரசிம்மவதாரம்

திருமாலிடத்தில் ஆழ்ந்த அன்பு கொண்ட ஆழ்வார்கள் நரசிம்மத்தின் திருவுரு வத்தையும் இரணியனைக் கொன்றதையும் தமது திருப்பாசுரங்களில் பலஇடங்களில் மங்க

ளாசனம் செய்துள்ளனர். ஆண்டாள் ஓர் இடத்திலும், பூதத்தாழ்வார் 4 இடங்களிலும், பேயாழ்வார் 5 இடங்களிலும், திருமழிசையாழ்வார் 10 இடங்களிலும், நம்மாழ்வார் 15 இடங்களிலும், திருமங்கையாழ்வார் 53 இடங்களிலும் இந்த வடிவத்தைக் குறிப்பிடுகின்றனர். இவ்வடிவத்தை திருமங்கையாழ்வார்தான் அதிக அளவில் புகழ்ந்துள்ளது தெரிய வருகின்றது. நரசிம்மவதாரத்தை திருமங்கையாழ்வார்,

"அளவென வெம்மை மிக்க அரியாகி அன்று
பரியோன் சினங்க ளவிழ
வளையுகிராணி மொய்ம்பில் மறவோன் தாகம்
மதியாது சென்றொரு ருகிராஇல்
பிளவெழ விட்ட குட்ட மதுவையமூடு
பெருநீரின் மும்மை பெரிதோ"

என்று குறிப்பிடுவர்.

மேலும் அவர் இந்த அவதாரத்தை

"................ ஆயிரந்தோள் எழுந்தாட
பைங்கண் இரண்டு எரியின்ற நீண்ட எயிற்றொடு பேர்
வாய் சிங்க உரு"

என்று குறிப்பிடுவர்.

நரசிம்மம் இரணியனைத் தன் மடியில் வைத்துத்தன் நகங்களால் கொன்றதை ஆழ்வார்கள் தமது திருப்பாசுரங்களில் சொல்லோவியமாகப் படைத்துள்ளனர்.

"உரம் பற்றி இரணியனை உகிர்நுதியால் ஒள்ளிய
மார்வு உறைக்கவூன்றி
கரம் பற்றி முடிபிடியக் கண்பிதுங்க வாயலறத்
தெழித்தான்"

எனப் பெரியாழ்வாரும்,

"போரார் நெடுவேலோன் பொன் பெயரோன் ஆகத்தை
கூரார்ந்த வள்ளுகிரால் கீண்டு குடல்மாலை
சீரார் திருமார்பின் மேற்கட்டி செங்குருதி
சோரக் கிடந்தானைக் குங்குமத்தோள் கொட்டி
ஆரா எழுந்தான் அரி உருவாய்"

"ஆயிரக்கண் மன்னவன் வானமும் வானவர்தம்
பொன்னுலகும்
தன்னுடைய தோள்வலியால் கைக்கொண்டதானவனை
பின்னோர் அரியுருவ மாகி எரிவிழித்து
கொன்னவிலும் வெஞ்சமத்துக் கொல்லாதே வல்லாளன்.
கினரொளியால் குறைவில்லா அரி

"மன்று மணக்குஞ்சி பற்றி வரமீர்த்து
தன்னுடைய தாள் மேல் கிடாத்தி அவனுடைய
பொன்னகலம் வள்ளுகிரால் போழ்ந்து புகர்படைத்த
மின்னிலங்கும் ஆழிப்படைத் தடக்கை வீரனை"

எனத் திருமங்கை ஆழ்வாரும் அருளியுள்ளனர்.

நரசிம்மரின் திருவுருவங்கள் கிரிஜா நரசிம்மர், ஸ்தாணு நரசிம்மர் என இருவகையாக அமையுமென்பது டி.ஏ.கோபிநாதராவ். மேலும் யோக நரசிம்மர், உக்கிர நரசிம்மர், யானக நரசிம்மர், இலட்சுமி நரசிம்மர் என நான்கு வகையாகவும் நரசிமமர் திருவுருவங்கள் அமையுமென்று அறிஞர் கூறுவர். இரணியனை அழித்தவர் உக்கிர நரசிம்மராவர். திருமகளைத்தன் மடிமீது வைத்துள்ள வடிவம் இலட்சுமி நரசிம்மர் ஆவார். திருமாலின் பத்து அவதாரங்களில் நரசிம்ம திருவுருவமே திருமகளைத் தன் மடியில் வைத்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

இறைவன் எங்கும் நிறைந்துள்ளான் என்ற மகத்தான தத்துவத்தைச் சுட்டி நிற்பது திருமாலின் நரசிம்மவதாரமாகும்.

**வாமனாவதாரம்**

திருமாலெடுத்த வாமனாவதாரத்தை ஆண்டாள் "கோலக்குறளுருவாய்" என்றும் "பொல்லாக்குறளுருவாய்" என்றும், திருமங்கையாழ்வார், பொங்குகிலங்குபுரி நூலும் தோலுந் தாழப் . பொல்லாக் குறளுருவாய்' என்றும், நம்மாழ்வார் "பொல்லாதத் திருக்குறளா" என்றும் குறிப்பிடுகின்றனர். ஆழ்வார்கள் குறளுருவை பொல்லாதது என்று குறிப்பிடக் காரணம் அவன்தன் சிறிய காலால் மூவடி மண் இரந்து பேரருளில் மூன்று உலகங்களையும் அளந்ததுதான் என்பது ஆகும்.

**திரி விக்ரமாவதாரம்**

திருமாலின் திருவதாரங்களுள் திரிவிக்கிரமாவதாரம் ஆழ்வார்களால் பெரிதும் போற்றப்பட்டுள்ளது. இது மனிதனின் முழு வளர்ச்சி கொண்ட முதல் தோற்றம் என்பது குறிப்பிடத்தக்கது.

வாமனன் மாவலியிடம் தன் கால்களால் மூவடி மண் வேண்ட அவன் தந்தேன் என்றான். திருமால், கண்டவர்கள் வியப்பும் அச்சமும் அடையும்படி பேருருக் கொண்டு விசுவரூபம் எடுத்து தன் சேவடிகளால் மண்ணையும் விண்ணையும் அளந்தான். இதைப் பொய்கையாழ்வார்,

"பார் அளவும் ஓர் அடி வைத்து ஓரடியும் பார் உடுத்த
நீரளவும் செல்ல நிமிர்ந்ததே"[46]

என்றும்,

ஆண்டாள்

"அம்பரம் ஊடலுத்து ஓங்கி உலகளந்த
உம்பர் கோமானே"[47]

என்றும் போற்றியுள்ளார்.

மூன்றாவது அடிக்கு இடம் இல்லாது போக மாவலியின் விருப்பப்படி அவன் தலை மீது தன் திருவடியை வைத்தான். அதனால் மாவலி பாதாளத்தில் அழுந்த மூவுலக ஆட்சியை இந்திரன் மீண்டும் அடைந்தான்.

இந்த அவதாரத்தை குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் மற்றும் திருப்பாணாழ்வார் ஆகியோர் ஒவ்வோரிடத்திலும், திருமழிசையாழ்வார் 9 இடங்களிலும், ஆண்டாளும் பொய்கையாழ்வாரும் 13 இடங்களிலும், பூதத்தாழ்வார் 14 இடங்களிலும், பெரியாழ்வார் 15 இடங்களிலும், பேயாழ்வார் 18 இடங்களிலும், திருமங்கையாழ்வார் 65 இடங்களிலும், நம்மாழ்வார் 80 இடங்களிலும் இதனைக் குறிப்பிட்டுள்ளனர். இதனைக் நோக்கும் போது இந்த அவதாரத்தை நம்மாழ்வார் அதிக அளவில் போற்றியுள்ளமை தெரியவருகின்றது.

விண்ணை அளக்கும் திரிவிக்கிரம வடிவத்தை பெரியாழ்வார்

"மாவலி வேள்வியில் மாணுருவாகிச் சென்று
மூவடி தாவென்று இரந்த இம்மண்ணை
ஓரடியிட்டு இரண்டாம் அடி தன்னனிலே
தாவடியிட்டான்"[48]

என்றும் குறிப்பிடுவர்.

திருமாலின் திரிவிக்ரம வடிவம் அவரது பராக்கிரமத்தையும் உலகமெல்லாம் அவருக்குள் அடக்கம் என்ற தத்துவத்தையும் சுட்டி நிற்கின்றது.

வாமன திரி விக்கிரம அவதாரங்களை திருமங்கையாழ்வார்,

"வெந்திறல் வாணன் வேள்விமிடமெய்தி அங்கோர்
குறளாகி மெய்லகை யுணரச்
செந்தொழில் வேத நாவின் ஆமுனியாகி வைய
மடி மூன்றிரந்து பெரிதும்
மந்தர மீது போகி மதிநின்றி றைந்த
மலரோன் வணங்க வளர்சேர்
அந்தர மேதினூடு செலவுய்த்த பாதம்
அது நம்மையாளு மரசே"[49]

எனக் குறிப்பிடுகின்றார்.

### பரசுராமாவதாரம்

ஜமதக்கினி முனிவருக்கும் இரேணுகைக்கும் பிறந்தவர் பரசுராமர் ஆவார். சத்திரிய குலம் அழிவதற்காகத் திருமால் எடுத்த அவதாரம் பரசுராமவதாரம் ஆகும். பரசுராமர் சிவனை நோக்கித் தவம் புரிந்தமையினால் அவருக்குப் பரசுகோடாரி எனும் படைக்கலம் வழங்கப்பட்டது. அன்று தொடங்கி பரசுராமன் எனும் திருப்பெயருக்குப் பெருமை ஏற்பட்டது. இவர் "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" எனும் பழமொழிக்கு இலக்கியமானவர் என்பர்.

திருமங்கையாழ்வார் பரசுராம அவதாரத்தை

"இருநில மன்னர் தம்மை மிருநாலும் எட்டு
மொருநாலு மொன்று முடனே
செருநுதலூடு போகி யாவராவி மங்க
மழுவானில் வென்ற திறவோன்"

என்று குறிப்பிடுவர்.

### இராமாவதாரம்

இராமாவதாரம் ஆழ்வார்களின் மனத்தை விசேடமாக வசீகரித்துள்ளது. பெரியாழ்வார் இராமாவதாரத்தைச் சிறப்பாகப் பாடியுள்ளார். இராமாவதாரத்தில், தம்மை முழுக்கமுழுக்கப் பறிகொடுத்தவர் குலசேகராழ்வாராவர். இவர்கள் கண்ணாவதாரத்தைப் பாடியபோதும் அங்கு இராமனுடைய பெருமையைப் பாடியுள்ளார்.[52] இவர் தில்லைத் திருச்சித்திரக் கூடத்தில் திருமால்ல வணங்கும் போதும் இராமனைக் காண்பதாகவே பாடியுள்ளார். திருமங்கையாழ்வார் தசரத இராமாவதாரத்தை,

"அலைமலி வேந்த னாளை யகல்விப்ப தற்கொ
ருருவாய மானை யமையாக்
கொலைமலி வெய்து வித்த கொடியோன் இலங்கை
பொடியாக வென்றி யமருள்
சிலைமலி செஞ்ச ரங்கள் செலவுய்த்த நங்கன்
திருமால் நமக் கோ ரரனே"

எனக் குறிப்பிடுவர்.

### கண்ணனவதாரம்

கண்ணனவதாரம் தென்னிந்தியரின் போற்றுதலுக்குரிய சிறப்புமிகு அவதாரங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. முதலாழ்வார் மூவரும் கண்ணனவதாரத்தில் பெரிதும் ஆழங்காற்பட்டுள்ளனர். பொய்கையாழ்வார் 18 இடங்களிலும், பூதத்தாழ்வார் 16 இடங்களிலும், பேயாழ்வார் 26 இடங்களிலும் கண்ணனவதாரத்தைக் குறிப்பிடுகின்றனர்.

பெரியாழ்வாரும், ஆண்டாளும், கண்ண னவதாரத்தை சிறப்பாகச் சித்திரிக்கின்றனர். பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாவும், ஆண்டாள் கண்ணனைக் காதலனாகவும் கண்டு மகிழ்ந்தனர். பெரியாழ்வார் இராமாவ தாரத்தைப் பற்றிப்பாடிய போதிலும் இது கண்ணனின் பெருமையைப் பாடியது போலவே காணப்படுகின்றது கண்ணனது அவதாரத்தை திருமங்கையாழ்வார்,

"..................... தொயை
உணமுலை முன்கொடுத்த வுரவோளதவி
யுக உண்டு வெண்ணெய் மருவிப்
பணமுலை யாயர் மாதர் உரலோடு கட்ட
இனைமரு திற்று வீழ நடைகற்ற தெற்றல்
வினையற்ற றுக்கும் விதியே"

என்று விளக்குவர்.

**புத்தர் அவதாரம்**

பாகவத புராணம் விஷ்ணு புராணம் முதலிய புராணங்களில் புத்தர் ஓர் அவதா ரமாகக்கூறப்படினும் திருமாலின் அவதாரங் களுள் புத்தரை ஓர் அவதாரமாகக் கொள் வதில் காலந்தோறும் கருத்து வேறுபாடுகள் நிலவி வந்துள்ளன. புத்தரை ஓர் அவதாரமாக வடநாட்டினர் ஏற்றுள்ளதை புராண இதிகா சங்கள் புலப்படுத்துகின்றன. புத்தரது கோட் பாடுகள் வைணவ சமயத்தினரைப் பெரிதும் கவர்ந்துள்ளதை இது காட்டுகின்றது. தமிழ்நாட்டிலும் திருமாலின் பத்து அவதாரங் களில் ஒன்றாக புத்தர் ஏற்றுக் கொள்ளப்பட் டதை கி.பி. எட்டாம் நூற்றாண்டு மாமல்லபுரச் சாசனம் ஒன்று மச்ச, கூர்ம, வராக நரசிம்ம, வாமன, பரசுராம தசரதராம, பார்க்கவராம, புத்தர், கல்கி என்ற பத்து அவதாரங்களைக் குறிப்பிடுவதாலறியலாம். கி.பி. 8ஆம் நூற் றாண்டைச் சேர்ந்த ஆதிசங்கரரும் திருமா லின் பத்து அவதாரங்களுள் ஒன்றாகப் புத்தர் அவதாரம் விளங்குவதை அவரியற்றிய விஷ்ணு பாதகேசாந்த ஸ்தோத்திரத்தில் குறிப்பிடு கின்றார். ஆனால் ஆழ்வார்கள் புத்தரை ஓர் அவதாரமாக தமது பாசுரங்களில் எங்கும் குறிப்பிடவில்லை. சமண, பௌத்த மதங்க ளுக்கு எதிராகப் போராடி வைணவத்தை நிலைநிறுத்த வேண்டிய சூழ்நிலையில் ஆழ்வார்கள் புத்தரை ஓர் அவதாரமாக ஏற்காததில் வியப்பில்லை. ஆழ்வார்கள் புத்தரை இழித்துக் கூறியுள்ளனர்.

திருமழிசையாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரங்களில் இதனைக் காணலாம். திருமாலின் பத்து அவதாரங் களைத் தனித்தனி பாசுரங்களில் குறிப்பிடும் திருமங்கையாழ்வார் புத்தர் அவதாரத்தைக் குறிப்பிடவில்லை. பௌத்தம் கடவுள் மறுப்புக் கோட்பாடுடைய ஓர் அவைதிக மதமாக விளங் கினாலும், அதன் மனிதநேயக் கருத்துக்கள் வைணவர்களைப் பெரிதும் கவர்ந்தன. இதன் விளைவாகவே, புத்தரை வைணவர்கள் ஓர் அவதாரமாக ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். புத்தர் அவதாரத்திற்குப் பதிலாக பலராம அவதாரத்தை ஆழ்வார்கள் குறிப்பிடுகின்றா ரெனவும் அறிஞர் குறிப்பிடுவர். ஈழத்தில் உள்ள பௌத்த விகாரைகளில் விஷ்ணு இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

**அன்னாவதாரம்**

அன்னத்தை ஓர் அவதாரமாகக் கூறுவது ஆழ்வார்களுக்கே உரிய தனிச் சிறப்பாகும். நான்மறைகளை ஊழியிருளினின்றும் காப்பாற் றியது திருமாலின் மச்சவதாரம் என்பது வைணவ சமய நம்பிக்கையாகும். இந்த அருட்செயலைச் செய்தது திருமாலின் அன்ன அவதாரம் என்பதும் ஆழ்வார்களின் கருத்தாக வுள்ளது. அன்னப்பறவையாகிய திருமால் அரு மறைகளை மீட்டுத் தக்கோருக்கு வழங்கிய பேரருளைப் பெரியாழ்வார்,

"துன்னிய பேரிருள் சூழ்ந்து உலகைமூட
மன்னிய நான்மறை முற்றும் மறைந்திட
பின்னிவ் வுலகினில் பேரிருள் நீங்க அன்று
அன்னம தானானே அச்சோ அச்சோ
அருமறை தந்தானே அச்சோ அச்சோ"

என்றும்,

திருமங்கையாழ்வார்.

"முன்னுலகங்க ளேழும் இருள்மண்டி யுண்ண
முதலோடு வீடு மறியாது
என்னிது வந்ததென்ன இமையோர் திகைப்ப
எழில்வேத மின்றி மறையப்
பின்னையும் வானவர்க்கும் முனிவர்க்கும் நல்கி
இருள் தீர்ந்திவ் வைய மகிழ
அன்னம தாமி ருந்தாமிருந்தங் கறநூல் உரைத்த
அதுநம்மை யாளு மரசே"

என்றும்

பாடியருளுவதால் உணரலாம்.

**கல்கியவதாரம்**

திருமால் எதிர்காலத்தில் எழுந்தருளியிருக்கும் அவதாரம் கல்கியவதாரமாகும். கல்கியவதாரத்தைக் கற்கியவதாரம் எனவும் வழங்குவர். கலியுக முடிவில் அறத்தை காக்கவும் புறச் செயல்களைப் போக்கவும் திருமால் குதிரை முகத்துடன் சம்பளமென்னும் சிற்றூரில் கல்கியவதாரம் எடுப்பர் என்று குறிப்பிடுவர். பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் என்போரின் பாசுரங்களில் வரும் கல்கியவதாரம் பற்றிய செய்தி முன்னர் கூறப்பட்டுள்ளது. இவ்வவதாரம் பற்றிய விபரங்களைக் கல்கி புராணத்தில் காணமுடிகின்றது.

**1. அவதாரக் கோயில்களும், சிற்பங்களும்.**

திருமாலின் அவதாரக் கோயில்களும், அவதாரச் சிற்பங்களும் வைணவத் திருக்கோயில் வழிபாட்டில் இடம்பெறுவதற்கு ஆழ்வார்களின் பாசுரங்களின் தாக்கம் பிரதான காரணமாகும்.

திருமாலின் அவதாரங்களுள் மச்சாவதாரம்,கூர்மாவதாரம் என்பவற்றிற்குத் தனியான திருக்கோயில்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்தும் வால்டேர் ஸ்ரீராமஷேத்திரத்தில் நின்ற திருக்கோலத்தில் உள்ள திருமாலை ஸ்ரீ கூர்மநாதன் என்றும், தாயாரை ஸ்ரீ கூர்மநாயகி எனவும் அழைப்பர்.

வராக அவதாரத்திற்கான கோயில்கள் தமிழகத்தில் பல உள்ளன. திருமாபூவராகன், ஆதிவராகன், யக்ஞவராகன், பிரணயவராகன் என்ற திருநாமங்களில் வைணவத்திருக்கோயில்களில் வழிபடப்படுகின்றார். பூவராகம் மூலவராக உள்ள திருக்கோயில்களில் திருவிடந்தையும், விருத்தாசலத்தை அடுத்துள்ள ஸ்ரீமுஷ்ணமும் சிறப்பு மிக்கவை. மேலும் சென்னையை அடுத்துள்ள உருத்திரமேரூரில் உள்ள சுந்தரவரதப் பெருமாள் கோயில் மூலவராக விளங்குவதும் பூவராக வடிவமாகும். மேலும் சென்னையை அடுத்துள்ள மாமல்லபுரத்தில் உள்ளவராக மண்டபத்திலும் வராக அவதாரச் சிற்பத்தைக் காணமுடிகின்றது. நரசிம்ம அவதாரத்தை மூலவராகக் கொண்ட கற்கோயில்களில் வடஆற்காட்டு மாவட்டத் தைச் சேர்ந்த சோளிங்கர் திருக்கோயில் புகழ் மிக்கதாகும்.

திருமாலின் வாமன திரிவிக்கிரம அவதாரத் தலமாக தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள திருக்கோவலூர் போற்றப்பெறுகின்றது. இத்திருக்கோயிலில் உள்ள மூலவர் மரத்திலான வடிவம் என்பது குறிப்பிடத்தக்கது.

பரசுராமாவதாரம் திருமாலின் அவதாரங்களில் ஒன்றாகக் கொள்ளப்படினும் அவரை வழிபடும் வழக்கம் தமிழகத்தில் குறைவாகவே காணப்படுகின்றது. திருவரங்கத்திலுள்ள தசாவதாரக் கோயில் பரசுராமருக்கெனத் தனிச் சந்நிதி உண்டு. காஞ்சிவரதராசர் கோயில் நூறுகால்மண்டபத்திலும் பரசுராமர் சிற்பங்களைக் கண்டு மகிழலாம். கர்நாடக மாநிலத்தில் மைசூருக்கருகிலுள்ள நஞ்சன்கூடு எனும் தலத்தில் பரசுராமருக்கெனத் தனியான ஓர் ஆலயம் காணப்படுகின்றது.

ஆழ்வார்கள் போற்றிய இராமாவதாரத்தை இந்தியர்கள் இன்னும் உணர்வுபூர்வமாக வழிபட்டு வருகின்றனர். தமிழகத்திலுள்ள ஸ்ரீராமர் கோயில்களில் தனியிடம் பெறுவது கும்பகோணத்திலுமுள்ள இராமசாமி கோயிலாகும். வடக்கு நோக்கியவாயிலையுடைய இக்கோயிலின் முன்மண்டபத்தில் திருமாலின் தசாவதாரங்களை விளக்கும் எழில்வாய்ந்த சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலின் கருவறையில் காணப்படும் இராமரின் பட்டாபிஷேகக் கோலம் அபூர்வமானதாகும். இராமரும் சீதையும் ஒரே பீடத்தில் எழுந்தருளியிருப்பதும் 'அவர்களின் அருகில் அனுமான் ஒருகையில் வீணை ஏந்தியிருப்பதும், மறுகையில் புத்தகம் வைத்திருப்பதும் ஏனைய வைணவத் திருத்தலங்களில் காணமுடியாத அற்புதமான தெய்வீகக் காட்சியாகும்.

கும்பகோணத்திற்கு அருகிலுள்ள புள்ள பூதங்குடியில் பள்ளிகொண்டுள்ள ஸ்ரீராமர் தனது கைகளில் சங்கு, சக்கரம் ஆகிய வற்றை ஏந்தியவராகக் காட்சி தருகின்றார். இராமபிரான் சங்கு சக்கரதாரியாக காட்சி தரும் திருத்தலம் இது ஒன்றே எனலாம்.

மற்றும் சென்னையிலிருந்து 77கி.மீ. தொலைவிலுள்ள மதுராந்தகம் என்ற ஊரில் உள்ள ஏரியைக் காத்த இராமர்கோயில், கும்பகோணம் அணைக்கரைச்சாலையிலுள்ள சேங்கனூரில் உள்ள திருவெள்ளியங்குடியில் காணப்படும், தோலவில் இராமன்கோயில், தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வரவூர் இராமன் கோயில் என்பவையும் குறிப்பிடத்தக்க ஸ்ரீராமருக்கான திருக்கோயில்களாகும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழக்க ரைக்கு அருகில் உள்ள திருப்புல்லனை என்ற ராமர் தர்ப்பசயனராகக் கிழக்குநோக்கி கிடந்த கோலத்தில் காட்சிதருகின்றார்.

லக்னோவுக்கும் காசிக்கும் இடையி லுள்ள இராமபிரான் அவதரித்த திருத்தல மாகிய இராமர்கோயிலில் ஸ்ரீராமர் வீற்றிருந்த நிலையில் காட்சி தருகின்றார். சரயு நதிக்க ரையில் கட்டப்பட்டுள்ள இராமர்கோயில் 'அம்மாஜி மந்திர எனப்படுகிறது. இராமர் தனது மனைவி, தம்பி யர் மற்றும் அனுமானுடன் அருட்கோலம் கொண்டிருக்கும் தலம் இதுவாகும். ஸ்ரீராமர் கோயில் ஒன்று தஞ்சாவூரில் உள்ள புன்னை நல்லூர் மாரியம்மன் கோயிலுக்கு 50 கி.மீ. தொலைவில் அமைந்து விளங்குகின்றது. இங்குள்ள இராமர் திருவுருவம் சரளக்கிராமத்தில் நின்ற நிலை யில் அமைக்கப்பட்டிருப்பது தனிப்பெருஞ் சிறப்பாகும்.

தமிழகத்திலுள்ள பிரதான திருமால் கோயில்களில் ஸ்ரீராமருக்குத் தனியான சந்நிதி இருப்பதைக் காணமுடிகின்றது. வைணவத் திருத்தலங்களில் திருமாலின் தசாவதா ரங்களைப் பரிணாம முறையில் வரிசைப் படுத்தி வைத்து வழிபடும் மரபினைக் காண முடிகின்றது. இம்மரபில் கல்கியவதாரத் தினைக் கற்சிற்பத்திலும் சுதை வேலைப் பாட்டிலும் தமிழகத்தின் பல வைணவக் கோயில்களில் கண்டு வணங்க முடிகின்றது. ஈழத்திலுள்ள வைணவத் திருத்தலங்களில் சிறப்பாகத் திருமாலின் அவதாரங்களாக இராமர், கிருஷ்ணர் என்போருக்குத் தனிச் சந்நிதிகள் அமைந்துள்ளன. மேலும் திருமா லின் தசாவதாரங்களை ஈழத்து வைணவக் கோயிற் கோபுரச் சிற்பங்களிலும், மற்றும் ஈழத்து வைணவ ஆலயத்தில் காணப்படும் சுவர் ஓவியங்களிலும் கண்டு மகிழலாம்.

**முடிவுரை**

வைணவ சமயத்தில் பன்னிரு ஆழ்வார் கள் தனிப் பெருஞ்சிறப்புப் பெறுகின்றனரென்ப தும், திருமாலிடம் ஆழங்காற்பட்டதன் காரண மாகவே ஆழ்வார்கள் எனப்பட்டனரென்பதும், ஆழ்வார்களது பாசுரங்கள் "நாலாயிரத் திவ்வி யப்பிரபந்தம்" என வழங்கப்படுமென்பதும், அவற்றில் திருமாலின் பிரதான அவதாரங்களை னைத்தும் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன என்பதும், நல்லவர்களைக் காப்பாற்றிக் கெட்ட வர்களை அழித்து தர்மத்தை நிலைநிறுத் தவே காலந்தோறும் அவதாரமெடுக்கின்றா ரென்ப தும், உயிர்கள் உய்வதன் பொருட்டு திருமால் மேல்நிலையிலிருந்து "கீழிறங்குதலே" அவதா ரம் என்று கூறப்படுமென்பதும், அவதாரங்கள் பலவாக இருப்பினும் அவற்றுள் பத்து அவதா ரங்கள் (தசாவதாரம்) முக்கியமானவை என்ப தும், இவற்றுள் பரசுராமர்,தசரதராமர் பலராமர் என்று மூன்று இராமரும் இடம் பெறுவரென்ப தும், இராமருக்குநின்ற, இருந்த, கிடந்த திருக்கோலங்களில் கோயில்கள் காணப்படு வது அவதாரச் சிறப்புடையதென்பதும், பத்து அவதாரங்களில் நரசிம்ம திருவுருவம் மட்டுமே திருமகளைத் தன்மடியில் வைத்துள்ளதென் பதும், அவதாரங்கள் யாவும் திருமாலின் கரு ணையின் வெளிப்பாடேயென்பதும், சமண பௌத்த மதங்களின் அழிவுக்கு தமிழ்நாட்டில் திருமாலின் அவதாரங்கள் பற்றிய தெய்வீகக் கதைகள் அடிப்படைக் காரணமாயிற்று என்ப தும், இறைவன் மனிதனாக வருவது அவதாரத் தில் மகத்தான தத்துவம் என்பதும் மனிதனும் தெய்வமாகலாம் என்பது அவதாரக்கோட்பாட் டின் உள்ளீடு என்பதும், வைணவத்தில் அவதா ரம் ஒரு தத்துவக்கோட்பாடாகவே நோக்கப்ப டுகின்ற தென்பதும், இதற்கான அடிப்படையை அமைத்துத் தருவனவாக பன்னிரு ஆழ்வார் களின் பாசுரங்கள் விளங்குகின்றன என்பதும் இவ்வாய்வினால் நன்கு தெளிவாகின்றது.

டாக்டர் மாரிமுத்து - வேதநாதன்
பி.ஏ.(ஆனர்சு). டி.ஏ.எஸ்.எஸ்., எம்.ஏ..பிச்.டி.,
இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

" அகர வுயிர் போல் எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து"

" எங்குமெவையும் எரியுறு நீர் போல்
தங்குமவை தானே தனி"

– திருவருட்பயன்

# தமிழ்

தமிழர்தம் பெருமை தன்னை
சாற்றிட கேட்டாய் நேற்று
தமிழன்னை பெருமை தன்னை
தங்கை நீ! அறிந்தாயன்றோ?
தமிழன்னை சங்கம் வைத்து
தரணிக்கோர் உவமையானாள்
தமிழன்னை தந்த வள்ளுவனே
தரணியின் முதற் புலவனானான்
தமிழ் கவி கம்பனுக்கு
தக்கதோர் இணையு முண்டோ!
தமிழ் தந்த ஔவைக்கீடாய்
சாற்றிட ஓர்புலவருண்டோ!
தமிழ் முடிதரித்த வேந்தனன்றோ!
தன் மகனையே தேருக்கீந்தான்
தமிழ் காத்த பாரியன்றோ!
தன் தேரையே முல்லைக் கீந்தான்

தமிழர் தம்பண்பிற் கீடாய்
தரணியில் பண்பும் உண்டோ
தமிழ்த்தாய் பெற்ற நங்காய்
தமிழ்ப் பண்பை நீ காப்பாய் நாளும்
தமிழர்தம் பண்பழியுமானால்
தங்கமே அழிவது தமிழே யன்றோ!
தமிழன்னை பெற்ற செல்வி
தமிழ் பெண்ணாய் வாழ்வாய் நீடு.

*மு. திருநாவக்கரசு*
*ஓய்வு பெற்ற நீதிபதி.*

*"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்*
*தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்"*

*"பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால்*
*சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு"*
*- பாரதிதாசன்*

# பாடசாலைகளில் ஆங்கிலக்கல்வியின் முக்கியத்துவம்

இலங்கையைப் பொறுத்தவரை மொழிக் கல்வி என்பது மிகவும் பயன்பாட்டில் இருந்து வரும் ஒன்றாகும். இந்நாட்டில் சிங்களமொழி பேசும் சிங்களவர் பெரும்பான்மையினராகவும், தமிழ் மொழி பேசும் தமிழர் சிறுபான்மையின ராகவும் வாழுகின்றனர். சிங்களம், தமிழ், ஆங்கி லம் ஆகிய மூன்று மொழிகளும் ஆட்சியாளர் களின் மொழிகளாக விளங்கினாலும் சிங்களம், தமிழ் இரண்டுமே தேசிய மொழிகளாக அங்கீக ரிக்கப்பட்டுள்ளன. கல்விமுறையில் சிங்களமும், தமிழும் பயிற்றுமொழிகளாகப் பயன்பாட்டில் இக்கின்றன. ஆங்கிலம் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. சிங்களம், ஆங்கிலம், தமிழ் -ஆங்கிலம் என்னும் இருமொழியக் கல்வி (Biling ualism) நடைமுறையில் இருந்துவருகிறது.

வரலாற்றுக்காலந்தொட்டே சிங்களவரும் தமிழரும் இந்நாட்டில் வாழ்ந்து வருகின்றனர் என்றாலும் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்றுத் தேர்ந்த சிங்களவரோ, சிங்களத்தை இரண்டாம் மொழியாகக்கற்றுத் தேர்ந்த தமிழரோ அதிகமான எண்ணிக்கையில் இல்லை. ஆனால் சுதந்திரத்தின் முன்னர் ஆங் கிலத்தில் புலமைபெற்ற தமிழரும் சிங்கள வரும் ஏராளமாக இருந்தனர். ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருந்தாலும், சிங்களவர் தமிழரோடும், தமிழர் சிங்களவரோடும் தத்தம் கருத்துக்களைப் புலப்படுத்த ஒரு பொதுமொழி யின் தேவை சமூகக்கட்டாயமாக இருந்தாலும் ஆங்கிலமொழிக்கல்வி முக்கியமானதாகக் கருதப்பட்டது. இன்று இந்நிலைமை மாறியுள் ளது. ஆங்கில மொழித்தேர்ச்சியைப் பொறுத் தவரையில் சிங்களவரும் தமிழரும் பின்தங்கி யுள்ளனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத் தொடக்கத் திலிருந்து, இலங்கையில் மக்கள் பலரின் இரண்டாவது மொழியாக ஆங்கிலம் இருந்து வருகின்றது. பிரித்தானியத்தொடர்பு, வெளி உலகத்தொடர்பு என்பனவும் ஆங்கிலங்கற்ப தற்குத் தூண்டுதலாக அமைந்தன. அதுமட்டு மன்றி கிறிஸ்தவ மதத்தினரும் அவர்களின் வருகையும் கூட இதற்குக் காரணமாயிற்று. அன்று ஆங்கிலம் கற்றவர் பெற்றிருந்த ஆங் கில மொழியறிவு உயர்வாகவே இருந்தது. ஆனால் தாய்மொழிக்கல்வியின் முக்கியத் துவம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் ஆங்கி லத்தின் பயன்பாடு சுருங்கத் தொடங்கியது மட்டுமன்றி அதன் செல்வாக்கும் குறையத் தொடங்கியது. இதனால் பாடசாலைகளில் கூட ஆங்கிலக்கல்வியின் தரம் பாதிப்படையத் தொடங்கியது.

பாடசாலைகளில் இரண்டாவது மொழி யாக ஆங்கிலங் கற்பிக்கப்பட்டு வந்தாலும் அதன் தகுநிலை (Standard) முன்னர் இருந் ததை விட குறையத் தொடங்கியது. மாணவர் களின் ஆங்கில உரையாடல் திறனும், எழுத் துத்திறனும் குறைந்து குறைந்து போயின. முன்னர் போலன்றி ஆங்கிலத்தை அன்றாட வாழ்க்கையில் கருத்துப்பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்தியவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சிய டையத் தொடங்கியது. பாடசாலைகளில் முற் றாகப் புறக்கணிக்கும் நிலைக்கு தற்போது ஆங்கிலம் தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய பாடசாலைக்கல்வி முறை யில் மாணவர்கள் மற்றைய பாடங்களுக்கு எந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார் களோ, அந்தளவுக்கு ஆங்கிலக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அம்மொழி யைக் கற்பதற்குக்கூட விரும்புகிறார்களில்லை. மாணவர்களின் கண்ணோட்டத்தில் ஆங்கிலம் என்றால் கசக்கிறது. ஆங்கில நூல்களைப் பார்த்தால் முகஞ்சுழிக்கிறார்கள். மொழியை மொழியாகப் பார்க்காமல், அதனைத் தங்க ளுக்கு இடையூறாகக் கருதும் இம்மனப்பாங்கு பாடசாலை மாணவர்களிடையே களையப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். இதனை செயற்படுத்துவதன் மூலம் ஆங்கிலமொழியில் அதனைக் கற்பதில், ஓர் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டியது இன்றைய உலக நடைமுறைக்கு மிகவும் அவசியமானதாகும்.

வகுப்பறைகளில் மாணவர்களுக்கு ஆங்கிலத்தின் தேவையை, முக்கியத்துவத்தை அதன் அவசியத்தை மிகவும் நல்ல முறையில் எடுத்துக்கூறவேண்டியது ஆசிரியர்களின் கடமையாகும். இந்தவகையில் மாணவர் களுக்கு ஆங்கிலமொழியில் இருக்கும் வெறுப்பை நீக்குவதற்கு ஏதுவான வழிகளைச் செய்து கொடுப்பதும் அவசியமாகும். மாணவ சுற்றாடலில் அவர்கள் உள்வாங்கிக்கொள்வது தமிழ்கலந்த ஒருவகை ஆங்கிலத்தையே அதில் ஏற்படும் தவறுகளை அவர்கள் உணர் வதில்லை. இக்கட்டத்தில்தான் ஆங்கில ஆசிரி

யர்களின் தேவை, வழிகாட்டுதல் என்பன மாணவர்களுக்கு அவசியமாகிறது. இங்கு ஆங்கிலமொழி கற்பித்தல் ஒரு சுமையாக கருதப் படாமல் மாணவர்களிடம் இதனைத் திணிக்காமல் இலகுவாக அறிவியல் ரீதியாக இம்மொழி கற்பிக்கப்படவேண்டும்

ஆரம்பகாலத்தில் ஆங்கிலமானது ஓர் உயர்ந்த மொழியாகவும் அதைத் தெரிந்தவர்களே சமூகத்தில் மேலானவர்களாகவும் மதிக் கப்பட்டனர். அவர்களின் பிள்ளைகளே ஆங்கிலத்தைப்பேசவும், எழுதவும் முடியும் என்றொரு மனப்பாங்கும் இருந்துவந்தது. அதுமட்டுமன்றி ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் பாடசாலைகளில் தமிழ்ப் பாடத்தைத்தவிர ஏனைய பாடங்களெல்லாம் ஆங்கிலமொழிமூலமே கற்பிக்கப்பட்டும் வந்தன. இதனால் கூட அக் காலத்தில் ஆங்கிலத்தினை உள்வாங்கும் தன்மை அதிகமாக இருந்திருக்கலாம். அல்லாமல் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் களால் மட்டுமே அதனை ஒரு ஒழுங்குமுறையில் கற்பிக்கமுடிந்தது. இவர்கள் எழுத்து மூலமே அதிகமான கற்பித்தலை மேற்கொண்டு வந்தனர் என்பதாலும் இத்தகைய நடவடிக்கைகள் யாவும் ஆரம்ப காலத்தில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தினை அதிகரித்திருக்கலாம்.

இன்றையநிலையில் பாடசாலைகளில் ஆங்கிலமொழி கற்பித்தலுக்கு ஒதுக்கப்படும் நேரம் மிகக்குறைவாகும். ஒருநாளில் ஒதுக்கப்படும் நாற்பது நிமிடம் மட்டும்தான் ஆங்கிலம் கற்றலுக்குப் போதும் என எண்ணுவது தவறாகும். அதுமட்டுமன்றி இப்பாடநேரம் தவிர ஏனைய பாடங்கள் யாவுமே தமிழில்தான் கற்பிக்கப்படுகிறது. எனவே நாற்பது நிமிஷ நேரத்தில் ஒரு அந்நியமொழியைக் கற்றுக்கொள்ள முடியுமா என்பது மொழியியலாளர்களால் எழுப்பப்படும் பெரிய கேள்வியாகும். அறுபதுகளிற்குப்பின் மொழிகற்பித்தற் துறையில் பிரயோகமொழியியலின் (Applied Linguistics) முக்கியத்துவம் பேணப்பட்டுவரும் இவ்வேளையில் அறிவியல் ரீதியாக நடைமுறைச் சிக்கல்களை இனங்கண்டு ஆங்கிலமொழிக் கற்பித்தலை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

சமூகப்பின்னணியில் நோக்கும் போது இங்கு மாணவர்களின் வெவ்வேறுபட்ட சமூகச் சூழலும் ஆங்கில மொழிக்கற்பித்தலை சிரமமாக்குவது தவிர்க்க முடியாததாகும். இந்நிலையில் பெற்றோர்களின் பங்கு குடும்பச் சூழ்நிலைகள் சமூகத்தில் ஆங்கிலம் பற்றிய தவறான மனப்பாங்குகள், பொருளாதாரப் பின்னணிகள் போன்றவையும் பெரும்பங்கு வகிக்கின்றன. பாடசாலையில் மட்டுமல்லாமல் பெற்றோர்களும் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை தமது பிள்ளைகள் மத்தியில் வலியுறுத்தி விசாலமான மனத்துடன் அதனை உற்றுநோக்கி ஆவன செய்யவேண்டும். வீட்டுச்சூழலில் ஆங்கில இலக்கிய நூல்களை குறிப்பாக சிறுசிறு கதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், பாடல்கள் போன்றவற்றை வாசிக்க அதை உள்வாங்கி அதன்மூலம் தங்கள் அறிவை வெளிப்படுத்தத்தக்க வகையில் ஆர்வத்தை ஏற்படுத்தி ஊக்குவிக்க வேண்டியது பெற்றோர்களது கடமையாகும். இத்தகைய நூல்கள் பாடசாலை மட்டத்திலும் தரமானவையாகத் தெரிந்தெடுத்து கற்பித்தலின்போது அவற்றை அறிமுகப்படுத்தி ஆசிரியர்கள் மாணவர்களிடம் வாசிக்கச் செய்யும் ஆர்வத்தை விருத்தி செய்யவேண்டும். இவ்வாறு தூண்டுவதன்மூலம், பிறசமுதாயத் தினருடனான அரசியல், பொருளாதால, சமூக, இலக்கிய உறவுகளைப் பேணிக்கொள்ளமுடியும்.

ஆங்கிலம் பற்றிய விழிப்புணர்வு ஆசிரியர்களிடம் இருப்பது மிக அவசியமான தொன்றாகும். பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிப்பது இன்னமும் பழைய மரவுவழிவந்த முறைக்குட்பட்டதாகவே உள்ளது. புதிய நுட்பங்கள் பல மொழியியல் வீருத்தியின் பயனாக மொழி பயிற்றல்துறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இன்றைய யுகத்தில் பல நவீன உபகரணங்கள், மொழி ஆய்வுகூடவசதிகள் யாவும் இக்கற்பித்தலுக்கு மிக உதவியாக அமையும் மாணவர்களின் அடிப்படைத்திறன்களான பேச்சு,எழுத்து,வாசிப்பு,கேட்டல் பயிற்சிகளுக்கேற்ப அவர்களை இனங்கண்டு அவர்களின் குறைபாடுகளை நீக்கி அதற்கேற்ப அவர்களுக்குப் பயிற்சிகள் கொடுப்பதன் மூலம் அவர்களைத் திறமையானவர்களாக மாற்றிக்கொள்ளமுடியும். இவ்வாறு மாணவர்களிடம் அக்கறை காட்டுவதன்மூலம் மொழிக் கற்பித்தலை வெற்றிகரமாக நடாத்தமுடியும். அதுமட்டுமன்றி பாடநூல்கள், பயிற்சிகள், பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் சேவை நோக்குள்ள ஆசிரியர் குழாம் என்பனவும் ஆங்கில மொழிக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு காரணமாக அமையலாம்.

இறுதியாக நோக்குமிடத்து மொழிக் கல்வி குறிப்பாகப் பாடசாலைகளில் ஆங்கில மொழிக்கல்வியை மேம்படுத்துவதற்கு அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கு கல்விப் பின்னணி மட்டுமல்ல சமூகப் பின்னணியும் மிக அவசியமாகும். இம்மொழிப்பயிற்றலைச் செம் மைப்படுத்துவதற்கு மொழியியல் கோட்பாட்டு அறிவுச்சிந்தனைகளைப் பயன்படுத்தி அதன் வழி ஆரோக்கியமான கற்பித்தலை மேற் கொண்டால் இச்செயற்பாடு வெற்றியடைவது திண்ணமாகும்.

கலாநிதி . சுபதினி . ரமேஷ்,
தலைவர்,
மொழியியல் ஆங்கிலத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

## இறைவனை அடைய.......

| | |
|---|---|
| இயமம்: | பொய்யாமை, கள்ளாமை, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இல்லாமை |
| நியமம்: | உடல் உளத்தூய்மை, இறைவனிடத்தில் தன்னை ஒப்படைத்தல் |
| ஆசனம்: | தியானத்திற்காய் உட்காரும் முறை |
| பிராணாயாமம்: | ஜீவசக்தியை ஒழுங்குபடுத்தல். |
| பிரத்தியாகாரம்: | மனதை பிற இடங்களிற் செல்லாது தடுத்து நிறுத்தல் |
| தாரணை: | மனதை ஒருவழிப்படுத்தல் |
| தியானம்: | ஒன்றையே தியானித்தல் |
| சமாதி: | நனவு நிலைக்கு அதீதமான நித்திரை. |

# உயிரினவியல் வளமாக்கிளாகத்(Biofertilizers) தொழிற்படும் நீலப்பச்சை அல்காக்கள் (Blue green algae)

கிட்டத்தட்ட கி.மு. 8000 ஆண்டளவில் மனிதன் தனது உணவுத் தேவைக்காக நிலத்தைப் பண்படுத்திப் பயிரிடத் தொடங்கினான். விரைவில் அவன் தரையிலே முடிவில்லாத பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாது என்பதை உணர்ந்தான். இதனால் மண்ணின் வளத்தை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

1834இல் தாவர உடல்களிலும் மண்ணிலும் உள்ள இரசாயனக் கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டன. காலப்போக்கில் அதிகரித்துவரும் மனிதனின் உணவுத் தேவைகளை ஈடுசெய்யும் பொருட்டு பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்காக வளமாக்கிகள் (fertilizers) பயன்படுத்தப்பட்டன.

வளமாக்கிகள் இயற்கையானவையாக அல்லது செயற்கையாக உற்பத்தி செய்யப்பட்டவையாக இருக்கலாம். தாவரவளர்ச்சிக்குத் தேவையான போசணைப் பொருட்களை இவை கொண்டிருக்கும்.

இத்தகைய மூலகங்கள் → மா மூலகங்கள் (Macro Nutrients)
இத்தகைய மூலகங்கள் → நுண் மூலகங்கள் (Micro Nutrients)

என இருவகைப்படும்.

மா மூலகங்களாவன: N,P,K, Ca,Mg, S

நுண் மூலகங்களாவன: Fe, Zn, Mn, Mo,Cu, Co, Ni, Cl,B.

* இயற்கை வளமாக்கிகள் பின்வரும் -

(a) பச்சையிலைகள் - உ - ம்
Crotalaria (சணல்)
Gliricidia (கிளுவை)

(b) தாவர/ விலங்குகளின் இறந்த உடல்கள், எச்சங்கள்

(c) உயிரின வளமாக்கிகள் (Biofertilizers)

* செயற்கை வளமாக்கிகள் - உ- ம்: Urea
Superphosphate போன்றவை

உயிரினவளமாக்கிகள் - (Biofertilizers) எனப்படுபவை நைதரசனைப் பாதிக்கக்கூடிய, பொசுபேற்றுக்களை நீரிற் கரையக்கூடிய நிலைக்கு மாற்றத்தக்க, சேதனப் பொருட்களை விரைவில் உக்கவைக்கக்கூடிய நுண் அங்கிகளைக் கொண்டது. இத்தகைய நுண்ணங்கிகள் உயிர்வாழ் நிலையில் (Viable State) வித்துக்களினுள் அல்லது மண்ணினுள் உட்செலுத்தப்படலாம். (Inoclate) இவை மண்ணை வளமாக்கி தாவரங்களின் வளர்ச்சிக்கு உதவும். இவற்றின் செயற்பாடுகளைப் பொறுத்து பின்வரும் கூட்டங்களாகப் பிரிக்கப்படலாம்.

A - நைதரசன் பதிப்பவை - (Nitrogen Fixers) இவை ஒன்றியவாழிகளாக அல்லது சுயாதீன மாக வாழ்பவையாக இருக்கலாம்.

a. ஒன்றிய வாழிகள் - (Symbiotic)

உ - ம்:

இலெகுமினேசியே குடும்பத்தாவரங்களும்றைசோபியமும்Le(Rhizobium) அசொல்லா என்ற பன்னவகையும் அனபீனா Azolla & Anabaena என்ற நீலப்பச்சையல்காவும்.

b. சுயாதீனமாக வாழ்பவை - Non symbiotic

உ - ம்: Azotobacter

Azospirilium

இந்தப் பற்றீரியாக்கள் காற்று வாழ்பவையாகவும் (aerobic) மண்ணிலும் நெல், இறுங்கு, சோளம், கரும்பு என்பவற்றின் வேர்ப்பகுதிகளிலும் பரம்பிக் காணப்படுபவையாகவும் இருக்கும். சுயாதீனமாக வாழும் நீலப்பச்சை அல்காக்கள் Nostoc, Anabaena, Tolypothrix, Scytonema என்பன.

B. பொசுபேற்றுகளை கரைசல்நிலைக்கு மாற்றுபவை (Phosphate solufilizing) சில மண்வாழ் பற்றீரியாக்கள், பங்கசுக்கள் கரையமுடியாத பொசுபேற்றுக்களை கரைசல் நிலைக்கு மாற்றக் கூடியவை.

உ-ம்: Pseudomonas, Bacillus - (பற்றீரியாக்கள்)

Penicillium, Aspergillus - (பங்கசுக்கள்)

கரைசல் நிலைக்கு மாற்றப்பட்டால் ஒழிய தாவரங்களால் இவற்றை உபயோகிக்க முடியாது.

C. சேதனப் பொருட்களை உக்கச் செய்பவை

உ - ம்: தாவர உடல்களின் பிரதான கூறாகிய செலுலோஸ் (Cellulose) பல பற்றீரியாக்களும் பங்கசுக்களும் பிரிக்கக்கூடியன.

கந்தகம் (S) உள்ள சேர்வைகளை Thiobacillus என்ற பற்றீரியா கரைசல் நிலைக்கு மாற்றும்.


1930 இல் ஐக்கிய அமெரிக்காவில் Rhizobium உட்செலுத்தப்பட்டது. மேலும் ஒன்றியவாழி அல்லாத நுண்ணங்கிகள் (Non Symbiotic microbes) Legume இல்லாத பயிர்களுக்கு பயன்படுத்தப்பட்டன. Russia இல் Bacillus கொண்ட Phosphobacterim என்ற சேர்வையை உபயோகித்து சேதனபொசுபேற்றுகளை கரைசல் நிலைக்கு மாற்றினர். U.S.A. Europe நாடுகளில் நுண்ணங்கிகள், அவற்றின் சாறுகள் என்பன Agromax, Eukomit என்ற வியாபாரப் பெயர்களுடன் சந்தைக்கு விடப்பட்டுள்ளன. Australiaஇல் 's' கொண்ட சேர்வைகளைப் பிரித்தழிக்கும் பற்றீரியாவை உள்ளடக்கிய Biosuper என்ற வளமாக்கி சந்தைக்கு விடப்பட்டது.


1973 இல் G.E Fogg என்பவரால் நீலப்பச்சை அல்காக்களின் முக்கியத்துவம் வலியுறுத் தப்பட்டது. இவை ஒளித்தொகுப்புச் செய்யக்கூடிய புரோக்கரியோற்றாக்கள். (Prokaryotes) இவற்றின் பல அங்கத்தவர்கள் நைதரசன் பதிக்கக்கூடியவை. ஒட்சிசனுக்கு உணர்வுள்ள (sensitive) நொதியமாகிய நைதரனேசு (Nitrogenase) கொண்டவை. பல்லினச் சிறைப்பைகள் எனப்படும் விசேட கலங்களில் (Hetero Cysts) இந்நொதியம் காணப்படும் $N_2$ பதித்தலுக்கேற்ற சூழலை இது தரும். உயிரினவியல் N - பதித்தல் (Biological nitrogen Fixation) எனப்படுவது மூலக நைதரசனை $NH_3$ ஆக்குதலாகும். இத்தாக்கம் சிக்கலான நொதியத் தொகுதியால் (Complex enzyme system) ஊக்குவிக்கப்படும்.

$$N_2 + 6H^+ + 6e \xrightarrow[\text{Ferredoxin, } Mg^{++}\text{, ATP}]{\text{Nitrogenase}} = NH_3$$

இத்தாக்கமானது தாழ்த்தும் வலுவாகிய Ferredoxin ஆலும் $Mg^{++}$, ATP யாலும் ஊக்குவிக் கப்படும். ஒரு மூலக்கூறு $N_2$ தாழ்த்தப்படுவதற்கு 12 -15 மூலக்கூறுகள் ATP தேவைப்படும். Nitrogenase நொதியம் காற்றின்றிய சூழலில் மட்டுமே தொழிற்படும். இது ஒட்சிசனுக்கு உணர்வுள்ளது. காற்றுள்ள போது இந்நொதியம் தொழிற்பாடு அற்றதாகி விடும். இதன் புரதப்பகுதி அழிக்கப்பட்டுவிடும்.

$N_2$ பதிக்கும் இயல்பு பல்லினச்சிறைப்பையுள்ள நீலப்பச்சை அல்காக்களுக்கு மட்டும் உரியதல்ல. பல்லினச் சிறைப்பை அற்ற பல நீலப்பச்சையல்காக்களும் Nitrogense enzyme கொண்டவை. இவை காற்றின்றிய சூழலில் (Anaerobic condition) அல்லது குறைவான $O_2$ சூழலில் (Micro-aerophilic Condition) நைதரசனைப் பாதிக்கும் இயல்புள்ளவை.





$N_2$ பதிக்கும் சயனோபற்றீரியாக்கள்

N2Fixing Cyanobacteria

| | Group | Genus |
|---|---|---|
| 1. | பல்லினச் சிறைப்பையுள்ள இழையுருவான வகைகள். Hetero cystous filamentous forms | Anabeana, Nostoc Ausosira, Calothirx Tolypothrix |
| 2. | பல்லினச் சிறைப்பையற்ற இழையுருவானவை Non heterocystoms filaments | Oscillatoria, Lyngbya, Plectonema |
| 3. | தனிக்கலமுள்ளவை (Unicellular, Colonial forms) | Merismopedia, Gloeotheca |




**நீலப்பச்சையல்காக்களின் வாழிடங்கள்: *(Sub - Tropics)***

*இவை வெப்ப வலயங்களிலும்* Tropics *இடைவெப்ப வலயங்களிலும்*(Sub Tropics) *மிகவும் அதிகளவிலும் குளிர்வலயங்களில்* (Temperate Countries) *குறைவாயும் காணப்படும்.*

*30 - 35*$^{0}$ C *,வற்றின் வளர்ச்சிக்கு உகந்தது.* PH *7.5 - 10 இவற்றின் வளர்ச்சிக்கேற்றது. வாழிடத்தில் கிடைக்கும் பொசுபரசின் அளவு இதன் வளர்ச்சியை மட்டுப்படுத்தும். அதிகளவு* $Co_2$ *இதன்வளர்ச்சிக்கு உகந்ததல்ல.* Mo, Fe,Mg ,K *என்பன இவற்றின் வளர்ச்சிக்கு தேவையானவை. அதிக சூரிய ஒளி இவற்றைப் பாதிக்கும்.*

**நீலப்பச்சையல்காக்கள் பூச்சி நாசினிகளுக்கு தாக்குப் பிடிக்கக்கூடியவை.**

*இலங்கையின் மத்திய பகுதி மண்ணானது அமிலத்தன்மை வாய்ந்ததால் இவற்றை வயல்களில் உட்புகுத்துவதால் நன்மை ஏற்படவில்லை. ஆனால் இலங்கையின் வடபகுதியில் மண் காரத்தன்மை வாய்ந்தபடியால் இவற்றை வயல்களில் உட்புகுத்தல் விளைச்சலை அதிகரிக்கும்.*

நீலப்பச்சையல்காக்கள் வேறு தாவரங்களுடன் ஈட்டத்தில் காணப்படும்
உ-ம்: பன்னம், சைக்கசு போன்றவை.

Azolla எனப்படும் நீர்ப்பன்னத்துடன் Anabaena எனப்படும் நீலப்பச்சையல்கா காணப்படும். Cycas எனப்படும் ஜிம்னோர்ஸ்பேர்முடன் Anabaena காணப்படும்.

நெல்வயல்களில் Azolla உயிரினவியல் வளமாக்கியாகப் பயன்படுத்தப்படும். 1957இல் Vietnam நாட்டில் இது முதலில் நிரூபிக்கப்பட்டது. பன்னத்தின் எல்லா வளர்ச்சி நிலைகளிலும் $N_2$ பதிக்கவல்லது. Azolla இன் இழையங்கள் இறக்கும்போது பிரித்தழிக்கப்பட்டு $N_2$ மண்ணுள் சென்றடையும். (Death and decomposition) இந்தியாவில் வயல்களில் இத்தகைய நீலப்பச்சையல்காக்களை உட்செலுத்தும் முறையானது (Algal Inoculation) பெரும் வெற்றியளித்துள்ளது. Scytonema, Nostoc, Anabaena Plectonema, Aulosira, Tolypothrix என்னும் நீலப்பச்சையல்காக்கள் தொடக்க கரைசலாக (Starter Culture) பாவிக்கப்படுகின்றன.

**உட்செலுத்தும் முறைகள் -** Methods of inoculation

வெங்கடராமன் (Venkataraman) என்பவரின் ஆய்வுகளின்படி பின்வரும் பெறுபேறுகள் பெறப்பட்டன.

| | பரிசோதனை | விளைச்சல் |
|---|---|---|
| 1. | Control (கட்டுப்பாட்டுப் பரிசோதனை) | 58.66Kg/110m$^2$ |
| 2. | நாற்றுநடுகைக்கு 1 கிழமை முன்னர் உட்செலுத்தல் | 67.36Kg/ 110m$^2$ |
| 3. | நாற்றுநடுகைக்கு 1 கிழமை பின்னர் உட்செலுத்தல் | 67.02Kg/110m |
| 4. | நெல்விதைகளை இக்கரைசலில் தோய்த்து நேரடியாக விதைத்தல் (seed soaking, direct sowing) | 64.19Kg/110m$^2$ |

இவை பெரிய திறந்த நீர்த் தொட்டிகளில் வளர்க்கப்பட்டு நெற்செய்கைக்கு பயன்படுத் தப்படும்.

**நீலப்பச்சையல்காக்களை வளர்ப்பதற்காகப் பயன்படுத்தப்படும் ஊடகங்கள்:**
(Media used for blue green algal Cultivation)

Knop's Sol$^n$

| | | |
|---|---|---|
| $MgSo_4 . 7H_2O$ | - | 0.1 grams |
| $KH_2Po_4$ | - | 0.2 grams |
| $KNO_3$ | - | 1.0grams |
| $Ca(NO_3)_2 4H_2O$ | - | 0.1grams |

இதைவிட Molisch method

Detmer method

Chu mediam

Prin gsheim mediam

என்பவை உபயோகிக்கப்படும். மரத்தூள், காபோபியூரன், சுப்பர்பொசுபேற்று (Saw dust, Carbouran, Superphosphate என்பவை பாரிய அளவில் இவற்றை வளர்க்கப்பயன்படும்.)

**இவற்றை மட்டுப்படுத்தும் காரணிகள்:** (Limiting Factors)

இவை நீர்த்தேக்கமுள்ள சூழலில் மட்டும் வாழக்கூடியவை. (Water Logged Conditions) இங்கு $H_2S$ உற்பத்திசெய்யும் பற்றீரியாக்கள் நச்சு விளைவை உண்டாக்கும். ஒட்டுண்ணிகள், களைகள், மேய்ச்சல் (Grasing) Antagonism - எதிர்ப்பு என்பன இவற்றின் வளர்ச்சியை மட்டுப் படுத்தும் உயிரியற்காரணிகளாகும்.

பற்றீரியாக்கள், வைரசுக்கள், பங்கசுக்களாகிய ஒட்டுண்ணிகள் இவற்றை தாக்கிப் பிரித்த ழிக்கும் நத்தைகள் (Snails) நுளம்புக் குடம்பிகள் (Mosquito Larvae) ஏனைய முள்ளந்தண்டில்லாத (Invertibrates) வற்றை மேயக்கூடியவை, (Grazers) வேறு உயிரினங்களால் வெளியேற்றப்படும் நச்சுப்பொருட்கள் நீலப்பச்சை யல்காக்களின் வளர்ச்சியை தடைசெய்யும் -(Antagonism)

முடிவில் நீலப்பச்சையல்காக்கள் இலகுவில் கிடைக்கக்கூடிய, விரைவில் வளரக்கூடிய குறைவான செலவுள்ள உயிரினவியல் வளமாக்கிகளாகும். ஒருமுறை இவற்றை செலுத்தினால் பலகாலம் வரை நிலைத்து நிற்கும் இயல்புள்ளவை. இவற்றினால் பாதகமான விளைவு எதுவும் கிடையாது.

திருமதி . இ. சிவானந்தா
விரிவுரையாளர்,
விஞ்ஞானபீடம், யாழ் பல்கலைக்கழகம்.

## களைத்துப்போன குழந்தைகள்

இரண்டு விமானப் படைத்தளத்தைச் சேர்ந்த குழந்தை வைத்திய நிபுணர்கள், மூன்று முதல் பன்னிரண்டு வயது வரையிலான பெரிய எண்ணிக்கையிலான குழந்தைகள் கடுமையான சோர்வு, தலையிடி, நித்திரையின்மை, வயிற்றுக் கோளாறு, வாந்தி என்பவற்றால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டு ஆச்சரியமடைந்தார்கள். இந்த அறிகுறிகளுக்கு எத்தகைய மருத்துவக் காரணிகளும் கண்டுபிடிக்கப்படவில்லை. பின்பு பெற்றோருடனான தொடர்ச்சியான உரையாடலின் பின், இக்குழந்தைகள் தொலைக்காட்சிகளின் ஆளுகைக் குட்பட்டவர்களாக (Adicted) உள்ளார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் கிழமை நாட்களில் மூன்று முதல் ஆறுமணி நேரங்கள் வரையும் வார இறுதிநாள்களில் மூன்று முதல் ஆறுமணி நேரங்கள் வரையும் தொலைக்காட்சியைப் பார்ப்பவர்களாகவும் இருந்திருக் கின்றார்கள். இவர்களுக்குச் செய்யப்பட்ட வைத்தியம் மிகவும் புரட்சிகரமானதாகவும் பயன் விளைவுள்ளதாகவும் அமைந்திருந்தது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தொலைக்காட்சி பார்த்தல் அவர்களுக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டது. இந்தக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தவர்களின் நோய் அறிகுறிகள் மறைந்து போயின. ஏனையோர்கட்கு அந்த அறிகுறிகள் அப்படியே இருந்தன.

"ரைம்" (Time) சஞ்சிகை – நவம்பர் 6,1964

# HUMAN VALUES IN EDUCATION

In ancient times the whole educational system was based on values. The Hindu 'Gurukul' education was purely based on values. Students resided in special places called 'ashrams'. They served their teachers and learned their lessons under those teachers. The teachers led an exemplary life and practised what they preached, and thus led the students along the right path. They transmitted values such as truth, righteousness, peace and non - violence to their students. Students were trained to do charity, respect elders and teachers. They had to get rid of anger, envy, competition, jealousy and selfishness, while learning together. Each student was given individual attention. Even a young prince had to go with the other students to collect firewood, wash his teacher's clothes and thus all were given chances to develop equal mindedness. Apart from the life style, the texts too stressed human values. The students were able to distinguish what are mean and what are high values. The ancient scripts and literature described the characteristics of each caste and profession. Thus the students lived, experienced and practised all what they learned daily for twelve years, without contact with their parents. Before taking to a profession they were taught what values are involved and each student chose his profession for which they had a higher place of value. The religious and secular literature clearly stated what is wrong and what is right. Which is good and which is bad. What can be done to avoid or overcome evil. What should be one's ultimate goal. What should a married man or woman do to lead a peaceful life. How should a minister govern a land. How should one accumulate wealth and how should one spend it. What values should one possess and what values lead one's downfall. The students learned that a person who has all types of bad qualities like anger, hatred, selfishness, greed, cheating, crime, fraud and lying finally loses everything and gets defeated by the person who has good values. The students learn these and give a higher place to good values. Moral along with spiritual education was given emphasis. The pupils were moulded and shaped to fit the type of society they were going to face and the type of profession they were going to follow. The ultimate goal was to finally find the supreme truth.

Under Buddhist education, students learned together as a group. Buddhist education stressed on "Bodily Health and Aesthetic values. The body is to be decently draped, cleaned and massaged, regularly fed, sheltered in the rainy season, rested during the noon day heat and medically treated when ailing by the best physician", Mukergee (1963). Buddhists give great significance to the value of non - violence. Later Sikhs, ' Jains' and Muslim schools flourished in India. Rulers like Akbar, changed the system of education. Now the trend is different. Along with new Scientific discoveries, people have given up the search for human values. The values look old fashioned and outdated to the teachers and students. The teachers do not expect the pupils to respect and be obedient. They simply teach the lessons and ignore the other aspects in the classroom. Teachers have no time as they have to prepare lessons for the classes that are conducted outside their schools.

Teachers talk about the western culture only when there is a context. They do not stop and discuss about our culture. The students' aesthetic values are not appreciated well. The teachers' only target is covering the syllabus. The teachers do not realize that values are involved in teaching. They are not aware of their values. But they unknowingly express their values, that are dominant in them. The students measure their teachers with their own value scales or standards.

Earlier, the teacher - student interaction brought forward wisdom. It manifessted human values. The students obeyed, respected, honoured, praised and appreciated their teachers. But today, students show all type of feelings in and outside the classrooms. For, todays' education automatically makes oneself get degrees and make them go in search of money in any way. Because of ignorance about values man has become enslaved to his senses. He becomes selfish, jealous, narrow - minded, and suffers from envy greed and ego.

One realises the necessity of an inclusion of human values in the present educational system.

"Value is something which pervades everything. It determines the meaning of the world as a whole, as well as the meaning of every person, every event, and every action. Even the smallest change introduced into the world by an agent has a value and is under taken only on the ground and for the sake of some value moments. Every thing that exists, and even everything that may exist or in anyway belongs to the composition of the world, is of such a nature that it not only exists, but also contains within itself either the justification or condemnation of its being. It can be said of everything that it is either good or bad, it can be said whether it must or must not be, or that it ought to or ought not to exist. That its existence is right or wrong( not in the judicial sense)" is a broad view of values written by Lossky and Marshal in 1935 and quoted by S.P. Kulshrestha (1979).

Many people imagine that values have no place in teaching. But the researchers on 'values' have proved that "each action is steered by changing clusters of values" So one has to accept that the values are present in all the fields including science and technology. There are philosophical, psychological and social view points about values. The philophers believe that values belong wholly to the inner world of mind. Psychologists say that values are conscious or unconscious motivators and justifiers of the action and judgements. Sociologists say that "It is personal as well as social and it is expressed as well as implied......... value is a conception explicit or implicit, distinctive of an individual or characteristic of a group of the desirable which influences the selection from available means and ends of actions" Kluckhohn (1951).

In many cases the selection of professions too indicates the values an individual esteems. Each profession lays emphasis on one or many values. The priests need 'religious' and humanitarian' values. A painter or an artist chooses the field because 'aesthetic' value is dominant in them. values are part and parcel of each field and teachers cannot separate or reject them as useless. Every one knows that it is the teachers who play a major role in moulding and shaping the students. Can mere teaching, passing the knowledge one has to the students mould and shape them?

A study on the place of values will help teachers and others realize what values they possess. By knowing the values that are involved in the teaching profession the teachers can help students to build their own value system.

Mrs. S. Ravindran
B.A., P.G.D. ELT., M.PHIL LINGUISTICS

*He is an who does not believe in himself. The old religions said that he was an atheist who did not believe in god. The new religion says that he is an atheist who does not believe in himself.*

***- Swami Vivekananda.***

*"The sanctity of human life is the most basic of all human values and is the bedrock on which all other civil and political rights are grounded".*

***- Dr. Neelan Tiruchelvam.***

# நடராச தத்துவமும் பஞ்சகிருத்திய விளக்கமும்.

நடராஜப் பெருமான் திருமேனி கொண்டருளிய அமைப்பு புராண ஆசிரியர்களின் புதிய கற்பனைப் படைப்பு அன்று. சிற்பியின் சிந்தனை மாற்றமும் அன்று. உயிர்கள்மீது வைத்த கருணையால் தாமே அவர் மேற்கொண்டவை. எல்லாவற்றையும் கடந்த சிவம், சிவனுரு அருவுமல்லன். சித்தனோடு அசித்துமல்லன். பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன் என்ற நிலையினின்றும் கலந்த நிலையைக் கருதுகின்ற போது சத்தியாகிய இயற்கையோடு கூடுகின்றார். அந்தவகையில் நடராஜவடிவம்பற்றி நோக்கும் பொழுது பல்லவகாலத்திலிருந்து முதலில் கல்லிலும், அதன்பின்பு உலோகத்திலும் இந்த உருவம் அமைக்கப்பட்டுள்ளது. பின்னர் சோழப்பெருமன்னர் காலத்திலே மிக நேர்த்தியான உருவங்கள் குறிப்பாக வெண்கலத்தால் அமைக்கப்பட்டன.

வரலாற்று ரீதியில் தமிழ்நாட்டில் இன்று காலத்தால் முந்திய நடராஜ திருவுருவமானது சியமங்களம் புடைவரையிலே உள்ள தூணில் காணப்படுகின்றது இந்த நடராஜ உருவத்தினுடைய சிறப்பினைக்காணும் பேறுகிடைக்குமாயின் மனிதப்பிறவி எடுக்கவிரும்புவதாக சொல்லப்படுகின்றது.

"குனித்த புருவமும்......குமிண்சிரிப்பும் ...." என்ற தேவாரத்தின் மூலம் அறியக்கிடக்கின்றது. மேலும் திருமந்திரம், உண்மைவிளக்கம் முதலிய நூல்களிலும் சிறப்பாக குறிப்பிடப்படுகின்றது. அவற்றுள்

'அரண்துடி........தோற்றம்........... அரனடி என்னும் அனுக்கிரமமே" எனத்திருமந்திரமும்

"தோற்றம் துடியதனில் தோயும்திதி அமைப்பில்" என உண்மை நெறிவிளக்கமும் கூறிநிற்கின்றது.

ஆகவே நடராஜ வடிவத்தை ஆராயும் பொழுது,

**முக்கண்:**

கண் ஒளிப்பொருள் ஒளியின்றிப் பொருளுணர்ச்சி இல்லை ஏன்? அறிவுணர்ச்சியும் இல்லை. உணர்ச்சியை ஊட்டவல்ல சோதிகளாகிய சூரியன், சந்திரன், தீயாகிய முச்சுடர்களை மூன்று கண்களாகக் கொண்டு இறைவன் விசுவரூபனாக விளங்குகின்றான். அன்றியும் இச்சாஞானக்கிரிகைகளாக இறைவன் திருக்கண்கள் விளங்குகின்றன என்று காமிகம் கூறுகின்றது. இதனை அடியொற்றியே அகோரசிவாச்சாரியார் போன்ற சமய சித்தாந்த செயன்முறைகளை விளக்க வந்த ஆசிரியர்கள் இறைவன் கண்கள் இச்சாஞானக்கிரியைகள் என்றும் சோம,சூரிய,அக்கினி என்றும் விளக்குகின்றனர். பட்டினத்து அடிகள்.

"முக்கணன் என்பது முத்தீவேள்வியில்
தொக்கது எள்ளிடை - என்பது ஓர் தருக்கே"

என்பார்கள்.

**குமிண்சிரிப்பு:**

ஆனந்தக் கூத்தனுடைய திருமேனி அமைப்பில் அவர் முகத்தோற்றமே தனிச்சிறப்புடையது. அதிலும் புன்முறுவலுக்குள்ள அழகு மிகமிக உயர்ந்தது. அப்பர்சுவாமிகள் மனதைக் கவர்ந்த ஆற்றல் உடையது என்பது

"கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்" என்ற அவர்கள் அனுபவவாக்குகளால் விளங்குகின்றது. அந்தச் சிரிப்பு வெறும் நகைச்சுவை சிரிப்பன்று" உள்ளதன் மலர்வாட்டி வினை கெடுத்து நிலையளிக்கும் புன்முறுவல் என்றது ஈண்டு நினைவு கூரத்தக்கது ஆதலால் புன்முறுவல் உயிர்களுடைய இருவினைகளைக் கெடுப்பது இருவினைகளோ ஆகாமியம், சஞ்சிதம், பிராரர்த்துவம் என்ற மூன்று வடிவில் வந்த பயன் ஊட்டுவன. இறைவன் சிரிப்பு மூன்று புயங்களை எரித்து வழிகண்டது. ஆதலால் இந்த மூன்று வினைகளையும் அழிப்பது 'இடர் மூன்றும் இழிந்தரனும் இளமுறுவல் முக மலயிலங்க என்னும் சிவதருமோத்திரத்தானும் இது வலியுறும்.

**சடைமுடி:**

ஞானியர் அடையாளம் சடைமுடி. எல்லாவற்றையும் முற்ற உணரும் பெருஞானியாக விளங்குபவர் இறைவன். ஆதலால் ஆன்மாக்களுக்கு ஞானம் அருளவேண்டிச் சடையைத் தரித்திருக்கிறார். பனித்தசடை, செஞ்சடை என்பன திருமுறைகளில் சடையைப்பற்றிய குறிப்புக்கள் இவற்றால் சடையின் நிறமும் தன்மையும் அறிவிக்கப்படுகின்றன. 'நுண்சிகை ஞானமாம்" என்பது திருமந்திரம். இச்சடையில் முடிச் சடையும் பரந்தசடையும் உண்டு. முடிச்சடை ஒன்றுபட்டுக் குவிந்த ஞானத்தையும், பரந்த

சடை விரிந்து உலகுயிர்களுக்கு ஞானமூட்டும் பரந்த நிலையையும் உணர்த்துவன.

**பிறை:**

இறைவன் திருமுடிக்கண் உள்ள பொருட்கள் பிறைமதி, ஊமத்தம்பூ, கங்கை முதலியன. இவற்றுள் பிறைமதி இறைவனுடைய அளவிலா ஞானத்தை அறிவிப்பது என்று காமிகம் கூறுகிறது. பட்டினத்தடிகளுடைய கற்பனைத்திறன்

> "தூமதி சடை மிசைச் சூதல் நூநெறி
> யாமதியாள் என அமைந்த வாறே"

என்று சொல்லுகின்றது. ஆண்டவனுடைய அருளாற்றல் முழுவதும் ஆன்மாக்களுக்கு வினை கெடுத்து மேலானபதவி அளிப்பதற்கே பயன்படுத்தப்படும். அதுபோல பிறைமதியும் முழுமதியாய், செருக்குற்றுத் திரிந்து தக்கன் முதலியோர் சாபமேற்றுத் தேய்மதியாகித் திருவடி அடைந்த பொழுது இறைவன் அதன் சாபத்தை நீக்கித் திருமுடிமேல் வைத்த நிகழ்ச்சியாதலின் வினைகெடுத்து உயர்வு அளிக்கும் குறிப்பை உணர்த்துவதாம்.

**கங்கை:**

கூப்பிய கரத்தோடு கங்கை சடைக்கண் சிக்கி விளக்குகிறாள். இது இறைவனுடைய எண் குணங்களுள் அளவிலாற்றலை அறிவிப்பதாகும் கணந்தோறும் பெருகிக்கொண்டே இருக்கும். கங்கையையும் ஓர் மயிர்காலில் கட்ட வல்ல கணக்கற்ற ஆற்றலை உணர்த்துதல் காண்க.

**ஊமத்தமலர்:**

இறைவன் திருமுடியில் ஊமத்தம்பூ, எருக்கு, அறுகு இவற்றை அணிந்திருக்கின்றார். அறுகு அறிவின் நுணுக்கத்தையும், எருக்கு விளக்கத்தையும், ஊமத்தம்பூ விருப்பு வெறுப் பற்ற தன்மையையும், கபாலம் என்றும் மங்கள சொருபி என்பதையும் குறிப்பன.

**திருவெண்ணீறு:**

இறைவனது பவளம் போன்ற மேனியில் பால் வெண்ணீறு விளங்குவதாகத் திருநாவுக்கரசு சுவாமிகள் தெரிவித்திருக்கின்றார்கள். அத்திருநீறு முழுந்த முடிபு. சாணம், சலிதாய், சார்பால் கெடுக்கும் தன்மையதாய் இருப்பது அதனைத் தீயால்சுடின் குற்றங்கள் அனைத்தும் நீங்கித்தூய வெண்ணீறு ஆகிறது. அது போல் ஆன்மாக்களும் தம் தன்மைகெடின் தூய பொருளாக விளங்கும் நிலையை அறிவிக்கின்றது. சுட்ட திருநீற்றைச் சுடினும் நிறம் கூட்டப்படினும் தன்வெண்மைத்தன்மையை இழந்து போவதில்லை. அதனை இறைவன் திருமேனியில் தரித்திருப்பது தானும் தன்னைச் சாரும் பொருளும் அநாதி நித்தியமானவை என்பதை அறிவிக்க.

**திருச்செவி:**

இறைவனுடைய திருச்செவிகள் பரநாதம் பரவும் பராகாசம் வடிவானவை. பராகாசம் எங்கும் பரவிய பிரணவவடிவு ஆதலால் உடுக்கையை ஒலித்து அப்பரநாத ஒலியை வலச் செவியில் ஏற்று ஒலி உலக்கை உண்டாக்கிக் கொண்டே இருக்கின்றார். ஆகவே இறைவன் திருச்செவிகள் பராகாச வடிவானவை இடச்செவி மாஒனொலியை ஏற்கின்றது. மாள் அகங்காரவடிவிலான உயிர் உலகத்தை அழிக்கும் ஒலியை உண்டாக்கியது. அதனை அடக்கித் திருச்செவியில் ஏற்று நிற்பது தீய ஒலிகளையும் பராகாசத்தில் ஏற்று அடக்கியாளும் அருளாற்றலை அறிவிப்பதாகும்.

**தோடும் குழையும்:**

வலக்காதில் குழையும். இடக்காதில் தோடும் கூத்தப்பெருமான் அணிந்திருக்கின்றார். அதன் குறிப்பு ஆணொடுபெண்ணாய் அமைந்த இவ்வுலகம் தன்னுரு என்பதையும் வையகம் முழுவதும் தன்வடிவு எனப்படுமே என்பதையும் உணர்த்தும் திருக்குறிப்பாம். வலக்காது துடியோசையாகிய ஒலியுலகப் படைப்புக்கு இடம் தந்து நிற்பதையும் இடக்காது அழிவாற்றலை அடக்கியாளுவதாகிய அருளாற்றலையும் அறிவிப்பதே சிவசக்திகளின் தனித்தன்மை என்பதை விளக்குவதாம்.

**நீலகண்டம்:**

இது இறைவனுடைய அருளாற்றலை விளக்குவது என்ற குறிப்பை

> "கோலாயமாபிக் குரைகடலவாய் அன்றெழுந்த
> ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
> ஆலயம் ஒண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
> மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலே"

என்று மாணிக்கவாசகர் கூறும் திருச்சாழல் பகுதியில் அறியலாம். அன்றியும் அமரர் சாடும் நஞ்சை உண்டும் தாள் சாவாமையால்

அவருடைய சித்தியத்தன்மையையை விளக்கு வதும் ஆகும்.

**துடி:**

ஆனந்தக் கூத்தன் திருக்கரங்கள் நான்கினுள் பின்னதாகிய வலக்கரத்தில் துடி இருக்கிறது. இது அவனது படைத்தல் தொழிலை அறிவிப்பது என்று உண்மை விளக்கம் அறிவிக்கிறது. இதிலிருந்து எழுத்தோசைகள் பிறக்கும் முறையை முன்னரே அறிவித்தோம். இசை ஓசையாகிய சரிகமபதநிஸா என்ற ஸ்வரங்கள் ஏழும் தோன்றின என்று குஞ்சிதாங்கிரிஸ்தவம் என்னும் நூல் தெரிவிக்கின்றது. மேலும் சிதம்பரரகசியத்தில் நாரதமுனிவர் நடராசப் பெருமானை வணங்கி, சப என்னும் இரண்டு ஸ்வரங் களையும், அதிலிருந்து இரட்டிப்பாக இருக்கும் ரிகமதநி என்கின்ற ஸ்வரங்களையும் தெரிந்து கொண்டு பன்னிரண்டு ஸ்வரங்களால் சங்கீத சாஸ்திரத்தைச் செய்தார். இதனால் அறியத் தக்கவை உடுக்களிலிருந்து சப என்னும் இரண்டு பிரகதி ஸ்வரங்கள் உண்டாயின, அவ் விரண்டில் இருந்து ரிகதமநி என்னும் விக்ருதி ஸ்வரங்கள் உண்டாயின என்பதாம். எல்லா ஸ்வரங்களுக்கும் தோற்றுமிடம் என்பது உணரத்தக்கது. (குஞ்சி. சு. 121) மாணிக்க வாசகப் பொருமான் 'நாதப்பறையினர் அன்னே என்னும்" எனக் கூறுவதால் இது நாத வடிவானது.

**தீயகல்:**

இறைவன் இடது கையில் ஏந்தி இருக்கிறார். இது அழிக்கும் செயலை அறிவிப்பது. 'அரன் அங்கிதனில் அறையில் சங்காரம்" என்னும் திருமந்திரமும், 'சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்" என்னும் உண்மைவிளக்கமும் இந்தக் கருத்தை நன்கு விளக்குவன. தீயகல் மாயாகாரியமான தத்துவங்களைக் காட்டி உயிராகிய தீ அவற்றின் வேறானவன் என்ற உண்மைஞானத்தை உணரச்செய்து பாசங்களை நீறாக்குவதால் காமிகாகமம் தீச்சுடரைச் சங்காரம் என்று சொல்கிறது - (காமிக அர்ச்சனாவிதிப் படலம். 336)

**அபயம்:**

பிறவிச் சுழலில் அகப்பட்டு வருந்தி ஓடிவந்த உயிர்களுக்கு அபயம் அளிக்கின்ற கை, இது வலக்கைகளுள் ஒன்று. இதனைத் 'தோயும் திதி அமைப்பில்" என்று உண்மை விளக்கம் காத்தல் தொழிலை உடையதாகக் குறிப்பிடுகின்றது.

**கஜஹஸ்தம்:**

இறைவனுடைய இடக்கைகளில் ஒன்று குறுக்காகத் திரிபதாகை முத்திரையோடு தூக்கிய திருவடியைக் குறித்து நீண்டு நிற்கிறது. இதுவே ஆனந்த நடனத்தில் வரத ஹஸ்தமுமாம். இது பரிபாகமுற்ற ஆன்மாக்களை நோக்கி 'இதுதான் நீ அடையக் கூடிய இன்பமயமான இடம்" என்று சுட்டும் குறிப்பினது.

**பூணூல் :**

இது இறைவனுடைய திருமார்பில் குறுக்காக உந்திவரை தொங்குவது இது மூலாதாரத்திலிருந்து நாபிக்கும் மேலாகக் கிளர்ந்து எழும் குண்டலினியைக் குறிப்பது. திருமந்திரம் "நூலது வேதாந்தம்" எனக் கூறுவதால் வேதத்தின் முடிபாகிய பிரணவ காயத்திரியைக் குறிப்பதுவும் ஆகும்.

**கோவணம்:**

உலகிலுள்ள அறுபத்துநான்கு என்று அறிவிக்கப்படுகின்ற எல்லாவகைக் கலைகளாலும் அறியப்படும் பரஞானக் கலையை நான்கு வேதங்களாகிய அரைஞாணிற் கோத்து அணிந்திருக்கின்றார் என்று மணிவாசகப் பெருமான் கூறுகின்றார். ஆகவே, கோவணம் வேதமும் பரஞானமுமாம்.

**சிலம்பும் கழலும்:**

இறைவன் திருவடிகளை அலங்கரிப்பன இவை இரண்டும் "மறைச் சிலம்பு ஆர்ப்ப" எனச் சேக்கிழார் பெருமான் கூறுவதால் வேதங்களே சிலம்பாக விளங்குகின்றன என்பது அறியப்பெறும். அங்ஙனமே "கள்ள வினை வென்று பிறப்பறுக்கச் சாத்திய வீரக்கழலும், எனக் கழலைப்பற்றிக் கூறும் போற்றிப்பஃறொடை நம்முடைய வினைப்படலத்தை வென்று பிறப்பு அறுப்பது கழல் என்ற தத்துவத்தை விளக்குகின்றது.

**தூக்கிய திருவடி:**

இது உள்வளைந்து, அடிக்கீழிருக்கும் உயிர்களுக்கு ஏற்ற முடிபோல விளங்கி முத்தியின்பத்தை அளிப்பது. "திருவடி நெடுங்

கரை சேர்த்துமா செய்யே" என்று திருவடியையே நெடுங்கரையாகச் சொல்லுகிறார் பட்டினத்துப்பிள்ளையார்.

**ஊன்றிய திருவடி:**

ஒளி இருளில் தோயாது, அதன் வியாபகத்தை அடக்கி நிற்பது போல மாயாதீதமாகிய ஊன்றிய திருவடி முயலகனைத் தீண்டியும், தீண்டாத நிலையில், ஒளியும் இருளும் ஒன்றினால் இப்படித்தான் இருக்கும் என்பதைக் காட்டுகிறது.

**முயலகன்:**

முயலகனை அபஸ்மாரம் என்று ஆகமங்கள் கூறுகின்றன. அவன் ஆணவமலத்தின் அடையாளம். ஆணவமலம் தலையெடுப்பதனாலேயே உயிர்கள் அணு என்னும் பெயரைத் தாங்கி, வினைக்கீடாக அவதிப்படுகின்றான். அதனை வலியொடுக்க இறைவனன்றி ஆன்மாக்களால் முடியவே முடியாது. அதனை அடக்கினால் உயிர்கள் வீடுபெறும் என்ற தத்துவத்தை உணர்த்துகின்றன. ஊன்றிய திருவடியும் அதன்கீழ் விழி பிதுங்க உடல் நெரியக் கிடைக்கும் முயலகனும்.

**திருவாசி:**

"ஓங்காரமே நல் திருவாசி" என்பது உண்மை விளக்கம். கூத்தப்பெருமான் திருவுருவம் திருவைந்தெழுத்து வடிவு; எனவே பிரணவமாகிய திருவைந்தெழுத்தின்றி திருவைந்தெழுத்தை ஒலிப்பது கூடாது. அம்மரபினை அறிவிக்க ஓங்காரத்தின் இடையில் திருவைந்தெழுத்து வடிவமாகக் கூத்தப்பெருமான் விளங்குகிறார். ஆகவே திருவாசி இல்லாத கூத்தப்பெருமான் திருவுருவத்தைத் தரிசித்தலும், வணங்குதலும் வாழ்த்துதலும் கூடாது என்பது மரபு. திருவாசியின் மேல் விளங்கும் சுடர்கள் இருபத்தொன்று. அவைகள் அத்தனையும் ஒளியின் உருவங்கள். ஒளிக்கும் ஒலிக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இரண்டும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதன. ஆதலால் ஒளியிடையில் காணப்படும் ஐந்தெழுத்து வடிவாகிய ஆனந்தக்கூத்தப்பெருமான் விளங்குகின்றார் என்பதை உணர்த்தவேண்டும்.

**கபாலமாலை:**

இருபத்தொன்று பிரம்ம கபாலங்கள் இறைவனுடைய கழுத்தில் விளங்குகின்ற ஆதிவராகத்தின் கொம்பும் அதனோடு கலந்து விளங்குகின்றது. அவை இறைவன் எத்தனையோ பிரம கற்பகங்களையும் ஆதிவராக கற்பங்களையும் கடந்து என்றும் நித்தியனாய் விளங்குபவன் என்பதை உணர்த்துகிறது. குஞ்சி தாங்கிரிஸ்தவர் பிரம்மதேவரின் முகங்கள் முப்பத்திரண்டானதால், கர்த்துருராகங்கள் முப்பத்திரண்டுக்கும் இறைவனே மூல காரணமானவன் என்பதை அறிவிப்பதாகச் சொல்கிறது.

**பாம்பணி:**

சடை, மார்பு, வயிறு, மணிக்கட்டுகள், அரை, கால் இவற்றில் பாம்புகள் அணியாக அமைந்திருக்கின்றன. பாம்பு நோன்பிகளுக்கு எடுத்துக்காட்டு. காற்றையே உணவாக உட்கொண்டு வேறொன்றையும் உண்ணாமல் ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள இருக்கின்ற நிலையில் பாம்பு மிகச்சிறந்தது. அதனால் அதனை அணியாக ஏற்றுப் பெருமான் அன்பர்க்கு அரியன் எளியன் என்பதை உணர்த்துகிறார். மூலாதாரத்தில் உள்ள குண்டலினி சக்தியை நாதமாகக் காண்பது யோக ஆகம நூல்களில் மரபு. அவற்றை ஒட்டி காமிகம் இறைவன் அணிந்துள்ள நாதசக்தி அனைத்துலகையும் நியமிக்கின்றது என்று கூறுவது *(காமிகம் அர்ச்சனாவிதிப்படலம் 338)*

**(பிற பொருள்கள்) திருப்படைகள் திருவாயுதங்கள்**

பலவகையான கூத்தப்பெருமான் திருக்கரங்களில் பரசு, சூலம், பாசம், வாள், அங்குசம், மழு, மணி, கபாலம் முதலிய படைக்கலங்கள் அமைந்து விளங்குகின்றன. அவற்றுள்

பரசு, கோடரிவடிவாய் இறைவன் பாசங்களை சேதிப்பவன் என்பதை உணர்த்துவது.

கபாலம், இறைவன், விருப்பு, வெறுப்பு அற்றவன் என்பதை விளக்குவது.

பாசம் ஆன்மாக்களுக்கு வினைப் போகத்தில் ஆசையை விளைவித்து உயிர்கள் அதிலேயே அழுத்தி அடியாதபடி கரையேற்ற உதவுவது.

ஆகவே இது திருவருட்சக்தி போல்வதால் உயிர்களுக்கு போகமோக்ஷத்தை உதவுவதாகும்.

வாள் இறைவனுடைய அளவிலாவாற்றலை விளக்குவது "ஞானவாள் ஏந்தும் ஐயா"

என மாணிக்கவாசகர் கூறுவதால் உயிர்களுடைய அறியாமையை ஒழிப்பது இதன் செயலாகும்.

அங்குசம், வயப்படாத பொருளை வளைத்து வசப்படுத்தப் பயன்படும் ஆயுதம். இது பாசகன்மங்களிலேயே கிடந்து உழலும் உயிர்களை வலிந்திழுத்து, அவற்றின் ஆணவங்களிற்றை அடக்கியாள்பவர் இறைவன் என்ற குறிப்பை உணர்த்துவது.

மழு பரையின் வடிவாய் பாசச் சேதம் பண்ணுவது என்னும் காரண ஆகமம்.

மணி, ஓங்கார ஒலியுடையது. அதனைத் தாங்கி அவ்வோசையை எழுப்பி உயிர்கட்கு எப்போதும் பிரணவநாத ஒலியைக் கேட்பித்து ஆளும் அருளாற்றலை விளக்குவது.

சூலம் மூன்று கிளையுடையது. அந்த மூன்று கிளைகளும் முக்குணங்களை உணர்த்துவன என்று காமிகாகமம் கூறுகின்றது. இது ஆரணி செனனி, ரோத்யித்ரி என்ற முச்சத்தியின் வடிவாக இருந்து முத்தொழில்களைச் செய்து மும்மலங்களை நீக்கி முத்தியையளிப்பது என்று பௌஷ்கரவிருத்தி கூறுகின்றது.

இவ்வண்ணம் இறைவன் திருவுருவ அமைப்பும் படைக்கலங்களும் தத்துவக் கருத்தை உணர்த்துவனவாகவும் மந்திரமே வடிவாகவும் அமைதலின் அவற்றைக் கலைக் கண் கொண்டு காண்பதை விட ஞானக்கண் கொண்டு காண்பதே கருத்து உயர வழியாகும் என்பது உணரத்தக்க உண்மை.

**திருமதி G. கணேசநாதன்**
**விரிவுரையாளர்**
**கல்வியற் கல்லூரி, கோப்பாய்.**

**சிவத்தைப் பேணிற் தவத்திற்கழகு**
**செய்தவ மறந்தாற் கைதவமாளும்**
**தந்தை சொல் மிக்க மந்திரமில்லை**
**தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை**
**தெய்வம் சீறிற் கைதவமாளும்**
**நேரா நோன்பு சீராகாது**
**நோன்பென்பதுவே கொன்று தின்னாமை**
**புலையுங் கொலையும் களவுந்தவிர்**
**முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்**
**மோன மென்பது ஞான வரம்பு**
**வையந்தோறுந் தெய்வம் தொழு**

**- கொன்றை வேந்தன்**

# விளையாட்டுக்களை அறிவோம்

புராதன காலத்து வரலாறுகளில் இருந்து ஆதிமனிதன் வேட்டையாடுவதைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தான். அவற்றின் அடிப்படைதான் தற்போதைய விளையாட்டுக்கள் என்று கூறலாம். வேட்டையாடும் போது மிருகங்களைப் பிடிப்பதற்கு சில உத்திகள் கையாளப்பட்டன. கூரிய தடிகளைப் பயன்படுத்தினான். அதன் விளைவு ஈட்டிஎறிதல் ஆகியது. இதுபோன்றே தட்டையான கற்கள் குண்டுக் கற்கள் பயன்படுத்தப்பட்டன. அவற்றின் பின்பற்றல் தட்டெறிதல், குண்டுபோடுதல் போன்றன தோற்றம் பெற்றது. இவ்வாறே பாய்தல், தடைதாண்டல், நாட்டுக்குக் குறுக்காக ஓடுதல் என்பன உருவாகின.

விளையாட்டுக்கள் பல உண்டு. அவற்றை வகைப்படுத்திப் பார்ப்போமானால் பெருவிளையாட்டுக்கள், சிறுவிளையாட்டுக்கள், மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றை மேலும் விளக்கக் கூறின்

## பெருவிளையாட்டுக்கள்

பெருவிளையாட்டுக்களை எடுத்து நோக்குமிடத்து அவற்றுள் கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெட், கூடைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், ஹொக்கி, மேசைப்பந்தாட்டம், எல்லே, கபடி, ரகர், டெனிஸ், சதுரங்கம் போன்றவை அடக்கப்பட்டுள்ளன. அத்துடன் மேலும் எம்மத்தியில் பரீட்சயமற்ற விளையாட்டுக்களும் அடங்குகின்றன.

இவற்றிற்கு சட்டவிதிகள் உண்டு. பங்குபற்றும் போட்டியாளர் எண்ணிக்கையுண்டு. மேலதிக ஆட்டக்காரர் உண்டு. விளையாடும் மைதானம் அளவுப்பிரமாணங்களுக்கேற்ப அமைக்கப்படவேண்டும். விளையாட்டிற்கான நேரம் உண்டு. அத்துடன் அவ்வவ் அமைப்புக்களால் அங்கீகரிக்கப்பட்டும் உள்ளது. விளையாட்டு வீரர்களின் நிலைகள், அவர்கள் நின்று விளையாடும் இடம் என்பன கவனத்தில் கொண்டு காணப்படுகிறது.

உதாரணம்:

வலைப்பந்தாட்டத்தை நோக்குமிடத்து 7 வீராங்கனைகள் விளையாடுவார்கள். அவர்களது நிலைகள் ஆங்கில எழுத்துக்கள் மூலம் காட்டப்பட்டிருக்கும். அவர்கள் குறித்த பகுதிக்கு மட்டும் சென்று விளையாட முடியும். அத்துடன் பெருவிளையாட்டுக்களை நோக்குமிடத்து அது ஆரம்பிக்கப்பட்ட வரலாறு, வளர்ச்சியடைந்த விதம் என்பன காணப்படுகின்றன.

## சிறுவிளையாட்டுக்கள்

சிறுவிளையாட்டுக்களை எடுத்துக் கொண்டால் நாமே சிறுவிளையாட்டுக்களை அமைத்துக் கொள்ளலாம். அத்துடன் விளையாடும் மாணவர் எண்ணிக்கை எவ்வாறும் அமையலாம். ஆனால் ஓர் ஒழுங்குமுறை காணப்படவேண்டும். பசுவும் புலியும், குளங்கரை, நாயும் இறைச்சித்துண்டும் என்பன எம் மாணவர் மத்தியில் விளையாடப்படுகின்றன அத்துடன் கிராமிய விளையாட்டுக்களான போர்த்தேங்காய் அடித்தல், வாரோட்டம், வட்டக்காவடி, காளையை அடக்குதல், பல்லாங்குழி போன்றனவும் சிறுவிளையாட்டுக்களாகக் கருதப்படுகின்றன. சிறுவிளையாட்டுக்கள் மாணவர்கள் தம்மைப் பாவனை செய்வதாக அமைவதைக் காணலாம்.

## மெய்வல்லுநர் விளையாட்டுக்கள்

மெய்வல்லுநர் விளையாட்டுக்களை நோக்குமிடத்து இது மேலும் 5 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. அவையாவன. சுவட்டு நிகழ்ச்சிகள், மைதான நிகழ்ச்சிகள், வீதி ஓட்டம், நடைப்போட்டி, நாட்டிற்குக் குறுக்காக ஓடுதல் என்பனவாகும்.

வீதி ஓட்டம் என்பது 5 கி.மீ, 10 கி.மீ போன்ற தூரங்களுக்கு நடாத்தப்படுகிறது. மரதன் ஓட்டம் என்பது 42.125 கி.மீ தூரம் வரை ஓடும் நிகழ்ச்சியாகும். அடுத்து நாட்டிற்குக் குறுக்காக ஓடுதல் நிகழ்ச்சி என்பது வரையறுக்கப்பட்ட தூரத்தினுள் நிலத்தில் ஓடுதல், மலையில் ஏறுதல், நீர் உள்ள இடத்தைக் கடத்தல் போன்ற படிகளாக நடாத்தப்படுகிறது. (அ.து) நடாத்தப்படும் இடத்திற்கேற்ப அவை அமையும். அடுத்து நடைப் போட்டியை எடுத்துக் கொண்டால் 3000மீ, 5000மீ போன்ற நிகழ்வுகள் நடாத்தப்படுகின்றது.

சுவட்டு நிகழ்ச்சிகளை நோக்குமிடத்து

ஓட்டப்பாதைகளில் சுவடுகளில் நடாத்தப்படும் நிகழ்வு ஆகும். இதை மேலும் இலகுவாக்க தூரங்களின் அடிப்படையைக் கொண்டு பிரித்துள்ளனர்.

உதாரணம்:

100மீ, 200மீ, 400மீ, 800மீ ---------------- 10.000மீ வரை அடங்குகிறது. அத்துடன் தடை தாண்டல் ஓட்டமும் இதனுள் அடக்கப்பட்டுள்ளது. மைதான நிகழ்ச்சிகளை எடுத்துக் கொண்டால் போடுதல், எறிதல், பாய்தல் என்று வகைப்படுத்தப்பட்டு அதனுள் நிகழ்ச்சிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விளையாட்டுக்கள் மேற்காட்டியவாறு வகைப் படுத்தப்பட்டுள்ளதுடன் ஆண், பெண் பாலாருக்கென அவை ஒதுக்கப்படுவதுடன் சட்ட திட்டங்களை உள்ளடக்கியும் உலகெங்கும் பல்வேறு வகையான போட்டிகள் (ஒலிம் பிக், பொதுநலவாய நாடுகள், ஆசிய விளையாட்டுகள்) நடாத்தப்பட்டு வருகின்றன.

**திருமதி. ந. சிவசுப்பிரமணியம்**

## உருவத்தைத் தேடாதீர்

இறைவன் நிறம் இல்லாதவன். ஆனால் எல்லா நிறமும் கொண்டவன். அவன் உருவம் இல்லாதவன். ஆனால் அவனே உருவம் அனைத்தையும் படைப்பவன். கள்ளங் கபடமற்ற உள்ளத்தோடு, தூய பக்தியுடன் இறைவனை வணங்கவேண்டும். உருவமற்ற அந்தப் பரம்பொருளை உருவமாகத் தேடி ஏன் அலைகிறீர்கள்?

– கபீர்தாசர்.

## எனது தாய்

அகில உலகங்களுக்கும் தாயாக இருப்பவளே எனது தாய். அவள் அனைத்து அண்டங்களுக்கும் நாயகனாகிய சிவனுக்குப் பிரியமானவளாகவும், பக்தர்களின் கண்களுக்கு மகிழ்ச்சியையும் குளிர்ச்சியையும் கொடுக்கும் நீலமேக சியாமளாவாகவும் தோன்றுகிறாள்.

– பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

# ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒல்லாந்தர் காலம்

போர்த்துக்கேயரைப் போலவே வணிக நோக்கங்கருதிக் கீழைத் தேசங்களுக்கு வந்தவர்கள் ஒல்லாந்தர்கள். கண்டி மன்னன் 2 ஆம் இராஜசிங்கனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து கி.பி1658 ஆம் ஆண்டு ஈழத்திலே போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழிருந்த பிரதேசங்களையும் போர்செய்து கைப்பற்றி, அவர்களின் ஆட்சிக்கு முடிவுகட்டினர். கி.பி1658 ஆம் ஆண்டு தொடங்கிய இவர்களது ஆட்சி கி.பி 1796ஆம் ஆண்டு ஆங்கிலேயர்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றும் வரை நீடித்தது. சுமார் 138வருடங்களை உள்ளடக்கிய இவர்களது ஆட்சிக்காலத்தில் ஈழத்துத் தமிழ் இலக்கியம் பல தனித்துவமான அம்சங்களைப் பெற்று வளர்ச்சிகண்டது. போர்த்துக்கேயர் காலப் பகுதியோடு ஒப்பிடுகின்றபோது இலக்கியத்தில் செழிப்பும் உன்னதமும் வெளிப்பட்டு நின்ற காலப்பகுதியாக விளங்குகின்றது. இதற்கான காரணங்களை ஆராய்வதும் ஒல்லாந்தர் கால இலக்கிய வளர்ச்சியின் தனித்துவத்தைச் சுட்டிச் செல்வதே இக்கட்டுரையின் நோக்க மாகும்.

போத்துக்கேய்ரைப் போலல்லாது ஒல்லாந்தர்கள் தாம் கைப்பற்றியாண்ட பிரதேசங்களில் திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றினார்கள். இதற்கு ஒல்லாந்தர்கள் கம்பனி ரீதியாகச் செயற்பட்டமையே காரணமாகும். ஒல்லாந்த கிழக்கிந்தியக் கம்பனி (V.O.C)தன் ஆளுகையின் கீழ் இருந்த பிரதேசங்களில் இருந்து உச்ச இலாபத்தைப் பெறவேண்டும் என விரும்பிற்று. அதற்காக போர்த்துக்கேயரைப் போல் கண்மூடித்தனமான செயல்களில் அவர்கள் இறங்கவில்லை. நன்கு திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட பொருளாதார அணுகுமுறையை அவர்கள் பின்பற்றலாயினர். வரிகளை ஒழுங்காக அறவிட்டனர். அதுசம்பந்தமான பதிவுகளை மேற்கொண்டார்கள். பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும் என்ற உண்மையை உணர்ந்திருந்ததால் தானோ என்னவோ அவர்கள் சுதேச மக்களின் பொருளாதாரத்தை வளப்படுத்துவதற்கான சில நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். தச்சுவேலை, சாயங்காய்ச்சுதல் முதலான புதிய தொழில் முயற்சிகளை இவர்கள் உருவாக்கினர். நெற்பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்பட்டது. அதற்கு வசதியாகப் பல நீர்ப்பாசன அமைப்புகள் அவர்களால் உருவாக்கப்பட்டன. சந்தைப்படுத்துவதற்கு வசதியாகப் பாதைகள் பல அமைக்கப்பட்டன. இன்றுங்கூட இவை டச்சு வீதிகள் என்ற பெயரிலேயே அழைக்கப்பட்டு வருவதைக் காணலாம். இவற்றை விட புகையிலை, கரும்பு முதலான பயிர்ச்செய்கைகளிலும் இவர்கள் ஆர்வங்காட்டினர். இதன் விளைவாக உள்நாட்டுப் பொருளாதாரம் ஓரளவுக்குச் செழிப்புக் கண்டது. பொருளாதாரரீதியில் ஏற்பட்ட செழிப்பு ஒல்லாந்தர் கால இலக்கியச் செழிப்பின் அடிப்படையாக அமைந்தது.

கத்தோலிக்கக் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப விரும்பிய போர்த்துக்கேயர் மதம் பரப்புவதற்கு வசதியாக சுதேச மதங்களைத் தடை செய்தனர். சமய வழிபாட்டுக்கும், சடங்குகளுக்கும் அவர்கள் காலத்தில் முற்றாக தடைவிதிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஒல்லாந்தர்கள் சுதேசமக்கள் தத்தம் சமயவழிபாடுகளில் ஈடுபடுவதையும் தம் பண்பாட்டைப் பின்பற்று வதையும் தடைசெய்யவில்லை. இவர்களும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவமதத்தைப் பரப்பமுயன்ற னராயினும் போர்த்துக்கேயரைப் போல் வலுக்கட் டாயமாக மக்களை மதமாற்றம் செய்ய முற்படவில்லை. இதனால் மக்கள் சுதந்திரமாக சமய வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் தமது கலாசாரங்களைப் பேணிக்கொள்வதற்கும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன..இக்காலப்பகுதியில் போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட ஆலயங்கள் புனரமைக்கப்பட்டன. புதிய ஆலயங்கள் கட்டி எழுப்பப்பட்டன. மக்கள் மறந்து போய்விட்ட மத அனுஷ்டானங்களையும் விரதங்களையும் நினைவுபடுத்திப் புலவர்கள் இலக்கியங்களைப் படைக்கத் தொடங்கினர். ஆலயங்களின் பெருமைகளை எடுத்துக்கூறி அவற்றின் மீது மக்களைப் பக்தி கொள்ளச் செய்யச் சிற்றிலக்கியங்கள் பலவும் இக் காலத்திலே தோன்றின. சுருக்கமாகக் குறிப்பிடின் போர்த்துக்கேயர் காலப்பகுதியிலே அடங்கிக்கிடந்த சமயப்பற்று வீறிட்டுக்கிளம்பிய காலமாக ஒல்லாந்தர் காலத்தைக் குறிப்பிடலாம்.

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் பாடசாலைகள் கட்டியெழுப்பப்பட்டிருந்தன. போர்த்துக்கேயர் காலத்திலும் கத்தோலிக்க தேவாலயங்களை அண்டி சிறிய பாடசாலைகள் அமைக்கப்பட்டிருந்தமையை அறிய முடிகின்றது. அப்பாடசாலைகளில் கத்தோலிக்க மதகுருமாருக்குத் தேவையான மதஞ்சார்ந்த கல்வியறிவு மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால் ஒல்லாந்தர் பாடசாலைகளில் இதற்கு ஒருபடி மேலாக உலாந்தாமுதலி,

முகாந்தரம் எனும் உள்ளூர் நிர்வாக அதிகாரிகளை உருவாக்கிக் கொள்வதற்கான கல்வியறிவும் வழங்கப்பட்டது. இதனை ஒல்லாந்தர்கால பாடசாலைத் தோம்புகளினுடாக அறிகிறோம். இப்பாடசாலைகளில் கல்விகற்றோரும், அவர் பரம்பரையினரும் இக்கால இலக்கிய முயற்சிகளில் ஆர்வமுடன் ஈடுபட்டனர். இணுவை சின்னத் தம்பிப்புலவர், வில்லவராசமுதலியார், அவர் மகன் நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் போன்றோரை வகைமாதிரியாகச் சுட்டலாம் மேலும் இவர்களே இலக்கிய முயற்சிக்கு ஆதரவு தருபவர்களாகவும் விளங்கினர்.

ஒல்லாந்தர்கால நீதித்துறையும் குறிப்பிடத்தக்கதாயிருந்தது. தமது தேச சட்டமுறைகளை இலங்கையின் வழமைக்கு அமைய ஒல்லாந்தர்கள் மாற்றியமைத்து நடைமுறைப்படுத்தினர். நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. மக்களுக்கு ஓரளவு சரியான நீதி கிடைக்கத் தொடங்கியது. ஒல்லாந்த தேசாதிபதி 'சைமன்" யாழ்ப்பாண மக்களின் தேசவழமையைக் கருத்திற்கொண்டு 'தேசவழமைச் சட்டம்' எனும் நீதி பரிபாலனத்தை அறிமுகம் செய்தார். நீதி ஒழுங்கு என்பன இதனால் நிலைநாட்டப்படவாய்ப்பு ஏற்பட்டது.

அச்சுப் பொறியின் அறிமுகத்தையும் ஒல்லாந்தரே செய்தனர் 'இம்வெறாப்" காலத்தில் (1736) ஈழத்தில் முதன் முதலாக அச்சுயந்திர சாலையொன்று நிறுவப்பட்டது. இவ் அச்சுப் பொறியின் பயன்பாடு ஒல்லாந்தர் காலத்தில் அதிகம் காணப்படாத போதிலும் அடுத்துவந்த பத்தொன்பதாம் நூற்றாண்டு இலக்கிய வளர்ச்சிக்கு அது முதுகெலும்பாக விளங்கிற்று.

ஒல்லாந்தர் காலத்தில் தான் கூழங்கைத் தம்பிரான் என்னும் புலவர் தமிழ்நாட்டிலிருந்து ஈழத்துக்கு வந்து குடியேறினார். ஈழத்து மரபு வழிக்கல்வியின் வளர்ச்சியில் இவரது வருகை குறிப்பிடத்தக்கதொன்றாய் அமைந்தது. கூழங்கைத் தம்பிரானைக் குருவாகக் கொண்ட ஒரு நீண்ட மரபுவழி. கல்விப் பாரம்பரியம் பின்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மரபுவழி இலக்கிய முயற்சிகளின் முன்னின்று செயற்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் முதல் நாற்பதாண்டுகள் வரைக்கும் இப்பரம்பரையின் செல் வாக்கு ஈழத்தில் வலுவாக நின்று நிலைத்தது.

இத்தகைய பகைப்புலங்களின் பின்னணியில் தனித்துவமான இலக்கியப் படைப்புகள் ஒல்லாந்தர் காலத்தில் தோற்றம் பெறலாயின. போர்த்துக்கேயர் காலத்தில் அவர்கள் பின்பற்றிய மதக்கொள்கையால் அமுங்கிக்கிடந்த சுதேச மதப்பற்று விழிப்புற்றகாலம் ஒல்லாந்தர் காலம் என முன்னர் குறிப்பிட்டிருந்தேன். இதனால் இக்காலத்தில் எழுந்த பெரும்பாலான இலக்கியப்படைப்புகள் சுதேசமதச் சார்புடையனவாய் அமையலாயின. சமயமே அவற்றின் உள்ளடக்கமாய் விளங்கிற்று. அழிந்துபோன ஆலயங்களைப் பக்திகொள்ளச் செய்வதும் இக்கால இலக்கியங்களின் முக்கிய பணியாக இருந்தது. பிரதேசங்கள்தோறும் கோவில் கொண்டிருக்கும் இறைவன் மீது அவன் பெருமை சுட்டியும் அவனை வழிபடுவதால் அடியார்கள் பெறும் நன்மை குறித்தும் பல பிரபந்தங்கள் இக்காலத்தில் வாழ்ந்த புலவர்களால் உணர்வு பூர்வமாகப் பாடப்பட்டன. மேலும் மக்கள் மறந்து போய்விட்ட அல்லது அனுஷ்டிக்கத் தவறிவிட்ட விரதங்களின் மகிமையையும் நினைவூட்டி இலக்கியம் செய்யவேண்டிய தேவை புலவர்களுக்கு இருந்தது. இதன் பின்னணியிலேயே தான் ஈழத்தில் விரத புராணங்களின் தோற்றத்தைக் காண்கின்றோம். சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம், பிள்ளையார்கதை முதலான புராண இலக்கியங்கள் இக்காலத்தில் எழுந்தது பற்றியறிய முடிகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகள்கால இலக்கிய வளம் மீண்டும் தளிர்க்க முயன்ற காலப்பகுதியாக இதனைக் கூறலாம். சுவை மிகுந்த இலக்கியப் படைப்புக்கள் இக்காலத்தில் மீண்டும் எழத்தொடங்குகின்றன. ஆனால் ஆரியச்சக்கரவர்த்திகள் காலப் பாரிய இலக்கியப்படைப்புக்களாக இவை விளங்கவில்லை. சிற்றிலக்கியங்களாகவே இவை காணப்படுகின்றன. இதற்கு ஒல்லாந்தர்கால இலக்கிய ஆக்க முயற்சிக்குத் தளமாக விளங்கிய செல்வங்களின் பொருளாதார நிலையே காரணமாகும். ஒல்லாந்தர் காலத்தில் அவர்களது நிர்வாக சேவையில் பணியாற்றி சமூகத்தில் நன்மதிப்பைப் பெற்றிருந்த முதலி, முகாந்தரம் முதலான அதிகாரிகள் தாம்வாழும் பிரதேசத்தில் ஏறத்தாழ ஒரு பிரபு என்ற நிலையைப் பெற்றிருந்தார்கள். இவர்களையும் பரம்பரைப் பணக்காரர்களாக வாழ்ந்துவந்த ஒரு சிலரையும் அண்டியே ஒல்லாந்தர்கால இலக்கிய ஆக்க முயற்சிகள் நடைபெற்றன. மன்னர்களைப்போல ஏராளமான செல்வங்களை வாரி இறைத்து பாரிய இலக்கிய முயற்சிகளில் புலவர்களை நெறிப்படுத்த

இவர்களது பொருளாதார வளம் இடங்கொடுக்க வில்லை. இதனால் சிற்றிலக்கிய ஆக்கமுயற் சிகள் மட்டும் நிகழ்ந்தேறியதைக் காண்கின் றோம்.

முன்பு எழுந்த பள்ளு அம்மானை முதலிய சிற்றிலக்கிய வகைகளோடு இக்காலத்தில் மேலுந் தூது, அந்தாதி, கோவை, ஊஞ்சல், பதிகம், உலா, காதல் முதலான சிற்றிலக்கிய வடிவங்களும் அறிமுகமாயின. ஆரியசக்கரவர்த் திகள் காலத்தில் எழுந்த கதிரமலைப்பள்ளுடன் இக்காலத்தில் எழுந்த பறாளை விநாயகர் பள்ளு, தண்டிகைக்கனகராயன் பள்ளு போன்ற வற்றை ஒப்பிடும்போது இவற்றில் பள்ளுப் பிரபந் தத்துக்குரிய பூரண வளர்ச்சி நிலையை இனங் காண முடியும். கதிரைமலைப்பள்ளில் காணப் பட்ட சுதேசப்பற்று இப்பள்ளு இலக்கியங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது. ஆனால் கதிரைமலைப் பள்ளில் காணப்பட்ட எளிமை யான நடை இவற்றில் இல்லை. தமிழ்நாட்டு பள்ளு இலக்கிய மரபைப் பின்பற்ற அகப் பொருள் செய்யுள்களை இவை இடையிடை கொண்டுள்ளன. தமிழ்நாட்டிலே நாயக்கர் காலத்திலும் அதற்குப் பின்பும் வாழ்ந்த மரபுவழி அறிஞர்கள் அந்தாதிகளைப் பாடி வந்துள்ளனர். இம்மரபைப் பின்பற்றித் தானோ ஏதோ ஈழத் திலும் இக்காலத்தில் சில நூற்றந்தாதிகள் எழுந் தன. கல்வளையந்தாதி, மறைசை அந்தாதி, புலியூர் அந்தாதி என்பவையே அவையாகும் யமகம், திரிபு, மடக்கு அணிகள் பயின்றுவரப் பாடப்பட்ட இவ் அந்தாதிகள் படிப்பதற்கும் சுவைப்பதற்கும் இலகுவானவை அல்ல. காதல், தூது முதலான சிற்றிலக்கிய வடிவங்கள் தமிழ்நாட்டு மரபைப் பின்பற்றிச் செய்யப்பட்ட போதும் அவற்றில் ஈழத்துக்கேயுரிய தனித்து வமான அம்சங்கள் பல இடங்களிலும் வெளிப் பட்டு நிற்கின்றமை கவனிக்கத்தக்கதோர் விடய மாகும்.

நாயக்கர்காலப் புலவர்களைப் போலவே ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த சில புலவர்கள் தம்மைப் புரிந்த பிரிவுகளைப் பாட்டுடைத் தலை வர்களாகக் கொண்டு அவர்களைப் புகழ்ந்தும் பிரபந்தங்களைப் பாடியுள்ளனர். கரவெட்டிக் கிராமத்தில் வாழ்ந்த பிரபுவாகிய மாப்பாண முதலியார் மகன் வேலாயுதபிள்ளையைப் பாட் டுடைத் தலைவராகக் கொண்டு கரவை வேலன் கோவையை நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் பாடி னார். அதேபோல தெல்லிப்பளைச் செல்வந்தர் கனகராயன் முதலியாரின் பெருமையை தண்டி கைக் கனகராயன் பள்ளு நூலில் சின்னக்குட்டிப் புலவர் கூறிச்செல்வதைக் காணலாம்.

ஒல்லாந்தர் காலத்திலேயே முதன் முத லாக வசன நடையிலமைந்த நூல் எமக்குப் கிடைக்கிறது. மாதகல் மயில்வாகனப்புலவர் எழு திய யாழ்ப்பாண வைபவமாலை என்னும் வர லாற்று நூலே அதுவாகும். ஓரளவு வரலாற்று ணர்வுடன் எழுதப்பட்ட இந்நூலில் தரப்படுகின்ற காலக்கணிப்புகளும் சம்பவங்களும் முற்றுமுழு தாகச் சரியென ஏற்றுக்கொள்ள முடியாது. எனினும் பிற்கால யாழ்ப்பாண வரலாறு பற்றிய நூல்களுக்கெல்லாம் யாழ்ப்பாண வைபவமாலை பிரதான ஆதார நூலாக விளங்கி வந்துள்ளது. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் வரலாற்று நூல்களை எழுதவேண்டும் என மேற்கிளம்பிய உணர்வு ஒல்லாந்தர் காலத்திலும் தொடர்ந்த மையையே இது எடுத்துக்காட்டுகிறது.

இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அளவு நாடக இலக்கிய ஆக்கங்களும் நடை பெற்றுள்ளது. கணபதிஐயர் வாளபிமன் நாடகத் தையும், இணுவை சின்னத்தம்பிப் புலவர் அனுவு ருத்திர நாடகம், கோவலன் நாடகம், வசந்தன் நாடகம் என்பவற்றையும் எழுதியதாக அறிய முடிகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் சோதிட, வைத்திய நூல்களின் தோற்றம் முக்கிய மானதொன்றாகக் கருதப்பட்டது. இவ் இலக்கியப் பண்பின் தொடர்ச்சியையும், வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் வகையில் ஒல்லாந்தர் காலத் திலும் சோதிட, வைத்திய நூல்கள் தோன்று கின்றன. இராமலிங்க முனிவர் என்பார் சந்தான தீபிகை என்னும் சோதிட நூலை இக்காலத்தில் எழுதினார். புத்திரப்பேறு, நோய், மரணம், செல்வம், தரித்திரம் இவற்றைச் சோதிட ரீதியாக ஆராய்வதே இந்நூலின் அடிப்படை நோக்காகும். வரதபாண்டிதர் 'அமுதாகரம்" என்னும் விஷகடி வைத்திய நூலை எழுதினார். பரராஜசேகரம், செகராஜசேகரம் போன்ற வைத்திய நூல்களில் விஷகடி சம்பந்தமான சிகிச்சை முறைகள் கூறப் படாமையால், அக்குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு வரத பண்டிதரால் இந்நூல் செய்யப் பட்டிருக்கலாம்.

இக்காலத்தில் தோன்றிய இலக்கி யங்களின் மற்றுமோர் குறிப்பிடத்தக்க பண்பு அவை பிரதேசவாரியாகத் தோற்றம் பெற்றமை

யாகும். நல்லூர், இணுவில் வட்டுக்கோட்டை, திருகோணமலை, கரவெட்டி என தமிழர் வாழ் பிரதேசங்கள் யாவற்றில் நின்றும் அவ்வப்பிர தேசப் புலவர்களால் பாடல்கள் பாடப்படுகின் றன. ஊர்களின் சிறப்பு, அங்கிருக்கும் கோயில் களின் பெருமை முதலானவை அவர்களால் உணர்ச்சி பொங்கப் பாடப்படுகின்றன. பிற்கா லத்தில் தோன்றிய பிரதேசவாரியான இலக்கியப் படைப்புக்களுக்கு ஒருவகையில் ஒல்லாந்தர் காலம் முன்மாதிரியாக விளங்கிற்று எனலாம்.

இங்ஙனமாக ஒல்லாந்தர் காலமானது முன் இருந்து வந்த இலக்கியச் செந்நெறியின் தேட்டமாகவும் தனக்கெனப் பல தனித்துவமான அம்சங்களைக் கொண்டதாகவும் பின்வந்த இலக்கிய வளர்ச்சிக்குப் பலவகையில் வழிகாட்டி யாகவும் விளங்குவதைக் காணலாம். இதனால் ஈழத்தை மையப்படுத்தி முன்வந்த கால இலக் கிய வரலாற்றையும் பின்வந்தகால இலக்கிய வரலாற்றையும் ஆய்வுசெய்தல் நன்மைபயக்கும்.

**ஈ. குமரன்**
**உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்**

## தமிழ் இலக்கிய முயற்சிகள்

கனகசூரியனின் மகன் பரராசசேகரன் (கி.பி.1478) ஆட்சிக் காலத்தில் வடக்கே நிலவிய அமைதியும் செல்வச் செழிப்பும் காரணமாகத் தமிழ் அறிவு வளர்ச்சியுற்றது. யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. சில சிறந்த நூல்களும் வெளியிடப்பட்டன. ஆனால் அவனுக்குப்பின் போர்த்துக்கேயர் தமது ஆட்சியை யாழ்ப்பாணத்தில் நிறுவும் வரை. நாடு முழுவதும் போர்களினாலும் புரட்சிகளினாலும் சீரழிந்திருந்தது. இத்தகைய சூழ்நிலையில் இலக்கிய முயற்சிகள் பெருகமுடியவில்லை.

இக்காலத்திற் சில ஆர்வமூட்டும் தமிழ்ப்படைப்புக்கள் கத்தோலிக்கரால் வெளியிடப்பட்டனவென்பது காலஞ் சென்ற பிதா. எஸ். ஞானப்பிரகாசர், ஓ.எம்.ஐ. என்பவர் "இலங்கைக் கத்தோலிக்க சுயமொழி இலக்கியம்" (இந்நூல் அச்சேறவில்லை) என்னும் நூலுக்காகச் சேகரித்த குறிப்புக்களிலிருந்து அறியக்கிடக்கிறது.

சந்தியோகு மையூர் அம்மானை என்பது இலங்கையிலுள்ள தமிழ்க் கத்தோலிக்க நூல்களுள் மிகப் பழையதாகும். இந்நூலை. 1647 ஆம் ஆண்டில் பிதா யோவா காவல்ஹோ. எஸ்.ஜே. என்பவரால் கிறித்தவராக மதம் மாற்றப்பட்ட "ஆரிய இனத்தின் அறிவு மிக்க பேதுரு" எழுதினார். இப்பாட்டின் நோக்கம் கிளாலியிலுள்ள புனித யேம்ஸ் ஆலயத்தைப் புகழ்ந்து பாடுவதாகும். இந்நூல் 55 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் பல்வேறு வகையான விருத்தப்பா ஒன்றையேனும். பலவற்றையேனும் முதலிற் கொண்டுள்ளது. இது 1930ஆம் ஆண்டில் விளக்கவுரையோ. ஆய்வுக்குறிப்போ யாதும் இன்றி அச்சிடப்பட்டது. அக்காலத்தில் இலங்கையில் வாழ்ந்தவராகக் கருதப்படும் பிதா செபஸ்தியன் பொன்சேகா. எஸ்.ஜே. என்பவரது வேண்டுகோளுக்கிணங்க. 1644 உக்கும் 1650 உக்குமிடையில் பெயர் தெரியாத யாழ்ப்பாணத்து ஆசிரியர் ஒருவர் ஒருவகை நாடகப் பாடலை எழுதியுள்ளார். அது ஞானப்பள்ளு என வழங்கும். பள்ளு. அல்லது உழத்திப்பாட்டு எனப்படும் இலக்கியப்படைப்பு. தமிழ் மொழியில் உள்ள 96 வகைப் பிரபந்தங்களிலொன்றாகும். இது சிந்து. விருத்தம் என்ற இருவகைச் செய்யுள்களைக் கொண்ட ஒருவகைப் பாடலாகும். ஆயர் வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பட்ட உருவகக் கதைமூலம் ஆசிரியர். எருசலேம். உரோமாபுரி என்பவற்றை முறையே விசுவாசமற்ற ஆன்மாவுக்கும் விசுவாசமுள்ள ஆன்மாவுக்கும் அடையாளமாகக் கொண்டு. இந்நகரங்களை ஆண்டவன் வழிநடத்திய முறையை விபரிக்கிறார். இது. அழகான சிறந்த மொழியில் எழுதப்பட்டுக் கற்பனை வளஞ்செறிந்ததாய் இருப்பதால். தமிழார்வம் உடையோர்க்கு இரசனை மிகுந்ததாகக் காணப்படும். 18ம் நூற்றாண்டின் இறுதியில் தெல்லிப்பளை அருளப்பபூலோக சிங்க முதலியாரால் பார்லாம். யோசபட் என்பவர் கதையைப் பொருளாகக் கொண்டு திருச்செல்வர் காவியம் எழுதப்பட்டது. இது 23 படலங்களையும் 1946 விருத்தங்களையுங் கொண்டது. நடையிலும். அமைப்பிலும் இது பண்டைச் செந்தமிழ்க் காவிய வகையைச் சேர்ந்தது.

*இலங்கையிற் கல்வி*
*நூற்றண்டுவிழா மலர்*

# "பண்புடையார் மாட்டு உலகு"

திருக்குறள் தனிமனித வாழ்வு, சமுதாய வாழ்வு, நாட்டுவாழ்வு, ஞானவாழ்வு அனைத்தும் தழுவிய வாழ்வியல் நூல் அது கற்பனையானது அன்று. வறட்டுக் கொள்கை பேசும் நூலும் அல்ல. அந்நூலை நடைமுறைக் கண்ணோடு பார்க்க வேண்டும். தினசரி நிகழ்ச்சிகளோடு உராய வேண்டும். திருக்குறள் ஒரு உயிர் நூல் என்பது மெய்ப்பட வேண்டுமாயின், வள்ளுவர் குறள்களைக் கால நடப்புகளோடு பொருத்தி எழுதவும் சொல்லவும் விளக்கவும் வேண்டும். இது செய்தற்கு நாம் அஞ்சுகின்றோம். செய்யப்புகின் கருத்து வேறுபாடு தோன்றிப் பூசல் பொங்கி எங்கே திருக்குறளின் பெருமை போய்விடுமோ என்று தயங்குகின்றோம். இவ்வச்சம் தவறானது, பயனற்றது. ஆதலின் இக்கால நடப்புக்களின் மேல் திருக்குறளைச் செலுத்திப் பார்ப்போம்.

அறம்,பொருள், இன்பம் என்று திருக்குறள் முப்பால் பேசுகிறது. எனினும் பொருட்பாலே எழுபது அதிகாரம் கொண்ட பெரும்பால். அது பல பொருள் கூறுமாயினும் மெய்யாகக் கூறின் பொருட்பால் ஓர் அரசியல் பால் வள்ளுவரின் அரசு மக்களுரிமை சான்றது. அடிமைத்தனத்தை வெறுப்பது, நல்லரசு நாடுகிறது. நல் ஆட்சியாளரை வேண்டுகிறது. செங்கோலரசே திருக்குறள் வேண்டும் அரசு.

ஆட்சியாளர்கள் முறை செய்து காப்பாற்றுவாராயின் மக்கட்கு இறையாவார்கள். இத் தன்மையில்லாதவர்கள் தன் செயலால் தாமே கெடுவர். அவன் குடிமக்கள் அழுதகண்ணீர் படையாகி அவனை அழிக்கும். அவனது ஆட்சி பேயாட்சியாகும். கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகக் கருத்துக் கூறுவதற்கு குறள் என்றும் பின்வாங்கியதில்லை. ஆட்சியாளரே தனிப் பெருந்தலைவர்கள் அல்லர்!. சிறந்த பெரியவர்கள், ஆன்றோர்கள் உளர். அவர்களைத் தழுவித்தான் ஆட்சியாளர்கள் ஆட்சிபுரிய வேண்டும்

"ஏந்திய கொள்கையான் சீறின் இடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும்." (குறள் 899).

தவச்செல்வம் மிக்க பெரியோர்கள் வெகுண்டால், ஆட்சியாளர் இடையிலே நிலை கெட்டுப் பதவியை இழந்து வருந்துவர் என்பது வள்ளுவர் கருத்து.

திருவள்ளுவர் பெண்ணின் பண்பும், கடமையும் பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் சிந்தனைக் குரியவையாகும். பாரதிக்கு முன்னரே பெண்களுக்கு சுதந்திரம் வழங்க வேண்டும் என்று ஆணித்தரமாக கூறிய பெருந்தகை வள்ளுவர். பெண்கள் தம் கற்பு நெறியை தாமே காத்துக் கொள்ள வேண்டும். உற்றார் உறவினர் பாது காத்துக் கொடுப்பர் எனக் கருதக்கூடாது. நெஞ்சத்து உறுதியால் எதற்கும் முகம் கொடுக்கும் தன்மையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தன்மன உறுதியால், தன்னைக்காத்து, கொண்டவனைப் போற்றி இருவர் புகழையும் காத்து எவ்வகையிலும் மனச்சோர்வு அடையாமல் தனக்குத் தானே காவலாக இருக்க வேண்டும் என்பது வள்ளுவர் நெறியாகும்.

"சிறைகாக்கும் கற்புளவன் செய்யும் மகளீர்
நிறைகாக்கும் கற்பே தலை" (குறள்57)

தமிழ் இளைஞர்களுக்கு வள்ளுவர் கூறியுள்ள கருத்து இக்கால சூழலுக்கு அத்தியாவசியமானவையாகும். தூங்காமை, துணிவு, கல்வி இம்மூன்றும் எதிர்கால நாட்டு மன்னர்களாகிய இளைஞர்களுக்கு அவசியமன்றோ! அந்த இளைஞர் இன்று கலாசார சீரழிவு காரணமாக ஒழுக்க கேடுகளுக்கு உட்பட்டு வாழும் வழியறியாது தடுமாறுகின்றார்கள். செய்யக் கூடியவற்றைக் கூட செய்யாமல் வீணே தெருச்சுமைகளாக அலையும் இளஞ்சமூகம் சிந்தித்து திருந்த வேண்டும். நல்லவற்றை கசடறக்கற்று அதன்படி நிற்கப் பழகிக்கொள்ள வேண்டும். காலத்தை பயன் செய்யாவிடின் விளைவு இருள் சூழ்ந்த வாழ்வாக அமைந்துவிடும்.

"செயற்கரிய செய்வார் பெரியார். சிறியர்
செய்யற்குரிய செய்க லாதார்" (குறள் - 26)

வள்ளுவர் கல்வித்திட்டம் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

"கல்லாதவரின் கடை என்ப கற்று அறிந்தும்
நல்லார் அவை அஞ்சுவார்." (குறள் - 729)

மேடைக்கு அஞ்சும் பெரும் படிப்பாளியைப் படியாதவனினும் கடையென்று இகழ்கின்றார். வள்ளுவர் பேடிக்கும் வாளுக்கும் என்ன தொடர்பு? இவனுக்கும் நூலுக்கும் என்ன தொடர்பு? என்று இழிவுபடுத்துகின்றார். இத்திருக்குறள் கருத்து நூற்கல்விக்கும் மேடைப் பேச்சுக்கும் ஓர் இணைப்பை வற்புறுத்துகிறது. நன்கு கற்றவனுக்கு அதனைச் சொல்லவும்தெரிய வேண்டும். தமிழ் மக்கள்தம் இலக்கியங்களை மதிக்கும் நல்ல பண்பையும், அவற்றைக் கற்கும்

ஆர்வத்தையும் இழந்துவிட்டார்கள். இலக்கியங்களைக் கேட்கும் ஆர்வமும் இல்லாது போவதைக் காணமுடிகிறது. இத்தன்மை அவற்றைச் சூழலறிந்து சொல்வார் இல்லை என்பது பெருங்குறையாகும். இக்குறைக்கு மேற்குறிப்பிட்ட திருக்குறள் கூறும் காரணம் கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஐயமற அறிந்த அறிஞர்கள் அவையில் தான் ஆழ்ந்து கற்றவரின் கல்வி, திறம்படத் திகழும். எனவே கற்றவர்கள் மேடைக்கு வந்து தாம் கற்றவற்றை சொல்ல வேண்டும். மேடையில் பேசும்பொழுது நாம் உணர்ந்ததை, கேட்ப வரும் உணரும்படி பேசவேண்டும். இதுதான் பயிர்கள் வளருவதற்கு பாத்தியில் நீர் ஊற்றுவது போல அமையும். திசைமாறிச் செல்லும் சமூகத் திற்கு வழிகாட்ட வள்ளுவர் காட்டும் கல்வி நெறி இதுவாகும்.

கல்வியை வாயால் வழங்க பிறர் செவியால் ஏற்கின்றனர். கல்விச் செல்வம் ஏனையோர்க்குச் செவிச்செல்வம் ஆகின்றது. "செல்வத்துச் செல்வம் செவிச்செல்வம்" என்கிறார் ஐயன். அச்செல்வம் கல்விச் செல்வம் உடையோர் வழங்கினால்தான் வரும். இத்தகைய கருத்துக்களைக் கொண்டிருந்ததனால்தான் வள்ளுவர் அவைக்கு அஞ்சாமல் குறள்நெறியை நமக்குத் தந்துள்ளார். நாடெங்கும் நல்ல கல்வி படர வேண்டும் எனும் நோக்கமுடையவராக இருந்ததனால் கல்வி பரப்பும் பொறுப்பு கற்ற ஒவ்வொருவரையும் சாரும் என்று வலியுறுத்து கின்றான். இன்று புத்தகப் பூச்சிகளாக பெயருக்குப் பக்கத்தில் பட்டத்தை மட்டும் குவித்து சுய கல்வி கற்று நிறைவு காண நினைப்பவர்கள் வள்ளுவர் நெறியை அறிதல் வேண்டும்.

கற்றல், பேசுதல் மட்டுமல்ல எழுதுதலும் வள்ளுவர் கல்வித்திட்டத்தில் அடங்கும். செம்மையாக நூல்களை எழுத வேண்டும் என்பது வள்ளுவர் அவா! சொல்லுவதால் பிறர் பயனடையது போல் நல்ல எழுத்துக்களும் பயனை விளைவிக்கும். எழுத்து என்பது பக்கச் சார்பற்ற கருத்துக்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். வள்ளுவரின் எழுத்து 2000 ஆண்டுகள் கடந்தும், சொல்லப்பட்டும், எழுதப் பட்டும் வருவதற்குக்காரணம் எக்காலத்தும் பொருந்தும் நடுவுநிலையைப் பேணியதுதான் என்பதை அறிய வேண்டும்.

எனவே அறிஞர் பெருமக்கள் கற்றல், பேசுதல், எழுதுதல் எனும் மூன்று அடிப்படை கொண்ட கல்வித்திட்டத்திற்குரியவராகி சமூகத் திற்கு வழிகாட்டவேண்டும் என்பது குறள்நெறிக் கல்வித்திட்டமாகும்.

இன்றைய உலகத்தில் "பணம் இல்லாவிடின் பிணம்" என்ற வாசகம் அனைவரினாலும் உச்சரிக்கப்படுகிறது. பெருமுயற்சி செய்து அற வழியில் செல்வம் ஈட்டுவதை வள்ளுவர் வரவேற் கிறார். நிலையில்லாதது செல்வம், ஆகையால் அதனைப் பெற்றால் உடனே நிலையான அறச் செயல்களைச் செய்துவிடல் வேண்டும். சில ரைக்காணும் பொழுது "அவனுக்கென்ன கொடுத்துவைத்தவன்" எனக் கூறுகின்றோம். ஆனால் என்ன கொடுத்து வைத்தான், எப்பொழுது கொடுத்து வைத்தான், யாரிடம் கொடுத்து வைத்தான் என்று சிந்திப்பதேயில்லை. அரிய மானிடப்பிறவியை இறைவன் வழங்கியது ஆன்ம ஈடேற்றத்திற்காக என்பதை உணரவேண்டும். பிறவியின் பயனை அடைவதற்கு அறச்செயல் களில் ஈடுபடவேண்டும். இன்றைய சூழலில் ஏழைக்கு உணவும் கல்வியும் வழங்குதல், ஆதரவற்ற அனைத்து பிரிவினருக்கும் உதவுதல் போன்றவை முதன்மையான அறச்செயல்கள் ஆகும். இவற்றைச் செய்பவர்கள்தான் மறுபிறவி யில் கொடுத்து வைத்தவர்கள் ஆவார். இதை விடுத்து குருவி கூடுகட்டுவது போல் செல்வத் தைச் சேர்த்து அதர்மவழியில் செயல்பட்டால் கூடுகலைவது போல், உன் செல்வம் இருந்த இடம் தெரியாமல் மறையும் என்று எச்சரிக்கை செய்கிறார் வள்ளுவர்.

"கூத்தாட்டு அவைக் குழாத்தற்றே. பெருஞ்
செல்வம்.
போக்கும் அது விளிந்தற்று" (குறள்- 332)

இன்றைய காலத்தில் மனிதர் ஒருவரோடு ஒருவர் ஒத்துப் போகின்றனர். இதற்குக்காரணம் இருவருக்கும் காணப்படும் சுயநலம்தான். உள்ளத்தில் நிறைந்திருக்கும் பண்புப் பொருத்தத்தில் ஒத்துப்போகிறோமா? என்று சிந்திக்க வேண்டும். பண்புடைய பெருந்தகைகள் ஒருசிலர் இவ்வுலகில் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்று அழியாமல் இருக்கிறது. இல்லை என்றால் இந்நேரம் அது மண்ணோடு மண்ணாகியிருக்காதா?

"பண்பு உடையார்ப்பட்டு உண்டு உலகம்.
அது இன்றேல்
மண் புக்கு மாய்வதுமன்." (குறள் - 996)

இரா. செல்வவடிவேல்

சக்தியின் திருவுருவாய்,
யாழ் இந்து மகளிர் கல்லூரித் தாயின்
"சக்தி" இதழ்
சிறப்பாக வெளிவர எமது நல்வாழ்த்துக்கள்

# யாழ் நகரில்

ஸ்ரீ புதுமையும்



ஸ்ரீ எழிலும்

ஸ்ரீ பொலிவும்

## கொண்ட

ஸ்ரீ பட்டு,

ஸ்ரீ பருத்தி

ஸ்ரீ ஜவுளி ரகங்கள்

மற்றும் மணமக்கள் முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
வாங்குவதற்கு நாடுங்கள்

# சிவ கணேசன் ஸ்ரோர்ஸ்

41, பெரிய கடை, - யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 021 - 222 2063

"சக்தி" மலர் சிறக்க வாழ்த்துகிறோம்.

**மங்கள வைபவங்களுக்கு ஏற்ப**



பட்டுப் புடவைகள்,

பட்டு வேட்டிகள்,

உள்நாட்டு - வெளிநாட்டு



சாறி வகைகள்,

பிளவுஸ் துணிகள்,

பஞ்சாபி சூட்,

ஸ்கேட் அன் பிளவுஸ்

**ஆடவர்களுக்கேற்ப**

சேட்டிங் - சூட்டிங்,

ரீசேட்,

றெடிமேட் ஆடைகள்

மற்றும் பல வண்ண ஆடைகளைத் தெரிவு செய்ய

# ஜவுளி உலகின் முன்னோடிகள்

# ஜீ.எஸ்.லிங்கநாதன் அன் கோ.

*13,14, பெரிய கடை,* *யாழ்ப்பாணம்.*

# யாழ்ப்பாணத்தில் கிராமியதெய்வ வழிபாட்டு மரபில் வீரத்தெய்வ வழிபாடு பற்றிய ஒருநோக்கு

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வழிபாட்டு மரபுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. வேதங்கள் ஆகமங்கள் வழியமைந்த வழிபாடுகள்
2. பாரம்பரிய அல்லது கிராமிய வழிபாடுகள்

வேதாகம வழிபாடுகள் வேதாகம விதிகளுக்குட்பட்டு அமைவன. இவ்வழிபாட்டு மரபில் ஆகமங்களில் கூறப்பட்டவாறு பிரதான மூல மூர்த்தி அமைந்திருக்கும். பெரும்பாலும் அந்தண சிவாச்சாரியாரே மூலமூர்த்திக்கு அபிஷேகம் நிகழ்த்துவார். இம்மை பற்றிய சிறப்பான நல் வாழ்வு மாத்திரமன்றி மறுமைபற்றிய சிந்தனைக் கும் மதிப்பளித்து இவ்வழிபாடு நடத்தப்படும் பாரம்பரிய வழிபாட்டு மரபுகளில் இவ்வுலகின் சிறப்பான வாழ்வு மட்டுமே நோக்கமாக அமை வதைக் காணலாம்.

**பாரம்பரிய வழிபாட்டு மரபுகளை இரு பிரிவாக பிரிக்கலாம்.**

1. வேதாகம விதிகளுக்கு அமையாத வழிபாட்டு மரபுகள் அல்லது பாரம்பரிய வழிபாட்டு மரபுகள் ஒருவகையின. இவற்றை கிராமிய வழிபாடுகள், சிறு தெய்வ வழிபாடுகள் என்றும் கூறுவர்

யாழ்ப்பாணத்தில் கற்கள் மரங்கள் போன்ற பல்வேறு இயற்கைப் பொருட்களும், வாள் சூலம், பொல்லு முதலாய ஆயுதங்களும் கயிறு சிலம்பு முதலாய பொருட்களும் இவற்றுடன் பாம்பு போன்ற உயிரினங்கள், இவை மட்டுமன்றி பல்வேறு பாரம்பரிய வழிபாட்டுத் தெய்வங்களும் பாரம்பரிய வழிபாட்டு முறையில் வழிபடப்பட்டு வருகின்றன.

உதாரணமாக:

அண்ணமார்,நாச்சிமார், பெரியதம்பிரான், காத்தவராயர், காடேறி, பூதவராயார், மாடன், மாரியம்மன், பேச்சியம்மன், கொத்தியாத்தை, பிடாரியம்மன், அடுப்பு நாச்சியார் இவர்களைக் குறிப்பிடலாம்.

2. பாரம்பரிய வழிபாட்டு மரபுகளில் மற்றுமொரு வகையும் உண்டு. ஆகமத்தில் குறிப்பிட்டு வந்த தெய்வங்களுக்கு கிராமிய மட்ட வழிபாடு நடத்தப்பட்டு வந்தமையும் அத்தகைய வழிபாட்டு முறைகள் இன்றும் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பதனையும் குறிப்பிடலாம். பிள்ளையார், வைரவர், காளி, வீரபத்திரர், ஞானவைரவர் போன்ற தெய்வங்களை இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

அந்நியர் ஆட்சியில் இந்து மதத்தைப் பாதுகாத்து, பிறர் அறியாது மறைவாக வழிபாட்டை மேற்கொள்ளஇத்தகைய வழிபாட்டுத் தெய்வங்கள் உதவின. எந்நேரத்திலும் எவ்விடத்திலும் வழிபட ஏற்ற தெய்வங்களாக இவை விளங்கின. தெருவோரம், வயல்வெளிகளிலும், கிணற்றடிகளிலும்,தோட்டம் துரவுகள் கிணற்றோரங்களிலும், விருட்சங்களின் கீழும் இத்தகைய தெய்வங்கள் வழிபடப்பட்டு வந்தமைக்கு மற்றுமொரு காரணமுமிருந்தது. கல்விவசதி எழுத்தறிவைப் பெற்றதால், உயர் குலத்தார் ஆகிய மக்கள் வழிபட்ட தெய்வங்களைத் தாமும் தமது வழிபாட்டில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சாதாரண பாமர மக்கள் நினைத்தமையையும் காரணமெனலாம்.

பாரம்பரிய தெய்வங்களிற்பல வீரவழிபாட்டின் மூலமும் பயத்தின் மூலமும் தோற்றம் பெற்றன என்பது பல அறிஞர்களின் கருத்தாகும். அண்ணமார், காத்தவராயர், நாச்சிமார் முதலி, கன்னிமார், கண்ணகியம்மன் போன்ற தெய்வங்களின் தோற்றத்தினை வீர வழிபாட்டில் இருந்து ஏற்பட்டதாகக் குறிப்பிடலாம். மரணித்தவர் சார்பாக எழும் நன்றி உணர்வும் பய உணர்வும் இன்றும் இவ்வழிபாட்டு முறைகள் தொடர்வதற்கு காரணமாக உள்ளன. கிராமிய தெய்வவழிபாட்டில் வீரதெய்வ வழிபாட்டுடன் தொடர்புடைய வரலாற்றுச் சம்பவங்களை அறிவதும், இவ்வழிபாடு தொடர்வதற்கான இன்றைய நிலைமைகளை ஆராய்வதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் "வாழ்வும் வளமும்" என்ற தமது நூலில் கிராமிய தெய்வ வழிபாடு பற்றிக் குறிப்பிடுகையில் பின்வருமாறு குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது. "சங்ககாலம்தொட்டு தமிழ்மக்களுக்குள் வீரவழிபாடு இருந்து வந்துள்ளது. சங்க நூல்களில் காணப்படும் நடுகல் வணக்கம் இங்கு குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில் எழுந்த

அணண்மார், நாச்சிமார், மதுரை கண்ணகை யம்மன் முதலிய தெய்வவழிபாடுகள் வீரவழி பாட்டின் கீழ் அடங்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

**கண்ணகி வழிபாடு**

வீரவழிபாடு என்ற அடிப்படையில் தோற்றம் பெற்றதாக குறிப்பிடப்படும் கண் ணகி வழிபாடு ஈழநாட்டிற்கு எக்காலப் பகுதி யில் கொண்டு வரப்பட்டது என்பதற்கு பல ஐதீகங்கள் காணப்படுகின்றன. அரசியல் நிகழ் வுடன் தொடர்புபட்ட ஐதீகங்களும் உள்ளன.

தமிழ்நாட்டிலும்,யாழ்ப்பாணத்தில் அர சாட்சி செய்த ஆரியச்சக்கரவர்த்திகள் காலத் திலும் அரசரும் மக்களும் கண்ணகியை வெற் றித் தெய்வமான கொற்றவையின் ஆற்றலை உடைய வீரத்தெய்வமாகவே வழிபட்டனர்.

கண்ணகையம்மன் பாண்டிநாட்டை எரித்தபின்னர் ஐந்துதலை நாகமாக உருவெ டுத்து மதுரையிலிருந்தும் தெற்கு நோக்கிச் சென்று முதலில் நயினாதீவை அடைந்து பின்னர் வட்டுக்கோட்டைப் பகுதியில் சுருட்டுப் பனை வழியாக சீரணி, அங்கணம்மைக் கடவை, சுருவில் முதலிய இடங்களில் தங்கினாள் என்றும், அவ்வாறு ஐந்துதலை நாகமாக மாறி ஊர்ந்து சென்ற பகுதியே வழுக்கியாற்றுப் பள்ளமாக மாறியது என்றும் நம்புகின்றனர். இவ்வாறு அமைந்த கோயில் களில் எல்லாம் பாம்பின் கோயில்களும் அம்மன் கோயில்களும் தோன்றியுள்ளன எனவும் ஆதாரம் காட்டிக் கூறுவர். நயினாதீவில் இருந்து புறப்பட்ட கண்ணகை யம்மன் மட்டுவில், கச்சாய் வழியாக நாகர் கோவிலை அடைந்தாள் எனவும், சிலர் புளியம்பொக்கனையை அடைந்து, முல்லைத் தீவிலுள்ள வற்றாப்பளையை அடைந்தாள் என்றும் கூறுவர். இத்தகைய ஐதீகக் கதைகள் மந்திகை அம்மன் ஆலயத்தில் வைகாசி பூரணையில் படிக்கப்பட்டுவரும் கோவலனார் கதையிலும், பன்றித்தலைச்சி அம்மான் ஊஞ் சல்பாட்டிலும் கூறப்படுகின்றது

இலங்கையில் கண்ணகி வழிபாடு தொடர்பாக அரசியல் நிகழ்வுடன் தொடர்பான ஐதீகக் கதைகளுமுள்ளன. சேரன் செங்குட் டுவன் கண்ணகிக்குப் பெருவிழா எடுத்த போது அவர்கள் அழைப்பினை ஏற்று கஜபாகு தென்னாடு சென்று அவ்விழாவில் கலந்து கொண்டதோடு அவனால் கண்ணகி வழிபாடு ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்ற சம்பவத்தை சிலப்பதிகார வரந்தரு காதையும், இராஜாவளி, பூஜாவளி முதலிய சிங்கள வரலாற்று நூல்களும் உறுதி செய் கின்றன. கஜபாகு மன்னன் சம்புத் துறைமுகம் (மாதகலுக்கு அருகிலுள்ள திருவடிநிழல்) வழியாக வந்திறங்கியபோது அங்கனம்மைக் கடவை என்னும் இடத்திலே ஒரு கண்ணகி கோயிலைக் கட்டினாரெனவும், முதலில மைந்த கண்ணகி கோயில் இதுவென்றும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார். கஜபாகு நாடெங்கும் கண்ண கையம்மன் கோயிலைக் கட்டவேண்டும் எனக் கட்டளை இட்டதால் ஆரியச்சக்கரவர்த்தி காலத்தில் கண்ணகி கோயில்கள் பல கட்டப் பட்டன என்ற கருத்தை கணேசையர் அவர் கள் தருகின்றார்.

இதுவரை நாம்கண்ட ஐதீகக் கதைகள் தென்னக வரலாற்றில் அரசனுடன் நியாயம் கேட்டு வெற்றி பெற்று மதுரையை எரித்த கண்ணகி வழிபாட்டின் தொடர்ச்சியாகி, பாம் புடன் தொடர்புபட்ட வழிபாடாகி இலங்கை யின் பல்வேறு பகுதிகளிலும் பரவியது என்ப தனை, அறிவிப்பனவாக உள்ளன. அங்கனாம் மைக்கடவை, சுருவில், சீரணி, கனை யோடை, வற்றாப்பளை, புலோலி முதலாய இடங்களில் கண்ணகை வழிபாடு, ஆரம் பத்திலிருந்தேயி ருந்தது என்பதும் அங்கருந்த ஆலயங்கள் நாகதம்பிரான் ஆலயங்களாகவும், அம்மன் ஆலயங்களாகவும் பிற்காலத்தில் மாறின என்பதும் தெளிவாகின்றது.

யாழ்ப்பாணத்தில் திருவடிநிலை தொட க்கம், மட்டக்களப்புத் திருகோணமலைவரை கடற்கரையோரமாகவே கண்ணகி வழிபாடு பரவியது எனலாம். வாணிபம் செய்ய வந்தவர் களின் குலதெய்வமாக கண்ண்கி விளங்கிய மையே இதற்குக் காரணமெனலாம். ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்திலே சிங்கள மன்ன ருக்கும் இவர்களுக்கிடையேயான நல்லெண் ணத் தொடர்புகளாலும், கண்ணகி வழிபாடு, ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்திலே யாழ்ப்பா ணத்திலே பரந்து செல்வாக்குப்பெறலாயிற்று.

19ம் நூற்றாண்டுவரை செல்வாக்குப் பெற்றிருந்த கண்ணகி வழிபாடு, ஆறுமுக நாவலர் அவர்கள் கிறீஸ்தவ சமயத்தினின்றும் சைவத்தைப் பாதுகாக்க எடுத்த நடவடிக் கைகளின் போது சிறுதெய்வ வழிபாட்டைக்

கண்டனம் செய்ய முற்பட்டவேளையில் கண்ணகி வழிபாடும் பெரிதும் கண்டனத்திற்குள்ளாகியது. இதனால் கண்ணகி ஆலயங்கள் சமஸ்கிருத மயமாக்கலுக்குட்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்பட்டது. இவை இராஜ இராஜேஸ்வரி அம்மன், நாகபூசணி அம்மன், சிவகாமி அம்மன், நாகேஸ்வரி அம்மன் கோயில்களாக தரம் உயர்ததப்பட்டு ஆகம முறைக்குட்பட்ட கோயில்களாக மாற்றமடையலாயின. எனினும் பருத்தித்துறை மாதனை கண்ணகை அம்மன் ஆலயம் இன்றும் பண்டைய வழமையின் சின்னமாக உள்ளது. இங்கும் பொங்குதல், பறைமுழக்கம் செய்து படையல் வைத்தல், நேர்த்தியின் பொருட்டு பொன் செம்பு முதலிய உலோகங்களால் கண் உருவம் செய்து கொடுத்தல், முதலாய வழக்கங்கள் காணப்படுகின்றன. கோப்பாய் கண்ணகை அம்மன் ஆலயத்தில் கிராமிய மட்ட வழிபாட்டு நடைமுறைகள் காணப்பட்ட போதும், அங்கு கண்ணகியை சக்தியின் வடிவமாக "மாதுமை கண்ணகை" எனக் குறிப்பிட்டிருக்கக் காணலாம். அதேவேளையில் சிவகாமி அம்மனாக மாற்றம் பெற்று கொடியேற்றத் திருவிழா நடைபெறுவதையும் காணலாம்.

வீரவழிபாட்டின் அடிப்படையில் தோற்றம் பெற்ற கண்ணகி அம்மன் யாழ்ப்பாணச் சாதியமைப்பின் உயர்குடியினராலும், இடைநிலைச் சாதியினராலும் வழிபடப்பட்டு வந்துள்ளது. இன்று வெப்பத்தைத்தணித்து நோய் நீக்கும் தெய்வம், மழையினைத் தரும் தெய் வம் என்ற நோக்கங்களினாலும் வழிபடப்பட்டு வருவதனைக் காணலாம். சிலப்பதிகார உரையும் பாண்டிய மன்னன், வெற்றிவேற் செழியன் நாட்டில் வெப்பம், வரட்சி என்பன ஏற்பட்டமைக்குக் காரணம் கண்ணகியின் கோபமே எனக்கருதி பெருவேள்வி செய்து விழா எடுத்து கண்ணகிக்கு சாந்தி செய்ததால் மழை பெய்ததாகக் கூறப்படுகிறது. இதன் தொடர்ச்சியினை யாழ்ப்பாணத்தில் இன்றும் காணலாம். கண்ணகி அம்மன் ஆலயச் சூழலில் வாழும் மக்கள் பொக்கிளிப்பான், சின்னமுத்து, கண்நோய் போன்ற வெப்பக்காலத்து நோய்கள் கண்ணகியின் கோபத்தால் வருகிறது என நம்புகின்றனர். இந் நம்பிக்கையால் மக்கள் கண்மடல் செய்து கொடுத்தல், பட்டுச் சேலை கொடுத்தல், தயிர்ப்பாளையம் நீர்ப்பாளையம் வழங்கல் போன்ற மரபுரீதியான சடங்குகள் நடைபெற்று வருகின்றன. திருமணம் நிறை வேறியபின்பும், கோயிலுக்கு குழந்தையை முதலில் எடுத்துச் செல்லும் போதும் பொங்கல் செய்து வழிபடுவர்.

**நாச்சிமார் வழிபாடு:**

யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் உள்ள கிராமிய வழிபாடுகளில் ஒன்றாக நாச்சிமார் வழிபாடு விளங்குகின்றது இத்தகைய வழிபாடு வைதீக சமயத்திற்குப் புறம்பானது. வீரவழிபாட்டின் அடிப்படையில் தோற்றம் பெற்றது. நாச்சி என்றால் வழிகாட்டுபவள் என்பது பொருளாகும். வன்னிக் குடும்பப் பெண்ணை நாச்சிமார் என்று அழைப்பர்.

நாச்சிமார் வழிபாடு தொடர்பாக பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் பழைய ஓட்டுப்பிரதி ஒன்றினை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வரலாறு ஒன்றினை "ஈழத்தமிழர் வாழ்வும் வளமும்" என்ற நூலில் தெரிவிக்கின்றார்.

அறுபது வன்னியமார் மதுரையில் மனைவியரை விட்டுவிட்டு இலங்கைக்குவந்து அரசு செய்தபோது பறங்கியருக்கு எதிராக அடிக்கடி போர் தொடுத்தனர். பறங்கியருடன் நடைபெற்ற கடும் சண்டையில் ஐம்பத்து நான்குபேர் இறந்தனர். ஐவர் பறங்கியரோடு கடும் போர் நடத்தி வன்னிநாட்டைக் கைப்பற்ற விடாது அவரை முறியடித்து முள்ளியவளை முனையாக அந்தநாடுகளையும் அரசு செய்தனர். ஒருவன் கண்டி இராசாவுக்கு திசையாகப் (திசாவா)கப் போய்விட்டான். அதன்பின்னர் எஞ்சிய ஐந்து வன்னியமார்களும் மதுரைக்குப் போய் தமது மனைவிமாரை அழைத்துவர ஓடமேறிச் சென்றனர். போகும் வழியில் ஓடம் கடலில் அமிழ்ந்து அவர்கள் மாண்டனர்.

இது இவ்வாறிருக்க மதுரை அரசன் பெண்கள் இருக்கும் தெருவில் குதிரை மீது ஏறி வந்ததால் தமது மானம் இனிமேல் போய்விடும் என எண்ணி அறுபத்துநான்கு வன்னியரின் மனைவிமாரும், வன்னிநாட்டிற்குள் வந்து தமது கணவன்மாருடன் வாழ விரும்பினர். வன்னி நாட்டிற்கு வரும் வழியில் தமது கணவன்மார் (ஐம்பத்துநான்குபேரும்) இறந்த செய்தி தூதனால் அறிந்து அப்பெண்கள் தற்கொலை புரிந்தனர். அதுமுதல் அவர்களுக்கு நாச்சிமார் என்ற பெயர் ஏற்பட்டது. அப்பெண்களுடன் குதிரை செலுத்தி வந்த வீரர்களும் தீயில் விழுந்து இறந்துவிட்டனர். அன்று முதல் அவர்களுக்கு அண்ணமாரென்னும் பெயர் ஏற்பட்டது.

இவ்வாறு யாழ்ப்பாணத்து நாச்சிமார் வரலாற்றையும் அண்ணமார் வரலாற்றையும் வீர வரலாற்றுச் செய்தியுடன் பேராசிரியர் அவர்கள் குறிப்பிடுவர்.

தற்கொலை புரிந்த வன்னிமைப் பெண்கள் தவிர மிகுதி ஐந்து பெண்களும், அவர்களது பணிப்பெண் ஒருவரும் பறங்கியரை வெற்றி கொள்ள ஒரு பெரும் போரை ஆண்களைப் போல அம்பு,வில்,வாள், சதங்கை முதலிய படைதாங்கி தமது சேனையை நடாத்திப் பறங்கியர் முன் வந்தனர். பெரும் போரின் ஆரம்பத்தில் பறங்கியர் புறமுதுகிட்டு ஓடினாலும், முடிவில் பறங்கியர் ஆட்சி பெற அவர்களுக்கு அடிபணிந்து மானமிழந்து வாழ விரும்பாத பெண்கள் நஞ்சருந்தி மாண்டனர். இதனைக்கண்ட வன்னியர் கண்ணகிக்குக் கோயில் எழுப்பியது போல் வீரத்தில் சிறந்த இப் பெண்களுக்கும் வழிபாடு நடத்தினர் என்றும் ஆரம்பத்தில் இவ்வழிபாடு வன்னிமைப் பிரதேசத்தில் காணப்பட்டு பின் யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியது என்று குறிப்பிடுகிறார். யாழ்ப்பாணத்தில் நாகர்கோயில் பகுதியிலும் அராலி காங்கேசன்துறை, யாழ்ப்பாண நாச்சிமார் கோயிலடிப் பகுதியிலும் இவ் வழிபாடு நிலவியது. இன்று யாழ்ப்பாண நாச்சிமார் கோயிலடிப்பகுதியில் இவ்வழிபாடு இன்று வரை சிறந்து விளங்குவதையும் காணலாம்

யாழ்ப்பாண நாச்சிமார் கோயிலடிப் பகுதியில் தனிச் சிறப்பான ஒருவழிபாட்டுமுறை உண்டு. நாச்சிமார் கோயிலில் பறை முழங்கும் போது வேறுவேறு தாளத்துடன் பறை முழங்குதல் மரபாக இருந்து வந்துள்ளது ஒவ்வொரு முழக்கமும் ஒவ்வொரு நாச்சியின் பெயருக்காக என்பர். காங்கேசன்துறை ஆலயத்திலும் ஆண்டுக்கு ஒருமுறை சிறப்பான வழிபாடு ஒன்று நடத்தப்பட்டதாகப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் "ஈழத்து வாழ்வும் வளமும்" என்ற நூலில் நாச்சிமார் வழிபாடு பற்றிக் குறிப்பிடும்போது கூறுகின்றார். பருவமாகாத ஏழுபெண்கள் தாம்பாளங்களில் மிளகு, இஞ்சி, மஞ்சள், எள்ளு, சீரகம், பனங்கட்டி, செங்கல், குன்றிமணி ஆகியவற்றைச் சேர்த்து அம்புவில் சதங்கை ஆகிய பொருட்களை வைத்து கோயிலுக்கு எடுத்துச் சென்று அங்குள்ள ஆறு மரங்களுக்குக் கீழ் வைப்பர். அம்புவில் போர் செய்ததையும் குன்றிமணி, செங்கல்லு நஞ்சருந்தி இறந்ததையும் குறிக்கும். பின்னர் ஏழு பெண்களும் பானையை வைக்க மற்றையவர் பொங்கத் தொடங்குவர். பொங்கி முடித்த பின்னர் ஏழுமரத்தின் கீழ் படைப்பதுடன் இப்பெண்கள் தட்டங்களை ஏந்தி நிற்க அவர்களுக்கும் தாம்பாளங்களில் சோற்றைப் போடுவர். தீராத நோயுள்ளோருக்கு சிறுமியர் பொங்கிய பானைகளிலிருந்து பொங்கற்சோறு வழங்கப்படும். இது நோய்க்கு மருந்தாகும் எனக்கருதப்பட்டது. இறுதியாக இச்சிறுமியர் தாம் கொண்டுவந்த பொருட்களை அக்கோயிலுக்கு அருகிலுள்ள கேணிக்குள் ஏழு குண்டுக்குள் கொட்டுவர் எனவும் இத்துடன் இவ்வழிபாடு நிறைவடையும் எனவும் பேராசிரியர் அவர்கள் குறிப்பிடுவார்.

பறங்கியருடன் போர் தொடுத்து தாம் தோல்வியுற்றதால் இனிமேல் தாம் மானம் இழத்தலாகாது என்ற எண்ணத்துடன் நஞ்சுண்டு இறந்த வீரப்பெண்கள் நாச்சிமார் நினைவாக தமிழ்மக்கள் அவரைத் தெய்வங்களாக்கி இன்றும் வணங்குகின்றனர் என நாச்சிமார் வழிபாட்டின் தோற்றம் தொடர்பாக இன்றுவரை கருத்து நிலவுகின்றது

தைப்பொங்கல் சித்திரைப் புத்தாண்டு போன்ற தினங்களில் நாச்சிமார் கோயில்களில் பொங்கிப்படைக்கும் வழக்கமிருந்தது. ஆனால் இன்று யாழ்ப்பாணத்து நகரப்புறத்திலமைந்த நாச்சிமார் கோயில்ஆகம முறைசார்ந்த வழிபாட்டு முறைகளின் அடிப்படையில் கிரியைகளை நடத்தி வருகின்றது. இதற்கிணங்க நாச்சிமார் கோயில் குளக்கரை மருதடி காமாட்சி அம்மன் என்ற பெயர் மாற்றத்தினைப் பெற்று நாச்சிமாரும் சப்த கன்னியரும் ஒருவரென நம்பப்பட்டும் வருகிறது. புத்தூரில் சப்த கன்னியர் ஆலயமுண்டு.

**அண்ணமார் வழிபாடு**

நாச்சிமார் வழிபாட்டுடன் ஒட்டி மரணித்த குதிரைவீரர் நினைவாக நடைபெறும் வழிபாடே அண்ணமார் வழிபாடு என்ற ஐதீகம் நிலவி வருகின்றது. இன்றைய நடைமுறையில் இது ஒரு காவல் தெய்வமாக நம்பப்பட்டு வருகின்றது. விவசாய வேளாண்மைக்கு ஏனைய விலங்குகளாலும், இயற்கை அனர்த்தங்களாலும் பாதிப்பு ஏற்படாமல் பாதுகாக்கும் தெய்வமாக அண்ணமார் உள்ளனர் என நம்பப்பட்டு வருகின்றது. விவசாயத்திற்கு சேதம் விளைவிக்கும் உயிரினங்களைத் துரத்த பயன்பட்ட பொல்லு, கயிறு, திரிசூலம் போன்ற ஒருவகை ஆயுதங்கள் கூடப் புனிதமானவை என்ற நோக்கில் அண்ணமார் வழிபாட்டில் இடம்பெற்றன. வைரவருக்கு

சூலம் அமைப்பது போல் அண்ணமாருக்கும் பொல்லு வைப்பதும் வழக்கம்

வயல் காவல் தெய்வமாக வந்த அண்ணமார் வயல்வேலை செய்யும் அடிநிலைச் சமூகத்தவரின் காவல் தெய்வமாகவும் மாறி யுள்ளது. வயல்வேலைசெய்யும் சமூகத்தினரின் திருமணத்தின் பின்பும் முதல்முதல் குழந்தை யை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லும் போதும், மாடு கன்று ஈனும் போதும் மேலும் இவ் வாறான நல்ல நிகழ்வுகளின் போதெல்லாம் அண்ணமார் தெய்வத்திற்குப் பொங்கல் மடை செய்து வழிபடுதல் மரபாகும். பயிர் அறுவடை யின்போது அறுவடையின் முதல் தானியத்தில் உணவுவகைகள் தயாரித்து அண்ணமாருக்குப் படைப்பது வழக்கம். பனங்கிழங்குப் பாத்தியில் வேலை ஆரம்பிக்கப்படும் போதும் அண்ண மாரை வழிபட்டே ஆரம்பிப்பர். ஒடியல் கூழ், குரக்கன்பிட்டு, மோதகம், தினைப்பிட்டு என்பன படைத்து வழிபாடு செய்யப்படும் இத்தகைய பொருட்களை ஓலையினால் செய்த பெட்டியில் வைத்து வைக்கப்படும் இவர்களின் வழிபாட்டில் "அண்ணமாரே, பெத்தியரே, காணியாளரே, காவற்காரரே" எனக்கூறி வழிபடுவர்.

பெத்தியரே என்று பெத்தை வயிற்றை யுடைய பிள்ளையாரைக் குறிப்பர். இவ்வாறாக அண்ணமார் ஆலயங்கள் பிள்ளையார் ஆலயங் களாகவும் சிவன் ஆலயங்களாவும் மாற்றம் பெற்றதையும் நாம் காணலாம். அண்ணமார், வழிபாட்டில் பலியிடுதல்கள் படைத்தல் இறைச்சி, மீன், கருவாடு படைத்தல் போன்ற நடைமுறைகள் காணப்பட்டதால் இதனை உயர் குலத்தார் சமூக அடிநிலை மக்களின் தூய் மையற்ற வழிபாட்டு முறைகள் என ஒதுக்கி விட்டனர். இதனை விரும்பாத அடிநிலைமக்கள் இத்தகைய வழிபாட்டு முறைகளை நீக்கியதுடன் தமது சாதியினை இனங் காட்டுவதாகக் கூறி அண்ணமார் ஆலயங்களிலும் ஆகம வழிபாட்டு முறைகளைக் காணவிரும்பி அதன் வெளிப் பாடாக அத்தகைய ஆலயங்களை பிள்ளையார் ஆலயமாகவோ சிவன் ஆலயமாகவோ மாற்றி விட்டனர். கிராமப் பகுதிகளில் அத்தகைய பாரம் பரிய வழிபாட்டு முறைகள் மாற்றம பெறவில்லை கோப்பாய் இலகடி அண்ணமார் கோயில், அரியாலை நாவலடி அண்ணமார் கோயில் அதற்கு எடுத்துக் காட்டுக்களாகும்.

அண்ணமார் கதையுடன் தொடர்புடை யதாக கூட்டத்தார் எனப்படும் தெய்வ வழிபாடும் யாழ்ப்பாணக் கிராமப் பகுதிகளில் காணப்படு கின்றது. போர்த்துக்கேயரை எதிர்த்துப் போராடி மறித்தபாளைக் கத்தி கூட்டத்தினைக் கூட்டத் தார் என்ற தெய்வமாக வணங்கப்பட்டதாக ஒரு ஐதீகமும் உண்டு. இன்று இத்தகைய வழக்கங் கள் இல்லை என்றாலும் இத்தகைய தெய்வங் களை ஐயனாரின் காவல்படையினர் எனக் கருது வர். அண்ணமார் வழிபாட்டில் பலாப்பழ படை யல், மரவள்ளிக்கிழங்கு, மீன் என்பன முக்கிய இடம்பெறும்.

இடத்திற்கு இடம் வீரபத்திரரின் முகூர்த்த மாகக் காணப்படும் பூதவராயர் கோயில்களும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றன. வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் விளக்கேற்றியும் பொங்கியும் வழிபடுவர். எனினும் இவற்றில்சில ஆகமமுறைசார்ந்த கிரியைகளையும் நடத்தி வருவது குறிப்பிடதத்தக்கது. மதுரைவீரன் வழி பாடும் முன்பு நடத்தப்பட்டது என்பர்.

வீரவழிபாடு என்ற அடிப்படையில் முதலி களுக்காக அமைக்கப்பட்ட கோயில்களுமுண்டு. யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிராமிய வழிபாட்டு முறையில் வீரத்தெய்வ வழிபாடு சார்ந்த வழிபா டுகள் சில பிரபல்யமாகவும் நெடுங்காலமாக வழக்கில் இருந்தவையாவும் இருந்து வந்துள் ளன என்பதனை அறியமுடிகின்றது ஆயினும் காட்டேறி, முனி, கொத்தியாத்தை போன்ற வழி பாடுகள் இன்னும் கிராமிய மக்கள் மட்டத்தில் நிலைத்திருந்தாலும் அவை பயத்தின் காரண மாக அத்தெய்வங்களைத் திருப்திப்படுத்தும் நோக்கம் காரணமாகவே ஏற்பட்டன எனலாம். பல கிராமிய தெய்வங்களுக்கு காரணகாரிய ரீதியான விளக்கங்கள் வழங்க முடியாதுள்ளது. வரலாற்று ரீதியான விளக்கங்களும் அத்தகைய தெய்வங்களுக்கில்லை. நமதுநாட்டுச் அரசியல் சூழலும் இடப்பெயர்வுகளும் கிராமிய வழிபாட் டில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. எனவே கிராமிய வழிபாட்டில் வீரவழிபாட்டின் பின்னணி யில் தோற்றம் பெற்ற தெய்வங்கள் என நாம் வகைப்படுத்தி ஆய்வை முன்வைக்க சில தெய் வங்கள் பற்றிய வரலாறுகளே உதவுகின்றன. ஆனால் யாழ்ப்பாண சமூகத்தில் கிராமிய தெய் வவழிபாடும் இன்றுவரை அதன் நிலைப்பாடும் பற்றிய ஆய்வை நாம்மேற்கொள்வது எமது வாழ் வுவளம் பெறவும் வழிபாடு சிறக்கவும் உதவும்.

திருமதி சசிகலா சிவநாதன்,
B.A.(Hons), M.Ed.

# தாய்லாந்தில் இந்துப்பண்பாடு

தென்கிழக்காசிய நாடுகளில் முதன்மையான நாடுகளுள் ஒன்றாகத் தாய்லாந்து விளங்குகின்றது. இது கிழக்கில்லாவோஸாலும், தென்கிழக்கில் கம்பூச்சியாவாலும், மேற்கிலும் வடக்கிலும் பர்மாவாலும் தெற்கே மலேசியாவாலும் சூழப்பட்டநாடாகும். இந்நாடு முன்னர் பல்வேறு காலகட்டங்களிலும் பல்வேறு பெயர்களால் சுட்டப்பட்டது. சீயம், சியாமநாடு, சையாமதேசம், சியாமதேசம்,துவாரபதி, வெள்ளையானை நாடு, சியன், சியாம் என்றபெயர்கள் குறிப்பிடத்தக்கன.

தாய்லாந்தில் இந்திய மன்னரது செல்வாக்கு சிறப்புற்றிருந்ததைக் கல்வெட்டுச் சான்றுகள் உறுதி செய்கின்றன. தமிழ்நாடு, தாய்லாந்து பண்டைக்கால உறவினைப்பற்றிப் பட்டினப்பாலை, கலிங்கத்துப்பரணி, முதலிய நூல்களில் குறிப்புக்கள் உள்ளன. தாய்லாந்தின் தெற்குப் பகுதியைப் பல்லவர்கள் கைப்பற்றினார்கள். தாய்லாந்தின் தகுவா - பா எனுமிடத்தில் ஓர் பல்லவர் காலத்தமிழ்க் கல்வெட்டுக் கிடைத்திருப்பதால் இச்சமயத்தில் தமிழ் வாணிபக் குடியேற்றங்கள் தாய்லாந்தில் இருந்திருப்பதைப்பற்றிச் சான்றுகள் கிடைத்திருக்கின்றன. பேராசிரியர் எம்.ஈ.மாணிக்கவாசகம் அவர்கள் குறிப்பிடும்போது "இக்கல்வெட்டில் சீனாமுகம் என்ற சொல் இருப்பதால் படைப்பிரிவுகள் உடைய வாணிபக் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன என்று கூறலாம்". மேலும் பல்லவர் காலத்தில் தாய்லாந்துத் தீபகற்பத்தில் குடியேறியவர்களின் இராணுவ நடவடிக்கைகளுக்கு இப்படைகள் உதவியிருக்கலாம் எனவும் கூறலாம். மேலும் இவர் கூறும் பொழுது, "தென்கிழக்காசியாவிலுள்ள தகுவா - பாவை" மையமாக வைத்துக் கொண்டு இவ்வாணிபக் குடியேற்றங்கள் வாணிபம் செய்திருக்கலாம் என்று இக்கல்வெட்டிலிருந்து ஊகிக்கலாம்.

பழைய தகுவாபா நகரில் வாட்நாமியாங்கு கோயில் உட்புறத்தில் கல்லின் மீது தமிழ் மொழியில் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டு கிடைத்தது தொடர்பாக 'ஹீல்ஷி என்ற கல்வெட்டியல் ஆராய்ச்சியாளர் அக்கல்வெட்டு பழைய தமிழ் எழுத்துக்களில் பொறிக்கப்பட்டு இருப்பதாகக் கருதுகின்றார். அக்கல்வெட்டு விஜயநந்தி விக்கிரவர்மனின் திருவல்வம் கல்வெட்டோடு ஒப்புமையுடையதாகக் காணப்படுகின்றது. அக்கல்வெட்டின் வாசகம்.

"............வர்மன் கு (ண) ...........மாந்தன்
நாங்கூருள (யா)ன் தொட்டகுளம் பேர்சீரி
அவணி நாரண மணிக்ராமத்தார்க் (கும்)"
சேனாமுகத்தார்க்கும் பதார்க்கம்அடைக்கலம்"

அக்கல்வெட்டிலிருந்து அவணிநாரணன் என்னும் பட்டப்பெயர் உடைய மூன்றாம் நந்தி வர்மன் காலத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்ட தாகும். தமிழகத்து மணிக்கிராமம் என்ற வாணிகக் குழுவினைச் சேர்ந்த வாணிகன் ஒருவன் சயாமில் உள்ள திருமால் கோயிலில் குளம் ஒன்றை வெட்டி அதற்கு அவணிநாரணன்குளம் என்று பெயரிட்டான் என்பது அறியப்படுகிறது. இதனால் கி.பி.9ம் நூற்றாண்டில் தமிழ்நாட்டு வாணிகக்குழு ஒன்று சயாமில் நிலையாகத்தங்கி இருந்தமையும அவர்கள் அங்கு திருமாலுக்குக் கோயில் அமைத்து குளந்தொட்டு விழாவெடுத்தமையும் புலனாகின்றன. இதனால் "மூன்றாம் (பல்லவ) வர்மனின் அரசியலாதிக்கம் சிறிது காலமேனும் மலேயாத்தீபகற்பத்தின் மேலைக் கடற்கரையின் பகுதிகள் சிலவற்றிலாகினும் சென்று பரவியிருக்கவேண்டும் எனத் தோன்றுகின்றது" என்பது பேராசிரியர் நீலகண்டசாஸ் திரியாரின் கருத்தாகும்.

இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தியும தஞ்சாவூர் பெருவுடையார் ஆலயக்கல் வெட்டுக்கள் சோழர்களுக்கும் தாய்லாந்திற்கும் உள்ள தொடர்பை உறுதிப்படுத்துகின்றன. சோழர்கள் கடாரத்தைக் கைப்பற்றியபின் தாய்லாந்தின் சிலபகுதிகள் சோழர்களின் மேலாட்சியின் கீழ் வந்தன என நம்பப்படுகிறது.

பத்தாம் நூற்றாண்டில் தென் தாய்லாந்தில் கடாரம் என்ற பெயரில் சோழர்களின் மேலாதிக்கம் இருந்தது என புகிட்சுங்கோலர் போன்ற பகுதியிலிருந்து கிடைக்கும் சான்றுகளிலிருந்து தெரிகிறது. இவற்றிலிருந்து இந்தியமன்னரது செல்வாக்கானது இந்துப் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியுள்ளது எனலாம்.

தாய்லாந்தில் பிராமணியச் செல்வாக்கானது இந்துப்பண்பாட்டு வளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்தது எனலாம். தாய்மக்கள் ஹீனாய பௌத்த சமயத்தைப் பின்பற்றிய போதும் அவர்களிடையே சில பிராமணிய ஆக்கக் கூறுகளையும், சோதிடத்திலும் ஆன்மவாதத்திலும் நம்பிக்கையையும் காணலாம்.

பேராசிரியர் மாணிக்கவாசகம் அவர்கள்

குறிப்பிடும்போது தமிழகத்திலிருந்து தொடக்கத்தில் வந்து குடியேறியவர்களின் வழித்தோன்றல்களே தாய்ப்பிராமணர்கள். இன அடிப்படையில் அவர்கள் தேவாரம், திருவாசகம், தமிழ்ப் பாசுரங்களையும், ஓரளவு சமஸ்கிருத மந்திரங்களையும், இறைவழிபாடு சம்பந்தமாகப் பயன்படுத்தினர். ஓதுவார் ஆதிசைவர். அர்ச்சகவமிசத்தைச் சேர்ந்தவர்கள்.

தாய்ப் பிராமணர்கள் சைவச் சாப்பாட்டாளர்கள் அல்லர். ஆண்டிற்குப் பதினைந்து நாட்கள்தான் பாவைவிழாவின் போது அவர்கள் புலால் உண்ணாதவர்களாக இருக்கின்றார்கள். தாய்லாந்து பிராமண வழித்தோன்றல்கள் மட்டும் தான் தாய்பிராமணர்களாய் ஏற்றுக்கொள்ளப் படுகிறார்கள். தாய்ப்பிராமணர்கள் புனித நூல் கயிற்றைத் தரித்துக் கொள்கிறார்கள்

தாய்லாந்து மன்னர்களின் முடிசூட்டு விழாவின் போது பிராமண அர்ச்சகர்கள் தமிழ்ப் பாடல்களான திருவெம்பாவை, திருப்பாவை ஓதுவார்கள். இந்துக்கடவுளர்களின் ஆசியைப் பெறுவதற்காகச் சடங்குகள் செய்யப்படும். பிராமணர்கள் பக்திப் பாடல்களைப்பாடி சிவன், விஷ்ணு, அரசனுடைய உடம்பில் ஊடுருவிப் பாய வேண்டும் எனவேண்டி அரசனைத் தூய்மையாக்கி முடிசூட்டுவார்கள். பின் "ஓம்கார" என்று அழைக்கப்படும் பிராமணர்களின் தலைவர் அரசனுக்கு முடிசூட்டுவிழாவில் பயன்படுத்தப் பெறும் அரசுரிமைச் சின்னங்களைக் கொடுப்பார். பட்டாபிடேகத்திற்குச் செல்லும் போது பிராமணத் தலைவர் யானைமேல் ஏறிச்செல்வார்.

திருப்பாவை, திருவெம்பாவை திருவிழாவின் போதும் அரசபட்டாபிஷேகம் முதலிய சடங்குகளின் போதும் வழங்கிய மந்திரங்கள் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தச் சுவடியை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் Microfilm (மைக்ரோபிலிம்) செய்து வைத்துள்ளது. 418 பக்கமுள்ள ஏறக்குறைய 53பக்க அளவு தமிழ்ப்பாடலாக உள்ளது. இச்சுவடியின் எழுத்துக்களின் வடிவைக் கொண்டு இச்சுவடி பன்னிரண்டாம் நூற்றாண்டினதாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. தாய்லாந்திலிருக்கும் இந்தியப் பண்பாட்டுச் சடங்குகளில் ஊஞ்சல் திருவிழா ஒன்றாகும். தாய்லாந்து நாட்டின் தேசியவிழாவை "லோஜின்ஜா" என வழங்குகிறார்கள். இப்பெயருக்கு ஊஞ்சலை இழுப்பது என்பது பொருளாகும். இத்திருவிழாவிற்கென்றே நிலையாக இரண்டு தேக்குத்தூண்கள் உள்ளன.

தாய்லாந்தில் அமைக்கப்பட்டுள்ள மூன்று பிரதான கோயில்களை வெளியிலிருந்து பார்த்தால் இந்தியநாட்டுக் கட்டடங்கள் போலவே அவற்றின் கூரைப்பகுதி காணப்படுகிறது. இந் நாட்டில் ஏற்பட்ட இந்தியப்பண்பாட்டின் தாக்கத்தினால் இங்குள்ள இந்துமக்களிடையே சைவ வைணவ நெறிகள் தமிழ்க்கல்வெட்டு, பௌத்த சமயம், புத்தரின் சிறப்புமிகு கோயில்கள், பொன் வேய்ந்த கோபுரம், தமிழரின் குடியிருப்புக்கள், ஆகமநெறி, திருவூஞ்சல் திருவிழா, பாவைப் பாட்டு, கடைதிறப்பு, பாவைவிழா, தமிழ்வேதம் ஆகியவற்றை நன்கு போற்றிப் பேணுகின்ற மரபுகள் சிறப்புற்று விளங்குகின்றன. அத்துடன் தீபாவளி, கார்த்திகைவிளக்கு ஆகியவழிபாடுகளும் நிலவியுள்ளதாகக் கூறப்படுகிறது.

தமிழ்க் கோயில்களும் சிலைகளும் பற்றி தாய்லாந்தில் கிடைக்கப்பெற்ற தடயங்கள் இந்துப்பண்பாட்டிற்கு உரமூட்டுவனவாக அமைகின்றன. இந்தியாவில் அகப்படுவது போல கிரேக்க உரோம விளக்கொன்று கண்டெடுக்கப் பட்டுள்ளது. தென்நாட்டிலிருந்து இவ்விளக்கு அங்கே போயிருக்கலாம் 'ஸ்ரீதேவ்' என்ற இடத்தில் செங்கல்லால் கட்டிய ஒருவைணவக் கோயில் உள்ளதைக் கண்டுபிடித்துள்ளார்கள்.

தாய்லாந்தின் கிழக்குப் பகுதியில் திருமாலின் நின்ற கோலச்சிலை ஒன்று கிடைத்துள்ளது. அது பல்லவர்காலத்தில் (கி.பி.8- 9 ஆம் நூற்றாண்டில்) காஞ்சியில் செய்யப்பட்ட திருமாலின் திருமேனியைப் பெரிதும் ஒத்துள்ளமை ஆராய்ச்சியாளரின் கருத்தைக் கவர்ந்துள்ளது. இங்கு சிவன், திருமால், பிரம்மா, உமை, இலக்குமி முதலிய தெய்வங்களின் வெண்கலச் சிலைகளும் கிடைத்துள்ளன. அவை நேர்த்தியும், கீர்த்தியும் வாய்ந்தவை. இவை சோழர் காலத்திய (கி.பி.10ஆம் நூற்றாண்டு) கலைப் பாணிகள் நிறைந்தனவாக உள்ளன.

தாய்லாந்தின் கட்டடக்கலைபற்றி நோக்கும் போது இக் கலையானது மிகவும் சிறப்பு வாய்ந்தாக உள்ளது. இந்நாட்டின் முக்கிய கலை பண்பாட்டு மரபுகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அல்லது வழியாகவோ (கம்போடியா, அமராவதி, பல்லவர்குப் தர்களின் பிற்காலம்) வந்தன. புத்தசமயத்தினர் பெரும்பான்மையினராக இருந்த போதிலும்

இந்துக் கடவுளர்களும், வழிமுறைகளும், நல்ல ஆட்சி அமைவதற்கும், அரசுபரம்பரையினருக் கும் தேவை என மதித்து நடத்தினர்ர்கள். இத னால் தான் சுகோதயாவிலுள்ள சில கட்டடங்கள் இந்துசமய .வழிபாட்டுமுறைக்காக அமைக்கப் பட்டிருந்தன.

மிகவும் பழமையானகட்டடம் சுகோதா யின் வடக்கிலுள்ள கெம்மர் கோயிலான சால தேவரக்ஷா. இக்கோயில் இரண்டாம் சூரிய வர்மன் காலத்திலிருந்து இருக்கின்றது. அங் கோர்வாட்டிலுள்ள இந்துக்கடவுள் சிலைகள் போலுள்ள கற்களில் செய்யப்பட்டபல இந்து உருவச்சிலைகள் இக்கோயிலில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றுள் சில தென் இந்தியாவி லுள்ள சிலைகள் போல் இருக்கின்றன. பொது வாக சிவன்,விஷ்ணு,பிரம்மா,கணேசர்,ஸ்கந்தா, விஸ்வகர்மா,கருடன்,நவக்கிரகம் போன்ற விக்கி ரங்களின் சிலைகளைத் தாய்லாந்தில் காண லாம். குறிப்பாகத் தாய்லாந்து தீபகற்பத்திலும் நாகோர்ன், சிதமராட்சையா போன்ற இடங்க ளிலும் சிவலிங்கங்கள், ஸ்நானதுரோணி, சிவன், விஷ்ணு, கணேசர், உமா, லஷ்மி போன்ற பல இந்து உருவச்சிலைகளை 'மிகுதியாகக் காண லாம். இந்நாட்டின் கட்டட்ககலை வளர்ச்சியானது இந்துப் பண்பாட்டு அம்சங்களைப் பிரதிபலிப் பதாக அமைகின்றது

கட்டடக்கலையைப் போன்று சிற்பக் கலை, ஓவியக்கலை பற்றிய தடயங்கள் என்பன வும். தாய்லாந்தில் இந்துப்பண்பாட்டமிசங்கள் இருந்துள்ளன என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைகின்றது. தாய்லாந்தின் தெற்குப்பகுதியில் புடைப்புச்சிற்பங்கள் சில கண்டுபிடிக்கப் பட்டுள் ளன திருமாலின் கிடந்த கோலச் சிற்பமும், கண் ணன் கோவர்த்தன் கிரியைக்குடையாகப் பிடிக் கும் அற்புதக்காட்சிச் சிற்பமும் கவர்ச்சிமிகு புடைப்புச் சிற்பங்களாக விளங்குகின்றன. இவை மாமல்லபுரத்துக் குடைவரைக் கோயில் மண்ட பங்களில் வீறுடன் விளங்கும் கல்லோவியங் ளைப் பெரிதும் ஒத்துள்ளன. “மாமல்லபுரத்துச் சிற்பங்கள் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந் தவை, இவற்றையொட்டி தாய்லாந்தின் சிற்பங் கள் அமைக்கப்பட்டிருக்கலாம்”. என்பது 'சிம்மர்' என்பாரின் கருத்தாகும்.

பத்தாம் நூற்றாண்டில் எழுந்த பல கோவில்களில் சைவசமயச் சின்னங்கள் பொறிக் கப்பட்டுள்ளன. பொன்கோவில் உயர முகப்பில் சிவன் சூலாயுதம் சின்னமாக உள்ளது. அனு மன் கோபுரத்தின சுவர்களில் இராமாயணச் சிற்ப ஓவியங்களும் உள்ளன. நாட்டின் தேசியச் சின்னமாக நாகபாசம் சூட்டிய கருடனார் இருக்க றார். புத்தர்,பள்ளிகொண்ட புத்தர் என்பனவும் உண்டு. சிவனாரைத் தூக்கிய கருட வாகனமும் கவர்ச்சிமிகு சின்னங்களாக காணப்படுகின்றன

மேலும் கம்பராமாயணச் செல்வாக்கும் தாய்லாந்தில் நிலவியுள்ளது. இராமாயணத்தை இங்கு 'ராமாகீயான்' என்று கூறுகிறார்கள். சிங்காரவேலு என்று கூறும் போது வால்மீகி இராமாயணத்தைவிட கம்பராமாயணத்தின் நெருங்கிய தொடர்பையே தாய் இராமாயணத் தில் பார்க்கலாம். இருபத்தொரு நிகழ்வுகளில் தாய்,தமிழ் இராமாயணங்களுக்கிடையே ஒப்பு வமை இருக்கின்றது. ஆனால் இருபத்திரெண்டு நிகழ்வுக் கூறுகளில் தாய், வால்மீகி (சமஸ் கிருத) இராமாயணத்திடையே வேறுபாடுகள் உள்ளன. புத்தர் கோயில் சுற்று மண்டபங்களில் இராமாயணக் காடசிக்குரிய ஓவியங்கள் யாவும் கம்பராமாயணத்தை அடிப்படையாக அமைத்த விதம் சோழர்களுடையது எனச் சிலர் கூறுகின்ற னர்

இந்துப்பண்பாட்டுடன் தொடர்புடைய சில நம்பிக்கைகளும் இங்கு நிலவியுள்ளது. அதாவது காலையில் எழுந்தவுடன் புத்தரை நினை, முதலில் சந்திப்பவரிடம் இன்சொல் இயம்பு, மேற்குப்பார்த்து....உட்கார்ந்து சாப் பிட்டால் இன்பமும் ' செல்வமும் நிலைக்கும். சனிநீராடு, திங்கள் புதனில் நகம் வெட்டாதே, கணவனின் கைகளைத் தலையணையாகப் பயன்படுத்தாதே, காற்றுவீசும் போது எச்சில் துப்பாதே, உறங்குமுன் பெற்றோரைநினை, தெருவில் செல்லும் பிணத்தைப்பற்றிப் பேசாதே. ஒரு பெண்ணுக்கு இடப்பக்கத்தில் படுத்தால் உன்அதிஷ்டமும் உறங்கிவிடும் என்பன போன்ற நம்பிக்கைகளைத் தம் வாழ்வில் கடைப்பிடித் தார்கள்.

இவ்வாறாக தென்கிழக்காசிய நாடுகளுள் ஒன்றான தாய்லாந்தில் இந்தியமன்னரது செல் வாக்கு, பிராமணியச் செல்வாக்கு, தமிழ்க்கோ யில்கள், சிலைகள், கட்டடக்கலை, சிற்பம், ஓவி யம், இராமாயணச் செல்வாக்கு, சமயநம்பிக் கைகள் என்ற இன்னோரன்ன பலவிடயங்களில் இந்துப்பண்பாட்டமிசங்கள் ஊடுருவிநிற்கின்றது என்றால் மிகையாகாது.

திருமதி திருமகள் குகதாசன் B.A(Hons)

# அநுபவம்

காலை மலர்ந்தது கதிரவன் எழுந்தனன்
களிப்புடன் குவலயம் கண் மலர்ந்தது.
நிலவாய்ச் சிரித்து நித்தமும் பள்ளிக்கு
நிரையாய் நடக்கும் நித்திலச் செல்வங்கள்.............
மொட்டுப் பாளை முகையவிழ்ந்தாற் போல்
செப்பு வாய் திறக்கும் செம் பவளம் முத்துதிரும்
பத்து வயதுப் பாலகராய் பொறுப்பேற்றுப்
பத்தொன்பது வயதில் பண்பு மிக்க பாவையராய்,
அன்பு அறிவுடைமை அடக்கம் அறநெறிகள்
அனைத்தும் நிறைந்த அற்புதங்கள் ஆக்கிடவே
அல்லும் பகலும் அயராது உழைக்கின்றோம்.
ஆங்காங்கே கோபம் அறிவுரைகள் கிண்டல்கள்,
பல்லாற்றாலும் பக்குவமாய் பதப்படுத்தி
கல்வி கேள்வி கவின் கலைகள் விளையாட்டு,
எல்லாவற்றிலும் இயன்றளவு வெற்றி பெற
ஒழுக்கம் தன்னை உயிராய் ஓம்பிட
பழக்கப் படுத்திப் பக்குவமாய் பரிந்தெடுத்து,
துன்பியல் அறியா துள்ளல் துடிப்புடனே,
மன் பதைக் கெல்லாம் மணிவிளக்குகளாக
மங்கா ஒளிவீசி மாண்புற வைத்திடுவோம்.
எனினும்...........
பறக்கப் பழகும் வேளையிலே சில குஞ்சு
பாதை தெரியாமல் பறந்தெங்கோ போகிறது.
பார்த்திருந்த சில கழுகு பயங்கரமாய்க் கொத்திடவே
சிறகிழந்து சிறப்பிழந்து சிதைந்தங்கே மாய்கிறது.
குருதி ஒழுக எம் கும்பி கொதிக்கிறது.
ஆயிரம் குஞ்சு அழகாய் ஒளிர்ந்தென்ன
ஒரு குஞ்சு விழும் போது உளம் நொந்து அழுகிறது.
பாவம் ஒரு தடவை பாதை தவறிவிட்டால்
பரிகாரம் கிடையாது பிறகு அதன் கதி யென்ன
தட்டிக்கொடுத்து தடவி மருந்திட்டு
எப்படியும் பறக்க வைப்போம். இறைவன் துணையிருப்பான்.

திருமதி. மல்லிகா. சீவரத்தினம்

# THE ROLE OF PARENTS IN CHILDREN'S EDUCATION

There is a golden saying " Education begins at home" From the birth up to the age of four a child looks up and keenly watches and listens to each and every word that comes out from his or her parents and picks those words quickly. Here commences the child's Education. But many parents fail to realize this point. During this period parents should use good religious Tamil and simple English words so that the child too can pick up them easily.

The social and Intellectual development is based upon the relationship with the family members. A child who is well loved by his parents is quite self confident when he steps out to school a new environment. The influence the child gets from the parents helps to build social relationship with his fellow mates in school and it kindles his desire to study further and further.

Many parents pay their attention only in serving rich dishes and providing best clothes for their children and never care for their Education. They expect every progress of their children from the Teachers in the field of Education. Though for some extent it is true parents too should co-operate with the teachers.

A teacher is a mother of thirty five to forty students in a class. She can't spend her whole time for a particular weak student. It is a crime if she negledects the other students. Parents should never fail to contact their teacher for every subject to understand the cause for the weakness of a particular subject and listen to the advice of the teachers and co-operate with them to pull their children to a higher rank. For example a student who has a very bad hand writing should write many paragraphs as much as possible to improve the hand writing. For this parents only have to take care at home.

In the case of learning English Language parents have a main role. Before entering the Nursery school itself a students should know all the simple present verbs. This depends only on parents. They can use some words as "come, go ,take, stand, eat, write, read, drink, sweep, sleep" and etc with demonstrations. A child is always very happy to hear the familiar words at school.

English is a second language and for a student who follows his studies in mother tongue gains a lot through his talkings with his parents in English at home.

Even most of the Educated parents are interested in earning side income and they fail to pay their attention fully in their children's Education. All should allocate some time for their children's Education and help the society to produce very good genius scholars along with the Teachers.

So my dear parents contribute your might to elevate your sons and daughters to be very worthy Educated citizens by giving them sound and timely advice, and by your co-operation with Teachers

**Mrs.T.Mahendrarajah**

*" The Interests of childhood and youth are the interests of mankind -*

*Janes.*

# TEACHERS NAME - 2002

| NAME | QUALIFICATIONS |
|---|---|
| 01. MRS.S.JEYARAJAH | B.A.(Hons) Dip.in.Edu.S.L.P.S I |
| 02. MRS.V.PERINPANATHAN | B.Sc.Dip.in.Edu.S.L.P.S I |
| 03. MRS.M.CHELLIAH | Trd (Agri) S.L.P.S II |
| 04. MRS.N.RAGAVAN | B.A.Dip.in Edu. |
| 05. MRS.K.SIVANESAN | B.A.Dip.in Edu. |
| 06. MRS .T.S.YOGESWARAN | B.Com.Dip.in Edu. |
| 07. MRS.A.SRIKUMARAN | Sci.Trd. |
| 08. MRS.G.VEERAGATHIPILLAI | Eng.Trd. |
| 09. MRS.L.GUNARATNAM | Eng.Trd. |
| 10. MRS.P.SIVAPATHASEKARAM | Gen.Trd. |
| 11. MRS.M.SEEVARATNAM | Maths.Trd. |
| 12. MRS.S.NARENTHIRAN | B.Sc(Hons) Dip.in .Edu. |
| 13. MRS.S.ARULVEL | B.Com(Hons) Dip.in .Edu. |
| 14. MRS.S.SIVANATHAN | B.A.(Hons) MEd. |
| 15. MRS.P.THARMAKULASINGAM | Eng.Trd. |
| 16. MRS.M.THIRUNAVUKKARASU | Dip.in Music. |
| 17. MRS.S.SIVAKUMAR | Dip. in Music. |
| 18. MISS.K.NAMASIVAYAM | Sci.Trd. |
| 19. MRS.T.DEVARAJAN | B.Sc.MED. |
| 20. MRS.P.VAKEESWARYYAMMA | B.A.Dip.in .Edu. |
| 21. MRS.P.KALAINATHAN | Sci.Trd. |
| 22. MRS.R.BALASKANTHAN | Sci.Trd. |
| 23. MRS.Y.SHANMUGARATNAM | Mat.Trd. |
| 24. MRS.A.N.PALANIMALAINATHAN | Mat.Trd.H.N.DA |
| 25. MRS.N.VIGNESWARAN | Sci.Trd. |
| 26. MRS.A.MEHANATHAN | Mat.Trd. |
| 27. MRS.K.POOLAGASINGAM | Social.Trd. |
| 28. MRS.S.ROY NESARAJAH | B.A.Dip.in Edu. |
| 29. MRS.P.SUNDARALINGAM | B.A.Dip.in Edu. |
| 30. MRS.A.SRIESKANTHARAJAH | B.A.(Hons.Sc.MEd. |
| 31. MRS. N. SOMASUNDARAM | B.Sc, MEd |

| NAME | QUALIFICATIONS |
|---|---|
| 32. MRS.S.GANANASUBRAMANIAM | B.Com. Dip.in Edu. |
| 33. MRS.G.SIVAKUMAR | B.A.Dip.in Edu. |
| 34. MISS.N.SIVANESWARY | B.Sc.Dip.in Edu. |
| 35. MRS.B.SRIGANESH | B.Sc.Dip.in Edu. |
| 36. MRS.S.SUBASKARAN | B.A.Dip.in Edu. |
| 37. MRS.R.CHADRALINGAM | Re.Trd.B.A.Dip.in Edu. |
| 38. MISS.P.SIVACHITHIRA | B.A.(Hons)Dip.in Edu. |
| 39. MRS.N.SIVASUBRAMANIAM | Sci.Trd. |
| 40. MRS.P.BALACHANDRAN | Mat.Trd. |
| 41. MRS. L.LINGESWARAN | Sci.Trd. |
| 42. MISS.M.MANGALAWATHANY | Home.Science.Trd.B.A. |
| 43. MRS. S. PARAMALINGAM | Home.Science.Trd. |
| 44. MISS.K.PIRAPALINI | Religion.Trd. |
| 45. MRS.K.THARMAKUNASINGAM | Eng.Trd. |
| 46. MRS.K.VIMALANATHAN | B.A(Hons) Dip.in Edu. |
| 47. MRS.A.SENKATHIRSELAVAN | B.A.Dip.in Edu. |
| 48. MISS.K.BALASUBRAMANIAM | B.Sc |
| 49. MRS.K.SIVAYOGAN | B.Sc.Dip.in Edu. |
| 50. MR.K.SIVATHIRAN | B.Sc. |
| 51. MRS.R.RAJAMANOHARAN | B.A. |
| 52. MRS.S.SRIKANTHAN | Sc..Trd. |
| 53. MRS.M.SIVANANTHANATHAN | B.Com.Dip.in Edu. |
| 54. MRS.U.JEYARAJAH | Eng.Trd. |
| 55. MRS.S.THAYAPARAN | Dip. in Dance |
| 56. MISS.S.MAHALUXMY | Math.Trd. |
| 57. MRS.S.PRASHATH | Math.Trd. |
| 58. MISS.N.SARATHATHEVY | |
| 59. MISS.J.VARATHARAJAPERUMAL | B.Sc. |
| 60. MISS.K.KUNAWATHY | Tamil.Trd. |
| 61. MR.P.KAMALATHASAN | Comm.TRD. |
| 62. MRS.N.VIJAYAKANTHAN | B.A.Dip.IN.EDu. |
| 63. MISS.P.SOCKALINGAM | Com.Trd. |
| 64. MRS.K.THURAISINGAM | Sci.Trd. |
| 65. MISS.K.THIRUMAGAL | B.A.(Hons) |

## நன்றிகள்

நீண்டகால இடைவெளியின் பின் "சக்தி" சஞ்சிகை வெளிவருவதனையிட்டு யா/இந்து மகளிர் கல்லூரி மகிழ்வடைகிறது. இந்நூல் உருவாக்கத்திற்கு உதவி நின்ற....

நடுத்தோட்ட இராஜவரோதய விநாயகருக்கு முதற்கண் நன்றிகள்.

மலருக்கு ஆசிகள் நல்கிய பெரியோர்களுக்கும்,

மலர் சிறப்புற சிந்தனைக்கு விருந்தளிக்கும் ஆக்கங்கள் தந்துதவிய பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும், முன்னாள் ஆசிரியர்கள், பழையமாணவர்கள், எமது கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும்,

சக்தி சஞ்சிகையை வெளியிட பெரும் உந்து சக்தியாகத் திகழ்ந்த எமது கல்லூரி அதிபருக்கும் அவருடன் ஒத்துழைத்த பொறுப்பாசிரியர் செல்வி சிவசித்திரா பழனி அவர்களுக்கும், முன்னாள் ஆசிரியர் செல்வி யோகேஸ்வரி நடராஜா அவர்களுக்கும்,

மலருக்கு விளம்பரங்கள் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும் அவற்றை சேகரித்துதவிய நல் உள்ளங்களுக்கும்,

சுற்றுலா மேற்கொண்ட எமது மாணவச் செல்வங்கள் மனமுவந்தளித்த நிதி உதவிக்கும்,

புகைப்படங்களை எடுத்துதவிய 'ராஜி' புகைப்பட ஸ்தாபனத்திற்கும்,

கணனி முறையில் சஞ்சிகையை பதிப்பித்து, வெளியிட்டு உதவிய பாரதி பதிப்பகத்திற்கும்,

மற்றும் மறைமுகமாகவேனும் பலவழிகளிலும் பங்களிப்புக்கள் வழங்கி சஞ்சிகையை சிறப்பித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும்,

இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

– மலர்க்குழு

யாழ் இந்து மகளிர் கல்லூரியின்
ஆண்டு மலரான "சக்தி" மலர் சிறப்புடன்
வெளிவர வாழ்த்துகின்றோம்.

# சீமாட்டி

தரமான சுப முகூர்த்தப் பட்டுப் புடவைகளின் கைராசியான ஸ்தாபனம்
அனைத்துப் புடவைகளின் மொத்த சில்லறை வியாபாரிகள்.

*122, மின்சார நிலைய வீதி,*
*யாழ்ப்பாணம்*




# SEEMATI


- Specialist in Wedding Saree
- Wholesale & Retail
- Dealers in Textiles

*122, Power House Road,* *Jaffna.*

மங்களகரமான வைபவமான திருமணம், பூப்புனித நீராட்டுவிழா,
காதுகுத்தல் என பலவகையான விழாக்களுக்கும் தேவையான
நகைகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்



# ரூபி நகை மாளிகை



**111/1 கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**தொ.பே. 021- 222 2828**

## இளைஞர், மங்கையரைக் கவர்ந்திழுப்பது ஆடை அலங்கரிப்புக்கள்



பல வர்ண டிசைன்களில் பட்டு, பருத்தி என்ன!
எதுவானாலும் தெரிவுகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

# அலங்கார் ஆடையகம்

23, நவீன சந்தை, (உட்புறம்) - யாழ்ப்பாணம்.

புன்னகை பூத்திடும் இள மங்கையரின் முகத்தில் இத்தனை மகிழ்ச்சியா ?
ஆம் அத்தனைக்கும் காரணம் அபிராமி அழகுமாட அழகுசாதனப் பொருள்கள்தான்

சிறந்த தரமான அழகு சாதனப் பொருள்கள், வாசனைத்திரவியங்கள்
அன்பளிப்புப் பொருள்களுக்கு நாடவேண்டிய ஒரே இடம்

# அபிராமி அழகு மாடம்

விலாசம் வேண்டும்: மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.




97

நங்கையருக்கேற்ற நவீன ரக டிசைன்களில்
தரமான 22 கரட் தங்க நகைளைப் பெற்றிடவும்

ஓடர் நகைகளை குறித்த தவணையில் பெற்றிடவும்
நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்தான்



# பிரியங்கா நகை மாடம்

**26A, கன்னாதிட்டி றோட்,**
**யாழ்ப்பாணம்**




*இருப்பவர்கள்:* திரு. ப. கமலதாசன், திருமதி ம. சீவரட்ணம் (வகுப்பு மேற்பார்வையாளர்), திருமதி இ. குணரட்ணம் (வகுப்பு மேற்பாவையாளர்), திரு
(அதிபர்), திருமதி வே. பேரின்பநாதன் (பிரதி அதிபர்), திருமதி த. ச. யோகீஸ்வரன் (வகுப்பு மேற்பார்வையாளர்), திருமதி க. சிவநேசன் (வகுப்பு மேற்

*1ம் வரிசையில் நிற்பவர்கள்:* செல்வி க. நமசிவாயம், திருமதி ச. சிவகுமார், திருமதி நே. விக்னேஸ்வரன், திருமதி அ. சிறிக்குமரன், திருமதி த. தே
செல்வி ம. சுப்பிரமணியம், திருமதி ப. பாலச்சந்திரன், திருமதி ம. திருநாவுக்கரசு, திருமதி ந. ராகவன், திருமதி ப. சுந்தரலிங்கம், திருமதி அ. நி. பழ

*2ம் வரிசையில் நிற்பவர்கள்:* திருமதி சி. நேசராசா, திருமதி கு. தர்மகுணசிங்கம், திருமதி ல. லிங்கேஸ்வரன், திருமதி சி. ஞானசுப்பிரமணியம்; திரு
சு. பரமலிங்கம், செல்வி ப. சிவசித்ரா, திருமதி ந. சிவசுப்பிரமணியம், திருமதி அ. மேகநாதன், திருமதி இ. ராஜமனோகரன், திருமதி க. விமலநாதன்,

*சமூகம் அளிக்காதோர்:* திருமதி ப. வாகீஸ்வரி அம்மா, திருமதி ரோ. பாலஸ்கந்தன், திருமதி நா. விஜயகாந்தன், திருமதி அ. ஸ்ரீஸ்கந்தராஜா, செல்வி

# ஆசிரியர்கள்




ளர்), திருமதி க. பூலோகசிங்கம், திருமதி ஞா. வீரகத்திப்பிள்ளை (வகுப்பு மேற்பார்வையாளர்), திருமதி மீ. செல்லையா (உப அதிபர்), திருமதி ச. ஜெயராஜா
குப்பு மேற்பார்வையாளர்), திருமதி ச. நரேந்திரன் (வகுப்பு மேற்பார்வையாளர்), திருமதி பு. தர்மகுலசிங்கம், திருமதி பா. சிவபாதசேகரம், திரு. க. சிவத்திரன்.

தி த. தேவராஜன், திருமதி க. சிவயோகன், செல்வி பா. கோமதி, செல்வி ஜ. வரதராஜப்பெருமாள், திருமதி ச. சிவநாதன், திருமதி அ. செங்கதிர்ச்செல்வன்,
அ. நி. பழனிமலைநாதன், திருமதி ய. சண்முகரட்ணம், செல்வி சி. நல்லதம்பி, செல்வி நி. சோமசுந்தரம், திருமதி பி. கலைநாதன்.

யம், திருமதி சு. பிரசாத், திருமதி பி. சிறிகணேஸ், திருமதி கௌ. சிவகுமார், திருமதி கி. துரைசிங்கம், செல்வி க. பிரபாலினி, செல்வி நா. சாரதா, திருமதி
லநாதன், திருமதி கி. குகதாசன், திருமதி சி. ஸ்ரீக்காந்தன், திருமதி சௌ. சுபாஸ்கரன், திருமதி இ. சந்திரலிங்கம், திருமதி ஸ்ரீ. அருள்வேல்.

, செல்வி ம. மங்களவதனி, திருமதி உ. ஜெயராஜா, செல்வி கு. குணவதி, திருமதி சு. தயாபரன், செல்வி நா. தர்சினி, செல்வி பி. சொக்கலிங்கம்.

# லிங்கன்

## கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**லிங்கன்**
என்றால் நினைவுக்கு வருவது
**'ஐஸ்கிறீம்'**



சுவைத்துப் பாருங்கள்
சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

- ஸ்பெஷல் ஐஸ்கிறீம்
- சொக்லேட் ஐஸ்கிறீம்
- நட்ஸ் ஐஸ்கிறீம்
- புருட்சலட் ஐஸ்கிறீம்
- ஜெலி ஐஸ்கிறீம்
- வெனிலா ஐஸ்கிறீம்
- மட்டன் றோல்
- பட்டர் கேக் வகைகள்
- மிக்ஸர்
- லட்டு
- மஸ்கட்

அங்கர் பட்டர் ஸ்பெஷல் பீடா

அத்தனையும் ஒரே இடத்தில்

Graphic Designed & Printed by Unie Arts (Pvt)Ltd. Colombo - 13 T.P.:330195